மாஸ்கோச் சண்டை



மாபெரும் தேசபக்தப் போரின் கதைகள்

(1941-1945)

மாஸ்கோச் சண்டை

மாபெரும் தேசபக்தப் போரின் கதைகள்

(1941 – 1945)

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. முகம்மது செரீபு, எம். ஏ.
வடிவமைப்பாளர்: அல்லா தம்சீன்ஸ்கயா
பதிப்பாசிரியர்: எவ்கேனி கனவாலவ்

Битва за Москву
РАССКАЗЫ О ВЕЛИКОЙ ОТЕЧЕСТВЕННОЙ ВОЙНЕ
На тамильском языке

The Battle of Moscow
STORIES ABOUT THE GREAT PATRIOTIC WAR
In Tamil

[redacted] மொழிபெயர்ப்பு, தொகுப்பு, ஆசிரியர்களைப் பற்றிய குறிப்புகள், படங்கள், ராதுகா பதிப்பகம், 1990

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-003153-4
ISBN 5-05-003152-2

பொருளடக்கம்

பதிப்பகத்தார் குறிப்பு

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போர் வரலாற்றின் கடைசிப் பக்கத்தை, ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டு நாடுகளின் வெற்றி பெற்ற, துணிச்சல்மிக்க இராணுவம் எழுதியது. பெர்லின் நகரைச் செஞ்சேனை கைப்பற்றியதால் பாசிசத் தளபதிகள் ஜெர்மனியினுடைய நிபந்தனையற்ற சரணாகதிப் பத்திரத்தில் கையொப்பமிட்டனர். கொடூரமான அந்த ஆக்கிரமிப்பு, அதைத் திட்டமிட்டவர்களுக்கும் செயல்படுத்தியவர்களுக்கும் பெரும் தோல்வியை ஏற்படுத்தியது.

வெற்றிக்கான பாதை மிக நீண்டது. எனவே மாபெரும் தேசபக்தப் போரின் நெடிய வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளை, முதலாவதும் மிகவும் கஷ்டமானதுமான கட்டங்களை மூன்று தொகுதிகளில் வழங்க முடிவு செய்யப்பட்டது: 1941—1942... மாஸ்கோ லெனின்கிராடு... ஸ்டாலின் கிராடு...அப்போதுதான் எல்லாமே தொடங்கின. ஐரோப்பாவில் பெற்ற சுலபமான வெற்றிகளால் மதிமயக்கம் கொண்ட ஹிட்லரது இராணுவம் சோவியத் போர்வீரர்களுடைய உறுதிமிக்க மனவலிமைச் சந்தித்தது; சோவியத் இராணுவத் தலைவர்களின் திறமையையும் மன உறுதியையும் அது உணர்ந்தது; பெருவெள்ளமாய் வந்த அதனது துருப்புகள் சோவியத் என்ஜினியர்களும் தொழிலாளிகளும் உருவாக்கியிருந்த அருமையான இராணுவத் தளவாடங்களால் நாசம் செய்யப்பட்டன.

மாஸ்கோவுக்கான சண்டையில் ஒரே ஒரு பட்டாளியன் மட்டுமே தங்களுக்குக் குறைவாக இருந்ததென்றும், ஸ்டாலின்கிராடு தாக்குதல் தவறானதென்றும், ருஷ்யாவின் பாதைகளும் கடுமையான உறைபனியும் தங்களது இராணுவத்தை நாசப்படுத்தி விட்டதென்றும் தோல்வியுற்ற ஜெர்மானியத் தளபதிகள் சமீப காலங்களில் எழுதுகிறார்கள்.

இத்தொகுதிகளில் மிகவும் கஷ்டமான இரண்டு போர் ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் பற்றி பிரபலமான சோவியத் எழுத்தாளர்களின் கதைகளும் கட்டுரைகளும் புகழ்பெற்ற

சோவியத் இராணுவத் தலைவர்களின் குறிப்புகளும் இடம் பெற்றிருக்கிறன. அதே நேரத்தில் தான் தற்காலிகமான குறைபாடுகள், தோல்விகள், நட்டங்கள் ஆகியனவற்றிற்கு மாறாக எதிர்வரும் வெற்றியின் அடித்தளத்தை சோவியத் மக்கள் அமைத்தார்கள். எதிரிகள் மாஸ்கோவுக்குள்ளாக நுழையவில்லை, ஏனெனில் எல்லையிலிருந்தே கல்லறைகளின் கணக்குகளை எண்ணத் தொடங்கிவிட்டார்கள், ஏனெனில் மாஸ்கோவுக்கு அண்மையில் அவர்களது டாங்கிகள் எரிந்துகொண்டிருந்தன, ஏனெனில். அவர்களுடைய பின்னணியில் கொரில்லாக்களுடைய குண்டுகள் அவர்களைச் சுட்டுச் சாகடித்துக் கொண்டிருந்தன.

வெற்றியாளர்களுக்கு ஏற்பட்ட கடும் சோதனையின் முழு அளவும் தெரிந்தால் மட்டுமே வெற்றியின் சிறப்பைப் புரிந்துகொள்ள முடியும். இக்கருத்தின் அடிப்படையிலேயே இத்தொகுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கியோர்கி ஷுகோவ்

(1896—1974)

மார்ஷல் ஷுகோவ், மத்திய ருஷ்யாவில் கலூகா மாவட்டத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். முதல் உலகப் போரில் பங்குபெற்ற இவர் 1918 அக்டோபரில் செஞ்சேனையில் சேர்ந்தார். படைத் தலைமையக அதிகாரியாக, முதலாவது துணைப் பாதுகாப்பு அமைச்சராக, துணை சுப்ரீம் கமாண்டராக (ஆகஸ்ட் 1942லிருந்து), லெனின்கிராடு, மேற்கு மற்றும் முதலாவது உக்ரைனிய ஃபிரன்டுகளின் கமாண்டர்-இன்-சீஃபாக, போரின் இறுதிக்கட்டத்தில் முதலாவது பேலோருஷ்ய ஃபிரன்டில் துருப்புகளுக்கு கமாண்டராக, மற்ற ஃபிரன்டுகளின் சேனைகளுடன் மே 1945இல் பெர்லினைக் கைப்பற்றி, மாபெரும் தேசபக்தப் போரின் போது திறமைமிக்க தளபதியாக ஷுகோவ் முன்னுக்கு வந்தார். பெர்லினில் நாஜி இராணுவம் நிபந்தனையற்று சரணடைந்ததை ஏற்றுக்கொள்ள மார்ஷல் ஷுகோவ் சுப்ரீம் சோவியத்தின் தலைமையினால் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தார்.

போருக்குப் பிந்திய ஆண்டுகளில் மார்ஷல் ஷுகோவ் பல்வேறு இராணுவ மண்டலங்களின் கமாண்டராகவும், 1957 அக்டோபர் வரை பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தார். சோவியத் யூனியனின் வீரர் என்ற விருது நான்கு முறை அவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

மாஸ்கோச் சண்டை

(சுருக்கப்பட்டது)

அக்டோபர் ஆறாம் தேதி மாலையில், சுப்ரீம் கமாண்டர்-இன்-சீஃப் ஜோசப் ஸ்டாலின் லெனின்கிராடிலிருந்த என்னைத் தொலைபேசியில் அழைத்தார். (அந்த நேரத்தில் நான் லெனின்கிராடு ஃப்பிரன்டின் கமாண்டராக இருந்தேன்.) நிலைமை என்ன என்பதையும் எதிரியினுடைய நடவடிக்கைகளில் புதியன யாவை என்பதையும் கேட்டார்.

ஜெர்மானியர்கள் தங்களது தாக்குதல்களை நிறுத்திவிட்டதையும் அவர்களுடைய படைகளுக்கு மிகப் பெரிய சேதம் ஏற்பட்டு, தற்காப்பு நிலையை மேற்கொண்டிருப்பதாக சிறைப்பட்டவர்கள் சொன்னதையும் அறிவித்தேன். இப்போது எதிரி நகரத்தின் மீது விமானங்களிலிருந்து குண்டு வீசிக் கொண்டும் வெடிகுண்டால் தாக்கிக் கொண்டும் இருந்தார்கள். எதிரியின் கவசப்படை மற்றும் இராணுவ வண்டித் தொகுதிகள் பெருமளவில் லெனின்கிராடு பிரதேசத்திலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்ததை எங்களது வேவு விமானங்கள் கண்டுபிடித்தன. வெளிப்படையாகவே, இந்தத் துருப்புகள் மாஸ்கோவை நோக்கித் திசைமாறிக் கொண்டிருந்தன.

''ஃப்பிரன்டின் தலைமையக அதிகாரி ஜெனரல் ஹோசினை உங்களது பிரதிநிதியாக நியமியுங்கள்,'' என ஸ்டாலின் கட்டளையிட்டார், ''விசேட ஆணைக்காக மாஸ்கோவுக்கு விமானத்தில் வாருங்கள். மாஸ்கோத் திசையில், குறிப்பாக மேற்கு ஃப்பிரன்டின் நிலைமை சீர்கேடுற்று உள்ளது.''

ஏழாம் தேதி மாலையில் மாஸ்கோ வந்து சேர்ந்தேன்.

ஸ்டாலினுக்கு ஃப்ளு காய்ச்சலாக இருந்ததால், தனது வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். தலையசைத்து எனக்கு வாழ்த்துக் கூறி வரைபடத்தைப் பார்க்க என்னை அழைத்தார்.

''மேற்கு ஃப்பிரன்டில் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது, நன்கு தெளிவாக இல்லை,'' என்றார். ''உடனடியாக ஜெனரல் கோனெவுடைய தலைமையிடத்துக்குப் போய் அங்குள்ள நிலவரத்தை முற்றாக ஆராய்ந்து எனக்

குத் தொலைபேசியில் சொல்லுங்கள். எந்த நேரமாக இருந்தாலும் சரி. நான் காத்துக் கொண்டிருப்பேன்.''

''நல்லது, தோழர் ஸ்டாலின், படைத் தலைமையகத்திற்குப் போய், வரைபடத்தை எடுத்து சுணக்கம் இல்லாமல் மேற்கு ஃபிரன்டின் தலைமையிடத்துக்கு உடனே புறப்படுகிறேன்.''

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு முதன்மைத் தலைமையக அதிகாரி, சோவியத் யூனியனின் மார்ஷல் சாபஷ்னிக்கவுடன் இருந்தேன். போரிஸ் சாபஷ்னிக்கவ் உடல்நலமில்லாதது போலக் காணப்பட்டார். என்னை வரவேற்ற பின் சொன்னார்:

''தலைமைக் கமாண்டர் சற்று முன்னர் தொலைபேசியில் பேசினார். உங்களுக்காக மேற்குத் திசையின் வரைபடம் ஒன்றைத் தயாரிக்க எங்களுக்கு உத்தரவிட்டார். இப்போது அது எந்த நிமிடத்திலும் வந்துவிடும்.''

அக்டோபர் ஏழாம் தேதி பன்னிரண்டு மணி நிலைமையை விளக்கும் வரைபடம் உள்ளே கொண்டுவரப்பட்டது. இதற்கிடையில் முதன்மைத் தலைமையக அதிகாரி எனக்குக் கொஞ்சம் அருமையான தேநீர் கொடுத்தார். வரைபடத்தைப் பெற்றுக்கொண்டதும் மேற்கு ஃபிரன்டின் தலைமையிடத்திற்கு நேரடியாகப் புறப்பட்டேன்.

அங்கு செல்லும் வழியில் வரைபடத்தை எடுத்து ஒரு கைவிளக்கு வெளிச்சத்தில் ஃபிரன்டின் நிலவரத்தை ஆராய்ந்தவாறு உட்கார்ந்தேன். தூக்கக்கலக்கமாக இருந்ததால் குளிர்ந்த காற்றில் குறு ஓட்டம் எடுத்துக்கொள்ள அவ்வப்போது காரை நிறுத்த வேண்டியிருந்தது.

மேற்கு ஃபிரன்டின் தலைமையிடத்தை நான் அடைந்தபோது இரவாகிவிட்டது. தலைமையிடத்து எல்லா அதிகாரிகளும் கமாண்டருடன் ஆலோசனையில் இருப்பதாக முறை அலுவல் அதிகாரி எனக்குத் தெரிவித்தார். ஃபிரன்டின் கமாண்டர் ஜெனரல் கோனெவ், முதன்மைத் தலைமையக அதிகாரி சகலோவ்ஸ்கி, ஃபிரன்டின் இராணுவக் குழு உறுப்பினர் புல்கானின் ஆகியோர் மேசையின் முன்னர் அமர்ந்திருந்தனர். எல்லாருமே முற்றிலும் சோர்வுற்றுப் போனவர்களாகக் காணப்பட்டார்கள். எனது வருகையின் காரணத்தை அவர்களுக்கு விளக்கினேன்.

மேற்கு ஃபிரன்டில் தலைமையிடத்தில் நான் நடத்திய

பேச்சுவார்த்தைகளும் நிலவரம் பற்றிய கணிப்பும் வியாஸ் மாப் பகுதியில் சுற்றிவளைப்பு முற்றிலுமாகத் தவிர்க்கப் பட்டிருக்கலாம் என்ற மனப்பதிவை எனக்கு ஏற்படுத்தியது. மனிதசக்தியிலும் சாதனங்களிலும் எதிரியினுடைய மேலாண்மை இருந்த போதிலும், அவர்களது முக்கிய ஊடுருவல்களின் திசை மட்டும் உரிய நேரத்தில் தீர்மானிக்கப்பட்டும் அவர்களை எதிர்த்துத் தாக்க ஃபிரன்டின் போரற்ற பகுதியிலிருந்து தேவையான படைகள் சேர்க்கப்பட்டும் இருந்திருந்தால் எங்களுடைய படைகள் சுற்றிவளைப்பைத் தவிர்த்திருக்கக்கூடும். துரதிருஷ்டவசமாக இது செய்யப்படவில்லை, அத்தகைய ஒருமுகப்படுத்தப்பட்ட தாக்குதல்களை எதிர்த்து நிற்க முடியாதவாறு எங்களது படைகள் மிகவும் வலிமையற்று இருந்தன.

எதிரி தொடர்ந்து தனது வெற்றியை ஈட்டினார்கள். மேற்குத் திசையில் முழுமையான பாதுகாப்பு வரிசை எதுவும் இருக்கவில்லை. பெரிய இடைவெளிகள் உருவாகி இருந்தன, அவற்றை நிரப்புவதற்கு எதுவுமே இல்லாதிருந்தது.

அக்டோபர் எட்டாம் தேதி அதிகாலை இரண்டரை மணிக்கு ஸ்டாலினுக்கு ஃபோன் செய்தேன். அவர் அப்போதும் வேலை செய்து கொண்டிருந்தார். நிலவரம் பற்றி அறிவித்த பிறகு தொடர்ந்து சொன்னேன்:

''மொஷாய்ஸ்க் பாதுகாப்பு வரிசையின் தளர்ச்சியில் தான் முக்கிய ஆபத்தே இருக்கிறது. எதிரியின் டாங்கிப் படை திடீரென்று மாஸ்கோவுக்கு விரையாது என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. எங்கெல்லாம் சாத்தியமோ அங்கிருந்து நமது துருப்புக்களை விரைவாக மொஷாய்ஸ்க் பாதுகாப்பு வரிசைக்கு மாற்றியாக வேண்டும்.''

''இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?''

''நேராகப் போய் புதியோனியைக் கண்டுபிடிப்பேன். அங்கு போய்ச் சேர்ந்ததும் நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பதைத் திட்டமிடுவேன்.''

''சரி, புதியோனியை நீங்கள் பார்த்த பிறகு உடனடியாக எனக்கு ஃபோன் செய்யுங்கள்.''

தூறல் விழுந்து கொண்டிருந்தது, தரை நெடுகிலும் அடர்ந்த மூடுபனி அலைந்தது, சுற்றிலும் மங்கலாக இருந்தது.

ஒப்னின்ஸ்கயே என்ற சிறிய ரயில் நிலையத்தை (மாஸ்

கோவிலிருந்து நூற்றைந்து கிலோமீட்டர்) நெருங்கிக் கொண்டிருந்த போது புராத்வா ஆற்றின் குறுக்கே தந்திக் கம்பியை மாட்டிக் கொண்டிருந்த சிக்னல் ஆட்கள் இருவரைப் பார்த்தோம்.

''அந்தக் கம்பியை எங்கே மாட்டுகிறீர்கள், தோழர்களே?'' எனக் கேட்டேன்.

''எங்கே போடுமாறு கட்டளையிடப்பட்டோமோ அங்கே,'' என்று போர்வீரர்களில் நல்ல உடற்கட்டும் அடர்த்தியான தாடியும் கொண்டிருந்த ஒருவன் கரகரத்த குரலில் பதிலளித்தான். நாங்கள் யாரென்று அவர்களுக்குச் சொல்லி சேமப்படை ஃபிரன்டின் தலைமையிடத்தைத் தேடிக் கொண்டிருப்பதாகச் சொன்னோம். அந்தப் போர்வீரன் நிமிர்ந்து நின்று பதிலளித்தான்:

''மன்னியுங்கள், தோழர் ஜெனரல். நாங்கள் உங்களை அடையாளம் தெரிந்துகொள்ளவில்லை. நீங்கள் ஏற்கெனவே ஃபிரன்டின் தலைமையிடத்தைக் கடந்து விட்டீர்கள். இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் அது இங்கே இடமாற்றப்பட்டது. அந்தக் குன்றின் மீது காட்டில் உள்ள அக்குடிசைகளில் இப்போது இருக்கிறது. எங்கே போவது என்பதைக் காவலாளர்கள் உங்களுக்குக் காட்டுவார்கள்.''

கார் பின்னுக்குத் திரும்பியது. பத்து நிமிடத்தில் தலைமை கமாண்டரின் பிரதிநிதி லேவ் மெஹ்லிசின் அறையில் இருந்தேன். ஃபிரன்டின் தலைமையக அதிகாரி ஜெனரல் அனிசோவும் அங்கே இருந்தார்.

மேஹ்லிசுடனும் அனிசோவுடனும் நான் நடத்திய பேச்சுவார்த்தையிலிருந்து சேமப்படை ஃபிரன்ட் துருப்புகளின் நிலைமையைப் பற்றியோ எதிரியைப் பற்றியோ புதிதாக எதையும் நான் அறிந்துகொள்ளவில்லை. நான் காருக்குத் திரும்பி, என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தலத்திலேயே மிகவும் விரைவாகக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் மலயரஸ்லாவெத்ஸ் மற்றும் மெதீன் வழியாக யுஹ்னவ் நோக்கிப் புறப்பட்டேன்.

மலயரஸ்லாவெத்ஸ் பகுதி பற்றி எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரியும், ஏனெனில் சேமப்படை ஃபிரன்டின் தலைமையிடம் அமைந்துள்ள ஒப்னின்ஸ்கயேயிலிருந்து நான் பிறந்து வளர்ந்த கிராமமாகிய ஸ்த்ரேல்கோவ்கா பத்து கிலோமீட்டர் தூரத்தில்தான் இருந்தது.

என் தாயாரும் தனது நான்கு குழந்தைகளுடன் எனது சகோதரியும் இப்போது அங்குதான் இருந்தார்கள். நாஜிகள் இங்கே வந்தால் அவர்களுக்கு என்ன நேரும்? ஜெனரல் ஷூக்கவுக்கு உறவினர்கள் என்பதைக் கண்டுபிடித்தால் அவர்களை ஜெர்மானியர்கள் எப்படி நடத்துவார்கள்? சந்தேகமன்றி அவர்களைச் சுட்டுக் கொல்வார்கள். எந்தவகையிலேனும் கிடைக்கும் முதலாவது வாய்ப்பைப் பயன்படுத்தி அவர்களை நான் மாஸ்கோவுக்கு அனுப்பியாக வேண்டும். அதை நாங்கள் கடைசிச் சொட்டு ரத்தம் இருக்கும் வரை சந்தேகமன்றி பாதுகாப்போம்.

வழியில் எவரையும் சந்திக்காமல் மலயரஸ்லாவெத்ஸ் வழியாக மையத்திற்கு நேராக ஓட்டிச் சென்றோம். நகரம் கைதிடப்பட்டது போலத் தோன்றியது. ஆனால் மாவட்ட நிர்வாகக் குழுக் கட்டடத்திற்கு முன்பாக இரண்டு கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

''அவை யாருடைய கார்கள்?'' எனக் கேட்டேன்.

''மார்ஷல் புதியோனியினுடையவை, தோழர் ஜெனரல்.''

''அவர் எங்கே?''

''நிர்வாகக் குழுவில்.''

''இங்கே அதிக நேரமாக இருக்கிறீர்களா?''

''சுமார் மூன்று மணி நேரமாக.''

உள்ளே போன போது, புதியோனி ஒரு வரைபடத்திற்கு மேலாக நோக்கிக் கொண்டிருந்தார். இருவரும் உற்சாகத்தோடு வாழ்த்துச் சொல்லிக் கொண்டோம்.

''எங்கிருந்து வருகிறீர்கள்?'' புதியோனி கேட்டார்.

''கோனெவிடமிருந்து வருகிறேன்.''

''அவர் எப்படியிருக்கிறார்? இப்போது இரண்டு நாள்களாக அவரோடு தொடர்பு கொள்ள முடியவில்லை.''

மேற்குப் போர்முனையில் நிலைமை மிகவும் மோசமாகியிருந்ததை அறிந்த போது மார்ஷல் சொன்னார்:

''நாங்களும் எந்தவகையிலும் நன்றாக இல்லை. பாதுகாப்பு எல்லை என்பது உண்மையில் கிடையாது. நானே நேற்று எதிரியினுடைய பிடிக்குள் யுஹ்னவுக்கும் வியாஸ்மாவுக்கும் இடையில் அநேகமாக விழுந்து விட்டேன். நகரத்தை நோக்கி டாங்கிகளும் இராணுவ வண்டிகளும் முன்

னேறி வந்து கொண்டிருந்தன. வெளிப்படையாகவே, கிழக்கிலிருந்து நகரைச் சுற்றிப் போயின.''

''யுஹ்னவ் யாருடைய கைகளில்?'' எனக் கேட்டேன்.

''தற்போதைய நிலவரம் எனக்கு உண்மையில் தெரியாது. ஓரிரு நாள்களுக்கு முன்னால் உக்ரா ஆற்றங்கரையில் இரண்டு காலாட்படை ரெஜிமென்டுகள் இருந்தன, ஆனால் பீரங்கிப்படை துணையில்லாமல். யுஹ்னவ் ஏற்கெனவே எதிரியினுடைய கையில் தான் இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.''

''அப்படியா. யுஹ்னவ்-மலயரஸ்லாதெத்ஸ் சாலையை யார் பாதுகாத்து வருகிறார்கள்?''

''நான் இங்கே வரும் வழியில் மூன்று மிலீஷிய ஆட்களைத் தவிர மெதீனில் யாரையும் நான் சந்திக்கவில்லை.''

புதியோனி ஃபிரன்டின் தலைமையிடத்திற்குச் சென்று தலைமை கமாண்டர் அலுவலகத்திற்கு நிலைமை பற்றி அறிவிப்பது என்றும் நான் யுஹ்னவ் வட்டாரத்திற்குப் புறப்பட்டுச் செல்வதென்றும் தீர்மானித்தோம்.

மெதீன் வந்து சேர்ந்ததும் உண்மையில் அங்கே யாரும் இல்லை என்பதைக் கண்டேன். குண்டு வெடித்து அழிந்த ஒரு வீட்டின் இடிபாடுகளுக்கிடையே ஒரு கிழவி மட்டும் கிளறிக் கொண்டிருந்தாள்.

''எதைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?'' எனக் கேட்டேன்.

அவள் உற்றுப்பார்த்து தனது அகன்ற வெறுமையான கண்களால் குழப்பத்துடன் என்னைப் பார்த்தாள், எதுவும் பேசவில்லை. இடிபாடுகளுக்கு அப்பால் எங்கிருந்தோ தோன்றிய மற்றொரு பெண்ணும் பாதி நிரம்பிய பையைச் சுமந்து கொண்டு என்னை நோக்கி வந்தாள்.

''அவளிடம் எதுவும் கேட்காதது நல்லது. துயரத்துடன் அவள் கிறுக்காகிப் போனாள்.''

அவள் சொன்னது படியே, இரண்டு நாள்களுக்கு முன்னால் நகரத்தின் மீது ஜெர்மானிய விமானம் தாக்குதல் நடத்தியிருந்தது. தனது பேரக்குழந்தைகளுடன் இக்கிழவி இந்த வீட்டில் தான் வசித்தாள். அவளோ விமானத் தாக்குதலின் போது கிணற்றில் நீர் எடுத்துக்கொண்டு இருந்திருந்தாள். அவளது கண்ணுக்கு முன்பாகவே தனது வீட்டின்

மீது குண்டு விழுந்தது. குழந்தைகள் கொல்லப்பட்டு விட்டார்கள்.

''எங்கள் வீடும் அழிந்து விட்டது,'' என்றாள் அப்பெண். ''நாங்கள் மலயரஸ்லாவெத்சுக்குப் போக வேண்டி இருக்கிறது. ஆனால் இந்த இடிபாடுகளைப் பார்க்கலாம் என்று நினைத்தேன்: ஏதாவது காலணிகளோ துணிகளோ கிடைத்தால் எடுத்துக்கொள்வது நல்லதுதானே.''

அவளது கன்னங்களில் கண்ணீர் பெருகி ஓடியது.

கனத்த இதயத்துடன் யுஹ்னவ் நோக்கிப் புறப்பட்டேன். எதிரியின் இடத்திற்குள்ளாக நாங்கள் போய்விடவில்லை என்பதை நிச்சயப்படுத்த சுற்றிலும் கவனமாகப் பார்த்துக் கொள்ள அவ்வப்போது வேகத்தைக் குறைக்க வேண்டி வந்தது.

சுமார் பத்து கிலோமீட்டர் போனதும் டாங்கித் தலைக் காப்பு அணிந்த ஆயுதந்தாங்கிய சில போர்வீரர்களால் நாங்கள் திடீரென்று நிறுத்தப்பட்டோம். அவர்களின் ஒருவன் காரை நோக்கி வந்தான்.

''இதற்கு மேலே போக முடியாது,'' என்றான். ''நீங்கள் யார்?''

அவனிடம் எனது பெயரைச் சொல்லி அவர்களுடைய பிரிவு எங்கே என்று கேட்டேன்.

''எங்களுடைய டாங்கி பிரிகேடு தலைமையிடம் இங்கே காட்டில் சுமார் நூறு மீட்டருக்கு அப்பால் இருக்கிறது.''

''அருமை. என்னை அங்கே கூட்டிச்செல்.''

ஒழுங்கான சிறிய டாங்கியாள் ஒருவர் என்னைச் சந்திக்க எழுந்தார். முன்னர் எங்கேயோ அவரை நான் பார்த்திருக்கிறேன் என்பதில் உறுதியாக இருந்தேன்.

''கர்னல் திரோயித்ஸ்கி, டாங்கி பிரிகேடின் கமாண்டர்,'' என்று அறிவித்தார்.

''திரோயித்ஸ்கி! சரி, சரி! உங்களை இங்கே நான் எதிர்பார்க்கவே இல்லை என்பதை கட்டாயம் சொல்லியாக வேண்டும்!''

1939இல் மங்கோலியா ஹால்கின்-கோலில் பதினோராவது டாங்கி பிரிகேடின் தலைமையிட அதிகாரியாக இருந்ததிலிருந்து திரோயித்ஸ்கியை எனக்குத் தெரியும். யாக்கவ்லெவ் தலைமையிலிருந்த இந்த பிரிகேடு ஜப்பானியர்களை

மிரட்டிப் பணிய வைத்தது. பயீன்-ஸகான் மலைப் பிரதேசத்தில் ஜப்பானிய இம்பீரியல் கார்டின் ஒரு பகுதியாக உருவாகியிருந்த இருபத்து மூன்றாவது காலாட்படை டிவிஷனை முறியடித்தது.

''உங்களை எப்படியும் இங்கே சந்திப்பேன் என்று ஒரு போதும் நினைத்துப் பார்த்ததில்லை, தோழர் ஜெனரல்,'' என்றார் திரோயித்ஸ்கி. ''நீங்கள் லெனின்கிராடு ஃபிரன்டின் தலைமையேற்று இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். நீங்கள் திரும்பியது எனக்குத் தெரியாது.''

''நல்லது, இங்கே என்ன நடக்கிறது என்பதை எனக்குச் சொல்லுங்கள். முதலாவதாக, எதிரி எங்கே இருக்கிறார்கள்?''

''எதிரி ஏற்கெனவே யுஹ்னவை எடுத்துக்கொண்டு விட்டார்கள். அவர்களது முன்னணிப் பிரிவுகள் உக்ரா ஆற்றுப் பாலத்தைக் கைப்பற்றி விட்டன. நான் வேவுகாணிகளை கலூகாவுக்கு அனுப்பியிருந்தேன். எதிரி இன்னமும் அங்கு வந்து சேரவில்லை, ஆனால் அந்தப் பிராந்தியத்தில் கடும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது. ஐந்தாவது காலாட்படை டிவிஷனும் நாற்பத்து மூன்றாவது படையின் பின்வாங்கி வருகின்ற சில பிரிவுகளும் அங்கே சண்டையிடுகின்றன. என்னுடைய டாங்கி பிரிகேடு படைத் தலைமையகச் சேமப் படையைச் சேர்ந்தது. நாங்கள் இங்கே இருப்பது இரண்டாம் நாள்.''

''உங்களை எதிர்நோக்கி இருக்கும் நிலப்பரப்பில் பிரிகேடின் பிரிவுகளை நிறுத்தி, மெதீன் திசையைக் காப்பாற்றுகின்ற நோக்கத்துடன் பாதுகாப்பு ஏற்பாடு செய்யுங்கள்,'' என்று உத்தரவிட்டேன். ''புராத்வா ஆற்றுக்கு அப்பால் ஒப்னின்ஸ்கயே ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள சேமப் படை ஃபிரன்டின் தலைமையிடத்திற்கு ஓர் இணைப்பு அலுவலரை அனுப்பி நிலவரம் பற்றி மார்ஷல் புதியோனிக்கு அறிவியுங்கள். சேமப்படை ஃபிரன்டின் தலைமையிடம் மூலம் என்னிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட உத்தரவுகள் பற்றி படைத் தலைமையகத்திற்குத் தெரிவித்து நான் கலூகாவுக்குப் புறப்பட்டதாக அவர்களிடம் சொல்லுங்கள்.''

கலூகாப் பிரதேசத்தில் ஓர் இணைப்பு அலுவலர், படைத் தலைமையக அதிகாரியிடமிருந்து தொலைபேசியில்

வந்த தந்தியை என்னிடம் தந்தார். அக்டோபர் பத்தாம் தேதி மேற்கு ஃப்பிரன்டின் தலைமையிடத்துக்கு நான் வருமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

அரசு பாதுகாப்புக் குழுவின் பிரிவு ஒன்று அந்நேரத்தில் அங்கே வேலை செய்து கொண்டிருந்தது.

மேற்கு ஃப்பிரன்டின் தலைமையிடத்துக்கு நான் வந்து சேர்ந்த சிறிது நேரத்தில், தொலைபேசிக்கு நான் அழைக்கப்பட்டேன். மறு முனையில் ஸ்டாலின் பேசினார்:

''படைத் தலைமையகம் மேற்கு ஃப்பிரன்டின் கமாண்டராக உங்களை நியமிக்க முடிவு செய்திருக்கிறது. கோனெவ் உங்களது துணைவராகத் தொடர்ந்து இருப்பார். ஏதேனும் மறுப்புகள்?''

''ஏதுமில்லை. கலீனின் திசையில் இருந்த துருப்புகளின் கமாண்டராக கோனெவ் நியமிக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். அது மிகவும் தொலைவில் இருக்கிறது, துணைப்படை அலுவலகம் அங்கே தேவைப்படுகிறது.''

''சரி,'' என்று ஸ்டாலின் ஒப்புக்கொண்டார். ''சேமப் படை ஃப்பிரன்டின் எஞ்சியிருக்கும் பிரிவுகளையும் மொஷாய்ஸ்க் பாதுகாப்பு வரிசைப் படைகளையும் மொஷாய்ஸ்க் வரிசைக்காகப் போகின்ற படைத் தலைமையகத்து சேமப்படைப் பிரிவுகளையும் உங்களது வசதிக்குப் பயன் படுத்திக் கொள்ளுங்கள்.''

''உங்கள் உத்தரவுப்படி செய்வேன், ஆனால் வலிமையான சேமப்படைகளை உடனடியாகக் கொண்டுவரும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், ஏனெனில் எந்த நேரத்திலும் மாஸ்கோவின் மீது தங்களது தாக்குதல்களை ஜெர்மானியர்கள் தீவிரப்படுத்துவதை நாம் எதிர்பார்க்க முடியும்.''

உடனடியாக சில அவசரமான நடவடிக்கைகளைப் பற்றித் திட்டமிட்டோம். அவற்றில் முதலாவது, தலைமையிடத்தை அலாபினோவுக்கு மாற்றுவது; இரண்டாவது, கோனெவ் தேவையான கட்டுப்பாட்டுச் சாதனங்களை எடுத்துக் கொண்டு அதிகாரிகளின் குழுவுடன் கலீனின் திசைக்குப் புறப்படுவது; மூன்றாவது, ஃப்பிரன்டின் போர்க் குழு நிலைமையை உறுதிப்படுத்த மொஷாய்ஸ்கிற்குச் செல்வது.

ஃப்பிரன்டின் தலைமையிடம் உடனடியாக ஒழுங்குபடுத்தும் போர் நடவடிக்கைகளைத் திட்டமிடும் வேலையில்

இறங்கியது. செய்யப்பட வேண்டியது பெருமளவில் இருந்தது. வோலகலாம்ஸ்க்-மொஷாய்ஸ்க்-மலயரஸ்லாவெத்ஸ்-கலூகா வரிசையில் வலுவான பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன; அதை உட்பகுதிக்கு நடத்தவும் இரண்டாவது படைத்துறை அணிவகுப்புகளையும் ஃபிரன்டின் சேமப் படைகளையும் உண்டாக்கவும் வேண்டியிருந்தது; தரை மற்றும் ஆகாய வேவுப்பார்த்தலையும் நம்பகரமான துருப்புக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த வேண்டியிருந்தது; துருப்புகளின் விநியோகத்தை ஒழுங்குபடுத்த வேண்டியிருந்தது; பெரும் அளவிலான அரசியல் பணியை மேற்கொண்டு, துருப்புகளின் கட்டுப்பாட்டமைதியை வளர்க்க, தங்களது சொந்த வலிமையில் அவர்களது நம்பிக்கையை உயர்த்த, மாஸ்கோவுக்கு நெருக்குதலில் எதிரி முறியடிக்கப்பட விருப்பதை அவர்களை நம்ப வைக்க வேண்டியிருந்தது.

இந்த நாள்களில், கட்சி மத்தியக் குழு, அரசு பாதுகாப்புக் குழு, தலைமை கமாண்டர் அலுவலகம் எதிரி முன்னோக்கி வருவதை நிறுத்த பல்வேறு முக்கியமான நடவடிக்கைகளை எடுத்தன.

படைத் தலைமையக சேமப்படைகள் மற்றும் அண்டையிலுள்ள ஃபிரன்டுகளிலிருந்த துருப்புகளின் இடமாற்றம் மொஷாய்ஸ்க் பாதுகாப்பு வரிசைக்கு அக்டோபர் ஏழாம் தேதி இரவு தொடங்கியது. புதிதாகச் சேர்க்கப்பட்ட இந்த ஃபிரன்டில் பதினாங்கு காலாட்படை டிவிஷன்கள், பதினாறு டாங்கி பிரிகேடுகள், நாற்பது பீரங்கிப்படை ரெஜிமெண்டுகள் மற்றும் பல பிரிவுகளும் அடங்கியிருந்தன. பதினாறாவது, ஐந்தாவது, நாற்பத்து மூன்றாவது மற்றும் நாற்பத்து ஒன்பதாவது சேனைகள் மாற்றியமைக்கப்பட்டு அக்டோபர் மத்திவாக்கில் தொண்ணூறு ஆயிரமாக ஆக்கப்பட்டன. தொடர்ச்சியான நம்பத்தக்க பாதுகாப்புக்கு ஒழுங்கு செய்ய இந்தப் படைகள் முற்றிலும் போதாது என்பது உண்மை, ஆனால் படைத் தலைமையகத்தில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சேமப்படை அப்போது எதுவும் இல்லை. மேலும் தூரக் கிழக்கு மற்றும் தொலைவிலுள்ள பிராந்தியங்களிலிருந்து சேனைகளின் இடமாற்றம் பல்வேறு காரணங்களால் நிறுத்தப்பட்டது. ஆகவே எதிரியின் தாக்குதல் அநேகமாக வரக்கூடிய முக்கியமான திசைகளாகிய வோலகலாம்ஸ்க், மொஷாய்ஸ்க், மலயரஸ்லாவெத்ஸ் மற்

றும் கலூகா வழிகளைக் கைப்பற்றத் தீர்மானித்தோம். மேலும் இங்குதான் எங்களுடைய முக்கிய பீரங்கிப்படைகளையும் டாங்கி எதிர்ப்புப் பிரிவுகளையும் ஒருமுகப்படுத்தினோம்.

பதினாறாவது சேனையின் தலைமையிடத்தையும் படை அதிகாரிகளையும் ரகசோவ்ஸ்கி, லொபச்சோவ் மற்றும் மலீனின் தலைமையில் வோலகலாம்ஸ்க் திசைக்கு அனுப்பினோம். பதினாறாவது சேனை, இருபதாவது சேனைக்கு மாற்றப்பட்ட அதனது டிவிஷன்கள் இன்னமும் வியாஸ்மாவின் மேற்கில் சுற்றிவளைக்கப்பட்டதால், சில புதிய பிரிவுகளுடன் சேர்க்கப்பட்டிருந்தது. மேஜர் ஜெனரல் லெல்யுஷென்கோ தலைமையிலான ஐந்தாவது சேனை மொஷாய்ஸ்க் திசையிலும், மேஜர் ஜெனரல் கோலுபெவ் தலைமையிலான நாற்பத்து மூன்றாவது சேனை மலயரஸ்லாவெத்ஸ் திசையிலும், லெப்டினெண்ட் ஜெனரல் ஸகார்கின் தலைமையிலான நாற்பத்து ஒன்பதாவது சேனை கலூகா திசையிலும் குவிந்தன.

இந்த கமாண்டர்கள் அனைவருமே அருமையான, அநுபவமுள்ள தலைவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும், அவர்களிடத்தில் பூரணமான நம்பிக்கைக் கொண்டோம். எதிரி மாஸ்கோவுக்குள் ஊடுருவுவதைத் தடுக்க தங்களால் முடிந்ததை அவர்களும் அவர்களுக்குக் கீழுள்ள துருப்புகளும் செய்வார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

துருப்புகள் பகலும் இரவும் கடுமையாக வேலை செய்தன. தங்களால் நிற்கக்கூட முடியாத அளவுக்கு ஆட்கள் அவ்வளவு களைத்துப் போனார்கள், ஆனால் மாஸ்கோவினுடைய விதிக்கும் தங்கள் நாட்டின் தலையெழுத்துக்கும் உள்ள சொந்தப் பொறுப்பில் உந்தப்பட்டு வலிமையான பாதுகாப்பு வரிசையை ஏற்படுத்த தங்களது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்தார்கள். மேற்கு ஃபிரன்டினுடைய முன்னணித் துருப்புகளின் பின்பகுதியில் விரிவான என்ஜினியரிங் மற்றும் சேப்பர் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன, உட்பகுதிக்குப் பாதுகாப்பு விரிவுபடுத்தப்பட்டு, டாங்கி செயல்பாட்டுக்குப் பொருத்தமான எல்லாப் பகுதிகளிலும் டாங்கி எதிர்ப்பு பாதுகாப்புகள் உருவாக்கப்பட்டன. முக்கியமான திசைகளுக்கு சேமப்படைகள் கொண்டுவரப்பட்டன. இவ்வாறாக, மாஸ்கோவைப் பாதுகாக்கும்

வரலாற்றுப் பணியுடன் ஒப்படைக்கப்பட்ட மேற்கு ஃபிரன்டானது புதிதாக உருவாக்கப்பட்டிருந்தது.

வியாஸ்மாவின் மேற்கே சுற்றிவளைக்கப்பட்ட சோவியத் துருப்புகள் எங்களது முக்கியப் படைகளுடன் திரும்பச் சேர்ந்துகொள்ள ஊடுருவிச் செல்லும் முயற்சியில் வீரஞ் செறிந்த சண்டையை இன்னமும் மேற்கொண்டிருந்தன. ஃபிரன்டின் தலைவர்களோடு படைத் தலைமையகமும் சுற்றிவளைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தது: எங்களது விமானப்படை அவர்களுக்கு உணவையும் படைத்தளவாடங்களையும் போட்டதுடன் ஜெர்மன் துருப்புகள் நிலைகொண்டிருந்த இடங்களில் குண்டு வீசியது. ஃபிரன்டோ படைத் தலைமையகமோ அந்த நேரத்தில் அதற்கு மேல் எதுவும் செய்ய முடியாமல் இருந்தன. துணிச்சலுடன் தொடர்ந்து சண்டையிட்டதன் மூலம் சுற்றிவளைக்கப்ப்ட்ட துருப்புகள் முக்கிய எதிரிப் படைகளைக் கட்டுப்படுத்தி வைத்து, மாஸ்கோவைத் தாக்குகின்ற தங்களது முன்னேற்றத்தினின்றும் ஜெர்மானியர்களைத் தடுத்தன.

அக்டோபர் 13இல் மாஸ்கோவை நோக்கிச் செல்லும் எல்லா முக்கியத் திசைகளிலும் கடும் சண்டைகள் தொடர்ந்தன.

அவை கவலைக்கிடமான நாள்கள். கட்சியின் மத்தியக் குழுவும் அரசு பாதுகாப்புக் குழுவும் சில முக்கியமான அரசு மற்றும் கட்சி நிறுவனங்களையும் மாஸ்கோவின் அனைத்துத் தூதரகங்களையும் உடனடியாக கூபிஷேவுக்குக் காலி செய்வது எனத் தீர்மானித்தன. அநேக அரிய அரசுச் சொத்துகளும் அதுபோல இடம் பெயர்க்கப்பட இருந்தன.

அக்டோபர் இருபதாம் தேதி, அரசு பாதுகாப்புக் குழு மாஸ்கோவிலும் அருகிலுள்ள பகுதிகளிலும் முற்றுகை நிலையைப் பிரகடனம் செய்தது. தலைநகரைப் பாதுகாக்கும் துருப்புகளின் எல்லாப் பிரிவுகளிலும் கடுமையான ஒழுங்குமுறையைப் புகுத்தியது. எதிரிக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு — வதந்தியைப் பரப்பியவர்களுக்கும் கொள்ளையடித்தவர்களுக்கும் — மாஸ்கோவாசிகள் உறுதியான எதிர்ப்புக் கொடுத்தார்கள்.

எதிர்நோக்கிய ஆபத்தின் தருவாயில் சோவியத் தலைநகரம் பெரும் துணிவை வெளிப்படுத்தியது. சோவியத் தலைநகரைப் பாதுகாக்கவும் அதனுடைய நுழைவாயில்

களில் எதிரியை முறியடிக்கவும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவும் மாஸ்கோக் குழுவும் விடுத்த உணர்ச்சிமிக்க வேண்டுகோள்கள் ஒவ்வொரு மாஸ்கோ வாசியினுடைய, ஒவ்வொரு போர்வீரனுடைய இதயத்திற்குள்ளாகவும் நேரடியாகச் சென்றன, சோவியத் மக்கள் அனைவரிடமும் பிரம்மாண்டமான பிரதிபலிப்பை ஏற்படுத்தின. தங்களது நகரத்தையும் அதனது நெருங்கிய பகுதிகளையும் தாக்குதலுக்கு அசையாத கோட்டையாக மாஸ்கோவாசிகள் மாற்றினார்கள். நகரத்திற்குள்ளாக எதிரியின் பிரிவுகள் நுழையும் நிலை வந்தால், நூற்றுக்கணக்கான ஆயுதந்தாங்கிய தொழிலாளர்களுடைய பிரிவுகளையும் டாங்கி அழிப்புப் பிரிவுகளையும் குடிமக்கள் உருவாக்கினார்கள். தங்களது நிரந்தரப் பணிகளைக் கைவிடாமல் சுமார் ஒரு லட்சம் மாஸ்கோவாசிகள் இராணுவப் பயிற்சி பெற்றார்கள். மாஸ்கோச் சண்டையின் போது அவர்கள் நிரந்தர சேனையுடன் சேர்ந்து கொண்டார்கள். சுமார் பதினேழாயிரம் இளம்பெண்களும் மாதர்களும் தாதி மற்றும் மருத்துவ உதவியாள் வகுப்புகளில் பயிற்சி பெற்றார்கள். மருத்துவமனைகளில் வேலை செய்ய நூற்றுக்கணக்கான இளம்பெண்களும் மாதர்களும் தாங்களாகவே முன்வந்தார்கள்.

அந்தப் பயங்கரமான அக்டோபர் நாள்களில் மேற்கு ஃபிரன்டின் போர்க் குழு துருப்புகளுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தது:

''தோழர்களே! நமது அரசு ஆபத்தான நிலையில் இருக்கும் இந்த மோசமான நேரத்தில், ஒவ்வொரு போர்வீரனின் வாழ்வும் அவனது நாட்டுக்குச் சொந்தமானது. நம் ஒவ்வொருவரிடமிருந்தும் மிகப் பெரிய வலிமையை, துணிவை, வீரத்தை, உறுதியை நமது நாடு எதிர்பார்க்கிறது. நமது அன்புக்குரிய மாஸ்கோவுக்குள்ளாக வரும் பாசிசக் கும்பல்களின் பாதையில் அழிக்க முடியாத சுவரை எழுப்பித் தடுக்கும்படி நமது நாடு நம்மை அழைக்கிறது. இப்போது, முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில், கண்காணிப்பு, உறுதியான கட்டுப்பாடு, அமைப்புமுறை, உறுதியான செயல்பாடு, வெற்றிக்கும் சுயதியாகத்திற்கான ஆயத்தத்திற்கும் வளையாத மன உறுதி ஆகியனவற்றை நாம் அவசியம் பெற்றிருக்க வேண்டும்...''

மேற்கு ஃபிரன்டின் துருப்புகள் அக்டோபர் கடைசி

வரையில் ஏறத்தாழ தற்காலிக ஓய்வே இல்லாமல் உறுதியுடன் சண்டையிட்டன.

எதிரியின் ஐந்தாவது சேனைப் பிரிவு வோலகலாம்ஸ்க் திசையில் முன்னேறியது, பிறகு நாற்பத்து ஆறாவது கவசப் படைப் பிரிவு சண்டையில் இறங்கியது, அதற்குச் சற்று பிறகு மற்றொரு பிரிவும் சேர்ந்து கொண்டது. புதிதாக உருவாக்கப்பட்ட பதினாறாவது சேனை இங்கே எதிரியை உறுதியாகத் தடுத்து நிறுத்தியது. மேஜர் ஜெனரல் பன்ஃபீலவ் தலைமையிலான முந்நூற்றுப் பதினாறாவது துப்பாக்கிப்படை டிவிஷனும் மூன்று பீரங்கிப்படை ரெஜிமெண்டுகளின் துணையுடன் கர்னல் மலதேன்செவ் தலைமையிலான பயிற்சிப்படை ரெஜிமெண்டும் குறிப்பிடத்தக்க சிறப்பை வென்றன. ஏராளமான இழப்புகளுடன் மட்டுமே எதிரி வோலகலாம்ஸ்கைப் பிடித்து, பதினாறாவது சேனையின் பிரிவுகளை நகரின் கிழக்கு வரிசைக்குத் தள்ளினர்.

ஏராளமான டாங்கிகளும் விமானங்களும் துணை நிற்க எதிரியின் நாற்பதாவது கவசப்படைப் பிரிவு மொஷாய்ஸ்க் திசையில் முன்னேறியது. அக்டோபர் பதினெட்டில் ஐந்தாவது சேனை சமமற்ற சண்டையிட்டு மொஷாய்ஸ்கை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி கூபின்காவின் மேற்கே தொரஹவோ வரிசைக்குப் பின்வாங்கியது.

எதிரியின் பன்னிரண்டாவது சேனையின் பிரிவுகளும் மலயரஸ்லாவெத்ஸ் திசையில் முன்னேறின. முந்நூற்றுப் பன்னிரண்டாவது துப்பாக்கி டிவிஷனின் பிரிவுகளும் திரோயித்ஸ்கியின் டாங்கி பிரிகேடும் நான்கு பீரங்கிப்படை ரெஜிமெண்டுகளாலும் ராக்கெட் ஏவும் மூன்று பட்டாளியன்களாலும் மூன்று நெருப்புப் பொறி கம்பெனிகளாலும் பலப்படுத்தப்பட்ட பதோல்ஸ்க் காலாட்படைப் பள்ளியும் மலயரஸ்லாவெத்சின் நெருக்கத்தில் மூர்க்கமாகச் சண்டையிட்டன.

இந்த நெருக்கடியான நேரத்தில் படைத் தலைமையகம் லெப்டினெண்ட் ஜெனரல் எஃப்ரேமவ் தலைமையிலான முப்பத்து மூன்றாவது சேனையை மேற்கு ஃபிரன்டிற்கு மாற்றியது. அது ஐந்தாவது மற்றும் நாற்பத்து மூன்றாவது சேனைக்கும் இடைப்பட்ட நாரா-ஃபமீன்ஸ்க் வட்டாரத்தில் பாதுகாப்பு நிலையை எடுத்துக்கொண்டது. நாற்

பத்து மூன்றாவது சேனை நாரா-ஃபமீன்ஸ்கின் தெற்கே, நாரா ஆற்றின் கிழக்குக் கரை நெடுகிலும், நாற்பத்து ஒன்பதாவது சேனை சேர்புகவின் மேற்கு வரிசை நெடுகிலும் தற்காப்பு நிலைகளை ஏற்றுக்கொண்டன.

இந்த இடங்களில் மறைகுழிகளை வெட்டிக் கொண்டு கடும் சண்டையிடுவது என ஃபிரன்டின் துருப்புகள் முடிவு செய்தன.

நவம்பரின் முதல் நாள்களில் குளிரான பருவநிலை ஆரம்பமானது. பாதைகளில் பனி உறைந்து எங்கும் உபயோகிக்கக் கூடியதாக மாறின.

எங்களது போர்முனை வரிசை கிடங்குகள் பெரும் எண்ணிக்கையில் மென்மயிர்த் தோல் அங்கிகள், கம்பளிக் காலணிகள், வெதுவெதுப்பான உள்ளாடைகள், பஞ்சு வைத்துத் தைக்கப்பட்ட ஜாக்கெட்டுகள், காது மூடிகள் கொண்ட வெதுவெதுப்பான குல்லாய்கள் ஆகியனவற்றைப் பெற்றன. நவம்பர் மத்தி வாக்கில் எங்களது போர்வீரர்கள் வெதுவெதுப்பான உடைகளுடன் இருந்தார்கள், அதே வேளை ஜெர்மானியப் படையாள்கள் பொதுமக்களிடமிருந்து எடுத்திருந்த கதகதப்பான உடைகளில் இறுக்கமாகப் போர்த்துக் கொண்டிருந்தார்கள். இத்தருணத்தில் தான் பார்க்க அருவருப்பான மிகப் பெரிய வைக்கோல் காலணிகளுடன் பல ஜெர்மானிய படையாள்கள் காணப்பட்டார்கள், நடந்து செல்ல அவை அவர்களுக்கு மிகுந்த சிரமத்தைத் தந்தன.

நவம்பர் முதல் தேதி, படைத் தலைமையகத்துக்கு நான் அழைக்கப்பட்டேன்.

''அக்டோபர் புரட்சியின் ஆண்டு விழாவைக் குறிக்கும் வீறார்ந்த பொதுக் கூட்டத்துடன், மாஸ்கோவில் ஓர் இராணுவ அணிவகுப்பை நடத்தவும் நாங்கள் விரும்புகிறோம்,'' என்றார் ஸ்டாலின். ''போர்முனையில் உள்ள சூழ்நிலையில் இத்தகைய கொண்டாட்டங்கள் சாத்தியமானவை என்று நீங்கள் கருதுகிறீர்களா?''

''அடுத்த சில நாள்களுக்கு வலிந்த தாக்குதலை எதிரி மேற்கொள்ள மாட்டார்கள்,'' என்று பதிலளித்தேன், ''ஏனெனில் சமீபத்திய சண்டைகளில் பெருமளவு உயிர்ச்சேதம் அடைந்திருக்கிறார்கள், அவர்களது துருப்புகளைப் பலப்படுத்துவதிலும் படை மாற்றத்திலும் முனைப்பாக இருக்

கிறார்கள். எதிரியினுடைய விமானப்படை தாக்குவதற்கு எந்த நேரமும் தயாராக இருக்கிறது. எனவே பக்கத்து ஃபிரன்டுகளிலிருந்து மாஸ்கோவுக்குச் சண்டை விமானங்களைக் கொண்டுவந்து நமது விமான எதிர்ப்புப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும்.''

வழக்கமான இராணுவ அணிவகுப்பு செஞ்சதுக்கத்தில் நடைபெற்றது, அங்கிருந்து துருப்புகள் நேரடியாகப் போர்க்களத்திற்குப் புறப்பட்டுச் சென்றன.

நவம்பர் ஆரம்பத்தில் தலைமை கமாண்டருடன் தொலைபேசியில் பேசினேன்.

''எதிரி என்ன நிலையில் இருக்கிறார்கள்?'' என்று ஸ்டாலின் கேட்டார்.

''அவர்கள் அதிரடிப் படைகளை ஒருமுகப்படுத்துவதை முடித்திருக்கிறார்கள், சீக்கிரமே தாக்குதல் தொடங்குவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை,'' என்று நான் பதிலளித்தேன்.

''எங்கிருந்து முக்கியத் தாக்குதல் வரும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?''

''மிகப் பெரும் தாக்குதலை வோலகலாம்ஸ்க் பகுதியிலிருந்து நாங்கள் எதிர்பார்க்கிறோம். மேலும் குதேரியன் டாங்கி சேனை அநேகமாக தூலா வழியாக கடந்து சென்று கஷீராவை நோக்கித் தாக்கலாம்.''

''எதிரி தாக்குதலுக்குத் தயார் செய்வதற்கு முன்னதாகச் செயலாற்றி எதிர்த்தாக்குதல்கள் மூலம் முறியடிக்கப்பட வேண்டும் என்று சாபஷ்னிக்கவும் நானும் நினைக்கிறோம். வோலகலாம்ஸ்க் திசையில் ஒரு எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும், அதுபோல மற்றொன்று ஜெர்மானிய நான்காவது சேனையின் பக்கத்தில் புராத்வா ஆற்றின் நெடுகிலும் செர்புகவிலிருந்து தொடுக்கப்பட வேண்டும். மாஸ்கோவைத் தாக்குவதற்காக அங்குதான் பெரும் எண்ணிக்கையிலான படைகள் குவித்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.''

''இந்த எதிர்த்தாக்குதல்களுக்காக என்ன படைகளை நாம் பயன்படுத்தப் போகிறோம்?''

''வோலகலாம்ஸ்க் பகுதியில் ரகசோவ்ஸ்கியினுடைய சேனையின் வலப்புறப் பிரிவுகளையும், ஒரு டாங்கி டிவிஷனையும் தவாத்தருடைய குதிரைப்படைப் பிரிவையும் பயன்

படுத்திக் கொள்ளுங்கள். செர்புகவ் பகுதியில் பெலோவினு டைய குதிரைப்படைப் பிரிவையும் கேத்மனுடைய டாங்கி டிவிஷனையும் நாற்பத்தொன்பதாவது சேனையின் பிரிவு களையும் பயன்படுத்துங்கள்,'' என்று ஸ்டாலின் ஆலோ சனை சொன்னார்.

போதுமான சேமப்படைகள் இல்லாமை, நீண்ட போர் முனை வரிசை இப்படிப் பலவற்றைச் சுட்டிக்காட்டி இந்த எதிர்த்தாக்குதல்கள் பொருத்தமற்றவை என்பதை நிரூபிக்க முயன்றேன்.

''எதிர்த்தாக்குதல் வினா தீர்மானிக்கப்பட்டு விட்ட தாகக் கருதுங்கள். திட்டத்தை இன்றிரவு அறிவியுங்கள்,'' என்று ஸ்டாலின், என்னை இடைமறித்தது ஒருவகையில் வெறுப்பூட்டியது.

இரு மணி நேரங்களுக்குப் பிறகு ஃபிரன்டின் தலைமை யிடம் பதினாறு மற்றும் நாற்பத்தொன்பதாவது சேனை களின் கமாண்டர்களுக்கு எதிர்த்தாக்குதல்களுக்கான உத்தர வைப் பிறப்பித்தது. அவ்வாறே நாங்கள் செய்து விட்ட தாகப் படைத் தலைமையகத்திற்கும் அறிவித்தது. எனினும், முக்கியமாகக் குதிரைப் படைகளே பயன்படுத்தப்பட்ட இந்த எதிர்த்தாக்குதல்கள் கமாண்டர்-இன்-சீஃப் எதிர்பார்த் தது போல எல்லா அனுகூலமான விளைவுகளையும் ஏற்படுத்த வில்லை. எதிரி இன்னும் வலிமைமிக்கவர்களாக இருந்தார் கள், அவர்களது தாக்குதல் ஆர்வம் இன்னமும் சாந்தமடை யாதிருந்தது.

மாஸ்கோவின் மீது தாக்குதலைத் தொடர்ந்து மேற் கொள்வதற்காக நாஜித் தலைமை நவம்பர் 15 வாக்கில் எங்களது மேற்குப் ஃபிரன்டிற்கு எதிராக முப்பத்தொன்று காலாட்படை, பதின்மூன்று டாங்கி, ஏழு கவசப்படை டிவி ஷன்களை ஒருமுகப்படுத்தியது. அவை போர்வீரர்கள், டாங்கிகள், பீரங்கிகள் ஆகியனவற்றை முறையாகக் கொண் டிருந்தன.

வோலகலாம்ஸ்க்-கிலீன் மற்றும் இஸ்திரா திசைகளில், ஏழு டாங்கி, இரண்டு கவசப்படை, மூன்று காலாட்படை டிவிஷன்கள் கொண்ட மூன்றாவது மற்றும் நான்காவது ஜெர்மானிய டாங்கிப்படைகள் ஒருமுகப்படுத்தப் பட்டிருந் தன. அத்துடன் இரண்டாயிரம் பீரங்கிகளும் சக்திமிக்க விமானப் பிரிவும் துணை நின்றன.

தூலா-கஷீரா திசையில் இருந்த எதிரியின் அதிரடிப் படையில் இருபத்து நான்காவது மற்றும் நாற்பத்தேழாவது கவசப்படைப் பரிவுகளும், ஒன்பது டிவிஷன்களையும் (அவற்றில் நான்கு டாங்கி டிவிஷன்கள்) சக்திமிக்க விமானப் பிரிவையும் உள்ளடக்கிய ஐம்பத்து மூன்றாவது மற்றும் நாற்பத்து மூன்றாவது சேனைப் பகுதிகளும் இருந்தன.

ஆறு சேனைப் பகுதிகளை உள்ளடக்கிய ஜெர்மானிய நான்காவது போர்க்களச் சேனை ஸ்வெனீகராட், கூபின்கா, நாரா-ஃபமீன்ஸ்க், பதோல்ஸ்க், செர்புகவ் ஆகிய திசைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சேனைதான் மேற்கு ஃபிரன்டின் படைகளை பயங்கரமான தாக்குதல்களுடன் இறுக்கிப் பிடித்து, வலிமை இழக்கச் செய்து, அதன் பிறகு எங்களது ஃபிரன்டின் மையத்தைத் தகர்த்து உடைத்துக்கொண்டு மாஸ்கோவின் திசையில் செல்ல உத்தரவைப் பெற்றிருந்தது.

நவம்பர் 15இல், 'டைஃபூன்' எனப்படும் போர்நடவடிக்கையின்படி மாஸ்கோவின் மீதான தங்களது தாக்குதலின் இரண்டாவது கட்டத்தை, கலீனின் ஃபிரன்டின் முப்பதாவது சேனைக்கு எதிராகத் தாக்கியதுடன் ஜெர்மானியர்கள் தொடங்கினார்கள். வோல்கா நீர்த்தேக்கத்தின் தெற்கில் அதனது பாதுகாப்பு மிகவும் பலவீனமாகவே இருந்தது. ஏககாலத்தில், மேற்கு ஃபிரன்டின் பதினாறாவது சேனையின் வலப் பக்கத்தில் எதிரி தாக்கினார்கள். ஐம்பத்தாறு லேசான, குறைந்த ஆயுதந்தாங்கிய டாங்கிகள் கொண்ட முப்பதாவது சேனைக்கும் பதினாறாவது சேனையின் வலப் பக்கத்திற்கும் எதிராக முந்நூறு ஜெர்மானிய டாங்கிகள் மோதின. முப்பதாவது சேனையின் பாதுகாப்பு வரிசை உடைக்கப்பட்டது.

நவம்பர் 16ந் தேதி காலையில், கிலீன் நோக்கி விரைவான முன்னேற்றத்தை எதிரி தொடங்கினார்கள். அந்த வட்டாரத்தில் எங்களிடம் எந்தச் சேமப்படையும் இல்லை, ஏனெனில் படைத் தலையகத்தின் உத்தரவுப்படி அவை எதிர்த்தாக்குதலுக்காக வோலகலாம்ஸ்கிற்கு மாற்றப்பட்டிருந்தன. அதே நாளில் வோலகலாம்ஸ்க் பகுதியிலிருந்து இஸ்திராவை நோக்கி நாஜிகள் கடுமையான தாக்குதல் தொடுத்தார்கள். எங்களது நூற்றைம்பது லேசான டாங்கி

களுக்கு எதிராக நானூறு நடுத்தர டாங்கிகளை எதிரிகள் விடுத்தார்கள்.

நவம்பர் 16-18 தேதிகளின் சண்டைகள் பலமாக இருந்தன. கணிசமான அளவு இழப்புகள் இருந்த போதிலும், எதிரி முன்னேறினார்கள், மாஸ்கோவுக்குள்ளாகத் தங்களது டாங்கி ஆப்புகளை ஓட்டிச் செல்லும் முயற்சியில் அழுத்தம் காட்டினார்கள். ஆனால் எங்களிடம் பீரங்கிப்படை மற்றும் டாங்கி எதிர்ப்புப் பாதுகாப்பு பெரும் எண்ணிக்கையில் இருந்ததாலும் எல்லாப் படையினருக்கு இடையிலும் ஒப்பற்ற ஒத்துழைப்பு இருந்ததாலும் எதிரியால் ஊடுருவிச் செல்ல முடியவில்லை. போர்க்களம் முழுவதையும் பல்லாயிரக்கணக்கில் பிரேதங்களால் நிறைத்த எதிரியால் மாஸ்கோவை அடைகின்ற முயற்சியில் வெற்றியடைய முடியவில்லை. எங்களது துருப்புகள் படிப்படியாக, முன்னதாகவே ஒழுங்கு செய்யப்பட்டும் பீரங்கிப்படையால் ஏற்கெனவே பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வரிசைகளுக்கு ஒழுங்கான முறையில் பின்வாங்கி, அங்கே உறுதியோடு சண்டையிடத் தொடங்கி, ஒன்றன் பின் ஒன்றாக பயங்கரமான நாஜித் தாக்குதலைத் துரத்தியடித்தார்கள்.

இதற்கிடையே மாஸ்கோவில், அரசு பாதுகாப்புக் குழுவும் கட்சி மத்தியக் குழு தலைமையிலான ஒரு பிரிவும் மக்கள் கமிசாரக கவுன்சிலின் ஒரு பகுதியும் தங்கள் வேலையை வழக்கம் போலச் செய்து கொண்டிருந்தன. தலைநகரத்தின் தொழிலாளர்கள் நகரைப் பாதுகாக்கின்ற துருப்புகளுக்குப் போர் நுட்ப ஆயுதங்கள் வழங்க நாளொன்றுக்கு பன்னிரண்டு முதல் பதினெட்டு மணி நேரம் வரை உழைத்தார்கள்.

ஆனால் தலைநகரம் இன்னமும் ஆபத்தில் தான் இருந்தது.

கலீனின் ஃபிரன்டின் முப்பதாவது சேனை மற்றும் பதினாறாவது சேனையின் வலப் பக்கத்தின் பகுதியில் எதிரி ஊடுருவல் ஏற்பட்ட உடனேயே (சரியான தேதி எனக்கு நினைவில்லை) ஸ்டாலின் என்னைத் தொலைபேசியில் அழைத்துக் கேட்டார்:

''மாஸ்கோவை நிலைநிறுத்திக் கொள்வோம் என்பதில் உறுதியாக இருக்கிறீர்களா? உங்களைக் கேட்பது எனக்கு வேதனை தருகிறது, ஆனால், ஒரு கம்யூனிஸ்ட் என்ற முறை

யில் என்னிடம் நேர்மையாகச் சொல்லுங்கள்.''

''நாம் மாஸ்கோவை சந்தேகம் இன்றி நிலைநிறுத்த முடியும். ஆனால் நமக்கு இரண்டு சேனைகளாவது வேண்டும், மேலும் சிறிதளவு டாங்கிகளும் தேவைப்படும்.''

''நீங்கள் அவ்வளவு உறுதியாக இருப்பதைக் கேட்க நன்றாக இருக்கிறது,'' என்றார் ஸ்டாலின். ''எங்கே உங்களுக்கு இரண்டு சேமப்படை சேனைகளைத் தேவையோ அங்கே அவற்றை அனுப்புமாறு படைத் தலைமையகத்திற்குத் தொலை பேசியில் சொல்லுங்கள். நவம்பர் இறுதி வாக்கில் அவை தயாராக இருக்கும். ஆனால் தற்போதைக்கு எங்களால் எந்த டாங்கியும் உங்களுக்குக் கொடுக்க முடியாது.''

அரை மணி நேரத்திற்குப் பிறகு முதலாவது அதிரடிச் சேனையை யாஹ்ரோமா பிரதேசத்திலும் பத்தாவது சேனையை ரியஸான் பிரதேசத்திலும் ஒருமுகப்படுத்தும் படி படைத் தலைமையகத்திடம் ஏற்பாடு செய்தேன்.

எதிரி தங்களது தாக்குதலை தூலா-மாஸ்கோ திசையில் நவம்பர் 18இல் தொடங்கினார்கள்.

நவம்பர் 26இல், மூன்றாவது ஜெர்மானிய டாங்கி டிவிஷன் எங்களது பிரிவுகளைப் பின்னுக்குத் தள்ளி, இரயில் பாதையையும் தூலா-மாஸ்கோ நெடுஞ்சாலையையும் தூலாவுக்கு வடக்கே ஊடுருவுவதில் வெற்றியடைந்தது. எனினும், ஜெனரல் பெலோவுடைய முதலாவது குதிரைப்படைப் பிரிவும் நூற்றுப் பன்னிரண்டாவது டாங்கி டிவிஷனும் மற்றும் சில பிரிவுகளும் கஷீரா பிரதேசத்தில் எதிரியினுடைய மேற்சென்ற முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தின. நவம்பர் 27இல் பெலோவுடைய குதிரைப்படைப் பிரிவு, நூற்றுப் பன்னிரண்டாவது டாங்கி டிவிஷன், நூற்று எழுபத்து மூன்றாவது காலாட்படை டிவிஷன் மற்றும் பிற பிரிவுகளுடனும் சேர்ந்து குதேரியனுடைய துருப்புகளை எதிர்தாக்கி தெற்கு நோக்கி சுமார் 10-15 கிலோமீட்டர்களுக்குப் பின்னுக்குத் துரத்தின.

நவம்பர் 30 வரை கஷீரா-மொர்த்வஸ் வட்டாரத்தில் கடுமையான சண்டை தொடர்ந்தது, ஆனால் எதிரி மேற்கொண்டு முன்னேறவில்லை. இரண்டாவது ஜெர்மானிய டாங்கிச் சேனையின் கமாண்டர் குதேரியன், கஷீரா-தூலா பிரதேசத்தில் சோவியத் துருப்புகளின் எதிர்ப்பை வெல்வ

தும் மாஸ்கோவுக்கு ஊடுருவிச் செல்வதும் முடியாது என்பதை நிச்சயித்துக் கொண்டார். நாஜிகள் சீக்கிரமே இந்தப் பகுதியில் தற்காப்பு நிலையை மேற்கொண்டார்கள்.

இந்த வட்டாரத்தில் சண்டை செய்து கொண்டிருந்த சோவியத் துருப்புகள் எதிரியின் எல்லாத் தாக்குதல்களையும் துரத்தியடித்தன. எதிரிக்குப் பெருத்த சேதம் ஏற்படுத்தவும் மாஸ்கோவை எதிரி அடையமுடியாதபடி தடுக்கவும் செய்தன.

ஃபிரன்டின் வடக்குப் பகுதியில், இஸ்திரா-கிலீன்-சொல்நெச்னகோரஸ்க் பிரதேசத்தில் நிலவரம் மிகவும் மோசமாக இருந்தது.

நவம்பர் 23இல் எதிரி டாங்கிகள் கிலீனுக்குள்ளாக நுழைந்தன. சுற்றிவளைக்கப்படும் அச்சத்தால், பதினாறாவது சேனையின் பிரிவுகள் அடுத்த பின்னணி வரிசைக்கு இரவிலேயே பின்வாங்க நேரிட்டது. கிலீனின் இழப்பால், பதினாறாவது மற்றும் முப்பதாவது சேனைகளுக்கு இடையே இடைவெளி தோன்றியது.

நவம்பர் 25இல் பதினாறாவது சேனை சொல்நெச்னகோர்ஸ்கிலிருந்தும் பின்வாங்கியது. இந்த வட்டாரத்தில் நிலவரம் அபாயம் நிறைந்ததாக இருந்தது. ஃபிரன்டின் மற்ற பகுதிகளிலிருந்து அதனால் பெற முடிந்த எல்லாவற்றையும் பதினாறாவது சேனைக்கு ஃபிரன்டின் இராணுவ குழு அதிகாரமளித்தது. இதில் டாங்கி எதிர்ப்புத் துப்பாக்கிகளுடன் கூடிய போர்வீரர்கள் குழுக்கள், டாங்கிப் பிரிவுகள், பீரங்கிப் பிரிவுகள் அடங்கும். மேலும் மாஸ்கோ பிராந்திய ஆகாயப் பாதுகாப்புக் கமாண்டர் ஜெனரல் கிரமாதினிடமிருந்து விமான எதிர்ப்புப் பட்டாளியன்கள் எடுக்கப்பட்டன. செர்புகவ் வட்டாரத்திலிருந்து ஏழாவது காலாட்படை டிவிஷனும் படைத் தலைமையக சேமப்படையிலிருந்து இரண்டு டாங்கி பிரிகேடுகளும் இரண்டு டாங்கி எதிர்ப்பு பீரங்கிப்படை ரெஜிமெண்டுகளும் வந்து சேர்கின்ற வரை எல்லாவகையிலும் எதிரியைத் தடுத்துநிறுத்த வேண்டியிருந்தது.

எங்களது போர்முனை வில் போல வளைந்து இருந்தது. மிகவும் மோசமான இடங்கள் பல ஏற்பட்டிருந்தன. ஏதோ சரிக்கட்ட முடியாதது நிகழ முடியும். ஆனால் எந்தத் துருப்புகளும் தைரியத்தை இழந்து விடவில்லை. சேமப்படை

வந்த போது திரும்பவும் ஊடுருவ முடியாத பாதுகாப்பு வளையம் உருவாகியது.

நவம்பர் 28இல், யாஹ்ரோமா பகுதியில் மாஸ்கோ-வோல்கா கால்வாய்க்கு மேல் உள்ள பாலத்தின் எங்களது பாதுகாப்பு தளர்வடைந்ததைப் பயன்படுத்திக் கொண்டு ஜெர்மானிய டாங்கிப் பிரிவு அதைக் கைப்பற்றி கால்வாயைக் கடந்தது. ஆனால் முதலாவது அதிரடிச் சேனையின் முன்னணிப் பிரிவுகள் அந்த இடத்திற்கு விரைந்து, பயங்கரமான சண்டைக்குப் பிறகு எதிரியை அடுத்த கரைக்கு அப்பால் துரத்தின.

டிசம்பரின் தொடக்கத்தில் எதிரி களைப்பு அடைந்தது வெளிப்படையானது, முக்கியமான தாக்குதல் நடவடிக்கைகளுக்கான சக்தியோ சாதனமோ எதிரிக்குக் கிடையாது.

தங்களது அதிரடிப் படைகளைப் பரந்த போர்முனை நெடுகிலும் நிறுத்தியதன் மூலமும் தங்களது கவச முட்டிகளை பரக்க வீசியதன் மூலமும், தங்களது துருப்புகளை மிகவும் பரவலாக விட்டுவிட்ட எதிரி, தலைநகருக்கு நெருக்கத்தில் இறுதித் தாக்குதல்களுக்கான தங்களது தாக்கும் சக்தியை இழந்து விட்டிருந்தார்கள்.

மாஸ்கோச் சண்டையில் இவ்வளவு அதிகமான சேதத்தை நாஜித் தலைமை எதிர்பார்த்திருக்கவில்லை. இப்போதோ தங்களது இழப்புகளை நிறைவாக்க முடியாதவர்களாக இருந்தார்கள். சிறைப்பட்டவர்களைக் குறுக்கு விசாரணை செய்ததில் சில கம்பெனிகள் இருபது அல்லது முப்பது ஆட்களாகக் குறைந்து விட்டது, போர்வீரர்களுடைய கட்டுப்பாட்டமைதி குறைந்து போனது, மாஸ்கோவைக் கைப்பற்றும் நம்பிக்கையை எல்லாம் இழந்து விட்டதை அறிந்து கொண்டோம்.

மேற்கு ஃபிரன்டின் துருப்புகளுக்கும் கூட பெரும் சேதம் ஏற்பட்டது, ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் வேண்டுகோள்களால் உள்ளுக்கும் பெற்று வீரத்தோடு சண்டையிட்டார்கள்: எப்படியிருந்தாலும், மாஸ்கோ அவர்களுக்குப் பின்னே இருந்தது!

டிசம்பர் 1இல் எங்களது போர்முனையின் மத்தியில், ஐந்தாவது மற்றும் முப்பத்து மூன்றாவது சேனைகளின் எல்லைக் கோடியில் நாஜிகள் எதிர்பாரா வண்ணம் ஊடு

ருவி கூபின்காவை நோக்கி நெடுஞ்சாலை நெடுகிலும் முன்னேறினார்கள். எனினும், அகுலவோ என்ற கிராமத்தில் முப்பத்திரண்டாவது காலாட்படை டிவிஷன் எதிரிகளை நிறுத்தியதோடல்லாமல் பீரங்கிகளால் அவர்களது டஜன் கணக்கான டாங்கிகளை அழித்தார்கள். மேலும் பல டாங்கிகள் சுரங்கக் கண்ணி வயல்களில் முடமாக்கப்பட்டன. பெரும் இழப்புகளுக்குப் பிறகு, எதிரி டாங்கிகள் கலீத்ஸினோவை நோக்கித் திரும்பி, அங்கே ஃபிரன்டின் சேமப் படையால் முற்றிலுமாக முறியடிக்கப்பட்டன.

டிசம்பர் 4இல் இந்த ஊடுருவல் முழுமையாக அடக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. போர்க்களத்தில் பத்தாயிரம் பிணங்களையும் ஐம்பது எரிந்துபோன டாங்கிகளையும் பெரும் எண்ணிக்கையிலான பிற சாதனங்களையும் எதிரி விட்டுச் சென்றனர்.

மாஸ்கோச் சண்டையின் போது தலைநகரத்திற்குள் ஊடுருவ வேண்டும் என்ற நாஜித் துருப்புகளின் கடைசி முயற்சி இதுதான்.

அவர்களது நவம்பர் 'பொதுத் தாக்குதலின்' இருபது நாள்களில் ஜெர்மானியர்கள் இறந்தவர்களும் காயமுற்றவர்களுமாக 155, 000 ஆட்களையும் சுமார் 800 டாங்கிகளையும் 300 மேற்பட்ட பீரங்கிகளையும் நூற்றுக்கணக்கான விமானங்களையும் இழந்தார்கள். இந்தப் பெரும் இழப்புகளும் 'பிளித்ஸ்கிரிக்' எனப்படும் அவர்களது மின்னல் வேகப் போரின் நோக்கங்களை அடையத் தவறியதும் ஜெர்மானியத் துருப்புகளது கட்டுப்பாட்டமைதியை முற்றிலும் கீழிறங்கிப் போகுமாறு செய்தன.

மேலைய வரலாற்றாசிரியர்கள் மாஸ்கோவுக்கு எதிரான நாஜித் தாக்குதலின் தோல்வியை மாறுபட்ட முறையில் விளக்குகிறார்கள்.

இப்போதும் கூட முன்னாள் நாஜி ஜெனரல்களும் பீல்டு-மார்ஷல்களும் மாஸ்கோவைக் கைப்பற்றும் திட்டத்திற்கான தோல்விக்கும், மொத்தத்தில் போரின் தோற்றத்திற்கும் வெளிப்படையாகவே ஹிட்லர் மீது குற்றம் சுமத்த முயல்கிறார்கள், ஏனெனில் 1941 கோடையில் 'மத்திய' சேனை வகுப்பு முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி, அதனது படைகளில் ஒரு பகுதியை உக்ரைனுக்குத் திருப்பி

விட்டு தனது ஜெனரல்கள் கூறிய ஆலோசனைகளை அவர் கேட்க மறுத்ததே காரணம் என்கின்றனர்.

மாஸ்கோவில் நாஜி தோல்விக்கான பிற காரணங்களும் சொல்லப்படுகின்றன. இவ்வாறாக, பிரிட்டிஷ் இராணுவ வரலாற்றாசிரியர் ஃபுல்லர், ''ருஷ்யர்களால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பினால், அது எவ்வளவு வலிமைமிக்கதாக இருப்பினும் ஒரு பொருட்டன்று, ஆனால் போர்முனைக்குப் பின்னே சேற்றினால் ஜெர்மானியப் போக்குவரத்து இழுபட்டதே மாஸ்கோ காப்பாற்றப்பட்டதிற்குக் காரணம்,'' என்று 'இரண்டாவது உலகப் போர்' என்ற தனது புத்தகத்தில் எழுதுகிறார். இந்தத் தவறான துணிவுரை நாஜி இராணுவத்தின் முன்னாளைய ஜெனரல் குர்ட் திப்பெல்ஸ்கிர்கால் திரும்பவும் சொல்லப்பட்டிருக்கிறது. ''சகதியினால் பாதைகள் செயல்பட முடியாதனவாகி விட்டன. தாக்குதல் சேற்றில் அழுந்திவிட்டது,'' என்று தனது நினைவுநூலில் எழுதினார்.

ஃபுல்லர், திப்பெல்ஸ்கிர்க் ஆகிய இருவரும் 1941 நவம்பரில், மாஸ்கோவுக்கான சண்டை முடிவுகட்டப்பட இருந்த போது, குளிராக இருந்ததால் சேறு இல்லை என்பதை அறிந்திருக்க வேண்டும்.

முன்னாள் நாஜி ஜெனரல்கள் குதேரியன், ஹோத் மற்றும் சிலர் மற்றொரு 'திருப்தியளிக்கிற' வாதத்தைப் பாய்ந்து பிடித்தார்கள். அதாவது மாஸ்கோவிற்கு அருகில் அவர்களது துருப்புகளின் தோல்விக்கான முக்கியக் காரணம் கடுமையான ருஷ்யக் குளிர்தானாம்.

பூர்ஷ்வா இராணுவ வரலாற்றாசிரியர்களும் முன்னாளைய நாஜித் தளபதிகளும், வலிமைவாய்ந்த சிறந்த ஒரு மில்லியன் நாஜித் துருப்புகள், சோவியத் சேனையின் உறுதி, துணிவு, வீரம் ஆகியவற்றால் சின்னாபின்னமாக்கப்படாது, சேறு, குளிர் மற்றும் கனத்த பனியினால் மாண்டு போயின என்று பொதுக்கருத்தை ஏற்படுத்த முயன்றார்கள். அதே சூழ்நிலையில்தான் சோவியத் துருப்புகளும் செயல்பட்டுக் கொண்டிருந்தன என்பதைச் சொல்ல மறந்து விடுகிறார்கள். மாஸ்கோவுக்கு எதிரான தாக்குதலைத் தற்காலிகமாக நிறுத்தி விட்டு, படைகளின் ஒரு பகுதியை 1941 கோடையில் உக்ரைனுக்குத் திருப்பி விடுவது என்ற நாஜிகளது முடிவைப் பொருத்தவரை, நிர்ப்பந்தமான இந்த இராணுவ

நடவடிக்கை இல்லாமலேயே, 1941 நவம்பர்-டிசம்பரில் இருந்ததை விட 'மத்திய' சேனை வகுப்பின் நிலைமை இன்னும் மோசமானதாக ஆகியிருக்கும்.

இதற்கிடையே, தற்காப்புச் சண்டைகளில் தங்களது வெற்றியினால் உள்ளுக்கம் பெற்ற சோவியத் துருப்புகள் எந்த இடைவேளையும் இல்லாமல் எதிர்த்தாக்குதலைத் தொடங்கின. மிகப் பெரியதும் மகிழ்ச்சிமிக்கதுமான இந் நிகழ்ச்சி சோவியத் மக்களை மட்டுமல்லாது பிற எல்லா முற்போக்கு மனித சமூகத்தையும் கிளர்ச்சியடையச் செய் தது.

வலிமையான நாஜிப் படைகளை செஞ்சேனை மாஸ் கோவிற்கு அருகில் தோல்வியுறச் செய்து, அதனது எஞ்சிய வற்றைக் கடுமையான குளிர்காலச் சூழ்நிலைகளில் மேற்கு நோக்கி வீசியெறிய எங்ஙனம் முடிந்தது என்று என்னிடம் பலமுறை கேட்கப்பட்டது. எப்படிப் பார்த்தாலும், மாஸ் கோச் சண்டைக்கு முன்னால் செஞ்சேனை எல்லா நேரமும் பின்வாங்கவே செய்தது. மேற்கு ஃபிரன்டின் முன்னா ளைய கமாண்டர் என்ற முறையில் எனது சொந்தக் கருத் தையும் இந்த விஷயத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

தங்களது 'டைஃபூன்' என்ற போர்நடவடிக்கையைச் செயல்படுத்த ஜெர்மன் படைத் தலைவர்கள் வியாஸ்மா-மாஸ்கோ மற்றும் பிரியான்ஸ்க்-மாஸ்கோ திசைகளில் உள்ள சோவியத் படைகளை முறியடிக்கவும் வடக்கிலும் தெற் கிலுமிருந்து மாஸ்கோவைச் சுற்றிவளைத்து, மிகக் குறுகிய சாத்தியமான நேரத்திற்குள்ளாக அதைக் கைப்பற்றவும் எண்ணியிருந்தார்கள். இந்தப் போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்த நோக்கத்தைத் தொடர்ந்த முறையில், இரண்டு கட்ட இடுக்கி நடவடிக்கை மூலம் அடைய எதிரி கருதினார் கள். சோவியத் படைகளை முதலில் சுற்றிவளைத்து முறி யடிப்பது பிரியான்ஸ்க் மற்றும் வியாஸ்மா வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட விருந்தன. இதைத் தொடர்ந்து டாங் கிப் பிரிவுகளால் கிலீன் வழியாக வடமேற்காகவும் தூலா மற்றும் கஷீரா வழியாகத் தென்மேற்காகவும் நகரைச் சுற்றி வளைத்து, சுற்றிவளைப்பதை முழுமையாக்க நகின்ஸ்க் பகுதியில் இடுக்கியை நெருக்கிக் கொணர்ந்து, மாஸ்கோவை வளைத்து பிடித்துக்கொள்வதாகும்.

எனினும், இத்தகைய ஒரு சிக்கலான, பெரிய அளவிலான

'டைஃபூன்' போர்நடவடிக்கை போன்ற போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்த செயல்பாட்டிற்குத் தேவைப்படக் கூடிய துருப்புகளையும் சாதனங்களையும் ஜெர்மானிய தலைமைப் போர்க்குழு ஆபத்தான முறையில் தவறாகக் கணக்கிட்டு விட்டது. செஞ்சேனையின் பலத்தைக் குறைத்தும் தங்களது சொந்தப் படையின் பலத்தை அளவுக்கதிகமாகவும் மதிப்பிட்டார்கள். நாஜி தலைமைப் போர்க்குழுவால் திரட்டப்பட்ட படைகள் வியாஸ்மா மற்றும் பிரியான்ஸ்க் வட்டாரங்களில் எங்களது பாதுகாப்பை உடைக்கவும் மேற்கு மற்றும் கலீனின் ஃபிரன்டுகளின் படைகளைப் பின்னுக்கு, கலீனின் - யாஹ்ரோமா-கிராஸ்னயா பல்யானா-கிரியூகவோ-நாரா மற்றும் ஒகா ஆறுகள்-தூலா-கஷீரா-மிகைலோவ் வரிசைக்குத் தள்ளவும் மட்டுமே போதுமானவையாக இருந்தன. மாஸ்கோவைக் கைப்பற்றுகின்ற தனது முக்கிய நோக்கத்தை நிறைவேற்றுவதில் எதிரிக்குப் பெரும் தடை இருந்த காரணம், வியாஸ்மாவின் மேற்கில் சுற்றிவளைக்கப்பட்ட சோவியத் படைகளின் வீரமிக்க எதிர்ப்பு தான் என்பதைத் திரும்பவும் ஒருமுறை வலியுறுத்தியாக வேண்டும். முக்கிய நாஜிப் படைகள் இந்தப் பகுதியில் சுணங்கிப் போயின.

ஆகவே, தனது உடனடி நோக்கத்தை அக்டோபர் ஆரம்பத்தில் எதிரி எய்துவிட்ட போதிலும், போர்நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்தைச் செயல்படுத்துவதில் தவறிவிட்டார்கள். 'டைஃபூன்' போர்நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்திற்கான அதிரடிப் படைகளின் உருவாக்கலிலும் பல முக்கியப் பிழைகள் ஏற்பட்டன. எதிரியினுடைய படையின் பக்கப் பிரிவுகள், குறிப்பாக தூலாப் பகுதியில், பலவீனமானவை, தேவையான காலாட்படைத் தொகுதிகளைக் கொண்டிருக்கவில்லை. 1941இன் குளிர்காலச் சூழ்நிலைகளில் டாங்கித் தொகுதிகளில் நம்பிக்கை வைத்தது, அநுபவம் காட்டியது போல சரியில்லை என்பதை நிரூபித்தது. அவற்றிற்குப் பெருத்த சேதம் ஏற்பட்டு அவற்றின் தாக்குகிற வலிமையை இழந்தன. ஜெர்மானிய தலைமைப் போர்க்குழு போர்முனையின் மத்தியில் ஏககாலத்தில் தாக்கத்தவறிவிட்டது, அங்கே அதற்குப் போதுமான படைகள் இருந்த போதிலும். இது எங்களது சேமப்படைகள் முழுவதையும், டிவிஷன்களின் சேமப்படை உள்பட, மத்தியி

விருந்த அமைதியான பகுதிகளிலிருந்து பக்கங்களுக்கு மாற்றி, அவற்றை எதிரியின் அதிரடிப் பிரிவுகளுக்கு எதிராகச் செயல் படுத்த உதவியது.

நவம்பரின் ஆரம்பத்தில் எங்களது பாதுகாப்பு வரிசையின் பக்கங்களில் எதிரியின் அதிரடிப் பிரிவுகள் திரண்டதை சரியான நேரத்தில் எங்களால் கண்டுபிடிக்க முடிந்தது. இம்முறையில் அவர்களது முக்கியத் தாக்குதலின் திசைகளைச் சரியாக வரையறுக்க முடிந்தது. எதிரியின் வலிமையான தாக்குதலை, போதுமான டாங்கி எதிர்ப்புப் பாதுகாப்புடன் பலமாக எதிர்த்தோம். மேலும் எங்களது முக்கிய டாங்கிப் பிரிவுகளை மிகவும் அச்சுறுத்திய திசைகளில் திரட்டினோம்.

டிசம்பரின் தொடக்கத்தில் ஜெர்மானியர்களுக்குப் பெரும் இழப்புகள் ஏற்பட்டன. ஆயிரம் கிலோமீட்டர்களுக்கு நீண்டிருந்த எதிரியின் தொடர்புகள் கொரில்லாக் குழுக்களால் தொடர்ச்சியாக அலைக்கழிக்கப்பட்டன. கொரில்லாக்களின் வீரமான போர்நடவடிக்கைகள் எதிரியின் வரத்து வழிகளைப் பாதித்து, அவர்களது பின்னணிப் பிரிவுகளின் வேலைக்கும் விநியோகத்திற்கும் பலமான அடிகளைக் கொடுத்தன.

நாஜிப் படையின் பெரும் இழப்புகள், குளிர்காலச் சூழ்நிலைகளின் கீழ் சண்டைக்குத் தயாராகத் தவறியது, செஞ்சேனையின் கடும் எதிர்ப்பு ஆகியன ஜெர்மானியத் துருப்புகளின் சண்டையிடும் திறமையைப் பாதித்து, அவர்களது கட்டுப்பாட்டமைதியையும் வெற்றியில் நம்பிக்கையையும் குறைத்தன.

மாஸ்கோச் சண்டையில் சோவியத் படைகளும் பெரும் இழப்புகளுக்கு ஆளாயின, ஆனால் தங்கள் நாட்டின் துணை அவர்களுக்குத் தொடர்ச்சியாகக் கிடைத்தது, தற்காப்புப் போராட்டங்களின் கடைசி வரையிலும் சண்டையிடும் திறமையையும் வெற்றியில் உறுதியான நம்பிக்கையையும் நிறுத்தி வைத்திருக்க முடிந்தது.

சோவியத் மக்களும் அவர்களது ஆயுதப் படைகளும் மிகவும் மோசமான நேரத்தின் ஊடாக வாழ்ந்தார்கள். முதலாவது வெற்றிகளின் மகிழ்ச்சியை ஏற்கெனவே அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். லெனின்கிராடைக் கைப்பற்றி பின்லாந்து சேனையுடன் சேர்ந்துகொள்ளும் ஹிட்லருடைய திட்டத்தை செஞ்சேனை முறியடித்தது. திஹ்வின் பகுதி

யில் எதிர்த்தாக்குதலை நடத்தி எதிரியைத் தோற்கடித்து நகரத்தைக் கைப்பற்றினார்கள். தெற்கு ஃபிரன்டின் துருப்பு களும் எதிர்த்தாக்குதலை நடத்தி ரஸ்தோவைத் திரும்பக் கைப்பற்றினார்கள்.

டிசம்பர் ஆரம்பத்தில் மேற்கு ஃபிரன்ட் புதிதாக உரு வாக்கப்பட்ட இரு சேனைகளையும் சில பிரிவுகளையும் படைத் தலைமையகத்திலிருந்து பெற்றது. பின்னே .குறிப் பிட்ட பிரிவுகளைக் கொண்டு இருபதாவது சேனை அமைக் கப்பட்டது. இவை எல்லாமே எதிர்த்தாக்குதலை ஏற்பாடு செய்ய எங்களுக்கு உதவின.

சோவியத் துருப்புகளுடைய எதிர்த்தாக்குதலுக்கான நிலைமைகள் தற்காப்புச் சண்டைகளின் போது முதிர்ச்சி யடைந்தன. எங்களது துருப்புகளால் போர்முனையின் பக் கங்களில் டிசம்பர் 1-3இல் தொடங்கிய வெற்றிகரமான எதிர்த்தாக்குதல்களின் தொடர்ச்சியாக அது இருந்தது.

மாஸ்கோ பகுதியில் நிலவிய சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, மேற்கு மற்றும் கலீனின் ஃபிரன்டு களின் துருப்புகளும் தென்மேற்கு ஃபிரன்டின் வலப்பக்கத் துருப்புகளும் சேர்ந்து எதிர்த்தாக்குதல் நடத்த படைத் தலையகம் உத்தரவிட்டது.

நவம்பர் கடைசியில் படைத் தலைமையகம் மாஸ்கோ வின் வடமேற்கிலும் மாஸ்கோ-வோல்கா கால்வாயின் கிழக் கிலும் முதலாவது அதிரடிச் சேனை மற்றும் புதிதாக உரு வாக்கப்பட்ட இருபதாவது சேனையை ஒருமுனைப்படுத் தியது. அதே நேரத்தில் பத்தாவது சேனை ரியஸான் பிர தேசத்தில் திரட்டப்பட்டது.

நவம்பர் 29இல் தலைமை கமாண்டருக்கு ஃபோன் செய்து, நிலவரம் பற்றி அவருக்கு அறிவித்து விட்டு, மேற்கு ஃபிரன்டிற்கு முதலாவது அதிரடிச் சேனையையும் பத்தா வது சேனையையும் உட்படுத்த உத்தரவிடும்படி அவரிடம் கேட்டுக் கொண்டேன். அப்போதுதான் நாங்கள் எங்களது தாக்குதல்களை வேகப்படுத்தி மாஸ்கோவிலிருந்து வெகு தொலைவுக்கு எதிரியைத் துரத்த முடியும் என்றேன்.

நான் சொன்னதைக் கவனமாகக் கேட்ட பிறகு ஸ்டா லின் வினவினார்:

''ஒரு நெருக்கடியான கட்டத்திற்கு எதிரி வந்துவிட்ட

தில் அவ்வளவு நிச்சயமாக இருக்கிறீர்களா? ஏதோ புதிய பெரிய படைகளை செயலில் இறக்க மாட்டார்களா?''

''எதிரி களைத்துப்போய் இருக்கிறார்கள், ஆனால் முதலாவது மற்றும் பத்தாவது சேனைகள் இல்லாமல் நமது துருப்புகளால் எதிரியின் ஆபத்தான ஆப்புகளை நீக்குவது முடியாது. இப்போது அவற்றை நாம் முடிவு கட்டவில்லை என்றால், எதிரி வருங்காலத்தில் தனது வடக்கு மற்றும் தெற்கு சேனை வகுப்புகளின் துணையால் ஏற்படுத்தும் வலிமையான சேமப்படைகளுடன் தனது துருப்புகளை மாஸ்கோ வட்டாரத்தில் பலப்படுத்திக்கொள்ள முடியும். பிறகு நாமுங்கூட மிகவும் ஆபத்தான சூழ்நிலையை சந்திக்க நேரலாம்.''

படைத் தலைமையகத்துடன் தான் கலக்கப் போவதாக ஸ்டாலின் சொன்னார்.

ஃபிரன்டின் தலைமையின் அதிகாரி சகலோவ்ஸ்கியை (அவரும் கூட முதலாவது மற்றும் பத்தாவது சேனைகளை செயலில் இறக்க அதுதான் நேரம் என்று கருதினார்) படைத் தலைமையகத்திற்கு ஃபோன் செய்து, விரைவாக ஃபிரன்டிற்குச் சேமச் சேனைகளை மாற்ற அமைத்து வழிப்படுத்துமாறு கேட்டேன்.

நவம்பர் 29இன் பிந்திய மாலையில், முதலாவது அதிரடிச் சேனை, பத்தாவது சேனை, இருபதாவது சேனையின் எல்லாப் பிரிவுகளையும் மேற்கு ஃபிரன்டிற்கு மாற்றுகின்ற படைத் தலைமையக முடிவு பற்றி நாங்கள் அறிவிக்கப்பட்டோம். அதே நேரத்தில் இந்தச் சேனைகளை எப்படிப் பயன்படுத்த எண்ணியுள்ளோம் என்பதை அறிவிக்கும்படி படைத் தலைமையகம் எங்களுக்கு உத்தரவிட்டது.

மேற்கு ஃபிரன்டின் பக்கங்களில் எதிர்த்தாக்குதலின் உடனடி நோக்கம் 'மத்திய' சேனை வகுப்பின் அதிரடிப் படைகளை முறியடிப்பதும் தலைநகரத்திற்குள்ள நேரடி அச்சுறுத்தலைத் தவிர்ப்பதுமாகும். மிகவும் உறுதியான திட்டவட்டமான செயல்களுக்கு எங்களது படைகளை ஈடுபடுத்துவதற்கான சக்தி எங்களிடம் அப்பொழுது இல்லை. முடிந்தளவுக்கு அதிகமான சேதத்தை ஜெர்மானியர்களுக்கு ஏற்படுத்தி மாஸ்கோவிலிருந்து அவர்களைத் துரத்தும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருந்தோம்.

மேல் குறிப்பிட்ட மூன்று சேனைகளை மேற்கு ஃபிரன்டிற்கு மாற்றிய போதிலும் விமானங்களைத் தவிர நாங்கள் படை எண்ணிக்கையில் எதிரியின் மீது மேலாண்மையை சாதிக்க முடியவில்லை. டாங்கிகளிலும் பீரங்கிகளிலும் எதிரி தெளிவாகவே மேம்பட்ட நிலையைப் பெற்றிருந்தார்கள். எங்களது மாஸ்கோ எதிர்த்தாக்குதலின் விஷேட அம்சம் இதுதான்.

டிசம்பர் 4இல், பிந்திய மாலையில், தலைமை கமாண்டர் எனக்கு ஃபோன் செய்து ஏற்கெனவே கொடுக்கப்பட்டதை விட, போர்முனைக்குத் தான் எங்ஙனம் உதவி செய்ய முடியும் என்று கேட்டார். தலைமை கமாண்டர் மற்றும் தேசிய விமான எதிர்ப்புப் பாதுகாப்பினுடைய சேம விமானப்படைகள், ஆட்களால் இயக்கப்படும் குறைந்தது இருநூறு டாங்கிகள் ஆகியவற்றின் உதவியை எதிர்பார்த்து இருப்பதாக அறிவித்தேன். எங்களிடம் போதிய டாங்கிகள் இல்லை, அவை இல்லாமல் எங்களது எதிர்த்தாக்குதலை விரைந்து செயலாற்ற முடியாமற் போகும்.

''எங்களால் எந்த டாங்கியும் உங்களுக்குத் தர முடியாது, ஏனெனில் எங்களிடம் அவை இல்லை,'' என்று ஸ்டாலின் பதிலளித்தார். ''ஆனால் உங்களுக்குச் சில விமானங்கள் கிடைக்கும். படைத் தலைமையகத்திற்கு இப்போதே ஃபோன் செய்கிறேன். நினைவிருக்கட்டும், கலீனின் ஃபிரன்ட் தாக்குதலை டிசம்பர் ஐந்தில் மேற்கொள்ளும், தென் மேற்கு ஃபிரன்டின் துருப்புகள் எலேத்ஸ் வட்டாரத்தில் ஆறாம் தேதி தாக்குதலை மேற்கொள்ளும்.''

டிசம்பர் 6இல் மேற்கு ஃபிரன்டின் துருப்புகள் தலைநகரின் வடக்கும் தெற்கும் நோக்கி எதிர்த்தாக்குதலைத் தொடங்கின. பக்கத்திலிருந்த ஃபிரன்டுகள் கலீனின் மற்றும் எலேத்ஸ் வட்டாரங்களில் முன்னேறின. பிரமிக்கத்தக்க சண்டை தொடங்கியது.

எதிர்த்தாக்குதலின் முதல் நாளன்றே கலீனின் ஃபிரன்டின் துருப்புகள் ஜெர்மானிய முன்னணிப் பாதுகாப்பு வரிசைகளுக்குள்ளாகப் புகுந்தன, ஆனால் அவர்களை மீறிச் செல்ல முடியவில்லை. பத்து நாள் கடுமையான சண்டைக்குப் பிறகே, ஃபிரன்டின் படைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு மேல்நோக்கி செல்லத் தொடங்கின. அப்போதுதான் மேற்கு ஃபிரன்டின் வலப்பக்கத் துருப்புகள் ஜெர்மா

னியப் படையை ரொகச்சோவா-சொல்நெச்னகோர்ஸ்க் வட்டாரத்தில் தோற்கடித்து கிலீனைச் சுற்றி வளைத்தன.

டிசம்பர் 13இல் சோவியத் துருப்புகள் கிலீனை அடைந்தன. நகரைச் சுற்றிவளைத்து, அதனது எல்லாப் புறங்களிலிருந்தும் உள்ளுக்குள் நுழைந்தன, கடும் சண்டைக்குப் பிறகு 15இல் இரவு அதை எதிரியிடமிருந்து விடுவித்தன.

ஜெனரல் கோவரவ் தலைமையிலான ஐந்தாவது சேனையின் வலப்பக்கப் படையும் முன்னேறியது, அவ்வாறாக பதினாறாவது சேனையின் வெற்றிக்கு பெரும் பங்காற்றியது.

டிசம்பர் 19இல் எங்களுக்குத் தாங்க முடியாத இழப்பு நேர்ந்தது. இரண்டாவது கார்டு குதிரைப்படைப் பிரிவின் கமாண்டர் ஜெனரல் தவாத்தர், இருபதாவது குதிரைப் படை டிவிஷனின் கமாண்டர் கர்னல் தவ்லீயெவ் போர்நடவடிக்கையின் போது கொல்லப்பட்டனர். ஃபிரன்டின் இராணுவக் குழுவின் யோசனையின் பேரில் சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத் தவாத்தருக்கு மரணத்தின் பின் சோவியத் யூனியனின் வீரர் என்ற பட்டத்தை வழங்கியது.

டிசம்பர் 6இல் பின்வாங்கி வருகின்ற குதேரியனின் இரண்டாவது டாங்கிச் சேனைப் பக்கத்தைக் காப்பாற்றும் பொருட்டுத் தங்களது நிலைகளில் தொடர்ந்து நிற்க எதிரி முயன்ற இடமாகிய மிகைலோவில் பத்தாவது சேனை சண்டையில் முனைந்தது. டிசம்பர் 8இல் ஐம்பதாவது சேனை தாக்குதலைத் திரும்பத் தொடங்கி, தூலாவின் திசையிலிருந்து முன்னேறி, வெனோவ் மற்றும் மிகைலோவிலிருந்து எதிரியினுடைய பின்வாங்கும் வழிகளைத் துண்டிக்கப் போவதாக அச்சுறுத்தியது.

எங்களது மேற்கு ஃபிரன்ட் மற்றும் தென்மேற்கு ஃபிரன்டின் துருப்புகளால் பெரிதும் சிக்கவைக்கப்பட்ட குதேரியனின் டாங்கிச் சேனை, எதிர்த்தாக்குதலுக்குப் போதிய வலிமையின்றி, பெரிய பீரங்கிகளையும் லாரிகளையும் டாங்கிகளையும் கைவிட்டு விட்டு விரைந்து பின்வாங்கத் தொடங்கியது.

பத்து நாள் சண்டையில் மேற்கு ஃபிரன்டின் இடப்பக்கப் படைகள் குதேரியனின் இரண்டாவது டாங்கிச் சேனையை

முறியடித்து விட்டு ஏறத்தாழ 130 கிலோமீட்டர்களுக்கு முன்னேறின.

தூலாவுக்கு ஏற்படவிருந்த அச்சுறுத்தல் கடைசியில் முற்றிலுமாக நீங்கியது. தூலாவைப் பாதுகாக்கின்ற முக்கியப் பணி ஐம்பதாவது சேனையாலும் தூலா தொழிலாளருடைய ஆயுதமேந்திய பிரிவுகளாலும் மேற்கொள்ளப் பட்டது. இங்கே எதிர்த்தாக்குதலின் முக்கியப் பணி கெத்மானுடைய டாங்கி டிவிஷன், பெலோவினுடைய குதிரைப்படைப் பிரிவு, லெப்டினெண்ட் ஜெனரல் பப்போவின் தலைமையிலான ஐம்பதாவது சேனையினுடைய போர்நடவடிக்கைக் குழு ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டது.

தரைப் படைகளின் நடவடிக்கைகளுக்கு ஃபிரன்டைச் சேர்ந்த விமானங்கள், தேசிய விமான எதிர்ப்புப் பிரிவுகள் மற்றும் ஜெனரல் கலவானவினுடைய தொலைதூர குண்டு வீச்சு விமானப்படை துணை நின்றன. குண்டுவீச்சு விமானங்களும் சண்டை விமானங்களும் எதிரியின் பீரங்கிப்படை நிலைகளையும் டாங்கிப் பிரிவுகளையும் தலைமை இடங்களையும் பின்வாங்கிச் செல்லும் துருப்புகளையும் மோட்டார் வாகனங்களையும் தாக்கின. எதிரி பின்வாங்கிச் சென்ற பிறகு எல்லாச் சாலைகளும் அவர்களது டாங்கிகளாலும் மோட்டார் வாகனங்களாலும் நிறைந்து காணப்பட்டன.

எதிரியின் பின்னணிக்கு அனுப்பப்பட்ட பனிச்சறுக்குப் பிரிவுகள், குதிரைப்படை, கமாண்டோ துருப்புகள் பின் வாங்கிய எதிரிப் பிரிவுகளை அழித்தன.

எதிரியின் பின்னணியில் ஃபிரன்டுகளின் இராணுவக் குழுக்களுடன் தங்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துக் கொண்டு கொரில்லாக்கள் மிகவும் தீவிரமான போராட்டத்தை ஊக்குவித்தார்கள்.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பிரியான்ஸ்க் ஃபிரன்டின் பிரிவுகள் கூட வெற்றிகரமாக முன்னேறின. ஸ்தாரித்சா-லாமா மற்றும் ரூஸா ஆறுகள்-மலயரஸ்லாவெத்ஸ்-கலூகா-மோசால்ஸ்க்-சுஹினிச்சி-பெலேவ் என்ற வரிசையை அடைந்ததுடன் சோவியத் துருப்புகளுடைய தாக்குதலின் முதல் கட்டம் முடிவுற்றது.

மாஸ்கோச் சண்டையை வருணிக்கையில், ''இதுவரையில் வெல்ல முடியாதது எனக் கருதப்பட்ட ஜெர்மானிய இராணுவம், நிர்மூலமாகின்ற நிலையில் இருந்தது,'' என்

பதை ஜெனரல் வெஸ்த்ஃபால் ஏற்றுக்கொள்ள வேண்டி யிருந்தது. இதே கருத்தை ஹிட்லரது இராணுவத்தின் பிற ஜெனரல்களும் ஏற்றுக்கொண்டார்கள் — திப்பெல்ஸ்கிர்க், பிலுமென்த்ரித், பையர்லைன், மன்தேஃபெல்.

உண்மையை மறைக்க வேண்டியது இல்லை. மாஸ்கோச் சண்டையில் நாஜிகள் அரைமில்லியனுக்கு மெற்பட்ட ஆட்களையும் ஆயிரத்து முந்நூறு டாங்கிகளையும் இரண்டாயிரத்து ஐநூறு பீரங்கிகளையும் பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்ட லாரிகளையும் அத்துடன் பெருமளவிலான சாதனங்களையும் இழந்தார்கள்.

1941—1942 சோவியத் துருப்புகளுடைய குளிர்கால எதிர்த்தாக்குதல் கடுமையான குளிரில் மேற்கொள்ளப்பட்டது, எண்ணிக்கையில் எதிரியை விடக் கூடுதலின்றி இருந்தது முக்கிய விஷயமாகும். மேலும், எங்களது டாங்கித் தொகுதிகளும் மோட்டார் வாகனப் பிரிவுகளும் தேவைக்குக் கீழாக இருந்தன. போர் அநுபவம் காட்டியிருப்பது போல அவையில்லாமல் பெருமளவிலான முக்கிய நோக்கங்கள் கொண்ட நவீனத் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது இயலாது. சக்திவாய்ந்த டாங்கி மற்றும் மோட்டார் வாகனப் பிரிவுகளின் துணையால் மட்டுமே, எதிரியினுடைய இராணுவ நடவடிக்கைகளை முன்னதாக எதிர்பார்த்துச் செயலாற்றவும், எதிரியை விரைவாகச் சிக்கவைக்கவும், பின்வாங்கிச் செல்லும் வழிகளைத் துண்டிக்கவும், சுற்றிவளைத்து எதிரிகளைத் தனித்தனியாகப் பிரிக்கவும் முடியும்.

மாஸ்கோச் சண்டையில் ஆறு மாதக் காலத்தில் முதல் முறையாக செஞ்சேனையால் எதிரியினுடைய முக்கியப் படைகளுக்குப் பெரிய தோல்வியை ஏற்படுத்த முடிந்தது. அதற்குமுன்னால் எங்களது துருப்புகள் ஒருவகையில் வெற்றிகரமான போர்நடவடிக்கைகளை மேற்கொண்டன, இருப்பினும் சோவியத் தலைநகரின் வாயிலில் அந்தளவுக்குப் பெரியதோ பரந்த செயல்விளைவுடையதொ நடைபெற்றதில்லை. சோவியத் இராணுவ நடவடிக்கைகளின் பகுதியாக திறமையுடன் நடத்தப்பட்ட தற்காப்புச் சண்டைகள், வெற்றிகரமான எதிர்த்தாக்குதல்கள், விரைவான எதிர்த்து மேற்சென்று தாக்குதல்கள் ஆகிய சோவியத் இராணுவத் தலைவர்களின் போர்த்திறத்தையும் போர்த்தந்திரத்தின் முதிர்ச்சியையும் வெளிக்காட்டின.

கடுமையான, அடிக்கடி பெரும் ஆபத்தான சூழ்நிலைகளில் சோவியத் போர்வீரர்கள் உறுதிமிக்கவர்களாக, முதிர்ச்சியடைந்தவர்களாக, அநுபவம் பெற்றவர்களாக இருந்தார்கள். தேவையான அளவுக்குப் போர்த் தளவாடங்களைப் பெற்றதனால், பின்வாங்குகிற தற்காப்புப் படையிலிருந்து சக்திமிக்க தாக்குகின்ற படையாக மாறினார்கள்.

மாஸ்கோச் சண்டையில் தோல்வியைத் தொடர்ந்து நாஜிகள் முழுப் போர்முனை வரிசை நெடுகிலும் தற்காப்பு நிலையை மேற்கொண்டார்கள். தங்களது துருப்புகளின் தாக்குகிற திறமையைப் புதுப்பித்துக் கொள்ளும் முயற்சியில், நாஜி இராணுவ மற்றும் அரசியல் தலைமை எல்லாவகையான அவசர நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நேரிட்டது, பிரான்சிலிருந்தும் கைப்பற்றிய பிற நாடுகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான படைப்பிரிவுகளை சோவியத் யூனியனுக்கு மாற்ற வேண்டி நேர்ந்தது. தங்களைச் சார்ந்திருந்த அரசாங்கங்களையும் அவர்கள் நெருக்கடிக்கு ஆளாக்கி, சோவியத்-ஜெர்மானியப் போர்முனைக்குப் புதிய படைப் பிரிவுகளையும் கூடுதலான போர்த் தளவாடப் பொருள்களையும் அனுப்பக் கோரினார்கள்.

மாஸ்கோச் சண்டையில் ஸ்டாலினுடைய பங்குப்பணி பற்றி என்னை அடிக்கடி கேட்கிறார்கள்.

எதிரியைத் தோற்கடிப்பதற்காக படைகளையும் சாதனங்களையும் ஒழுங்கு செய்வதில் முழு நேரமும் ஸ்டாலின் மாஸ்கோவில் தங்கியிருந்தார். அவருக்குரிய மதிப்பைக் கட்டாயம் கொடுத்தாக வேண்டும். அரசு பாதுகாப்புக் குழுவின் தலைவர் என்ற முறையில், மக்கள் கமிசாரகங்களின் தலைவர்களின் உதவியுடன், தேவையான போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்த ரிசர்வுகளையும் கருவிகளையும் ஏற்பாடு செய்கிற மிகப் பெரிய பணியைச் செய்தார். தனது வளைந்து கொடுக்காத உறுதியினால் அநேகமாக முடியாததைச் சாதித்தார் என்பதைச் சொல்லியாக வேண்டும்.

மாஸ்கோவுக்கான பயங்கரமான சண்டைகளில் எல்லாப் பிரிவுகளும் அசாதாரணமான உறுதியுடன் சண்டையிட்டன. சாதாரண போர்வீரனிலிருந்து ஜெனரல் வரை எல்லா ஆட்களுமே ஒப்பற்ற வீரத்தை வெளிப்படுத்தினார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கைக்குச் செவிசாய்த்து தங்களது தாய் நாட்டிற்கான புனிதக் கடமையை அவர்கள் நிறை

வேற்றினார்கள். தலைநகரைக் காக்க தங்கள் உயிரையும் தரத் தயாராக இருந்தார்கள். கடைசி வரை நின்று போரிட்ட, நாட்டினுடைய இதயத்தை, வீர நகர் மாஸ் கோவுக்குள்ளாக எதிரி வருவதைத் தடுத்திட்ட அவர்களுக்கு நாங்கள் பட்டுள்ள கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது.

கன்ஸ்தன்தீன் சீமனவ்

(1915—1979)

சீமனவ், லெனின்கிராடில் பிறந்த இவர் ஆரம்பத்தில் தொழிற்சாலை ஒன்றில்] கடைசற்காரராக வேலை செய் தார். பின்னர் மாஸ்கோவில் உள்ள மக்ஸீம் கார்க்கி இலக் கியக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்து கவிஞராகத் தனது இலக் கியப் பணியைத் தொடங்கினார். இவரது முதலாவது கவி தைகள் 1934இல் வெளிவந்தன. 1941-45இல், **கிராஸ்நயா ஸ்வெஸ்தா** *(சிவப்பு நட்சத்திரம்) என்ற இராணுவப் பத்திரி கையில் சேர்ந்து போர் நிருபராகப் பணியாற்றினார். நேரடி யான போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மாஸ்கோவிலி ருந்து பெர்லின் வரை போன சோவியத் துருப்புகளுடன் அவரும் சென்றார். போர் ஆண்டுகளின் போது பல கவிதைத் தொடர்களையும்,* **ருஷ்ய மக்கள்** *என்ற நாடகத்தையும்,* **ஸ்டாலின்கிராடைப் பாதுகாத்தவர்களைப் பற்றிய பகல் களும் இரவுகளும்** *என்ற கதையையும் பல சிறுகதைகளை யும் சீமனவ் எழுதினார்.* **இருப்பவர்களும் இறந்தவர்களும்** *(1959-71) என்ற முத்தொகுதி நாவலின் ஆசிரியர் இவர். இதற்காக இவருக்கு லெனின் பரிசு வழங்கப்பட்டது. இந்த நாவல் பல்வேறு உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டி ருக்கிறது. சோஷலிச உழைப்பு வீரர் என்ற பட்டம் வழங்கி சீமனவ் கௌரவிக்கப்பட்டார்.*

மாஸ்கோவுக்கு அருகே உச்சக் கட்டத்தில் சோவியத் துருப்புகள் எதிர்த்துப் போரிட்ட 1941ஆம் ஆண்டில் **ஜூன்-டிசம்பர்** *என்ற கதையை எழுதினார்.*

ஜூன்-டிசம்பர்

1

ஜூன் மாதம் இருபத்தி நான்காம் நாள். ஏதோ காரணத்திற்காக புறநகர் பெட்டிகள் இணைக்கப்பட்ட இரயில் வண்டி இருளடைந்த பெலோருஷ்ய இரயில் நிலையத்தை விட்டுப் புறப்பட்டது. நீலநிற விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இன்னமும் அதற்குப் பழகிப் போகாதவர்களாக இருந்தோம். இரயில் மின்ஸ்கிற்குச் சென்று கொண்டிருந்தது. பயணிகள் பெரும் பாலும் விடுமுறை கழிந்து தங்களது பிரிவுகளுக்குத் திரும்பும் அதிகாரிகளாகவே இருந்தனர். அன்று போரின் மூன்றாவது நாள், ஒவ்வொருவரும் மேற்கு நோக்கி விரைந்தனர்.

எனக்கு அடுத்து அமர்ந்திருந்தவர் டாங்கிப் பிரிவின் கர்னல். நரைத்த முடியுடன் இருந்த குட்டையான மனிதர். லெனின் விருது அவரது ராணுவச் சட்டையில் மாட்டப்பட்டிருந்தது. அவரது மகன் மீஷா, அதுதான் அவன் பெயர் என நம்புகிறேன், அவருடன் போர்முனைக்குப் போய்க் கொண்டிருந்தான். ஒரு சாரணனாகத் தன்னுடன் பதினாறு வயதுப் பையனைக் கூட்டிச்செல்ல மக்கள் பாதுகாப்பு கமிசாரகத்திடமிருந்து தந்தை அநுமதி பெற்றிருந்தார். தந்தையும் தனயனும் ஒன்று போலவே காணப்பட்டார்கள். பிடிவாதமான மோவாய்களும் கருத்தார்ந்த சாம்பல்நிறக் கண்களும் கொண்ட இருவருமே குட்டையாகவும் நல்ல தேகக்கட்டுக் கொண்டவர்களாகவும் இருந்தனர்.

இரயில் பரீசவைத் தாண்டி அப்பால் செல்லவில்லை. ஜெர்மானியர்கள் முன்னே இருந்தார்கள், சேதமான ரயில் பாதை, முற்றிலும் நிச்சயமில்லாத தன்மை.

பெரிஸினா ஆற்றின் கரைகளில் இருந்த காட்டுப்பகுதியில் பல்லாயிரக் கணக்கான அதிகாரிகளும் போர்வீரர்களும் கூடியிருந்தார்கள். அவர்களும் கூட தங்களது பிரிவுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள், ஆனால் எதிர்பாராது பரீசவுக்குள்ளாக நுழைந்த ஜெர்மானியர்கள் இவர்களைத் துண்டித்து விட்டார்கள்.

தாழப் பறக்கும் ஜெர்மன் விமானங்கள் உறுமிக்கொண்டு அலை அலையாக தலைக்கு மேலே வட்டமிட்டன. சூரிய

உதயத்திலிருந்து சூரியன் மறையும் வரை எங்கள் மீது குண்டுகளைப் போடவும் எந்திரத் துப்பாக்கிகளால் தாக்கவும் செய்தார்கள். அதேவேளை களப் பீரங்கிகள் எங்களுக்கு முன்னே மேற்கில் தொடர்ச்சியாகப் பெரு முழக்கம் செய்தன. எல்லாருமே வெவ்வேறு பிரிவுகளிலிருந்து வந்தவர்கள், எல்லாருமே ஒருவருக்கொருவர் அந்நியமானவர்கள், என்ன நடைபெற்றது என்பது யாருக்குமே தெரியாது. ஆனால் முன்னுக்கு வந்த ஒருவர் விரைவாக எல்லாரையும் ஒன்று திரட்டி தேவையான ஒழுங்கை நிறுவினார். அது அந்தக் குட்டையான கர்னல்தான், எனது பயணக் கூட்டாளி. பரீசவ் அருகிருந்த காட்டுப்பகுதியில் திரண்டிருந்த ஆட்களின் தொகுதிக்கு அவர்தான் உயிரும் உடலும் போலத் திகழ்ந்தார்.

இப்படிக் கட்டளையைப் பிறப்பித்த முதல் ஆள் அவர்தான்: ''பாதுகாப்புக்காகத் தயாராகுக''. மூத்த அதிகாரிகளை ஒன்றுசேர்த்தார், படைக்கலங்களை எண்ணினார், ஆட்களை கம்பெனிகளாகவும் பிளாட்டூன்களாகவும் பிரித்தார். தாங்கள் இராணுவத்தினர் என்பதைப் போர்வீரர்கள் திரும்பவும் உணர்ந்தார்கள்.

எந்திரத் துப்பாக்கிகளுடன் சில பீரங்கிகள் காணப்பட்டன, ஆகவே படைத்தளவாடங்களுக்காக ஆட்கள் பரீசவுக்குத் திரும்ப அனுப்பப்பட்டார்கள். நாங்கள் பதுங்கு குழிகளை தோண்டி எங்களது துப்பாக்கிகளுடன் அவற்றுக்குள்ளாக இறங்கினோம்.

அங்கே எல்லாவகையான ஆட்களும் இருந்தார்கள். எனக்கு இடப்பக்கமாகப் படுத்திருந்தவர்கள் பீரங்கிப்படை காப்டனும் இராணுவ வழக்குரைஞரும், வலப்புறத்தில் இராணுவத்தைச் சேராத இரண்டு ஆட்களும் இருந்தனர், இருவருமே லாரி ஓட்டுநர்கள்.

கர்னலுடைய மகனை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். தன்னைப் பயனுள்ளவனாக ஆக்கிக்கொள்ளும் எல்லாவற்றையும் அவன் செய்தான். அவனது துப்பாக்கி தோளின் மீது தொங்கியது, தகவல்களை வாங்கிக்கொண்டு, உணவு, நீர், தோட்டாக்குண்டு இவற்றை எடுத்துக்கொண்டு சுற்றிலும் ஓடிவந்தான். அவனுக்குக் கிடைத்த அரிய சாவகாசமான கணங்களில் தனது கடைக்கண் பார்வையால் பெருமையோடு தன் தந்தையைக் கவனித்தான். தான் போரிடுவ

தில் பையன் மகிழ்ந்தான், நெருக்கடியான அந்த நேரத்தில் அங்கே சீருடையில் இருந்த அத்தனை பேரிலும் மிகவும் உறுதியானவர் என்பதைத் தன் தந்தை நிரூபித்து விட்டார் எனப் பெருமைப்பட்டான்.

தன் தந்தையைப் பற்றிப் பெருமைப்பட அவனுக்குப் போதிய காரணம் இருந்தது. வழமையற்ற எதுவுமே நடக்க வில்லை என்பது போலவும், இந்தப் பல்வேறு ஆட்களும் ஒருவருக்கொருவர் முற்றிலும் அந்நியமானவர்கள் அல்லர், ஆனால் குறைந்தது மூன்று ஆண்டுகளாக தான் அதிகாரம் செலுத்துகிற நிரந்தர ரெஜிமெண்ட் அது என்பது போலவும் அவர் நடந்து கொண்டார். அமைதியான, அடங்கிய தொனி யில் உத்தரவுகள் பிறப்பித்தார், அது வெங்கல மணியாய் ஒலித்து, உடனடியாகக் கீழ்ப்பணிய வைத்தது. அவரது பெயரைப் பலமுறை நான் கேட்டிருக்கிறேன், அப்போது அறிந்திருந்தேன், ஆனால் பின்னர் அதை நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை.

மறுநாள் நான் கர்னலை விட்டுப் பிரிந்தேன், மீண்டும் அவரைப் பார்க்கவே இல்லை.

நவம்பரில், கரேலியப் போர்முனையில் நான் இருந்த போது, நீண்ட காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பழைய பத்திரிகைத் தொகுப்புகளை மாஸ்கோவிலிருந்து பெற் றோம். அவற்றின் ஒரு பத்திரிகையின் முன் பக்கத்தில், எது என்று எனக்கு நினைவு இல்லை, இதுபோன்ற தலைப்பு டன் ஒரு புகைப்படம் வெளியாகி இருந்தது: ''கர்னல் லிசூக்கோவ், சோவியத் யூனியனின் வீரர், முதல் கவசக் காலாட்படை டிவிஷனின் கமாண்டர், பதாகையைப் பெறு கிறார்''.

குளிர்காலச் சீருடையை அணிந்திருந்த கர்னல் பிடிவாத மான மோவாய் கொண்ட குட்டையான, நல்ல தேகக்கட்டு கொண்டவர் புகைப்படத்தில் பதாகையோடு நின்றார்...

அவரை நான் உடனே அடையாளங் கண்டேன். உண் மையில் பரீசவுக்கு அருகிலிருந்து வந்த மனிதர் அவர்தான். அப்போது கேள்விப்பட்ட, ஆனால் பிறகு மறந்துவிட்ட பெயரை நினைவு கூர்ந்தேன். கர்னல் லிசூக்கோவ், சரிதான். அந்தப் படத்தில் அவர் மகனும் அவருடன் இருக்க வேண் டும் என ஆசைப்பட்டேன். முன்னர் ஜூனில் பார்த்தது போலவே இருவரையும் ஒருசேரப் பார்க்க விரும்பினேன்...

இவை எல்லாமே டிசம்பரில் எனக்கு மிகவும் விவரமாகத் தெரியவந்தன. இப்போது ஜெர்மானியர்கள் பின்வாங்கு தலைத் தொடர்ந்து மேற்கு நோக்கிச் செல்லக்கூடிய பல பாதைகளின் நெடுகிலும் நான் பயணம் செய்திருந்தேன், எவ்வளவு மூர்க்கத்தனமாக அவர்கள் நிர்மூலமாக்கப்பட் டார்கள் என்பதையும் பார்த்தேன். இப்போது அவர்களை அடிப்பதற்கு நாங்கள் கற்றுக்கொண்டு விட்டோம். முன்னர் சிந்தித்துப் பார்க்க எது மிகவும் வேதனைமிக்கதாக இருந் ததோ அதைத் திரும்பவும் எங்கள் மனத்தில் எண்ணிப்பார்க்க எங்களால் கடைசியில் அநுமதிக்க முடியும்.

இப்போது நான் ஜூன், ஜூலையில் நடந்த முதலாவது கடுமையான சண்டைகளை நினைத்துப் பார்க்கிறேன்; குருதி யால் கழுவப்பட்ட பாதைகள் நெடுகிலும் நாங்கள் பின் வாங்கினோம், இப்போதோ அவற்றின் வழியே திரும்பிக் கொண்டிருக்கிறோம்.

அப்போது எங்களது இராணுவத்திற்கு உடலும் உயிரும் போல இருந்தவர்களின் பெயர்களை இன்று ஒருவர் விஷேட மான பெருமைமிக்க உணர்வுடனும் நன்றியுடனும் எடுத்துக் கூறுகிறார். அந்தக் கஷ்டமான நாள்களில் இது எல்லாமே முடிவுக்கு வரப்போகிறது என்பதை, அதாவது நிச்சயமாக நாங்கள் வென்று திரும்புவோம் என்பதை ஒருவர் நம்பி னார். எப்போது என்று எங்களுக்குத் தெரியாது, ஆனால் இத்தகைய ஆட்களைக் கவனித்ததன் மூலம் நிச்சயமாக அது அப்படித்தான் இருக்கும் என்பது எங்களுக்குத் தெரியும்.

தார்த்தாரிய முற்றுகையினால் ருஷ்யா சூறையாடப் பட்ட போது, அதனது நகரங்கள் எரிந்து தரைகட்டமாகி அம்மக்களது குருதியால் மூழ்கிய போது, பயங்கர மனக் கசப்பு மற்றும் துயரத்தின் மறக்க முடியாத நினைவுகளை அந்த மக்கள் தங்களது கதைப்பாடல்கள் மூலம் பின்சந் ததியாகிய நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆனால் நோவ்கரட், சுஸ்தால், விளதீமிர், ரியஸான் ஆகிய நகரங் களின் வரலாற்றுக் குறிப்புகள் ரியஸானின் வீரனாகிய எவ்பாதி கலவ்ராத் பற்றிய கதையைச் சொல்கின்றன. போரினின்றும் திரும்பிய இவன், தனது நகரம் எரிந்து தரை யோடு தரையாகக் கிடப்பதைக் கண்டு, ஒரு சிறு படை யைத் திரட்டிக் கொண்டு எதிரியைத்தேடிப் புறப்பட்டான். பெரும் எண்ணிக்கைக் கொண்ட தார்த்தாரியப் படையை

முந்திச் சென்று அவர்களில் அதிக எண்ணிக்கையினரைக் கொன்றான், இந்தச் சமபலமற்ற சண்டையில் வீரனும் அவனது படையினரும் மாண்டனர்.

தார்த்தார் நுகத்தடியை விட்டு ருஷ்யா தன்னை விடுவித்துக் கொண்டது, குலிக்கோவச் சமவெளிச் சண்டையில்* வெற்றி கிட்டியது. ஆனால் வெற்றியாளர்களின் பெயர்களுடன், திமீத்ரி டான்ஸ்கோய் பெயருடன் தார்த்தார் முற்றுகையின் அந்த முதலாவது துயரமான நாள்களின் புகழ்பெற்ற வீரன், எவ்பாதி கலவ்ராதின் நினைவும் வாழ்கிறது.

அவனது பெயர் நம்மை வந்து சேர்ந்திருக்கிறது, ஏனெனில் குருதிசிந்தி தோற்கடிக்கப்பட்ட அந்தத் துயரமான நாள்களில் அவன் நிகழ்த்திய வீரச்செயல் வெறும் ஆறுதல் மட்டுமன்று, ஏதோ பெருமைப்படக் கூடியது மட்டுமன்று, ஆனால் இறுதியான வெற்றியின் அத்தாட்சியும் கூட.

காலமும் எதிரிகளும் மாறுகின்றன—எந்த வரலாற்று ஒற்றுமையையும் தருவதற்கு நான் விரும்பவில்லை—ஆனால் மக்களது இதயம் மாறவில்லை. சோதனை காலங்களில் இருந்தது போலவே அவ்வளவு தீவிரமானதாக இருக்கிறது, மேலும் அத்தகைய நேரங்களில் மற்ற ஆட்களை விட ஆர்வத்தில் தூய்மையும் வலிமையும் உள்ளவனாகத் தன்னை நிரூபிப்பவனிடத்திலும் அவ்வளவு நன்றியுடையதாக இருக்கிறது.

இப்போதும் அது போலவே இருக்கும். வெற்றியாளர்களுடைய பெயர்கள் மக்கள் நினைவில் உள்ள ஜூன், ஜூலை, ஆகஸ்ட் சண்டைகளின் வீரர்களது பெயர்களை ஒளிமறைப்புச் செய்யாது. அந்த வேதனைமிக்க தோல்விக் காலத்தில் எப்படிப் பத்திரிகையாளர்களாகிய நாங்கள், போர்முனையில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைப் பொதுமக்களுக்குச் சொல்லவும் வெற்றியில் நம்பிக்கை உண்டாக்கிய கதைகளைத் தேடிக் கண்டுபிடிக்கவும்

---

* குலிக்கோவச் சமவெளிச் சண்டை, செப்டெம்பர் 8, 1380இல் ஹான் மாமாய் தலைமையிலான தார்த்தார்களுக்கும் மாஸ்கோ பெரும் இளவரசன் திமீத்ரி டான்ஸ்கோய் தலைமையிலான ருஷ்யப் படைகளுக்கும் இடையே நடைபெற்றது. தார்த்தாரிய நுகத்தடியிலிருந்து ருஷ்யாவை விடுவிக்க இச்சண்டை அடித்தளமிட்டது. (ப-ர்.)

வேண்டியவர்களாக இருந்தோம் என்பதை நான் மிக நன்றாக நினைவு வைத்திருக்கிறேன்.

ஜூலை மாத நடுவில். மகில்யோவ் நகரம் நீப்பரின் கிழக்கு மேற்குப் பகுதிகளை ஒரே ஒரு மரப்பாலந்தான் இணைத்தது, அதில் ஒரு பீரங்கியோ, விமான எதிர்ப்பு எந்திரத் துப்பாக்கியோ கிடையாது. மகில்யோவைப் பாதுகாத்துக் கொண்டிருந்த ரெஜிமெண்ட் இருந்த மேல் கரைக்கு நாங்கள் கடந்து சென்றோம். அன்றைய தினம் கடுமையான, குரூரமான சண்டை நடைபெற்றது. நாற்பது ஜெர்மானிய டாங்கிகளை ரெஜிமெண்ட் நாசம் செய்தது, ஆனால் அதற்கு அதிக ரத்தம் சிந்த வேண்டியிருந்தது. மாலையில் கமாண்டிங் அதிகாரி கர்னல் குத்தேபவுடன் பேச்சு நடத்தினோம். மிகவும் உயரமான, மெலிந்த, சற்று அருவருப்பான தோற்றம் கொண்ட அவர் இராணுவத்தில் பல ஆண்டுகள் இருந்தவர். ஆனால் முதல் நாள் வரை சீருடையை அணியாதவர் போலக் காணப்பட்டார். விஷயங்கள் மோசமாகும் போது, முகச்சவரம் செய்யாத, சிலிர்த்த, முற்றிலும் களைத்துப் போன அவருடைய முகம், எதிர்பாராதபடி மென்மையாகவும், குழந்தை முறுவலிப்பும் கொண்டதாக ஒளிரும்.

அவரிடம் பாலத்தைப் பற்றிச் சொன்னோம். அதில் விமான எதிர்ப்பு எந்திரத் துப்பாக்கி ஒன்று கூட இல்லை என்றோம். விமானத்திலிருந்து ஜெர்மானியர்கள் அதை அழித்து விட்டால் நீப்பரின் இந்தப் பகுதியில் ரெஜிமெண்ட் துண்டிக்கப்பட்டு விடும்.

''ஓ, அப்படியா,'' என்று குத்தேபவ் தனது குழந்தைத்தன முறுவலிப்பைத் திடீரென்று முறுவலித்தார். ''ஓ, அப்படியா,'' என்று மென்மையான, அமைதியான குரலில் மிகவும் சாதாரண விஷயங்களைப் பேசிக் கொண்டிருப்பது போலத் திரும்பச் சொன்னார். ''அவர்கள் அழிக்கட்டும். மற்றவர்கள் பின்வாங்கலாம், ஆனால் இங்கேயே தங்கி, சாவதென நாங்கள் முடிவுசெய்து விட்டோம். இது ரெஜிமெண்டின் மொத்த முடிவு. நாங்கள் ஏற்கெனவே இந்த விஷயத்தை விவாதித்து விட்டோம்.''

தனது தலைமை இடத்தில் குத்தேபவ் நின்றதும் ஒரு செய்தியாள் விரைந்து ஓடிவந்ததும் இன்று வரை எனக்கு நினைவிருக்கிறது.

''தோழர் கர்னல், நமது படையின் வலப்பக்கத்தில் இன்னும் முப்பது டாங்கிகள் உள்ளன,'' என்று அறிவித்த அவன் மூச்சுக்காக ஏங்கினான்.

''என்ன, மேலும் டாங்கிகளா? எங்கே?'' என்று அருகே நின்று கொண்டிருந்த அதிகாரிகளில் ஒருவர் திடுக்கிட்டவாறு கர்னலிடம் கேட்டார். வெளிப்படையாகவே, 'டாங்கிகள்' என்ற சொல்லை மட்டுமே பிடித்துக் கொண்டுவிட்டார், ஆனால் எத்தனை அங்கே இருந்தன என்பதை விட்டு விட்டார்.

''மேலும் டாங்கிகள்? ஆமாம், படையின் வலப்பக்கத்தில் மூன்று கேடுகெட்ட அதுகள் இருக்கின்றன,'' என்று பதிலளித்த குத்தேபவ் புன்னகை செய்தார்.

இன்றுவரையும் அவரது கவலை நிறைந்த கண்களும் புன்னகையும் எனக்கு நினைவு உள்ளது. அவர் கவலையோடு காணப்பட்டதற்குக் காரணம் படையின் வலப்பக்கத்தில் முப்பது டாங்கிகள் இருந்தன, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாக வேண்டும். அவர் முறுவலித்ததற்குக் காரணம் அவர் பதில் சொல்லிய அதிகாரி படையின் இடப்பக்கம் போக வேண்டியிருந்தது; வலப்பக்கத்தில் ஜெர்மன் டாங்கிகள் மூன்று மட்டுமே இருந்தன முப்பது அல்ல என்று நம்புவது அவருக்கு நல்லாதாக இருக்கும்.

இராணுவ நோக்கில் அவர் செய்தது தவறாக இருக்கலாம், எனக்குத் தெரியாது, ஆனால் அந்த நெருக்கடியான கணத்தில் அவரைப் பார்த்ததில் நாங்கள் வெல்வோம் என்று எனக்குத் தெரிந்தது. நாங்கள் நிச்சயமாக வெல்வோம், அது வேறு விதமாக இருக்கவே முடியாது.

2

போர்ச் சாலைகள் எப்படி மாறிப்போய்விட்டன! முடிவற்ற அகதிகள் கூட்டத்துடன் இருந்த மின்ஸ்க் நெடுஞ்சாலையை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். படுக்கையினின்றும் தாவிக் குதித்த போது அவர்களிடம் இருந்தனவற்றை அணிந்து கொண்டு சென்றார்கள். சிறிய உணவுப் பொட்டலங்களைக் கொண்டு சென்றார்கள். அவை மிகச் சிறியனவாக இருந்தன, எனவே அந்தச் சாலையில் ஐந்து,

பத்து அல்லது பதினைந்து நாள்களுக்கு அவர்கள் என்ன சாப்பிட்டார்கள் என்பது புரியாததாக இருந்தது.

ஜெர்மானிய விமானங்கள் நெடுஞ்சாலைக்கு மேலாகக் கிறீச்சிட்டவாறு பறந்தன. இப்போதெல்லாம் ஜெர்மானிய விமானிகள் அது போலப் பறப்பதில்லை. அவர்கள் துணிவதில்லை, துணிய முடியாது. ஆனால் அந்த நாள்களில் அவர்கள் மிகவும் தாழப் பறந்தார்கள், விமானங்களுடைய சக்கரங்களால் நம்மை நசுக்க அவர்கள் விரும்பியது போல இருந்தது. சாலையின் மீது குண்டுகளைப் போட்டார்கள், மக்கள் தொடர் மீது எந்திரத் துப்பாக்கிகளால் சுட்டார்கள். பிறகு அகதிகள் சாலையை விட்டு விட்டு பக்கங்கள் நெடுகிலும் தொடர்ந்தார்கள், தார் சாலையை விட்டு சுமார் நூறு அடிகள் தள்ளி, வரிசையாக நின்ற மரங்களின் ஊடாகச் சென்றார்கள். தெரிந்து கொள்வதில் ஜெர்மானியர்கள் விரைவாக இருந்தார்கள். அடுத்த நாளிலிருந்தே தங்களது போக்கை மாற்றிக் கொண்டு, சாலையின் மத்தியப் பகுதியை விட்டு விட்டு அதன் இரு ஓரங்களிலும் பறந்தார்கள், தார் சாலையை விட்டு சுமார் நூறு அடிகள் தள்ளிப் பறந்து, இப்போது அகதிகள் சென்று கொண்டிருப்பதாக அவர்கள் கணக்கிட்ட வரிசையின் மீது தங்களுடைய குண்டுகளைப் பொழிந்தார்கள்.

சில கிராமங்களில் எங்களது கண்களுக்குள்ளாகத் தேடுவது போலக் காணப்பட்ட மக்கள், ''ஜெர்மானியர்கள் இங்கே வராமல் செய்ய உங்களால் முடியுமா?'' எனக் கேட்டது எனக்கு நினைவிருக்கிறது.

அல்லது இப்படிக் கேட்பார்கள்: ''நாங்கள் புறப்பட இதுதான் நேரமாக இருக்குமோ?'' திரும்பவும் எங்களது கண்களுக்குள்ளாகத் தேடுவது போலக் காணப்பட்டார்கள்.

அந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பதை விட சாவது சுலபமாகக் காணப்பட்டது.

அதை முன்னர் என்னால் நினைவு வைத்திருக்க முடியவில்லை, ஏனெனில் அது மிகவும் வேதனைமிக்க நினைவு; ஆனாலும் இப்போது அதை நான் நினைவு வைத்திருக்கிறேன், ஏனெனில் ஒரு சமயம் நாங்கள் கிழக்கு நோக்கிப் பின்வாங்கிய பல பாதைகளின் நெடுகிலும் மேற்கு நோக்கி நான் நடந்தேன், திருப்பி அனுப்பப்பட்டேன்.

பாதைகளில் திரும்பவும் அகதிகள் நிறைந்திருந்தார்

கள், ஆனால் அவர்கள் இப்போது முற்றிலும் மாறுபட்ட மக்களாக இருந்தார்கள். அவர்கள் வீடுகளை விட்டுச் செல்ல வில்லை, ஆனால் திரும்பிக் கொண்டிருந்தார்கள். துயர மான நேரங்களில் மட்டுமே சொந்த மண்ணுக்கு எவ்வளவு இழுக்கும் சக்தி இருக்கிறது என்பதையும் தாங்கள் விட்டுச் சென்ற வீடுகளுக்கு எவ்வளவு வலிமையோடு மக்கள் இழுக் கப்பட்டார்கள் என்பதையும் உண்மையில் புரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் பாதுகாப்புக்காகக் காத்திருக்கவோ தேடவோ இல்லை, எங்கள் ராணுவத்தின் பின்னே வந்தார் கள். ஆபத்துக் கடப்பதற்கு முன்னமேயே, துப்பாக்கிகள் குமுறுவதை நிறுத்தும் முன்னமேயே, பீரங்கிகள் இடிமுழக் கத்தை நிறுத்துவதற்கு முன்னமேயே அவர்கள் வந்தார்கள். ஒருநாளைக் கூட இழக்க அவர்கள் விரும்பவில்லை. அன்று காலையில் தான் அங்கு வந்திருந்த போர்வீரர்களைத் தொடர்ந்து அன்று மாலையிலேயே அவர்கள் வீட்டில் இருக்க வேண்டும்.

போர்க்காலத்தில் போர்வீரர்கள் எல்லாவற்றையும் நன்றாக அறிந்திருந்தார்கள்; எல்லாக் கேள்விகளுக்கும் அவர்கள் விடையளித்தாக வேண்டும், அறியாமையைக் காட்ட அவர்களுக்கு உரிமையில்லை.

பாதைகளின் நெடுகிலும் நடந்து சென்ற மக்கள் கேள்வி கள் கேட்க விரும்பினார்கள், அதிகமாக, மிகமிக அதிக மாகத் தெரிந்துகொள்ள விரும்பினார்கள், அப்போதே எந் தச் சுணக்கமும் இல்லாமல் தெரிந்துகொள்ள விரும்பினார் கள்.

ஜூன் மாதத்தில் கேள்விகள் கேட்டார்கள், இப்போது டிசம்பரிலும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்ன வித்தியாசமான கேள்விகள்! ஜூலையில் ஷ்க்லோவ் வழியாகக் கடந்து போனது எனக்கு நினைவிருக்கிறது. கடந்து சென்ற ஒவ்வொரு காரும் அகதிகள் மத்தியிலே கலவரத்தை ஏற்படுத்தியது. மேற்கு நோக்கி சில கார்கள் சென்றன. மக்கள் அவற்றை நிறுத்திக் கேட்டார்கள்:

''ஒருகால் நாங்கள் போகத் தேவை இருக்காதோ? ஒரு வேளை ஜெர்மானியர்கள் இங்கே வர மாட்டார்களோ?'' என்றார்கள். அவர்களது கண்களில் திரும்பவும் நம்பிக்கை தெரிந்தது.

ஆனால் பிறகு அதிகமான இராணுவ வண்டிகள் அவர்

களைக் கடந்து கிழக்கில் சென்றன. சோகமான தோற்றத்து டன் மக்கள் அவற்றைத் தொடர்ந்து பார்த்தனர். விரைந்து போவதற்காக தங்களது குதிரைகளை சவுக்கால் விளாசி னார்கள். தாங்கள் எங்கே போக வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தார்கள்: ரஸ்லாவல் வரைக் குமா அதற்கும் அப்பால் கிழக்கிலா?

டிசம்பர். அதே சாலைகள். ஒதோயெவில் நகரத்திற்கு அப்போதுதான் திரும்பியிருந்த மக்கள் எங்களைச் சுற்றி வளைத்துக் கொள்கிறார்கள். எங்கள் ராணுவம் மின்ஸ் கையும் பெலேவையும் எப்போது எடுத்துக்கொள்ளும் என்று அறிய விரும்புகிறார்கள். அவர்களது உறவினர்கள் அங்கேயே தங்கிப் போய் விட்டார்கள், அவர்கள் உயிரோடு இருந்தால் அவர்களைச் சீக்கிரமே போய்ப் பார்க்கலாம் என்று நம்புகிறார்கள். பெலேவ் எடுத்துக் கொள்ளப்படும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள், அவர்கள் அறிய விரும்பியதெல்லாம் எப்போது, எவ்வளவு விரைவில் என் பதுதான். வெகுவிரைவில் என்று அவர்களிடம் சொல் கிறோம். நாங்களும் அதை நம்புகிறோம். பிறகு அவர்கள் கலூகா, ஓரியோல் மற்றும் பிற நகரங்களைப் பற்றி எங்க ளிடம் கேட்கத் தொடங்குகிறார்கள்.

''எப்போது?'' திரும்பவும் கேட்கிறார்கள், கண்களில் உறுதியான நம்பிக்கையுடன் போர்வீரர்களை நோக்குகிறார் கள்.

இந்தத் தோற்றங்கள் குதிரை மீதிருந்த எங்களது போர் வீரர்களை உள்ளார்ந்த உணர்வுடன் குதிமுள்களால் குதிரை களைத் தூண்டி மேற்கு நோக்கிச் சென்ற சாலையில் உள்ள நகரத்தின் நுழைவாயிலுக்கு விரைவான துள்ளலுடன் ஓட வைக்கின்றன.

3

நவம்பர் மாத ஓர் இரவில் எங்களது தொலைதூர வடக்கு ராணுவத் தலைமை அலுவலகத்தில் இருந்தது எனக்கு நினை விருக்கிறது. பாதி வானம் வடமுனை வளரொளியுடன் பிரகாசமாக இருந்த போது, புகைக்கவும் குளிர்ந்த காற் றைச் சுவாசிக்கவும் வெளியே சென்றேன். தனித் துறையைச் சேர்ந்த ஒருவரும் என்னுடன் வெளியே வந்தார். எதையோ

நினைவுபடுத்துவது போலத் திடீரென்று என்னிடம் மகிழ்ச்சியாகச் சொன்னார்:

''பாருங்க, உங்களுக்காக கொஞ்சம் ஆர்வமூட்டக்கூடிய விஷயம் இருக்கும். நாம் மூன்று ஜெர்மன் அதிகாரிகளைப் பிடித்திருக்கிறோம்.''

''என்ன அந்தஸ்து?'' என்று கேட்டேன்.

''எனக்கு இன்னமும் தெரியாது.''

''அவர்கள் இன்னமும் டிவிஷனில் இருப்பதாக சொல்கிறீர்களா?''

''இல்லை.''

''பிறகு ரெஜிமெண்டிலேயே?''

''இல்லை... பாருங்க... விஷயம் இதுதான். சிறைப்பட்ட அவர்கள் இன்னமும் இங்கே கொண்டு வரப்படவில்லை. இது வரை அவர்கள் ஜெர்மானியப் பின்னணியில் இருக்கிறார்கள். அவர்களுடைய படைப்பிரிவு தலைமையிடத்திற்கும் டிவிஷன் தலைமை அலுவலத்திற்கும் இடையே எதிரி வரிசைக்குப் பின் அறுபது கிலோமீட்டர் தொலைவில் ஓரிடத்தில் அவர்கள் பிடிபட்டார்கள். நமது எல்லைப்புறக் காவலர் பதினைந்து பேர் அங்கே சென்று அவர்களைப் பிடித்தார்கள். தாங்கள் மூன்று ஜெர்மன் அதிகாரிகளுடன் வந்து கொண்டிருப்பதாகவும், தங்களுடைய சிறையாட்களுடன் இரண்டு அல்லது மூன்று நாள்களில் போர்முனையைக் கடக்கப் போவதாகவும் வானொலிச் செய்தி அனுப்பினார்கள். ஆகவே நீங்களும் நானும் சற்று பொறுத்திருக்க வேண்டியிருக்கிறது.''

இந்த நிகழ்ச்சியை நான் இப்போதும் நினைவு வைத்திருக்கிறேன், ஏனெனில் ஓரிரு துணிச்சல்மிக்க ஆட்களின் துணிவை விட மேலானதாக இது சுட்டிக்காட்டுகிறது. ஒவ்வொரு மாதமும் எங்கள் ராணுவத்தில் நம்பிக்கை மிகவும் வலிமையாக வளர்ந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது. ஜூலை மாதத்தில் எதிரி வரிசைக்குப் பின்னே அறுபது கிலோமீட்டர் வரை எந்த ஜெர்மானியனையும் நாங்கள் சிறைப்பிடிக்கவில்லை. ஆனால் நவம்பர் வாக்கில் நாங்கள் செய்து கொண்டிருந்தோம். அது வழக்கமான ஒன்றுதான், அத்தகைய காரியத்தைச் செய்ய முடியும் என்பதில் ஒருவர் கூட குறிப்பாக வியப்படையவில்லை.

மூன்று நாள்களுக்குப் பிறகு சிறைப்பட்டவர்களைப் பார்த்தேன். அவர்கள் கம்பளிக் காலணிகள் அணிந்திருந் தார்கள். எல்லைப்புறக் காவலர்கள் குறிப்பாக அவற்றை யும் தங்களுடன் ஜெர்மானியர்களுக்காக எடுத்துக்கொண்டு போனார்கள். சிறையாட்களுக்கு கம்பளிக் காலணிகள் அணி வித்தது மிதமிஞ்சிய அன்பு அல்ல என்பது சாதாரணப் பொது அறிவுக்கு உட்பட்டது, அவர்களை நடக்கவிடுவது அப்படியே சுலபமானது என்பதுதான். புகழ்பெற்ற கிரீடன் மலையேறு பிரிகேடிலிருந்து வந்த மூன்று அதிகாரிகளும் மிகவும் திகைப்புற்றுக் காணப்பட்டனர், தங்களுக்காக வருந் தினர். அது மாதிரி அவர்கள் சண்டை போட வேண்டி இருந் ததுமில்லை, இது மாதிரி சிறைப்பட்டு கூட்டிச்செல்லப்பட வும் பழகியிருக்கவில்லை. அவர்களும் அவர்களது பல சகாக் களும் சீக்கிரமே அதற்குப் பழகிப் போய்விட நேரும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. அவர்கள் எதுவும் சொல்ல வில்லை. முன்னர் நிகழ்ந்தது போல கர்வத்தினாலோ, புண் பட்ட உணர்வினாலோ அல்ல, ஆனால் சொல்ல எதுவுமே இல்லை என்பது காரணமாகத்தான் அவர்கள் மௌனமாக இருந்தார்கள். அவர்கள் ஆண்மீகரீதியாக உணர்ச்சி யற்றுப் போனார்கள்.

'வெல்ல முடியாத' இராணுவத்தின் இந்தப் போர்வீரர் கள் ஆறு மாதங்களில் எப்படி மாறிப்போய் விட்டார்கள்! அவர்களில் யார் வீரமானவர்கள், யார் கோழைகள் என்று கூறுவது ஜூலையில் முடியாததாக இருந்தது. எல்லா மனி தப் பண்புகளும் கர்வத்தினால் அழிந்தன, எங்கெனும் முற்று கையாளர்களுக்குப் பொதுவாக இருந்த கர்வத்தினால். தாங் கள் அடிக்கப்படவோ சுடப்படவோ மாட்டோம் என்பதைப் பார்த்த போது, அவர்கள் உடனே சல்மிக்கவர்கள் போல தங்களைக் காட்டிக்கொண்டார்கள். அடுத்த இரண்டு வாரத் தில் போரில் வென்று விடுவோம் என்று நம்பினார்கள், தங் களது சிறைத் தண்டனையை ஒருவிதமான கட்டாயப்படுத் தப்பட்ட விடுமுறையாகக் கருதினார்கள். வரப் போகும் பழிக்குப்பழியின் பயத்தால் மட்டுமே தாங்கள் நாகரிகமாக நடத்தப்படுவதாக எண்ணினார்கள்.

ஆனால் அது எல்லாமே கடந்தகாலத்திய விஷயம். இப் பொழுது அவர்களில் சிலர் நடுங்கவும் அழவும் செய்தார் கள், தங்களுக்குத் தெரிந்தவற்றை அவசரமாக உளறிக்

கொட்டினார்கள், அதே வேளை மற்றவர்கள்—மிகக் குறைவானவர்கள்—வருத்தம் நிறைந்த மௌனத்துடன் இருந்தார்கள், கலக்கத்துடன் காணப்பட்டார்கள். ஆரவாரமிக்க இராணுவம் அந்தத் தோல்வி நாள்களின் போது குறிப்பிடத்தக்க அளவு மாறிப் போனது.

சுலபமாக வெற்றியடையப் பழகிப்போன, முதல் தடவையாக தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்த ஓர் இராணுவத்தில் இப்படி நடப்பது முற்றிலும் இயற்கையான விஷயம்.

ஜெர்மானியர் பின்வாங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சண்டையிட்டார்கள், ஆனால் அதே நேரம் பின்வாங்கவும் செய்தார்கள். திரும்பத் தாக்கினார்கள், ஆனால் ஓடினார்கள்.

போர் நடவடிக்கை வரைபடம் ஒன்று ஜெனரலின் மேசை மீது விரிக்கப்பட்டுக் கிடந்தது. போர் தொடங்கியதிலிருந்து அத்தகைய வரைபடங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறேன், ஆனால் இது எவ்வளவு வித்தியாசமாகக் காணப்பட்டது! ஜூலை, ஆகஸ்ட், அக்டோபர் மாத வரைபடங்கள் நினைவிருக்கிறதா? அவற்றில் பெரிய நீலநிற அம்புக் குறிகளும் சிறிய சிவப்புநிற அரைவட்டங்களும் இருந்தன. இன்றையப் படம் மாறியிருந்தது. இப்போது சிவப்பு அம்புக் குறிகள் பெரிய, உறுதியான கையினால் வரையப்பட்டிருந்தன, சிறிய நீலநிற அரைவட்டங்கள் அவற்றுக்கு அப்பால் வரையப்பட்டிருந்தன. ஜெர்மானியர் பின்வாங்கிக் கொண்டிருந்தார்கள். சிவப்பு அம்புக் குறிகள் மேற்கு நோக்கி, மாஸ்கோவிலிருந்து வெகு தொலைவுக்கு அப்பால் நகர்ந்து, எதிரியின் நீலநிறக் கோடுகளை மிக ஆழமாக வெட்டிச் சென்றன. நீலநிற அரைவட்டங்கள் மிகமிகச் சிறியதாகின, ரெஜிமெண்டுகள், பட்டாளியன்கள், கம்பெனிகள் இவற்றுக்குள்ளாக உடைத்துக்கொண்டு சென்றன.

நான் கவனித்துக் கொண்டிருந்த வரைபடம் பின்வாங்கிய ஜெர்மானிய டிவிஷன்களுக்குள்ளாக எங்களது இராணுவம் ஐம்பது கிலோமீட்டர் உள்ளுக்குள் போயிருப்பதைக் காட்டியது. ஜெர்மானியர்களின் ரெஜிமெண்டுகள் முழுதும் எங்களது ராணுவத்தின் பின்னணியில் பெருமளவுக்குப் பரவியிருந்தார்கள், ஒவ்வொரு நாளும் எந்திரத் துப்பாக்கிக்காரர்களின் சிறு தொகுதிகளால் பாதைகள் இன்னமும் அடைக்

கப்பட்டன. ஆனால் எங்களது டிவிஷன்கள் முன்னோக்கிச் சென்றன, ஜெர்மானியர்களைச் சுற்றிவளைத்து அவர்களை முற்றாக அழிக்கும் என்ற நம்பிக்கையுடன். ஒரு நிமிடத்திற்கு ஜூலை அல்லது ஆகஸ்டில் இந்த வரைபடத்தைப் பார்ப்பதாக கற்பனை செய்ய முயன்றேன். அப்போது நாங்கள் பார்த்திருந்தால் சுற்றி வளைக்கப்பட்டது நாங்கள் தானே தவிர ஜெர்மானியர்கள் அல்ல என்பது தெரிந்திருக்கும்.

பழமொழி சொல்வது போல சுற்றிவளைக்கும் படையும் கூட ஓரளவுக்குச் சுற்றிவளைக்கப்படுகிறது. எனினும், இங்கு என்ன விஷயம் என்றால் மிக அதிகமான எண்ணிக்கையிலான ரெஜிமெண்டுகளோ டிவிஷன்களோ இந்த பக்கத்திலோ அல்லது மறு பக்கத்திலோ இருந்தன என்பதல்ல, ஆனால் எந்தப் பக்கம் தாக்குகிறது, மற்றதை சுற்றிவளைப்பதாக எது நம்புகிறது, தான் சுற்றிவளைக்கப்படுவதாக எந்தப் பக்கம் நம்புகிறது என்பதுதான்.

ஓரிரு டஜன் கிராமங்களையோ நகரங்களையோ பிடிப்பதை விட ஏதோ மிக முக்கியமானது நடந்தது. எங்களது துருப்புகளின் மனநிலையில் மிகப் பெரிய, குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது.

ஜெர்மானியர்களை எப்படி வெல்வது என்பதை எங்களது இராணுவம் கற்றுக்கொண்டு விட்டது. தாங்கள் இக்கட்டுகளில் இருப்பதை ரெஜிமெண்டுகள் கண்ட போதிலும் போரின் தராசு முனை எதிரிக்குச் சாதகமாகச் சாய்ந்த சமயத்திலும் தாங்கள்தான் வெற்றியாளர்கள் என்ற உணர்வு எங்களது போர்வீரர்களிடத்திலே இருந்தது, அவர்கள் தொடர்ந்து முன்னேறி எதிரியை அழித்தார்கள்.

ஜெர்மானியர்களிடத்திலும் மறுதலையாக இதே போன்ற திருப்பம் ஏற்பட்டது. சுற்றிவளைக்கப்படும் அச்சத்தினால் துன்புற்ற அவர்கள் பின்வாங்கிக் கொண்டிருந்தார்கள், போர்முனை வரிசையை ஒழுங்காக்கத் தொடர்ந்து முயன்றார்கள், அவர்களது பின்னணிக்கு ஊடுருவிய, தங்களது வெற்றியில் உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்த விரல்விட்டு எண்ணுவதற்கு மேற்படாத ஆட்களால் நடுக்குற்றுப் போனார்கள்.

ஓர் அதிகாரி உள்ளே வந்து தங்களது பின்னணியில் ஜெர்மானிய எந்திர துப்பாக்கிக்காரர்களின் ஒரு கம்பெனி காணப்படுவதாக கர்னலிடம் அறிக்கை செய்தார்.

''ஓகோ, அப்படியா,'' என்றார் கர்னல். ''நமது ஆட்களில் சிலர் நமக்குப் பின்னே வந்து அவர்களுக்கு முடிவுகட்டுவார்கள். நமது பணி முன்னேறிச் செல்வது, முன்னேறுவது மட்டுமே.'' எதிரி இக் கம்பெனி பற்றி எதுவும் குறிப்பிடாது, முன்னேறிச் செல்வதற்கு உத்தரவு பிறப்பித்தார் கர்னல்.

எதிரி முறியடிக்கப்பட்டாக வேண்டும், என்ன நடந்தாலும் முறியடிக்கப்படுவார்கள். எங்களது மக்களுக்கு இது எல்லாம் தெரியும், மிகவும் முக்கியமானது என்னவென்றால், இதை அவர்கள் தங்களது நெஞ்சார உணர்கிறார்கள். ஜெர்மானியர்களைப் பின்னுக்கு விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைச் சுற்றிவளைக்கச் செய்யவும், சாலைகள் நெடுகிலும், நாட்டின் குறுக்காக, வாகனமே செல்ல முடியாத பனி மூடிய வயல்களின் வழியாக, முழங்கால் வரை கால்கள் அமுங்கும் இடங்கள் வழியாக, முன்னேற்றத்தைத் துளியும் அடைய முடியாத பாதை வழியாகத் திருப்பி விரட்டவும் செய்வார்கள். ஆனால் இப்படி முன்னேறுகிற போது நம்மிடையே ஏதோ அசாதாரணமான வலிமையும் மூச்சும் ஏற்படுவதைக் காண முடியும். எங்களது மனத்திட்பத்தை ஜெர்மானியர்கள் மீது திணித்துக் கொண்டிருக்கிறோம், சூழ்நிலையின் எசமானர்களாகிக் கொண்டு வருகிறோம். சுற்றிவளைக்கப்பட்டதிலிருந்து தரை மட்டமாக்கப்பட்ட கிராமங்களுக்குள்ளாக, ஊடுருவ முடியாத காடுகளுக்குள்ளாக அவர்கள் தோன்றப் போகிறார்கள்; இன்று டஜன் கணக்கில் உறைபவர்கள் நூற்றுக்கணக்கில் உறைந்து சாகப் போகிறார்கள். பீரங்கிக் குண்டுகளாலும் சிறு எந்திரத் துப்பாக்கித் தோட்டாக்களாலும் அவர்கள் கொல்லப்படப் போகிறார்கள் தவிர, பின்வாங்குகையில் பெண்களும் வயதானவர்களும் கம்புகளையும் கவைக் கொம்புகளையும் பயன்படுத்தி கொல்லப் போகிறார்கள், அதே பாதைகளில் 1812இல் வேறு முற்றுகையாளர்கள் கொல்லப்பட்டது போல.*

---

* 1812 இல் நெப்போலியன் படைகள் ருஷ்யாவிற்குள் நுழைந்த போது, விவசாயிகள் தங்களது கைகளில் கிடைத்த உபகரணங்களைப் பயன்படுத்தி படையின் பின்னணியில் பிரெஞ்சுப் போர்வீரர்களைக் கொன்றார்கள். (மொ-ர்.)

கருணைக்காக அவர்கள் காத்திருக்கத் தேவை இல்லை. எப்படி வெல்வது என்பதை நாங்கள் கற்றுக் கொண்டுவிட்டோம், ஆனால் எதிரி மீது இப்போது கருணை காட்டுவதற்கு இந்தப் படிப்பினை எங்களுக்கு மிகவும் விலையுயர்ந்ததாகவும் கொடுமையானதாகவும் விளங்கியது.

இருப்பவர்களும் இறந்தவர்களும்*

இரண்டு நாள்களுக்கு முன்னால் பனி விழுந்திருந்தது. அன்று வானம் தெளிவாக, குளிர்ச்சியானதாக, மந்தாரம் இல்லாமல் இருந்தது.

கம்பெனியை விட்டு சற்று முன்னர் புறப்பட்ட மலீனின் பிளாட்டூனை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். முதலில் தனது தலையைக் கவிழ்த்தவாறு, பனிபடர்ந்த இணைப்புப் பதுங்கு குழி நெடுகிலும் திறந்த வெளியைக் கடந்து விரைந்து சென்றான். பிறகு பிளாட்டூன் நிலைகொண்டிருந்த செங்கற் காளவாசலின் இடிபாடுகளைக் கொண்ட ஒரு சிறிய உச்சியின் மீது நேராக ஏறினான். மிகக் குளிராக இருந்தாலும், சூரியன் அவனது மென்மயிர்த் தொப்பி ஊடாகவும், குறிப்பாக மேல்நோக்கிய சாய்வான பகுதியில் ஏறிய போது, அவனுக்கு வெதுவெதுப்புத் தந்தது.

மூச்சு வாங்கிக்கொள்வதற்கு நின்ற மலீனின் சுற்றித் திரும்பி பின்னுக்குப் பார்த்தான்.

பின்னுக்கு மாஸ்கோ நாட்டுப்புறத்தின் சாதாரண நிலக் காட்சி இருந்தது: தொடுவானத்தில் புதர்க்காட்டின் கருமை நிறத் திட்டுகளுடனும் காட்டின் நீண்ட குறுகிய நிலப்பகுதியுடனும் மெதுவாக அலை அலையாகச் செல்கின்ற நிலக் காட்சி. ஓரளவு அருகே தற்போது பட்டாளியனின் தலைமையிடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த, எந்திரம் மற்றும் டிராக்டர் நிலையத்தின் கருமையான, கருகிய சதுர கட்டடம் இருந்தது. அதற்கும் சற்று தள்ளி ரெஜிமெண்டல் தலைமையிடம் தங்கியிருந்த கிராமத்தின் கூரைகளைப் பார்க்க முடிந்தது. புதிதாக மிதிபட்ட ஒவ்வொரு பாதையும் ஒவ்வொரு பதுங்கு குழியும் பனியில் தெளிவாகத் தெரிந்தன. எவ்வளவு நன்றாக அவற்றை உருமறைப்புச் செய்து கொண்டிருந்தார்கள் என்பது பொருட்டன்று, சற்று மேடான நிலப் பகுதியிலிருந்து அவை தெளிவாகத் தென்பட்டன. பனி எல்லாவற்றையும் வெளிக்காட்டியது.

---

* நாவலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.

முப்பத்தோன்றாவது துப்பாக்கி டிவிஷனுக்குப் பதிலியாக அனுப்பப்பட்ட கம்யூனிஸ்ட் பட்டாளியனின் ஆட்கள் வந்து சேர்ந்த அன்று, மலீனின் கூடுதல் அந்தஸ்து அளிக்கப்பட்டு கம்பெனியின் அரசியல் அறிவுரையாளராக அனுப்பப்பட்டான். இதே அந்தஸ்தில் இப்போது, பத்து நாள் சண்டைக்குப் பிறகும் அவன் இருந்தான்.

சண்டை தொடர்ச்சியாகவும் பயங்கரமாகவும் இருந்தது. மலீனினுடன் பதிலிகள் வந்து சேர்ந்த பிறகு, டிவிஷனுக்கு இன்னும் ஒரு முறை பதிலிகள் அனுப்பப்பட்டிருந்தார்கள். உண்மை, இந்த முறை பதிலிகள் முற்றிலும் குறைவாக இருந்தார்கள், பூரண எண்ணிக்கை அனுப்பப்படவில்லை என்ற மனப்பதிவு இருந்தது, எதிர்வரும் தேவைகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள்.

முன் போலவே ஜெர்மானியர்கள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள்; இன்று டிவிஷன் மாஸ்கோவை ஒட்டிச் சண்டையிட்டுக் கொண்டிருந்தது, மலீனின் முதலாவதாக இருந்த வரிசையின் கிழக்கே மேலும் இருபது கிலோமீட்டர்கள்.

இந்தக் காலக் கட்டத்தில், கைப்பற்றிய நிலைகளிலிருந்து மூன்று முறை அது பின்வாங்கி விட்டது. சுற்றிவளைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக பக்கங்களிலுள்ள டிவிஷன்களுடன் போர்முனையில் ஒரே நேராக இரண்டு முறை பின் வந்தது. மூன்றாவது முறைக்குக் காரணம், அதனது ரெஜிமெண்டுகளில் ஒன்று கிட்டத்தட்ட முற்றிலுமாக நிர்மூலமாக்கப்பட்டு விட்டது, மற்ற இரண்டினால் நிலைநிறுத்திக் கொள்ள முடியவில்லை. அடுத்த நாள் காலையில்தான், நிறுத்திவைக்கப்பட்ட படையின் பின்னணியில் ஜெர்மானியர்களை தடுப்பதில் வெற்றியடைந்து, தங்களது சொந்த ஆயுதங்களின் தாக்குதலுடனும், பின்னே தொலைவில் இருந்த வலுவான பீரங்கிப்படையின் கடுமையான தாக்குதலுடனும் அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்தார்கள். முன் வரிசையில் இப்போது மலீனின் சென்று கொண்டிருந்த இந்த நிலைகளில், டிவிஷன் இருக்க நேரிட்டது. கடந்த மூன்று பகல்களும் இரவுகளும் முற்றிலும் கொடூரமாகச் சண்டையிட்டிருந்தாலும் மேற்கொண்டு அது பின்வாங்கவில்லை.

இதுதான் டிவிஷனுடைய சொந்தப் பகுதியில் நிலைமை. மாஸ்கோவுக்கு வெளியே நடந்த சண்டை மிகப் பெரிய நீடித்த பாதுகாப்பு நடவடிக்கையாக மாறியது. இது இப்

போது எந்நேரத்திலும் தாக்குபவர்களையும் பாதுகாப்பவர்களையும் முற்றிலும் களைப்படையச் செய்யக்கூடும் எனத் தோன்றியது. ஆனால் இரு தரப்புமே பலவீனத்தின் எந்த அடையாளத்தையும் காட்டவில்லை. ஜெர்மானியர்களுக்குச் சாதகமான நிலையில் முன்னைய கடுமையுடன் சண்டை தொடர்ந்தது. அவர்களுடைய கை ஓங்கியிருந்தாலும், கடந்து சென்ற ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் மேன்மேலும் அதிகமானதை அவர்கள் பலி கொடுக்க வேண்டியிருந்தது.

மாஸ்கோவுக்கு வெளியே அப்போது சண்டையிட்டவர்களின் உணர்வுகளே மலீனினுக்கும் இருந்தன. இந்த முறை, கோடையில் நடந்தது போலவோ வியாஸ்மாவிலும் பிரியான்ஸ்கிலும் தடை உடைத்துச் சென்ற முதலாவது நாள்களில் கிட்டத்தட்ட திரும்பவும் நிகழ்ந்தது போலவோ, வெண்ணையின் ஊடாகக் கத்தி செல்வது போல ஜெர்மானிய டாங்கிகள் எங்களது போர்முனையின் குறுக்காக வெட்டிக் கொண்டு செல்லவில்லை. விஷயங்களைப் பற்றி மக்கள் படிப்படியாக வித்தியாசமாக உணரத் தொடங்கினார்கள். இதற்கு மேல் முடியாது என்னும் அளவுக்கு பயங்கரமான வலிமையுடன் சுற்றப்பட்ட சுருள்கம்பியின் நிலையில் அவர்கள் இருந்தார்கள்; ஆனால் பூரணமான அளவுக்கு அது முடுக்கப்பட்ட போதிலும், திரும்பவும் விரிந்து கொள்ளும் திறமையை இன்னமும் பெற்றிருக்கவே செய்தது. உடலாலும் உள்ளத்தாலும் ஆன இந்த உணர்ச்சி, விரியவும் ஆட்டவும் செய்யும் இந்த உள்ளார்ந்த திறமை, மாஸ்கோவுக்கு அருகிருந்த ஒரு பாதுகாப்பு வரிசையிலிருந்து மற்றொன்றுக்கு ஜெர்மானியர்களால் மெதுவாகவும் கொடூரமாகவும் பின்னுக்குத் தள்ளப்பட்ட எல்லாராலும் உணரப்பட்டது.

ஆட்கள் தங்களது சக்திகளை எல்லாம் ஒருமுனைப்படுத்தினார்கள், மாஸ்கோ அவர்களுக்குப் பின்னே இருந்தது என்று அவர்களுக்குத் தெரியும்—அதை விளக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இதோடு சேர்த்து, மிகவும் நெருக்கடியான கணங்களில் வருகின்ற பதிலிகளிலிருந்தும், போர்முனையில் பீரங்கிப்படை மேன்மேலும் அத்தியாவசியமானதிலிருந்தும், பரிசுகள் மற்றும் தபால்களுடன் தொடங்கிய, வேறு பல பிற அடையாளங்களிலிருந்தும் தங்களுக்குப் பின்னே நாடு முழுமையும் மாஸ்கோவைச்

சரணடைய விட்டுவிடக் கூடாது என்பதில் பெருமளவு தன்னைச் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

உண்மையில், மாஸ்கோ ஜெர்மானியர்களின் கைகளில் விழுந்துவிடக் கூடும் என்ற கணம் இருந்திருந்தால், அந்தக் கணம் எப்போதோ கடந்துவிட்டது. மாஸ்கோச் சண்டையில் வெற்றி இன்னமும் எதிர்பார்க்கப்படவில்லை, ஆனால் எந்த வகையிலும் தோல்விக்கான வாய்ப்பை யாரும் நம்பவில்லை. புவியியல் ஜெர்மானியர்களுக்குச் சாதகமாகக் காணப்பட்டது: அநேகப் பாதைகள் நெடுகிலும் மாஸ்கோவுக்கு நூறு கிலோமீட்டர்களுக்கு நெருக்கத்தில் அவர்கள் வந்துவிட்டார்கள். ஆனால் போரின் ஆரம்ப நாள்களின் கணக்கீடு, போர்முனையை ஊடுருவிவிட்ட டாங்கிகளால், அத்தகைய தொலைவுகளை இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள்ளாக கடக்க முடியும் என்பது, இப்போது பயன்தரவில்லை. போர்முனையின் ஊடாக டாங்கிகள் இன்னமும் ஊடுருவி வர முடியும், அவ்வாறே இங்குமங்கும் செய்தன; ஆனால் எந்தவகையிலோ மூன்று, ஐந்து அல்லது ஏழு கிலோ மீட்டர்களுக்குப் பிறகு அவை நிறுத்தப்பட்டன. முன்னைய அச்சுறுத்துகிற கணக்கீடு இல்லாமல், புவியியலால் மட்டுமே மனித உறுதிப்பாட்டை உடைக்க முடியவில்லை.

அன்றைய தினம், மந்தமான நிலையைச் சாதகமாகக் கொண்டு, போர்க்கள அஞ்சல் நிலையத்திலிருந்து தபால் கொண்டுவந்தார்கள். மலீனினுக்கு அவன் மனைவியிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அவனுடன் இருபத்து மூன்று ஆண்டுகள் இருந்த பிறகு, தனது உணர்வுகளை வெளிப்படுத்தும் அவனது தன்னடக்கம் அவளிடத்திலும் கூட இரண்டாவது இயல்பாக மாறி காணப்பட்டது. அவனையே எந்நேரமும் தான் நினைத்துக் கொண்டிருப்பதை, அவனுக்குரிய குளிர்காலச் சீருடை உரிய நேரத்தில் வழங்கப்பட்டிராவிட்டால் கவலையடைவதை, தன்னடக்கமுடன் எழுதியிருந்தாள். முன் உறைபனி சீக்கிரமே வரக்கூடும் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். மேலும் இரண்டு செய்திகளையும் அவனுக்கு அனுப்பியிருந்தாள்.

முதலாவது அவர்களது மகனைப் பற்றியது. அவனது பள்ளியின் தலைமையாசிரியர்—அந்தக் கோடையின் போது கஸான் அருகே எங்கோ ஓர் இடத்திற்கு அது மாற்றப்பட்

டிருந்தது—ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் விக்டர் மலீனின் என்ற அவர்களுடைய பையன் மாஸ்கோவைப் பாதுகாக்கப் புறப்பட்டுச் செல்வதாகக் குறிப்பெழுதி வைத்துவிட்டுக் காணாமற் போய்விட்டதாக எழுதியிருந்தார். அவனைக் கண்டுபிடிக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவன் இன்னமும் கிடைக்கவில்லை.

''அவனை அவர்கள் எப்படியும் பிடித்துவிடுவது போல, அக்கறையற்றவன்!'' என்று பாசத்தோடு மலீனின் எண்ணினான்.

அவர்களது மகனைப் பற்றி மிகுந்த கவலையுடன் அவன் மனைவி எழுதியிருந்தாள். அது ஆரம்பத்தில் மலீனினுடைய உள்ளத்தில் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. ''பிறகு என்ன, அவனுக்கு ஏற்கெனவே பதினாறு வயதாகி விட்டது,'' என்று பெருமையுடன் எண்ணினான்; ஆனால் பிறகு முதல் நாள் மாலை அவனது கம்பெனியைச் சேர்ந்த ஏழு பேருடைய உடல்களும் புதைக்கப்பட்ட திறந்த பொது கல்லறையை திடீரென்று நினைத்துப்பார்த்தான். எல்லாருமே ஒரே நாளில் கொல்லப்பட்டார்கள். தன் மகனுடைய நடத்தை இன்னமும் இவன் மனத்தில் உயர்ந்த பெருமையை ஏற்படுத்திய போதும் இதை நினைத்துப்பார்த்துக் கவலையடைந்தான்.

இரண்டாவது செய்தி அவன் மனைவியைப் பற்றியது. அவள் ஆய்வாளராகப் பணியாற்றிய மாவட்ட வீட்டு வாரியம் அதனது வேலையைத் திரும்பத் தொடங்கியிருந்தது. அதில் மேலாளராக நியமிக்கப்பட்டிருந்தாள், ஏனெனில் அவர்களுடைய தலைமை அதிகாரி, மலீனினுக்கு நேரடியாகத் தெரிந்த குக்கூஷ்கின், தானாகவே கோர்க்கிக்கு ஓடிச்சென்ற அவன் அங்கிருந்து திரும்ப அழைக்கப்பட்டதால், வேலையிலிருந்தும் நீக்கப்பட்டு, கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு, சாதாரணப் போர்வீரனாக போர்க்களத்திற்கு அனுப்பப்பட்டான். இது மலீனினுக்கு பெருமகிழ்ச்சியைத் தந்தது.

குக்கூஷ்கினைப் பொருத்த வரை, அவனது கருத்துப்படி முழுமையான அயோக்கியன். அதை விட்டு எந்தவகையிலேனும் வெளிவந்து விடுவான் என்று மலீனின் கசப்புடன் எண்ணினான். போர்முனையில் முதல் வரிசைக்குள்ளாக

அவனைத் தள்ளினாலும் தக்கையைப் போல விலகி பின்னணியில் எங்காவது இருப்பான்.

ஒய்வுக்குப் பிறகு தனது பிளாட்டூன் நிலைகொண்டிருந்த குன்றின் உச்சிக்கு மலீனின் ஏறினான். நேற்றைய சண்டை பகல் நேரத்திலோ இரவின் போதோ இங்கே அவனைப் பார்க்க விடாதபடி தடுத்துவிட்டது. எந்தக் குற்றமும் இல்லாமல் அவன் குற்றவாளியாகத் தன்னை உணர்ந்தான். தன்னுடைய ஆட்கள் ஒவ்வொருவரையும் நாளுக்கு ஒருமுறையேனும் பார்ப்பது என்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான்: கம்பெனியில் எஞ்சியவர்கள் அதிகமில்லை. அந்த நாள்களில் வாழ்க்கை இப்படித்தான் இருந்தது: நேற்று ஒருவனைப் பார்க்காது இருந்துவிட்டால், இன்றைக்குப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்காது போகும். நேற்று பிளாட்டூன் அநேக இழப்புகளைக் கண்டது. காலை எண்ணிக்கையின்படி பதினோரு பேர் மட்டுமே இருந்தார்கள், பிளாட்டூன் கமாண்டர் சார்ஜெண்ட் சிரத்தாவையும்சேர்த்து. ஒரே நாளில் இரண்டு லெப்டினெண்டுகள் கொல்லப்பட்ட பிறகு, இப்போது ஒரு வாரமாக பிளாட்டூனின் கட்டுப்பாடு இந்த சார்ஜெண்டிடம் இருந்தது. ஒருவன் போர் தொடங்கியதிலிருந்தே சண்டையிட்டவன், மற்றவன் பயிற்சிப் பள்ளியிலிருந்து அன்று காலையில் தான் நேரடியாக இங்கு பணிக்கு நியமிக்கப்பட்டவன்.

செங்கற் காளவாசலின் இடிபாடுகள் உண்மையான இடிபாடுகள் அல்ல, ஏனெனில் கீழே சரிப்பதற்கு எதுவுமே இல்லை. தொழிற்சாலை கட்டும் வேலை போருக்கு முன்தான் தொடங்கியிருந்தது, முற்றுப்பெறாமல் விடப்பட்டிருந்தது. கட்டடம் மற்றும் சூளைகளின் அஸ்திவாரங்கள் போடப்பட்டிருந்தன, மேலே எழும்பிய சுவர்களும் பல்வேறு அளவுகளை எட்டியிருந்தன, ஆனால் எங்குமே பாதி சன்னல் உயரத்திற்கு மேல் இல்லை. சற்று தொலைவுக்கு அப்பால் தான் எதிர்கால தொழிற்சாலைப் புகைபோக்கியின் அஸ்திவாரம் இருந்தது. உறுதியான வட்டவடிவ செங்கற் கட்டுமானம் தரை மட்டத்திற்கு மேல் ஒரு மீட்டர் எழும்பியிருந்தது. பூமி மட்டத்துக்குக் கீழுள்ள புகைக் குழாயக்காக அடித்தளமானது உள்ளுக்குள் ஆழப்படுத்தப்பட்டிருந்தது. அது இயற்கையான பலப்படுத்தப்பட்ட கொத்தளமாக இருந்தது, எந்திரத் துப்பாக்கியை அருமையாக நிறுத்தி

வைப்பதற்கு மிகச் சிறிய மாற்றமே தேவைப்பட்டது.

மூன்று நாள்களுக்கு முன்னால், இந்த நிலையை அவர்கள் பிடித்துக்கொண்ட போது, அநுபவமிக்க எந்திரத் துப்பாக்கிக்காரனான மலீனின் புகைபோக்கியை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர்களுக்கு ஆலோசனை சொன்னான். நேற்று சின்த்சோவ் தனது எந்திரத் துப்பாக்கியை அங்கே நிலைநிறுத்தியதைக் கண்டான். சண்டை தொடங்கியதிலிருந்து சின்த்சோவ் மலீனினுடைய கம்பெனியில் இருந்தான். அதற்கு ஓரளவு அதிருஷ்டமும் ஓரளவு மலீனினின் சொந்த விருப்பமும் காரணமாகும்: வேறொரு ரெஜிமெண்டிலும் பட்டாளியனிலும் அவன் சுலபமாகச் சேர்ந்து கொள்ளக் கூடும். ஆனால் பதிலிகளின் பட்டியலை அவர்கள் எடுத்த போது, பட்டாளியனில் சின்த்சோவ் இருக்க வேண்டும் என ஒரு வார்த்தை சொல்லி வைத்தான் மலீனின். ஆகவே சின்த்சோவ் இவனது கம்பெனியிலேயே வைக்கப்பட்டான்.

சுடுபடைக் கலங்களை எப்படிக் கையாள்வது என்பதை அறிந்த அநுபவமுள்ள போர்வீரன் என்பதை சின்த்சோவ் வெகுசீக்கிரத்தில் நிரூபித்தான். பெரிய சண்டைகளின் போது எப்போதும் ஏற்படுவது போல, சீக்கிரமே அவனது அந்தஸ்து உயர்த்தப்பட்டது.

முதல் நாள் காலை படைத் தளவாடங்களைத் தூக்கிச் சென்றான். அன்று மாலை, எந்திரத் துப்பாக்கியில் 'நம்பர் டூ'வாக மாறினான். மறுநாள் 'நம்பர் ஒன்' கொல்லப்பட்ட போது அவனது இடத்திற்கு மாற்றப்பட்டான். நான்கு நாள்களுக்கு முன்னால், தங்களுடைய முன்னைய நிலையிலிருந்து இந்தப் புதிய நிலைக்குப் பின்வாங்கிய போது சின்த்சோவும் அவனுடைய 'நம்பர் டூ'வும் கம்பெனியினுடைய பின்வாங்கலை இரவு வரும் வரை எந்திரத் துப்பாக்கி வெடிகளால் மூடி மறைத்தார்கள். இவ்வாறு செய்ததன் மூலம் இருவரும் துணிவையும் பரபரப்பற்ற தன்மையையும் வெளிக்காட்டிக் கொண்டார்கள் என்று கம்பெனி கமாண்டர் லெப்டினெண்ட் இயோனவ் கருத்துத் தெரிவித்தான்.

அக்கணத்தின் கிளர்ச்சியில் லெப்டினெண்ட் இயோனவ் 'வீரத்திற்காக' பதக்கத்திற்கும் 'நம்பர் ஒன்'னுக்கு பரிந்துரை செய்ய ஆலோசனையும் சொன்னான்; ஆனால் மலீனின், சின்த்சோவுடைய கடந்த வரலாற்றை நினைவுகூர்ந்து,

காத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்தான். தனது சொந்தக் கட்டுப்பாடும் சின்த்சோவுக்கான பொறுப்புமிக்க உணர்வும் அத்தகைய விஷயங்களில் அவசரப்படவதற்கு அநுமதிக்கவில்லை. சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களையும் எந்திரத் துப்பாக்கிப் பணியாளரின் நடத்தையையும் தனது வழக்கமான அரசியல் அறிக்கையில் குறிப்பிட்டு வந்தான், ஆனால் அதற்குரிய வழங்குவதற்கான தாளை நிரப்புவது பற்றிய ஆலோசனை குறித்து மௌனம் சாதித்தான். பிற விஷயங்களைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருந்த கம்பெனி கமாண்டர் சின்த்சோவைப் பற்றி மறந்தே போய் விட்டான்.

சின்த்சோவைப் பார்க்க மலீனின் விரும்பினான், ஆனால் எந்திரத் துப்பாக்கி உள்ள ஒதுக்கிடத்திற்குப் போவதற்கு முன்னால், சார்ஜெண்ட் சிரத்தா நிலைகொண்டிருந்த செங்கற் காளவாசலின் இடிபாடுகளைப் பார்வையிடுவது என்று முடிவுசெய்தான். எஞ்சிய எல்லாரையும் போல, ஆபத்து உணர்விலிருந்து சார்ஜெண்ட் சிரத்தா விடுபடவில்லை; ஆனால் இது அவனது தொழில்முறையான போக்கில் மிகவும் குறிப்பிடும்படியான எந்த அமிசத்தையும் ஏற்படுத்தவில்லை. பிற எவரையும் போல அவன் கொல்லப்படலாம், அது எல்லாவற்றுக்கும் முடிவு என்பதாகும், இராணுவப் பணி உள்பட; ஆனால் சாவுச் சிந்தனையால் கடமையில் முழு ஈடுபாடு கொள்வதைத் தடுக்க முடியவில்லை.

சிரத்தா கம்பெனியின் அரசியல் அறிவுரையாளனைத் தொலைவில் பார்த்ததுமே, தனது பஞ்சு வைத்து தைக்கப்பட்ட ஜாக்கெட்டைச் சுற்றிலும் இடைவாரை இறுக்கினான், தனது மென்மயிர்த் தொப்பியில் உள்ள நட்சத்திரம் தனது முன்னந்தலையின் மத்திக்கு மேலாக இருப்பதை நிச்சயப்படுத்திக் கொண்டான், புத்தம் புதிய, நன்கு எண்ணெய் இடப்பட்ட சிறு எந்திரத் துப்பாக்கியைத் தோள் மீது வைத்தவாறு நின்றான்.

இந்தச் சுடுபடைக்கலங்களின் விநியோகம் ஒரு வாரத்திற்கு முன்பே இவனது டிவிஷனில் தொடங்கி விட்டது. தனது பிளாட்டூனில் முதலாவதாக ஆயுதம் வழங்கப்பட்டவன் சிரத்தாதான். அதை அவன் ஏற்கெனவே சண்டையில் பயன்படுத்தி விட்டான். ஒரு துப்பாக்கியின் துல்லியம் அதற்கு இல்லாத போதும் கூட, குண்டுத் தாக்கு அடர்த்தி நன்றாக

இருந்தது. ஆகவே, ஆரம்பக் காலத்தில் சிரத்தா தனது சிறு எந்திரத் துப்பாக்கியுடன் பெரும்பாலும் மிகக் கூடுதலான அக்கறை கொண்டிருந்தான்.

சிறு எந்திரத் துப்பாக்கி அவனது தோளுக்கு மேலாகக் கிடக்க, சுவரில் இருந்த ஓர் இடைவெளியின் ஊடாக அரசியல் அறிவுரையாளனைச் சந்திக்க ஓடினான். சிரத்தாவினுடைய கண்டிப்பான சம்பிரதாய வாழ்த்துக்குப் பதிலளிக்கும் வகையில் மலீனின் சலூட் அடித்து பிறகு தனது கையை நீட்டினான்.

''ஆக, எப்படி இருக்கிறாய், சிரத்தா?'' என்று வினவி அவனுடைய வலுவான கையை அதே போல தனது சொந்த வலுவான கரத்தால் உறுதியாகப் பற்றினான்.

''உணவுப் பங்கீடுகள் அவ்வளவு நன்றாக இல்லை, தோழர் அரசியல் அறிவுரையாளரே,'' என்று சிரத்தா உடனே புகார் செய்தான். அநுபவமிக்க போர்வீரன் என்ற முறையில் மேலதிகாரிகளிடம் புகார் செய்ய சரியான நேரமும் தவறான நேரமும் உண்டு என்பது அவனுக்குத் தெரியும். சரியான தருணம் வந்தபோது, எப்போதுமே புகார் செய்தான்.

''என்ன முறையில் அவ்வளவு நன்றாக இல்லை?'' என்றான் மலீனின், அது எதைப் பற்றியது என்பதை நன்றாக அறிந்திருந்தும், ஆனால் தான் முன்னமேயே ஊகிக்காதது போலப் பாசாங்கு செய்தான்.

''என்ன, தோழர் அரசியல் அறிவுரையாளரே, உணவுப் பங்கீட்டு விவரம் விடியலில் சூடான உணவுப் பட்டிகளுடன் தொடங்குகிறது, ஆனால் அவர்கள் வட்டில்களில் முடிந்தளவுக்கு தங்களுடன் எடுத்துக் கொண்டிருக்கலாம்.''

''உங்களது பிரிவுக்குத் தக்கதை உங்களுக்குத் தந்திருக்கிறார்கள்,'' என்றான் மலீனின். ''எதைப் பற்றி அல்லல் படுகிறாய்?''

''நான் ஒன்றும் அல்லல்படவில்லை,'' என்றான் சிரத்தா, அதுபற்றி ஓரளவு கவலைப்பட்ட போதிலும். இழப்புகளைப் பற்றி அவன் அறிக்கை செய்யவில்லை, நேற்றைய எண்ணிக்கைக்கான உணவுப் பங்கீட்டைப் பெறுவதில் நம்பிக்கை கொண்டிருந்தான்.

''வேறு ஏதேனும் தவறா?'' கேட்டான் மலீனின்.

''நான் உங்களிடம் சொல்ல வேண்டியதில்லை,'' என்ற

சிரத்தா 'என்ன பயன்?' என்று சொல்வது போல தன் தோள் களைக் குலுக்கிக் கொண்டான் அவன். ''அவர்கள் எதுவும் கொண்டுவரவில்லை, ஆகவே அதுபற்றி என்ன செய்ய முடியும்?''

''நீ எந்தவகையிலும் புகைப்பதைக் குறிப்பிடுகிறாயா?''

''வேறு என்ன, தோழர் அரசியல் அறிவுரையாளரே? படைத்தளவட வரத்து வழக்கமாக இருக்கிறது. அதைப் பற்றி நாங்கள் புகார் செய்யவில்லை.''

மலீனின் பல் இளித்து, தனது களப்பையைத் திறந்து நான்கு புகையிலைப் பொட்டலங்களை வெளியே எடுத்தான்.

''இதோ, பங்கு போட்டுக் கொள். மாஸ்கோவில் உள்ள அபிமானிகளிடமிருந்து இன்று கொஞ்சம் அன்பளிப்புப் பொட்டலங்கள் பெற்றோம். நான் புறப்படும் வேளையில் புகையிலைப் பொட்டலங்களை எடுத்துக் கொண்டேன். அங்கே கொஞ்சம் சிகரெட்டுகளும் இருக்கின்றன, ஆனால் அதெல்லாம் பிறகு அனுப்பி வைக்கப்படும், இன்று மாலையில்தான்...''

மலீனினிடமிருந்து புகையிலையைப் பெற்றுக்கொண்ட சிரத்தா பேரானந்தப் பெருமூச்சு விட்டான். அவனது உணர்ச்சி வெளிப்பாட்டிலிருந்து நீண்ட காலமாக அவன் புகைக்கவே இல்லை என்பது தெளிவாகியது.

''இப்போது கொஞ்சம் புகைத்துக்கொள்,'' என்றான் மலீனின், சிரத்தாவினுடைய முகபாவத்தைக் கவனித்து. ''நானுங்கூட புகைக்கிறேன்,'' என்று தனது பையிலிருந்து ஏற்கெனவே பிரிக்கப்பட்ட புகையிலைப் பொட்டலத்தை வெளியே எடுத்து சிரத்தாவுக்காகவும் தனக்காகவும் கொஞ்சம் கொட்டி, சிகரெட்டை சுருட்டத் தொடங்கினான்.

''நாம் உள்ளே போய்க் கொள்ளலாம்,'' என்று ஆலோசனை சொன்னான் சிரத்தா. ''அந்தச் சுவர்களின் ஒன்றில் நெருக்கமாக அடைபட்டிருக்கிறோம். கூரைக்காக மேலே நீர்புகா விரிப்பு ஒன்றைத் தொங்க விட்டிருக்கிறோம்.''

''ஆனால் தென்றலில் இங்கே எல்லாம் நன்றாய் இருக்கிறது,'' என்றான் மலீனின். ''தட்பநிலை அற்புதமாக இருக்கிறது.''

''இதோ ஒரு நிமிஷத்தில், தோழர் அரசியல் அறிவுரையாளரே! உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் புகையிலையை எனது ஆட்களோடு பங்கு போட்டுக் கொள்வேன்.''

''சரி, போ...''

சிரத்தா இடைவெளியில் மறைந்து போய், யாரோ ஒருவனைக் கூப்பிட்டு புகையிலையைப் பங்கு போட சொல்லி கட்டளையிட்ட பிறகு மலீனினுக்குத் திரும்பி வந்தான்.

சிரத்தா பழைய படைச் சேவைச் சட்டத்தின்படி இராணுவத்திற்கு அழைக்கப்பட்டிருந்தான் — பத்தொன்பதில் இல்லாமல் இருபத்திரண்டில். இப்போது அவனுக்கு வயது இருபத்தெட்டு. அவனது நெற்றி கவலையின் நிரந்தரமான சுளிப்புடன் இருந்ததால் வயதானவனாகத் தோன்றினான். ஆனால் இப்போது, அவன் சிகரெட்டைச் சுருட்டிக் கொண்டிருக்கையில், கவலையுற்ற தோற்றம் புன்சிரிப்பாக மாறியிருந்தது. இதைக் கண்ட மலீனின் கேட்டான்:

''எதைப் பற்றி இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறாய்?''

''தட்பநிலை, தோழர் அரசியல் அறிவுரையாளரே,'' என்ற சிரத்தா, தனது கூப்பிய கைகளுடன் திறமையாக நெருப்பை மறைத்துக்கொண்டு பற்ற வைத்தான். ''அது இன்னும் சற்று கடுமையாக உறைந்தால் நன்றாக இருக்கும்.''

''ஏன்?'' என்றான் மலீனின். ''பலமான உறைபனியில் வெளியே இருப்பது சுலபமானது அல்ல.''

''நான் அதை இந்த முறையில் பார்க்கிறேன்: அது நமக்குச் சுலபமாக இல்லாது இருக்கலாம், ஆனால் ஜெர்மானியர்களுக்கு மகா மோசமானதாக இருக்கும்,'' என்றான் சிரத்தா. எதிரிகளுக்காக அத்தகைய ஒரு கண்ணியை ஏற்பாடு செய்ய தனிப்பட்ட முறையில் அவன் சக்தி பெற்றிருந்தது போன்று பல் இளித்தான். ''எனது பிளாட்டூனில் ஒரு வேதியல் மாணவன் இருக்கிறான்—நான்காம் ஆண்டு படித்தவன்—அவர்களுடைய விமான எண்ணெய் உறைபனியில் தாங்காது உறைந்து போகும் என்று அவன் சொல்கிறான். சற்று மேலே பாருங்கள்,'' சிரத்தா வானத்தை நோக்கித் தலையாட்டினான். ''உண்மையான குளிர்காலத்தின் இது இரண்டாவது நாள். ஜெர்மானியர்கள் வானில் குறைவான விமானங்கள் கொண்டிருந்தது இன்று இரண்டாவது நாள். உறைபனி கடுமையாகத் தாக்கினால், அவர்களுடைய டாங்கி எண்

ணெய்யும் உறைந்து போகும் என்று நினைக்கிறீர்களா?''

''டாங்கிகளுக்கு நீ பீதியடையவில்லையா,'' என்றான் மலீனின்.

''அவற்றுக்கு நான் பீதியடையவில்லை. நாங்கள் ஏற்கெனவே இரண்டைச் சுட்டெரித்து விட்டோம்...''

''இரண்டா—அது ஒன்றும் அதிகமானது அல்ல,'' என்றான் மலீனின்.

''ஒரு பிளாட்டூனுக்கு இது மோசமில்லை!'' என்று மறுத்துரைத்தான் சிரத்தா. ''துப்பாக்கி பிளாட்டூன்களை மட்டும் கணக்கிடுங்கள்: பிளாட்டூனுக்கு இரண்டு, கம்பெனிக்கு ஆறு, பட்டாளியனுக்குப் பதினெட்டு, ரெஜிமெண்டுக்கு ஐம்பத்து நான்கு,'' என்று தனது விரல்களால் கணக்கிட்டவாறு தொடர்ந்தான். ''ஒரு டிவிஷனுக்கு நூற்று அறுபத்திரண்டு, பத்து டிவிஷன்களுக்கு ஆயிரத்து அறுநூறு... பாருங்க, மாஸ்கோவுக்கு அருகிலே ஜெர்மானியர்களுக்கு எந்த டாங்கிகளும் இல்லாது போல ஆகும்! அது அப்படித்தான் இருக்கும், எல்லா பிளாட்டூன்களும் இது போலவே செய்தால். ஆனால் நம்மோட ஒவ்வொரு பிளாட்டூனும் இரண்டு டாங்கிகளைச் சுட்டெரித்துவிட்டது என்று சொல்ல முடியுமா? நமது பட்டாளியனை எடுத்துக்கொள்ளுங்கள். அதிலுள்ள எந்த பிளாட்டூனும், நம்முடையதைத் தவிர்த்து, இரண்டைச் சுட்டெரித்தது எனக்குத் தெரியாது,'' என்று பெருமையுடன் முடித்தான் அவன்.

''ஆக, ஃபிரன்ட் முழுமைக்குமாக நீ கணக்கிட்டு விட்டாய்,'' என்றான் மலீனின் புன்னகையுடன். ''உனது பங்கை நீ செய்துவிட்டாய், உனது இரண்டு டாங்கிகளைச் சுட்டெரித்து விட்டாய், இப்போது நீ சற்று மூச்சுவிட்டுக் கொள்ளலாம்: மற்றவர்களும் செய்யட்டும், இது அவர்களுடைய முறை, இல்லையா?''

''இல்லையில்லை, இதுபோல விவாதம் செய்கிற பழக்கம் எனக்கில்லை. நான் காரியத்தைப் பற்றிச் சொல்கிறேன்: ஒரு பிளாட்டூனுக்கு இரண்டு டாங்கிகள் என்பது குறைவானதல்ல.''

''நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன்,'' என்றான் மலீனின். ''நான் என்ன சொல்கிறேன் என்றால் நாம் எண்ணெய்யை நம்பக் கூடாது. குளிர் பயங்கரமாக இருக்கும், எதிரியினுடைய எண்ணெய் உறைந்து போகும், பீரங்கிகள்

சுடுவதை நிறுத்தும், சிறு எந்திரத் துப்பாக்கிகள் வேலை செய்யாது போகும். பிறகு ஜெர்மானியர்களை பாதையை விட்டுத் துடைத்து எடுத்து ஓரத்தில் குவிப்பதைத் தவிர செய்ய ஒன்றும் இருக்காது! அது தவறான போக்கு. நாம் திருப்தியடைந்து விடக் கூடாது.''

''நாம் திருப்தியடைந்து வருகிறோம் என்று யார் சொன்னது?'' எனக் கேட்ட சிரத்தா, 'அணிவகுப்பில் நில்லாத' போது தனது வார்த்தைகளை மழுப்பிப் பேசிப் பழகாதவன், தனது தோள்களைக் குலுக்கி, தலையைப் பின்னுக்குச் சாய்த்து சூரியனை நோக்கினான். ''இது எல்லாமே மாயை,'' என்றான், சூரியனை நோக்கி முகஞ்சுழித்தவாறு. ''ஜெர்மானியர்கள் முழுவீச்சில் தொடங்கிய உடனேயே, இந்த அருமையான தட்பவெப்ப நிலையில் புகையைத் தவிர எதுவுமே எஞ்சியிருக்காது...''

''எப்படியும், உங்களுடைய நிலையை நாம் பார்க்கலாம்,'' என்றான் மலீனின். தனது சிகரெட் அடித்துண்டை கீழே போட்டு காலால் நசுக்கி, இடைவெளி வழியாக முதலில் ஏறினான்.

மந்தமான நேரத்தில் எப்போதும் செய்வது போல பத்து நிமிடங்களுக்குப் பிறகு போர்வீரர்களுடன் ஏற்கெனவே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் ஆறுபேர் இருந்தார்கள். எஞ்சியவர்கள், சின்த்சோவும் கூட தங்களது நிலைகளில் இருந்தார்கள்; ஆனால் மலீனின் எல்லா ஆட்களையும் உடனடியாக ஒன்றுசேர்க்க முடியாமைக்குப் பழகிப்போயிருந்தான், தனக்கிருந்த கேட்பவர்களுடன் திருப்தியடைந்தான்.

''அவ்வப்போது, மிக்னெத்சோவ்,'' என்று கையால் சுருட்டப்பட்ட சிகரெட்டை பேராவலுடனும் பதட்டத்துடனும் புகைத்துக் கொண்டிருந்த மெலிந்த இளம் போர்வீரனிடம் சொன்னான். ''உண்மையில் நீ ஒரு வேதியலாளன் அதுபற்றி உனக்குத் தெரிந்ததெல்லாம் எனக்குத் தெரியாது. ஜெர்மானியருடைய விமான எண்ணெய் உறைபனியில் பயனற்றது, மேலும் அவர்களது டாங்கிகளில் எண்ணெய் உறைந்து போக முடியும் என்று நீ சொல்லிக் கொண்டிருக்கிறாய். நீ சொல்வது போல இருக்கலாம், அவர்களது பீரங்கிகள் முடங்கிப் போய் சிறு எந்திரத் துப்பாக்கிகள் வேலை செய்யாது போகலாம்.'' சிரத்தாவிடமிருந்து எண்ணெய்

பற்றிக் கேட்டதிலிருந்து அந்த எண்ணம் மலீனினைக் கவலைக்குள்ளாக்கிக் கொண்டிருந்தது. இப்போது அவன் அக் கருத்தை இப்படியும் அப்படியுமாகப் பிடிவாதத்தோடு புரட்டிக் கொண்டிருந்தான், முடிவில் அதைத் தனது சொந்த லாபத்திற்கு மாற்றவும் தான் பொருத்தமாகக் கருதியது போலப் பயன்படுத்தவும் முடிவு செய்தான். ''ஒருவேளை, நான் திரும்பவும் சொல்கிறேன், அது அப்படி இருக்கலாம். நீ ஒரு வேதியலாளன், அது உனக்கு வெளிப்படையானது. ஆனால் தனிப்பட்ட முறையில் நான் அதை நம்பவில்லை. உனக்கு நம்பிக்கை இருக்கலாம், ஆனால் எனக்கு இல்லை. அதற்கு மேலும் நான் சொல்வேன்: ஜெர்மானியப் போர்த் தளவாடங்கள் உறைபனியில் முடங்கிப் போகும் என்று நீ நம்பிக் கொண்டிருக்கிறாய், ஆனால் அதை நான் நம்பியிருக்கவில்லை. வேறு யாரையும் தவிர, மிக்னெத்சோவ், உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். உன்னிடந்தான் நம்பிக்கை கொள்கிறேன். தட்பவெப்பநிலை என்ன என்பது பற்றிப் பரவாயில்லை, உன்னுடைய தைரியத்தை விட்டுவிடக் கூடாது, உனது துப்பாக்கியோ உனது எறிகுண்டோ நீ வைத்திருக்க நேரும் வேறு எதுவாக இருந்தாலும், குறியைத் தாக்கும், வேறு எதையும் வீழ்த்தாது. உன்னுடைய தைரியத்தை நீ இழக்காது இருந்தால், ஜெர்மானியர்களால் மாஸ்கோவுக்குள் வரவே முடியாது, முப்பது டிகிரி உறைபனியில் அவர்களது போர்த் தளவாடங்கள் கடிகாரம் போல வேலை செய்தாலும் கூட. ஆனால் உனது தைரியத்தை இழந்துவிட்டால், பிறகு எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் மாஸ்கோவில் இருப்பார்கள், சாதனங்களுடனோ இல்லாமலோ, உறைபனியோ இல்லையோ. அது பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தி விடாது! இப்போது என்ன சொல்லப் போகிறாய், வேதியலாளனே?''

மிக்னெத்சோவ் நிச்சயமாக முட்டாள் அன்று. அரசியல் அறிவுரையாளன் எதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறான் என்பதை முழுமையாக உணர்ந்தான். அவனது வார்த்தைகளுக்குப் பின்னே இருந்த அன்பையும் உறுதியையும் இவனால் உணர முடிந்தது. ஆனால் மாஸ்கோவுக்கு முன்னேறுகையில் ஜெர்மானியர்கள் எண்ணிப்பார்க்கக்கூடிய ஒவ்வொரு துயரத்திலும் அழுந்த வேண்டும் என்று இவன் உணர்ச்சிவயப்பட்டு விரும்பினான். மேலும் ருஷ்யக் குளிர்காலம் பற்றியும் ஜெர்

மானியப் போர்த் தளவாடங்களைப் பற்றியும் உக்கிர மாகப் பேசத் தொடங்கினான்.

''சரி, நீ சொல்வது சரியென்றே வைத்துக் கொள் வோம்,'' என்று தன்னைப் பெருமளவுக்கு அச்சுறுத்திய சாந்தமான மனநிலையைத் தான் ஏற்கெனவே மாற்றி கொண்டதை உணர்ந்து சமரசத் தொனியில் மலீனின் சொன் னான். ''ஜெர்மானியர்கள் குழம்பிப் போகட்டும்! அது அவர்களைப் பற்றியதல்ல, ஆனால் உன்னைப் பற்றியது என்பதை நீ இப்போது உணர்கிறாயா? அவர்களது எண் ணெய் பயனற்றுப் போய்விடுகிறதா என்பதல்ல, ஆனால் உனது நிலத்தை நீ தக்கவைத்திருக்கிறாயா என்பதுதான்?'' மலீனின் இன்னமும் பிடிவாதமாக தனது கருத்தையே வலி யுறுத்திக் கொண்டிருந்தான்.

''அது அருத்தமுள்ளது, தோழர் அரசியல் அறிவுரை யாளரே,'' என்று பல குரல்கள் ஒருமித்துக் கூறின.

''சிரத்தா, இதைக் கேளு,'' சற்று இடைவேளைக்குப் பிறகு மலீனின் தொடர்ந்தான். ''இன்றைக்கு என்ன கிழமை வியாழனா?''

''ஆமாம், வியாழந்தான்.''

''சனிக்கிழமை ரெஜிமெண்ட் கட்சிக் குழுவின் தொடர் கூடப் போகிறது. உனது மனு பரிசீலிக்கப்படுகிறது, கட்சி யில் உன்னைச் சேர்ப்பது பற்றி அவர்கள் பரிசீலிப்பார் கள்.''

''கேள்விகளுக்குப் பயப்படுகிறேன்,'' என்றான் சிரத் தா, திடீரென்று கண்டிப்புடன். ''எனக்கு எப்போதுமே அப்படித்தான் இருக்கிறது: கேள்விகள் கேட்காதவரை எனக்கு எல்லாம் தெரியும், கேள்விகளைக் கேட்கத் தொடங் கியதுமே, நான் எல்லாவற்றை மறந்து போகிறேன், துரதி ருஷ்டத்தில் மாட்டிக்கொண்டது போல.''

''கட்சி விதிமுறையையும் கட்சி வரலாற்றையும் இன்று காலையிலிருந்து அவன் மனப்பாடம் செய்து கொண்டிருந் தான், ஆக நன்றாகத் தயாரித்துக் கொண்டிருக்கிறான்,'' என்று நடுத்தர வயதுப் போர்வீரன் ஒருவன் தகப்பனாருக் குரிய குரலில் சொன்னான். அது திரஃபீமவ். பாளையம் செல்ல கம்யூனிஸ்ட் பட்டாளியன் காத்துக் கொண்டிருந்த போது, குளிர்கால மீன் பிடித்தலுக்காக அவன் தன்னை தயாராகிக் கொண்டிருந்தது போல அவனது தோழர்கள்

அவனைக் கேலி செய்தனர். மென்மயிர்த் தொப்பியும் பஞ்சு வைத்து தைக்கப்பட்ட ஜாக்கெட்டும், அதற்கு மேல் பெரிய அங்கியும் அணிந்து அநுபவமுள்ள போர்வீரன் போல இப்போது காணப்பட்டான். அவனது நரைத்த மீசை மட்டுமே அவன் இன்னமும் இளைஞன் அன்று என்பதைக் காட்டியது. எல்லா இழப்புகளுக்கும் பிறகு ஒரே கம்யூனிஸ்டாக பிளாட்டூனில் எஞ்சியிருந்தான்.

''சின்த்சோவைக் கணக்கிடவில்லை என்றால்,'' என்று மலீனின் எண்ணினான்; பிறகு மறுசிந்தனை வந்து தனக்குத் தானே சொன்னான்: ''இல்லை, சின்த்சோவைக் கணக்கில் சேர்த்துக்கொள்ள முடியாது. அவனது கட்சி அட்டை சந்தேகத்திற்கிடமானதும் நிரூபிக்கப்படாததுமான சூழ்நிலைகளில் இழக்கப்பட்டுவிட்டது. போரில் காட்டிய தைரியத்தைக் கணக்கில் சேர்த்தாலும் கூட அவனைக் கட்சியில் மறுபடியும் சேர்த்துக்கொள்ளப் போவதில்லை.''

''திரஃபீமவ்,'' என்றான் மலீனின், ''சிரத்தா தயாரிக்க நீ உதவி செய்யலாம். அவன் பிளாட்டூன் கமாண்டர் என்பதைப் பற்றிப் பரவாயில்லை. நீ நீண்ட அநுபவமுள்ள கம்யூனிஸ்ட், ஆகவே அந்த முறையில் நீதான் அவனது சீனியர்.''

''உள்ளபடியே அவன் எனக்கு உதவுகிறான்,'' என்றான் சிரத்தா. ''கட்சி வரலாறு என்ற புத்தகம் அவனுடையது. என்னிடம் கட்சி விதிமுறை மட்டுமே இருந்தது.''

''மாஸ்கோவிலிருந்து அதை உன்னுடன் கொண்டு வந்தாயா?'' என்று திரஃபீமவை நோக்கியவாறு மலீனின் கேட்டான்.

திரஃபீமவ் தலையசைத்தான்.

''மாஸ்கோவைப் பற்றிக் கேட்டு இளைஞர்கள் என் உயிரை எடுக்கிறார்கள்,'' என்றான். '''மாஸ்கோ எப்படி இருக்கிறது? அங்கே பீதி நிலவுவதாகச் சொல்கிறார்கள்... அது எப்படி என்று எங்களுக்குச் சொல்லுங்கள்.' நான் பதில் சொன்னேன்: ஏதேனும் நடந்திருந்தால் அது நினைவில்லாமல் போய்விட்டது. எனக்கு நினைவிருப்பதெல்லாம் லேர்மந்தொவ் சொன்னதுதான்: 'பின்னே இல்லையா இப்போது மாஸ்கோ, முன்னே மடிவோம் மாஸ்கோ மண்ணிலே!' நீண்ட காலத்திற்கு முன்பு, நூற்றாண்டின் தொடக்கத்தில், வட்டாரப் பள்ளியில் அந்த வரிகளைக் கற்றுக்

கொண்டேன். அவற்றை நான் மறந்துவிடவில்லை நீங்கள் பார்ப்பது போல!'' அவன் சிரித்தான்.

''நல்லது,'' என்றான் மலீனின். ''மாஸ்கோவிலிருந்து வரும் செய்தியில் நீங்கள் ஆர்வம் கொண்டிருந்தால், கடைசிச் செய்திகளை உங்களுக்குத் தர முடியும். என் மனைவியிடமிருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது...''

போர்முனைக்குத் தன் மகன் எப்படி ஓடிப்போனான் என்பதையும் மாவட்ட வீட்டு வாரியத்திற்குத் தன் மனைவி வேலைக்குச் சென்றாள் என்பதையும் குக்கூஷ்கின் எப்படி சாதாரணப் போர்வீரனாகப் போர்முனைக்கு அனுப்பப்பட்டான் என்பதையும் அவர்களுக்குச் சொன்னான். அவர்கள் பரிவுடன் அதனைச் செவிமடுத்தார்கள். குக்கூஷ்கின் தண்டிக்கப்பட்டதில் எல்லாரும் மகிழ்ச்சியடைந்தார்கள். சரியான பாடம் கற்பித்தார்கள், பேன்!

''ஆக மாஸ்கோவை ஒழுங்காக வைத்திருக்கிறார்கள்,'' என்றான் திரஃபீமவ். ''அது சரியானது. உன்னுடைய மகன் ஓடிப் போனது பற்றி—நீ கோபப்படுவாயோ இல்லையோ, அலெக்சேய்,—அவன் இன்னமும் போக்கிரியாகவே இருக்கிறான். உனக்கு இரண்டு தெருக்கள் தள்ளி வசிக்கிறேன், அவனது குறும்புகள் எனக்குத் தெரியும்...''

''எல்லாம் சரிதான்,'' என்ற மலீனின் இதனால் சிறிது சங்கடப்பட்டான். ''நானும் இளைஞனாக இருந்த போது சரியான போக்கிரியாக இருந்தேன்...''

''எங்களுக்குச் சொல்லுங்க,'' கை மீது கன்னத்தைத் தாங்கியவாறு இதுவரை மௌனமாக உட்கார்ந்திருந்த வெளிறிய இளம் போர்வீரன் ஒருவன் கேட்டான், ''விமானத் தாக்குதல்களுக்குப் பிறகு மாஸ்கோ எப்படிக் காணப்படுகிறது? நானே ஒரு மாஸ்கோவாசி, கரோவி வால் தெருவில் வசித்தேன்.''

''உன்னுடைய கரோவி வால் அப்படியேதான் இருக்கிறது,'' என்றான் மலீனின். ''எப்படியோ, திரஃபீமவ் பத்து மடங்கு கூடுதலாக உனக்குச் சொல்லியிருக்க வேண்டும். நீங்கள் அவனை நம்பலாம், அவன் தீவிரமான எண்ணமுள்ளவன், குடிக்க மாட்டான், பொய் பேசமாட்டான், அவன் மீனவனாக இருந்த போதிலுங்கூட!''

எல்லாரும் சிரித்தார்கள்.

''ஆனாலும்,'' என்று கரோவி வால் தெருவில் வாழ்ந்த

மாஸ்கோவாசி தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான், ''பத்திரிகைகளில் சொல்வது போல மாஸ்கோவில் சிறிதளவு சேதம் தானா?.. அதாவது, ஒவ்வொரு இரவும் தலைக்கு மேலாகப் பறந்து இறைச்சல் எழுப்புகின்றன...''

''அவை வழியில் வரலாம், ஆனால் அவற்றால் அங்கே செல்ல முடியாது,'' என்றான் மலீனின். ''ஒவ்வொரு குண்டும் உன்னிடம் வருவதில்லை, இல்லையா? இதே போலத் தான் மாஸ்கோவிலும். இங்கிருந்து, அங்கு குண்டுவீச்சு பயங்கரமாக இருப்பதாக நினைக்கிறாய். எனக்கோ, போர் முனைக்குச் செல்கின்ற போது, என் முழங்கால்கள் நடுங்கிப் போயின; ஆனால் நான் சேர்ந்த போது, அது அவ்வளவு மோசமாக இருக்கவில்லை.''

''உங்கள் முழங்கால்கள் நடுங்கிப் போனதா! நல்ல கதை, தோழர் அரசியல் அறிவுரையாளரே!'' என்று நம் பாத முறையில் நளினமாகச் சொன்னான் சிரத்தா.

மலீனின் அவனைக் கிண்டலாக நோக்கினான்.

''ஆனால் சரியாக அதுபோலத்தான் இருந்தது! ஏன், சாதாரணப் பயத்தை எதனாலும் என்னிடம் ஏற்படுத்த முடியாது என்று நினைக்கிறாயா? முடியும்!'' என்றான் மலீனின். தலைக்கு மேல் தாழ்வாக ஒரு குண்டு சீறிப்பாய்ந்த போது குனிந்தான். அதிலிருந்து கேலி செய்யவும் முயன்றான்: ''பாரு, குண்டுகளுக்குக் கூட நான் தலை வணங்குகிறேன்...''

இரண்டு அல்லது மூன்று பேர் முறுவலித்தார்கள், ஆனால் மற்றவர்கள் சோர்வாகக் காணப்பட்டார்கள். கைக்கு மிகச் சமீபத்தில் குண்டு வெடித்ததால் அவர்கள் அதைக் கிண்டலாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. மற்றொரு குண்டு முன்னால் வெடித்தது. சுவர்களை ஒட்டி மறைந்துகொள்ள எல்லாரும் விரைந்தார்கள். ஜெர்மானியருடைய பீரங்கிகள் குன்று உச்சி முழுவதையும் செங்கற்காளவாசலின் இடிபாடுகளையும் வெறித்தனமாகத் துளாக்க ஆரம்பித்தன. கடுமையான துர்நாற்றம் புகை காற்றில் எழுந்தது.

''நம் மீது குறிபார்க்க நேற்று அவர்கள் முயற்சி செய்தார்கள், வேசிமகன்கள், அவர்களது தாக்குதலை நாம் முறியடித்த போது,'' என்று மலீனினுடைய காதில் சிரத்தா சத்தம் போட்டான். ''நேற்று நிறுத்தாதபடி நம்

மீது தாக்கினார்கள், இன்றோ மேலும் கடுமையாக... நம் முடன் தொடங்கி விட்டார்கள்!''

நேற்று ஜெர்மானியர்கள் குண்டு வீசும் இலக்கை உண் மையாகவே அடைந்துவிட்டார்களா இல்லையா அல்லது இன்று அதிருஷ்டம் கிட்டியதா என்று பரிசீலனை செய்ய நேரமே இல்லை. அவர்களைச் சுற்றி நெருக்கமாகப் பல முறை நிலத்தை அதிரிடச் செய்த ஒரு டஜன் குண்டுகளைப் போட்ட பிறகு, ஜெர்மானியர்கள் முடிக்கப் பெறாத கட்ட டத்திற்குள்ளாக நேராக அடுத்த குண்டை வீசினார்கள்.

மற்ற எல்லாரையும் போலவே, சுவருக்குக் கீழாகப் படுத்துக்கொண்ட மலீனின் வெளியே உள்ள குண்டுச் சித றல்களிடமிருந்து பாதுகாப்பு மூடியாக அதைப் பயன்படுத்தி வந்தான். கடுமையான பாதிப்பு, இடி, கனம், காற்றில்லா மை ஆகியவற்றைத் திடீரென்று உணர்ந்தான். சரிந்து விழுந்த சுவரின் துண்டுகளாலும் வெடிப்பினால் தரை பிளந்து சிதறிய பனிப்பாளங்களாலும் அவன் தெளிக்கப்பட்டான்.

மூச்சுக்காக ஏங்கி, தனது முழு வலிமையுடன் நிமிர்ந்து, செங்கல் மற்றும் மணற் குவியலிலிருந்து தன்னை விடுவித் துக் கொள்ளத் தொடங்கினான். இதை அவனால் செய்ய முடிந்ததற்குக் காரணம் குண்டு வெடிப்புக்கு முன்னமேயே தலையைச் சுற்றி கைகளைக் குவித்துக் கொண்டிருந்ததும் கைகள் உயரே இருந்ததுமே ஆகும்.

தனது கைகளை விடுவித்துக் கொண்ட பிறகு, குருதிக் கறைப்பட்ட முகத்தைத் தொட்டு உணர்ந்தான். தான் எழு வதற்குத் தடையாக இருந்த ஒவ்வொன்றையும் பக்க வாட்டில் மூர்க்கத்தனமாகத் தள்ளத் தொடங்கினான். இறுதி யாக, செவிடாகிப் போன ஆனால் உயிரோடு, தனது செங் கற் கல்லறையை விட்டு வெளியே தவழ்ந்து வந்து நிலை யில்லாதபடி எழுந்து நின்றான்.

எங்கெனும் மனித நடமாட்டமே காணோம். கனமான குண்டு தரையின் ஒவ்வொரு சென்டிமீட்டரையும் கிழித்தெ றிந்திருந்தது. மேற்பகுதி மண்ணுடனும் உடைந்த செங்கற் களுடனும் கலந்திருந்த பனி குருதியுடன் கருப்பாக இருந் தது. சிதறிக்கிடந்த சீருடையின் கிழிசல்களும் மனித உடல் களின் சின்னபின்னமான துண்டுகளும் இன்னமும் காலணி யுடன் இருந்த கணுக்காலுக்கு மேலாக சீவப்பட்டிருந்த யாருடைய காலோ கிடந்தது.

மலீனின் குறிக்கோளின்றி ஓரிரு எட்டுகள் எடுத்து வைத்து, தடுமாறி நின்றான். பாதத்துக்குக் கீழாக ஏதோ நெறுநெறுத்தது. கீழே பார்த்து அது பருத்தி நூலுடன் அறிமுகமான பிரேம் கொண்ட திரஃபீமவுடைய கண்ணாடி என்பதைக் கண்டுகொண்டான்.

அவன் புதையுண்ட அந்த மூலைக்கே திரும்பிச் சென்றான், தான் புதையுண்டதாலேயே அபூர்வமாக உயிருடன் வெளியே வர முடிந்தது என்பதைப் புரிந்துகொண்டான். வெளியே குண்டு வெடித்ததால் செங்கற்கள் கிடுகிடுத்துக் கீழே விழுந்துவிட்டன. கீழே விழுந்து கிடந்த துண்டுச் செங்கற்கள் ஏற்கெனவே மலீனினை மூடிக் கொண்டிருந்த போது உள்ளுக்குள்ளாக விழுந்த குண்டு வெடித்தது.

''ஏய், யாராவது உயிரோடு இருக்கிறீர்களா? யாராவது உயிரோடு இருக்கிறீர்களா?'' என்று கத்திய மலீனின், கடைசி நிமிடத்தில் தன்னுடன் இருந்தவர்களை நினைத்துப்பார்க்கத் தொடங்கினான்.

சிரத்தா அவனுடன் இருந்தான், அந்த வேதியலாளன் மிக்னெத்சோவ்... ஆனால் இப்போது அவர்கள் எங்கே இருந்தார்கள்? இடிபாடுகளின் இந்தப் பக்கத்தில் அவர்களது உடல்கள் இருந்ததற்கான அடையாளம் ஏதுமில்லை, அல்லது நேரடியான தாக்குதலுக்குப் பிறகு மனித உடலில் வழக்கமாக எது எஞ்சுமோ அது கூட இல்லை.

''ஒருகால் குண்டு வெடிப்பினால் அவர்கள் தூக்கி எறியப்பட்டிருக்கலாம்,'' என்று மலீனின் நினைத்தான்; ஆனால் அதே கணத்தில் ஒரு மூலையில் விழுந்து கிடந்த செங்கற் குவியலுக்குக் கீழிருந்து மந்தமான முனகல் ஒலியைக் கேட்டான். தனது விரல் நகங்களைக் கிழித்துக்கொண்டு செங்கற்களை ஒரு பக்கமாக விட்டெறியத் தொடங்கினான். குவியலில் தனது காதை வைத்துக் கேட்டான், பிறகு நிறையச் செங்கற்களை பாதையினின்றும் வீசியெறிந்தான். இறுதியாக கீழிருந்து சிரத்தாவை இழுத்தான். அவன் உயிரோடு இருந்தான், எழுந்து நிற்க முயல்வது போன்ற அசைவுகளைக் கூடக் காட்டினான், ஆனால் அவனது முகத்தின் கீழ்ப்பகுதி ஒரே குருதியாக இருந்தது. பேச முயன்றான், சிறைந்து போன வாயினால் அல்லாது தொண்டையிலிருந்து முனகினான், அல்லது ஒருகால் தொண்டையால் அல்லாது தனது உணவுக்குழாய் வழியாக முனகினான்.

மலீனின் கைநிறையப் பனியை எடுத்து சிரத்தாவினு டைய முகத்தில் பயங்கரமாகப் படிந்திருந்த குருதியைத் தேய்த்தான். பிறகு தனது பையிலிருந்து காயங்கட்டும் துணியை எடுத்து அவனது முகத்தின் கீழ்ப்பாதியில் கட்டுப் போடத் தொடங்கினான். முதலில், காயம்பட்ட மனிதன் மூச்சுவிட வேண்டும் என்பதை மறந்துபோய் மிகவும் இறுக் கமாகக் கட்டுப்போடவே சிரத்தா மூச்சுத் திணறத் தொடங்கினான். ஆகவே அவிழ்த்துத் திரும்பவும் கட்டுப் போட ஆரம்பித்தான். சார்ஜெண்டினுடைய முகம் இப் போது குருதியால் ஈரமாகிப் போன துணிக்கட்டுடன் காணப் பட்டது. இதை முடித்த பிறகு சிரத்தாவை சுவரை நோக்கி மலீனின் இழுத்துச்சென்று அவனது தலை உயரமாக இருக்கும் படி வைத்தான். அப்போர்துதான் தனது சொந்தக் குருதி யால் மூச்சுத் திணறாமல் இருப்பான். அதன் பிறகு எங்கே சிரத்தாவைக் கண்டானோ அங்கே செங்கற்களுக்குக் கீழாக ஒரு கால் நீட்டிக் கொண்டிருந்ததைக் கவனித்தான்.

ஒரு மணி நேரத்திற்கு முன்னால் அவன் இங்கே வந்த போது, மிக்னெத்சோவ் இரட்டை அடுக்குடன் கூடிய பழைய, ஆனால் நல்ல குளிர்காலக் கம்பளிக் காலணிகள் அணிந் திருந்ததைக் கவனித்தான். அவற்றைச் சமீபத்தில் கைவிடப் பட்ட வீடு ஒன்றில் தான் கண்டதாக மிக்னெத்சோவ் சொல்லி யிருந்தான். குளிர்காலத்தைச் சந்திக்க ஜெர்மானியர்கள் எந்தவகையிலும் தயாராக இல்லை என்று வாதாடிய அவன், பட்டாளியன் முழுமைக்குமாகத் தன்னை நன்கு தயார் செய்து கொண்டிருந்தான் என்று அந்த வேதியலாளனைப் பற்றி மலீனின் கிண்டல் செய்யக்கூட விரும்பினான். இது போன்ற கிண்டலைத் தான் அவன் நினைத்திருந்தான், ஆனால் மறந்து போய்விட்டான். இப்போது, செங்கற் களுக்கு அடியில் கம்பளிக் காலணி நீட்டிக் கொண்டிருந்த தைப் பார்த்ததும், கீழே மிக்னெத்சோவ் கிடக்கிறான் என் பதைப் புரிந்துகொண்டான்.

துளி நேரத்தைக் கூட வீணாக்காது, மிக்னெத்சோவை விரைந்து தோண்டி எடுக்கத் தொடங்கினான். காலில் ஆரம் பித்தான், பிறகு செங்கற்களுக்கு அடியில் எங்கே அவனது தலை இருக்கக்கூடும் என்று தீர்மானித்தவனாய், மேலே தவழ்ந்து ஏறி அங்கே தோண்டத் தொடங்கினான். அவன் தலைப்பகுதியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும், ஏனெனில்

பாதிக்கப்பட்டவன் இன்னும் உயிரோடு இருந்தால் மூச்சுத் திணறிப் போகக் கூடாது.

மிகமிக அடிப்படையான விஷயத்தைத் தான் உணர்ந்து கொள்ளாததற்காகத் தன்னைத்தானே திட்டிக் கொண்டு, மலீனின் வெறித்தனமாகச் செங்கற்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து வீசினான். கடைசியாக, மிக்னெத்சோவுடைய தோள்கள் தென்பட்டன. மலீனின் அவற்றைத் தொட்டான் —பஞ்சு வைத்து தைக்கப்பட்ட ஜாக்கெட்டுக்குக் கீழாக இருந்த உடம்பு இன்னமும் வெதுவெதுப்பாக இருந்தது, அவன் உயிரோடு இருந்தான். மலீனின் கழுத்து மற்றும் முகப் பகுதியில் மிகவும் விரைந்து ஆனால் பெரும் எச்சரிக்கையுடன் செங்கற்களை எடுக்க ஆரம்பித்தான். திடீரென்று அவன் நிறுத்திய போது, மிக்னெத்சோவுடைய தலையின் பின்பக்கத்திலிருந்து அப்போது எடுத்திருந்த செங்கல் இரு கைகளிலும் இருந்தது. அவனது உடல் இன்னமும் வெது வெதுப்பாக இருந்தாலும், மிக்னெத்சோவ் இறந்து போய் விட்டான். அவனது மண்டையோட்டின் மேற்பகுதி முழுதும் அதே துண்டுச் செங்கல்லால் ஆழமாக வெட்டப்பட்டு இருந்தது.

மலீனின் நிமிர்ந்து நின்று வெறுப்போடு செங்கல்லைத் தரையில் வீசினான். இப்படிச் செய்த போது, அண்மையில் எந்திரத் துப்பாக்கியின் தொடர்ச்சியற்ற இரைச்சலைக் கேட்டான். நாற்பது எட்டுகளுக்கு அப்பால், தொழிற்சாலைப் புகைபோக்கியின் கட்டுமானத்தில் ஆட்கள் இன்னமும் உயிரோடு இருந்து ஜெர்மானியர்களைச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். போர்க்களத்தில் தாங்கள் மட்டுமே தனிமையில் இருப்பதாகக் கற்பனை செய்தவர்கள் பிறகு தாங்கள் மட்டுமே அல்ல என்பதைக் கண்டு கொண்ட எல்லாருக்கும் அறிமுகமான, அபூர்வமான, அடக்க முடியாத மகிழ்ச்சியை மலீனினும் உணர்ந்தான்.

சிரத்தாவிடம் சென்ற மலீனின் திரும்பவும் அவனது கனத்த உடலை முயற்சியுடன் உயர்த்தி, மேலும் அதிகமான குண்டுவீச்சு நடைபெற்றால் சிதறல்களிலிருந்து காப்பாற்றுவது நல்லது என்பதற்காக நகர்த்தினான். ஆயினும், ஜெர்மானிய பீரங்கிப்படைத் தாக்குதல் படையின் பின்புறத்திற்குள்ளாக ஆழமாக முன்னமேயே சென்றிருந்தது. மலீனின் அவனை நகர்த்திக் கொண்டிருந்த போது, குருதிபடிந்த

கட்டுடன் இருந்த சிரத்தா ஏதோ சத்தம் போட விரும்பியது போல சில பலவீனமான அசைவுகளை ஏற்படுத்தினான்; பிறகு தனது சொந்தப் பயனில்லாமையில் வியப்புற்றது போல, இரு முட்டிகளையும் விரித்தான், திரும்பவும் அவற்றை மூடிக்கொண்டு மௌனமாக இருந்தான். அவனது மார்பு மட்டுமே விம்மி அமுங்கியது, வேதனையோடு மூச்சு விட்டது. மலீனின் அவனைக் கடைசி முறையாகப் பார்த்தான், சுவரை ஏறி கடந்து, புகைபோக்கிக்குச் சென்ற சிறிய, இடுப்பளவு உயரமுள்ள இணைப்புப் பதுங்கு குழி வழியாகச் சென்றான். அங்கிருந்துதான் எந்திரத் துப்பாக்கியின் சுறு சுறுப்பான ஓசை வந்தது.

குண்டுவீச்சு தொடங்கியிருந்த போது, சின்த்சோவும், சேவையில் இரண்டாம் ஆண்டில் இருந்த கோல்யா பயுகோவ் என்ற இளம் போர்வீரனாகிய அவனது 'நம்பர் டூ'வும் புகைபோக்கியில் துளையடித்த இரண்டு துவாரங்களில் ஒன்றில் எந்திரத் துப்பாக்கியுடன் உட்கார்ந்திருந்தார்கள். ஏற்கெனவே குறிபார்க்கப்பட்ட சில நில அடையாளங்கள் மீது எந்திரத் துப்பாக்கியை சுடாதவாறு குறிபார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவனும் மற்றவனுடைய பணியைச் செய்து பார்த்துக்கொண்டார்கள்—சின்த்சோவ் 'நம்பர் டூ'வாகவும் பயுகோவ் 'நம்பர் ஒன்'னாகவும் செயல் பட்டார்கள்.

துவாரத்திற்குச் சற்று அப்பால் செங்குத்தான நிலச் சரிவு இருந்தது; அதன் ஒரு பகுதியைப் பார்க்க முடியவில்லை, குண்டுத் தாக்குதல் எட்ட முடியாத இடம். பிறகு அந்தச் சரிவு சமதளமாகி பனிமூடிய கணவாயாகியது. எங்களது நிலைகளுக்கு அது குறுக்காகச் சென்றது, அதன் பிறகு மற்றுமொரு குன்று இருந்தது. அங்குதான் அவர்களது கம்பெனியின் மற்ற பிளாட்டூன்கள், தனியாக இருந்த மூன்று குடிசைகளுக்கு அருகே நிலை கொண்டிருந்தன. கணவாயில் உள்ளபடிக்கு எந்தப் பதுங்கு குழிகளும் இல்லை, இரு புறங்களிலிருந்தும் நன்கு குறிபார்த்து இரு எந்திரத் துப்பாக்கிகளுக்கும் எட்டுமாறு இருந்தது. நேற்றுப் பிற்பகலில், அந்தக் கணவாய் வழியே நேரடியாகத் தாக்க ஜெர்மானியர்கள் முயன்றார்கள், ஆனால் இந்த இரு எந்திரத் துப்பாக்கிகளும் பெரும்பகுதியை தாக்கியதால் செத்துப்போன அவர்களது ஆட்களைக் கூட எடுத்துப்போக முடிய

வில்லை, அவ்வாறு செய்வதில் வழக்கமாக அவர்கள் உயிரைப் பணயமாக வைத்துவந்த போதிலும். கணவாயில் முப்பது உடல்கள் கிடந்ததாக நேற்றுச் சொன்னார்கள்; ஆனால் இங்கிருந்து, துவாரத்திலிருந்து பார்க்க முடிந்ததெல்லாம் பனியின் மீது ஓரிரு கருத்த உடல்களைத்தான். குறிபார்க்கவும் தூரம் காணவும் பயிற்சி செய்த சின்த்சோவ், பனியில் சிக்கிக்கொண்ட கம்பத்தையும் கணவாயின் ஆரம்பத்திலும் கடைசியிலும் கிடந்த இறந்த இரு உடல்களையும் அடையாளக் குறிகளாக எடுத்துக் கொண்டிருந்தான்.

இப்போது ஒரு வார காலமாக சின்த்சோவுடன் இருந்த பயுகோவ், சிறுமிக்குரிய வழவழப்பான, ரோஜாநிற முகம் கருத்த புருவங்களைக் கொண்டிருந்தான். தனது மென்மயிர்த் தொப்பியை அவன் கழற்றிய போது, குறுகவெட்டிய தலைமுடி சணல் நிறமுடையதாக இருந்தது.

''நீ சிவில் வாழ்க்கையில் இருந்த போது நீண்ட முடி வைத்திருந்தாயா?'' முதல் நாளன்று சின்த்சோவ் கேட்டான், அதற்கு பயுகோவ் முறுவலித்து விட்டுச் சொன்னான்: ''ஆகா!'' கருத்த புருவங்களுடனும் சணல் நிற தலை முடியுடனும் சந்தேகமில்லாமல் பயுகோவ் மிகவும் அழகன் என்று சின்த்சோவ் நினைத்தான். இப்போது அவனது தலை முடி ஒட்ட வெட்டப்பட்டிருந்தது. அவன் அணிந்த மென்மயிர்த் தொப்பி அவனுடையது அன்று, அவனுக்கு மிகவும் பெரிதாகவும் இருந்தது. பஞ்சு வைத்து தைக்கப்பட்ட ஜாக்கெட்டுக்கு மேலாக அவனது அங்கி புடைத்திருந்தது. மேலும் அவர்கள் இங்கே திறந்த வெளியில் மூன்று நாள்களாகக் கிடந்தார்கள், முதலில் மழையிலும் பின்னர் உறைபனியிலும். ஒருவனுடைய தோற்றத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு அப்போது நேரமில்லை.

ரியாஸான் அருகிருந்து வந்த கூட்டுப்பண்ணை விவசாயி பயுகோவ், ஒகா ஆற்றின் மறுபுறம் சலோத்சா என்ற காட்டுப்பகுதி கிராமத்தைச் சேர்ந்தவன். சலோத்சா அருமையான உருளைக் கிழங்குகளுக்காகவும் ஒகா ஆற்றின் பழைய போக்கில் மீன்பிடிப்புக்காகவும் புகழ் பெற்றது.

சண்டை எவ்வளவுதான் கடுமையானாலும், ஆட்கள் எல்லா நேரமும் சண்டையிடவில்லை. அவன் ஆட்களை விரும்புகிறானா இல்லையா என்பதைப் பொருந்து மௌனமாகவோ வாயாடியாகவோ இருக்கக் கூடிய பயுகோவ், குடும்

பக் காரணங்களுக்காகப் பள்ளியில் ஏழாண்டுப் படிப்பை முற்றாக முடிக்கவில்லை என்பதை சின்த்சோவிடம் கூற அந்த வாரத்திற்குள்ளாக நேரம் பெற்றுவிட்டான்; அவனது தந்தை இறந்து போய்விட்டார், தாயாரும் நோய்வாய்ப் பட்டாள், ராணுவச் சேவைக்கு முன் ஓராண்டு காலம் இளம் கம்யூனிஸ்ட் கழகப் பண்ணைக் குழுவில் குழுத் தலைவனாக இருந்திருந்தான், இராணுவச் சேவைக்குப் பிறகு வேளாண்மை நிபுணருக்குப் படிக்க ஆசைப்பட்டான்.

''எனக்குத் தேவையானதெல்லாம் அந்த ஏழு ஆண்டுகளுக்கான தேர்வுகள்தான். அத்தேர்வுகளை இராணுவத்தில் பணிபுரியும் போது எழுதலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்,'' என்றான் பயுகோவ். ''பிறகு இந்த விவகாரம் வந்தது...''

'இந்த விவகாரம்' என்பது போர்.

பயுகோவ் நம்பிக்கையுள்ள, பாசமுள்ள, ஆர்வமிக்க இளைஞன். தான் வாழ்க்கையில் படித்த எல்லாப் புத்தகங்களின் பட்டியலையும் தனது உணவுப்பையில் வைத்திருந்தான். அவை அவனது வயதுக்கு அதிகம், அதாவது நூற்று நான்கு, அநேகமாக நல்ல புத்தகங்கள். மாலை நேரங்களில், சூழ்நிலை அநுமதித்தால், அந்தப் புத்தகங்களை நினைவுகூர்ந்து, அவனது ரியாஸான் உச்சரிப்பில் அவற்றினுடைய உள்ளடக்கம் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதுண்டு. அப்போது அவனது நினைவாற்றல் கண்டு சின்த்சோவ் வியக்க மட்டுமே செய்தான்.

செயலில், அவனும் சின்த்சோவும் அருகருகாகச் சண்டைபோட்ட போது, உண்மையில் தனது வேலையில் முழுமையாக ஆழ்ந்துவிட்ட மனிதனின் துணிவுடன் பயுகோவ் அமைதியாக தன் வீரத்தை நிரூபித்தான். இதில் அவனும் சின்த்சோவும் ஒன்று போலவே இருந்தார்கள். ஆகவே ஒருவனையொருவன் புரிந்துகொண்டார்கள்.

சின்த்சோவுடைய மனமானது முழுமையாகச் சண்டையில் ஈடுபட்டிருந்தது. தன்னை எதற்கும் இடங்கொடாமலும் எந்தத் திட்டம் தீட்டாமலும் இருந்தான். தனது முழு எதிர்கால வாழ்வையும் போரில் கண்டான்—சாவு அல்லது வெற்றி வரை—ஒரு போர்வீரனைப் போல. அந்த வாழ்க்கையோடு முழுமையாக ஒன்றிப் போய்விட்டான், தனது பணிக் கடமைகளை முடிந்தளவுக்கு நிறைவேற்றினான். அவனைப்

பொருத்தமட்டில் எல்லாவற்றிலும் மிக முக்கியமானது பல சண்டைகளில் பயுகோவ் நல்ல கூட்டாளி என்பதை நிரூபித்தது—மிக முக்கியமானது, இதற்காக பயுகோவை அவன் பெரிதும் மதித்தான், உண்மையோடு நேசித்தான்; அநேக ஆண்டுகளாக அவன் அறிந்திருந்த பலரைக் காட்டிலும் இவனுக்கு அதிகமாகச் செய்யத் தயாராக இருந்தான்.

பீரங்கிப்படை தாக்குதல் தொடங்கிய போது, சின்த்சோவும் பயுகோவும் குண்டுச் சிதறலால் அதனது வாய் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக துவாரத்திலிருந்து எந்திரத் துப்பாக்கியைச் சற்றுப் பின்னுக்கு இழுத்துக்கொண்டார்கள், பிறகு புகைபோக்கியின் அடித்தளத்தில் சற்றுக் கீழாக அமர்ந்து கொண்டார்கள்; அது கனமான அதிக வெப்பந்தாங்கும் செங்கற்களால் ஆகியிருந்தது. குண்டு வீச்சு தீவிரமானதாகவும் துல்லியமானதாகவும் இருப்பதை உடனடியாகப் புரிந்து கொண்டார்கள். அபாயகரமான அண்மை குண்டு வெடிப்புகளின் தாக்கத்தினால் அவர்களைச் சுற்றியிருந்த காற்று நடுநடுங்கியது, ஆனால் இந்தக் குண்டு வீச்சின் போது கூட புகைபோக்கியில் தாங்கள் பெரும்பாலும் பாதுகாப்புடன் இருப்பதாக உணர்ந்தார்கள்: பல அடுக்குகள் கொண்ட வெப்பந்தாங்கும் செங்கற்களைக் குறிவைக்கப்பட்டு அருகில் வெடிக்கப்படும் கனத்த குண்டினால் மட்டுமே ஊடுருவ முடியும், அதிலும் குண்டு நேர்க் கோணத்தில் அடிப்பரப்பைத் தாக்கினால் மட்டுமே. புகைபோக்கிக்குள்ளாகக் குண்டுச் சிதறல்கள் பறந்து வருகின்ற சிறு வாய்ப்பு இருந்தது: முந்தானாள், பிளாட்டூன் கமாண்டர் சிரத்தாவுடைய ஆலோசனையின் பேரில் சின்த்சோவும் பயுகோவும் கொதிகலன் இரும்புத் தகடுகளால் புகைபோக்கியை மூடியிருந்தார்கள். பத்து மில்லிமீட்டர் தடிப்பு கொண்டது, அநேகமாக சூளைக் கதவுகளின் தகடுகளுக்கானதாக அது இருந்திருக்கக் கூடும். இரண்டு தகடுகள் புகைபோக்கியை, ஒரே ஒரு சிறிய இடைவெளி விட்டு, பெரும்பாலும் முழுமையாக மூடின. அடித்தளத்தின் குறுக்காகக் கால்வாய் ஒன்று சென்றது, அதன் அடியிலிருந்து புகைபோக்கிக் குள்ளாக இப்போது அவர்கள் ஊர்ந்து சென்றார்கள்.

''இங்கே உண்மையான பலப்படுத்தப்பட்ட கொத்தளம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது,'' என்று சிரத்தா

நேற்றுச் சொன்னான்; தங்களது புகைபோக்கியைப் பற்றி சின்த்சோவும் பயுகோவும் அப்படித்தான் நினைத்தார்கள்.

ஒன்றே ஒன்றுதான் அவர்களை அழிக்க முடியும்—புகை போக்கியை மூடியுள்ள இரும்புத் தகடுகளின் மீது மேலிருந்து நேராகத் தாக்கினால். உண்மையில், அந்த மாதிரி நிலைமையில், அவர்களால் எதுவும் செய்ய முடியாது, சில துணுக்குகளைத் தவிர அவர்களிடமிருந்து எதுவும் எஞ்சியிருக்காது. ஆனால் இப்போதுங்கூட, குண்டுவீச்சின் கீழ், சாவுக்கான வேறு எந்த வாய்ப்பைவிட, இந்தத் துரதிருஷ்டத்தையும் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை, ஏனெனில் போர்க்காலத்தில் எந்தவகையிலும் அது இருக்கவே செய்தது.

ஜெர்மானியப் பீரங்கிப்படைத் தாக்குதல் படிப்படியாகத் தீவிரமாகிக் கொண்டுவந்தது. பயுகோவ் தனது அங்கி பைகளை ஒன்றன்பின் ஒன்றாகத் திருப்பத் தொடங்கி, குழிவாக வைத்துக்கொண்ட தனது உள்ளங்கைக்குள்ளாகக் கவிழ்த்துக் கொண்டிருந்தான், ஒருகால் அவற்றின் தையல் மூலைகளில் தங்கிப் போய்விட்ட ஏதாவது புகையிலையோ விழக்கூடும். நேற்றே எந்தப் புகையிலையும் இல்லாமற் போய்விட்டது;ஏற்கெனவே இந்தக் காரியத்தை அவன் ஒருமுறை செய்து பார்த்துவிட்டான், ஆனால் இன்றைக்கும் முழு நடவடிக்கையைத் திரும்பவும் பொறுமையாகச் செய்து கொண்டிருந்தான். குண்டுவீச்சு மிகவும் பலமாக இருக்கவே, நடுக்கத்தை உணர்ந்த அவன் புகைக்க விரும்பினான்.

''ஒரு விதைப்பில் இரண்டாவது அறுவடையைப் பெற முயல்கிறாயா?'' பயுகோவினுடைய பயனற்ற முயற்சிகளைக் கவனித்துக் கொண்டுவந்த சின்த்சோவ் கிண்டல் செய்தான். அவன் எழுந்து துவாரத்திற்குச் சென்று கீழே பனிபடிந்த கணவாயை நோக்கினான்.

மிகவும் அடிக்கடி இல்லையென்றாலும் கணவாயில் குண்டுகள் வெடித்துக் கொண்டுதான் இருந்தன; ஆனால் மூன்று குடிசைகளுடன் கூடிய குன்றின் மீது, அருகருகே இருந்த பிளாட்டூன்களின் நிலைகளுக்கு மேலாகக் கனத்த புகைப் படலம் தொங்கிக் கொண்டிருந்தது. குண்டு வெடிப்புகள் திண்ணிய சுவர் போல எழுந்தன, குடிசைகளில் ஒன்று ஏற்கெனவே காணாமற் போய்விட்டது, முதலாவதாக அங்கே

அது இல்லாதிருந்தது போல. அங்கே எஞ்சியதெல்லாம் புகைத்திரளுக்குக் கீழாக வெறுமையான துண்டு நிலந்தான்.

சின்த்சோவினுடைய இதயம் துயரில் அமிழ்ந்தது, தொடர்ச்சியான குண்டுவீச்சினால் நடுக்குற்றது காரணமன்று, ஆனால் இதைச் சிந்திக்காமல் இருக்க அவனால் முடியவில்லை: ''குண்டுவீச்சு முடிந்த உடனேயே தாக்குதல் ஆரம்பமாகும்.'' பயுகோவுக்கு அருகே சுவர் ஓரமாக அமர்ந்து குண்டுவீச்சு நிற்பதற்காகக் காத்திருந்தான். அவனது தலை திடீரென்று அரிக்கத் தொடங்கியது. கண நேரத்திற்குத் தனது மென்மயிர்த் தொப்பியைக் கழற்றி, நெற்றிக்கு மேலாக இருந்த தழும்பை மெதுவாகத் தடவினான். இரண்டு வாரங்களுக்கு முன்னால், இந்தக் காயம் சாவுக்குரியதென்று ஸொலதரியோவ் எண்ணினான். இப்போது எஞ்சியதெல்லாம் தோலின் வழவழப்பும் தொட வழுக்குவதும் இருபுறமும் புதிதாக வளர்ந்த மயிரின் சிலிர்ப்புடனும் கூடிய இந்தக் குறுகிய தழும்புதான்.

இத்தகைய கணங்களில் மக்கள் என்ன நினைப்பார்கள் என்பது பெருமளவுக்கு வேறுபடும். சிலநேரங்களில் முக்கியமான விஷயங்களையும் சிலநேரங்களில் அற்பமானவைகளையும் அவர்கள் நினைப்பார்கள். சிலநேரங்களில் தங்களது சிந்தனைகளை விருப்பம் போலப் போகவிடுவார்கள், சில நேரங்களில் சாவு பயத்திலிருந்து எதனால் அவர்களது கவனத்தைத் திருப்ப முடியுமோ அதுபற்றிச் சிந்திக்கின்ற கட்டாயத்திற்கு ஆளாவார்கள்.

சின்த்சோவ் முதலில் நினைவு கூர்ந்தது மாஷாவை. கடந்த சில நாள்களில் பல முறை கீழே உட்கார்ந்து தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் எங்கே இருக்கிறோம் என்பது பற்றி அவளுக்கு எழுத வேண்டும் என்ற உள்ளுணர்வினைப் பெற்றான். அவள் அதை அறிந்துகொள்ள விரும்பினான்; ஆனால் எந்தளவுக்கு இதை அவசரமாக விரும்பினானோ அந்தளவுக்குத் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்: எந்த முகவரிக்கு எழுதுவது? அவள் எங்கே இருக்கிறாள்? உண்மை, பள்ளியினுடைய அஞ்சல்பெட்டி எண் அவனிடம் இருந்தது, ஆனால் மாஷா இப்போது அங்கே இல்லை. போர் வரிசைகளின் மறுபக்கத்திற்கு அவள் எப்போதோ சென்றிருப்பாள் என்பதைப் பற்றி அவன் துளி

கூடச் சந்தேகப்படவில்லை, இங்கிருந்து அவளுக்கு எழுதுவது புகைபோக்கியின் செங்கல் சுவரை முக்கோண மடிப்புக் கொண்ட போர்வீரனுடைய கடிதத்தால் ஊடுருவ முயல் வது போல, அவ்வளவு முட்டாள்தனமாக இருக்கும்.

எனினும் அவளுக்கு எழுத ஏங்கினான்! மாஷாவைப் பற்றி அவன் சிந்திக்கையில், அந்த இரவில் மாஸ்கோவில் தனது குதிகால்களில் அவள் எப்படி உட்கார்ந்தாள், தொட்டியில் அவனது பாதங்களை எப்படிக் கழுவினாள், மென் மையாக அவனை வருடி, அவனது ஊமைக்காயங்களை எப்படிச் சுத்தம் செய்தாள் என்பனவற்றைப் பற்றி எண் ணினான். அவனுக்கு மாறாக, அவளது மென்மையான கை களுக்காக பாசமிக்க பேராவல் கொண்டிருந்ததை திடீரென்று உணர்ந்தான், தனது நினைவுகளின் முனைப்பில் நடுக்குற்ற அவன், தனது உணர்வுகளை உடனே அடக்கிக்கொண்டு தனக்குள்ளாக உறுதி பூண்டான்.

''உனக்கு என்ன கோளாறு?'' என்று கேட்ட பயுகோவ், இறுதியில் ஒருவழியாகப் புகையிலையின் சில துணுக்களை ஒன்றுசேர்த்து மிக மெல்லிய சிகரெட்டாகச் சுருட்டினான்.

''ஒன்றுமில்லை,'' என்ற சின்த்சோவ் மறுப்பாகக் கையை அசைத்தான்.

''உன் மாமியாரை நினைத்திருப்பாய் என்று எண்ணு கிறேன்,'' என்று கேலி செய்தான் பயுகோவ். ஆனால் அக் கேலி வேலைசெய்யாது போய்விட்டது.

அதே பழைய மந்தமான பழக்கப்பட்டுப் போன வேத னையுடன் குரோத்னோ என்ற நகரத்தையும் அவனது புண் பட்ட மனத்தில் அந்த வார்த்தையுடன் சம்பந்தப்பட்ட ஒவ் வொன்றையும் சின்த்சோவ் நினைத்துப்பார்த்தான். இதை உணராமலேயே உண்ணிகளால் இம்சிக்கப்பட்ட குதிரை போலத் தனது தலையை அசைத்தான்.

''கேளு!'' என்று பீரங்கித்தாக்குதலின் இடியோசைக்கு மேலாகக் கேட்குமாறு முயன்றபடி சின்த்சோவுடைய காதில் பயுகோவ் கத்தினான். ''அங்கே நமது ஆட்களைத் தாக்கி னார்கள் என்று நினைக்கிறேன்!''

சின்த்சோவ் ஒதுக்கப்பட்ட துவாரத்திற்குச் சென்று கலைந்து கொண்டிருந்த புகையின் ஊடாக, முற்றுப்பெறாத தொழிற்சாலைச் சுவர்களில் ஒன்று முன்னர் இருந்ததை விடத் தாழ்வாக இருந்ததைக் கண்டான்.

''ஆமாம், அவர்கள் தாக்குவது போலத்தான் தெரிகிறது!'' என்று சொன்னவன் திடுக்கிட்டான்.

இது நடந்தது ஜெர்மானியப் பீரங்கித் தாக்குதல் தொடங்கிய சுமார் பத்து நிமிடங்களுக்குப் பிறகு. மேலும் அரைமணி நேரத்திற்குக் குண்டுகள் தொடர்ந்து விழுந்து கொண்டிருந்தன. பிறகு சோவியத் வரிசைகளின் பின்னணியில் விழத் தொடங்கின. வெடிப்புகளுக்குப் பதிலாக தலைக்கு மேலாக வெடிகுண்டுகளின் ஓசையே கேட்டது.

''கோல்யா, அங்கே ஒரு பார்வை பார்த்துக்கொள். யாரேனும் வெளியேறுகிறார்களா என்று எனக்குத் தெரிவி.'' செங்கற் காளவாசலைக் காண முடிந்த துவாரத்தை நோக்கித் தலையாட்டிவிட்டுத் தனது எந்திரத் துப்பாக்கிக்குத் திரும்பினான்.

இங்கிருந்து நிலப்பரப்பு முழுவதையும் மிக அருமையாகக் காண முடிந்தது: பின்னணியில் குண்டு வெடிப்புகளின் சுவர் எழுந்திருந்தது; செங்கற் காளவாசலுடன் குன்றுக்கும் மூன்று குடிசைகளை உச்சியில் கொண்ட குன்றுக்கும் இடையிருந்த பனிபடர்ந்த கணவாயின் வழியாக ஜெர்மானிய டாங்கிகள் நகர்ந்து கொண்டிருந்தன. முன்னதாக மூன்று குடிசைகள் இருந்து, இப்போது ஒன்றே ஒன்று சாய்ந்துப் போன குடிசை இருந்த இடத்தை நோக்கிச் சரிவில் முன்னே வந்தவை ஏற்கெனவே ஏறிக் கொண்டிருந்தன. குடிசைகளுக்குக் கீழாகவும் அவற்றைச் சுற்றியிருந்த பதுங்கு குழிகளிலும் எங்கோ எங்களது இரண்டு பிளாட்டூன்கள் இருப்பது சின்த்சோவுக்குத் தெரியும்.

முன்னே வந்த டாங்கி நின்று, தனது பீரங்கியால் சுட்டது; மூன்றில் கடைசியான, ஏற்கெனவே சாய்ந்துப்போன குடிசை அட்டை வீடு போல விழுந்துவிட்டது. டாங்கிக்கு அடியிலிருந்து தீக்கொழுந்து வெளிவந்தவுடன் ஓரே இடத்தில் அது சுழன்றுக் கொண்டிருந்தது. பிறகு இன்னும் ஒரு தீக்கொழுந்து வெளியேறியது, எந்திரத்தை விட்டு அடர்ந்த கரும்புகை வெளிவரத் தொடங்கியது. சிறிய கருப்பு உருவங்கள் மேல்மூடி வாயிலாக பனிக்குள்ளாகத் தாவின. அதிகமின்றி ஓரிரு துப்பாக்கிச் சூடுகள் அவர்களை நோக்கிச் சுடப்பட்டன. அங்கிருந்த வீசிய காற்றின் ஓசை நன்றாகக் கேட்டதாலே சுடப்படுவது நின்று விட்டது என்பதை உறுதிச் செய்தது. எரிந்து கொண்டிருந்த டாங்கியைத் தாண்டி மற்

றொன்று வேகமாகச் சென்று, குன்றுக்கு அப்பால் கடந்து, உச்சிக்குப் பின்னே மறைந்தது. கணவாய் நெடுகிலும் போய்க் கொண்டிருந்த டாங்கிகளும் எதிர்ப்பில்லாமல் முன்னேறின.

ஒரு நிமிடம் கடந்தது, சின்த்சோவினுடைய களப் பார்வையில் டாங்கிகளுக்குப் பின்னே வரிசையில் சென்ற ஜெர்மானிய காலாட்படை ஆட்களின் கருத்த உருவங்கள் தோன்றின.

''பயுகோவ், வா இங்கே!'' கத்தினான் கின்த்சோவ், அடுத்த நாற்பது மீட்டர் தூரத்தில் ஜெர்மானியக் காலாட்படை ஆட்கள் வந்து சேரப் போகும் முன்குறிவைக்கப்பட்ட கம்பத்தைத் தனது இலக்காக வைத்தான்.

பயுகோவ் விரைந்து வந்து, தோட்டா வாரை நிமிர்த்தி விட்டு, துவாரம் வழியாக நோக்கினான். பிறகு சின்த்சோவை விறைப்புடன் பார்த்தான். ''ஏன் இப்போதே ஆரம்பிக்கக் கூடாது?'' என்று கூறுவது போலக் காணப்பட்டான். ஆனால் சின்த்சோவ் மேலும் அரை நிமிடத்திற்குச் சும்மா இருந்தான். இந்தக் கம்பம் மிகத் துல்லியமாக முன்குறிவைக்கப்பட்டிருந்தது, அந்நிலையை அருமையான முறையில் பயன்படுத்த விரும்பினான்.

ஜெர்மானியர்களின் வரிசை கம்பத்துக்கு இணையாக வந்தது. சின்த்சோவ் குறுகிய சுற்று ஒன்றும் பிறகு நீண்ட சுற்று ஒன்றுமாகச் சுட்டான். பிறகு குறியின் அருகே படுத்த ஜெர்மானியர்கள் திரும்பவும் எழுந்த உடனேயே இன்னும் ஒரு குறுகிய சுற்று வெடித்தான். இந்தக் கடைசிச் சுற்று உண்மையில் மிகவும் வெற்றிகரமாக இருந்தது: தாவிக் குதித்த ஜெர்மானியர்களில் ஐவர் எழவோ பனியில் ஊர்ந்து செல்லவோ எந்த மேல்முயற்சியையும் செய்யவில்லை.

''சரி?'' என்று அப்பால் உற்றுநோக்கிய சின்த்சோவ், நொடிப் பொழுதுக்கு அவசரமாகத் தனது முகத்தை பயுகோவினுடைய முகத்துக்குப் பக்கம் திருப்பிக் கொண்டு கேட்டான். ''செங்கற் காளவாசலில் இருந்த நமது ஆட்கள் என்னவானார்கள்?''

''யாருமே தெரியவில்லை,'' என்றான் பயுகோவ். ''அவர்கள் தாக்கப்பட்டிருப்பார்கள் என்று அஞ்சுகிறேன்.''

இதைக் கேட்டதும், தான் முன்னமேயே எண்ணியிருந்ததை விட குறுகிய சுற்று ஒன்றை சின்த்சோவ் வெடித்தான்.

தனித்து விடப்பட்டால் போர்வீரர்கள் செய்வது போல தளவாடத்தைச் சிக்கனப்படுத்தினான்.

அவனும் பயுகோவும் தொடர்ந்து ஐந்து நிமிடங்களுக்குச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். அவ்வப்பொழுது ஜெர்மானியர்களைக் கீழே பனியில் வீழ்த்தி அவர்களது முன்னேற்றத்தைத் தடைப்படுத்தினார்கள். பிறகு ஜெர்மானியர்கள் சீர்படுத்திக் கொண்டு கண்வாயின் அப்பாலுள்ள பக்கம் வழியாக ஓடினார்கள். அவர்கள் இன்னமும் எந்திரத் துப்பாக்கியின் குண்டுபாயும் தூரத்திலேயே இருந்தார்கள். ஆனால் அதனது தாக்குதல் அந்தத் தொலைவில் குறைந்த விளைவு ஏற்படுத்துவதாகவே இருந்தது. ஜெர்மானியர்களின் கருப்பு வரிசை மூன்று குடிசைகளுடன் குன்றுக்கு மேலாக நகர்ந்தது. அங்கே அவர்களை நோக்கி யாருமே சுடவில்லை. அதன் அருத்தம் எங்களது ஆட்கள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டார்கள் என்பதாகும்.

ஜெர்மானிய எந்திரத் துப்பாக்கியாள் ஒருவன், தனது 'நம்பர் டு'வுடன் பனி மீது நிலை கொண்டிருந்தான், அவனது கால்கள் மிகவும் அகல விரிந்து கிடந்தன — சின்த்சோவுக்கும் பயுகோவுக்கும் தாங்கள் இருந்த இடத்திலிருந்தே எல்லாவற்றையும் மிகத் தெளிவாகப் பார்க்க முடிந்தது—இவர்களை நோக்கிச் சுட ஆரம்பித்தான். குண்டுகள் செங்கற்கட்டுமானத்தை உடைக்கத் தொடங்கின; அவற்றில் ஒன்று புகைபோக்கிக்கு மேலாக இரும்புத் தகட்டின் மீது கணீரென்று மோதியது. ஜெர்மானியன் துல்லியமாகச் சுட்டுக் கொண்டிருந்தான், ஆனால் திறந்த வெளியில் சமமற்ற நிலையில் இருந்தான். வெற்றியளிக்காத மூன்று சுற்றுகளுக்குப் பிறகு சின்த்சோவ் ஓர் அடி கொடுத்தான். எந்திரத் துப்பாக்கி பனியில் விழுந்ததைப் பார்த்தார்கள்; நான்காவது சுற்றினால் அது வீழ்த்தப்பட்டிருக்க வேண்டும் அல்லது ஜெர்மானியன் தனது மரண வேதனையுடன் அதை இழுத்துச்சென்றிருக்க வேண்டும். 'நம்பர் டு'வும் பனியில் கிடந்தான், செத்தவன் போல, ஆனால் சில நிமிடங்களுக்குப் பிறகு (சின்த்சோவும் பயுகோவும் வேறு இலக்குகளில் சுட்டனர்) சின்த்சோவின் கையைப் பலமாக இழுத்து பயுகோவ் சொன்னான்:

"'நம்பர் டு'வைக் கவனி..."

சின்த்சோவ் உற்று நோக்கி பனியில் எந்திரத் துப்பாக்

கிக்கு அருகே ஓர் உருவம் மட்டுமே கிடப்பதைக் கண்டான்.

''அப்பால் ஊர்ந்து போயிருப்பான்...'' என்றான் பயுகோவ். அவனது வார்த்தைகளில் வருத்தம் மட்டுமல்லது குற்றச்சாட்டுக் கூட இருந்தது. அவனே ஜெர்மானியனுடைய இடத்தில் இருந்திருந்தால், அவன் அப்பால் நழுவிப் போயிருக்கக் கூடாது, ஆனால் எந்திரத் துப்பாக்கிக்குத் திரும்பிச் சுட ஆரம்பித்திருக்க வேண்டும்.

இறுதியாக, ஜெர்மானியர்கள் பொதுவான தாக்குதல் நடுக்கத்தில், தங்களுக்குத் தொல்லையைத் தந்து கொண்டிருந்த இந்த எந்திரத் துப்பாக்கியிடம் குறிப்பிட்ட கவனம் ஏதும் செலுத்தாதவர்கள், அதனோடு பொருந்துவதென்று முடிவு செய்து தங்களது டாங்கியாளர்களோடு தொடர்பு கொண்டனர். சின்த்சோவின் களப்பார்வையின் வலப்புறத்திற்கு டாங்கிகள் ஏற்கெனவே நகரத் தொடங்கியிருந்தன, திடீரென்று அவற்றில் ஒன்று பின்னுக்குத் திரும்பியது. அது சேதப்படுத்தப்பட்டதாக முதலில் சின்த்சோவ் எண்ணினான், ஆனால் டாங்கி அவர்களுடைய குன்றை நோக்கி நேராக விரைந்தது. அதனது அடிவாரத்தை அடைந்தபோது, வேகம் குறைந்து நின்றுவிட்டது.

''இப்போது அது நம்மை நோக்கிச் சுடப் போகிறது,'' என்றான் பயுகோவ்.

சின்த்சோவ் தலையசைத்தான்.

''போய், நம் ஆட்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்.''

பீரங்கி மேடையின் மூடியிலிருந்து ஒரு டாங்கியாள் தலையை நீட்டினான். நிலக்கிடக்கை நெருக்கமாகப் பார்க்க அவன் விரும்பினான் என்பதில் சந்தேகமில்லை.

சின்த்சோவ் ஒரு சுற்று வெடித்தான். டாங்கியாள் மறைந்து போனான், மூடி படாரென்று அடித்தது, கண நேரத்திற்குப் பிறகு துவாரம் அருகே செங்கற்களைக் குண்டு தாக்கியது. தான் இன்னமும் உயிரோடு இருப்பதைக் காட்டுவது போல, கணவாயின் குறுக்காக இப்போது ஓடிக் கொண்டிருந்த ஜெர்மானியர்களை நோக்கி சின்த்சோவினுடைய எந்திரத் துப்பாக்கி நீண்டதும் கொடியதுமான சுற்று வெடித்தது.

''அவர்கள் நிறைய இருக்கிறார்கள், பல வரிசைகளில் வந்து கொண்டிருக்கிறார்கள்,'' என்று எண்ணினான் சின்த்

சோவ். அவனிருந்த இடத்திலிருந்து எல்லாமே தெளிவாகத் தெரிந்தன. சுற்றிலும் நடந்த ஒரு சண்டையையும் பார்க்க முடிந்தது அவனது வாழ்வில் அதுதான் முதல்முறை.

''நான் கேட்டேன், ஒன்றுமே கேட்கவில்லை... ஒரு வெடிப்புக்கூட இல்லை! ஒன்றுமேயில்லை... ஒருவேளை நான் அவர்களிடம் செல்லவா?'' சின்த்சோவிடம் திரும்பி வந்தவாறு பயுகோவ் கேட்டான்.

''அது நல்ல யோசனையாகத்தான் தெரிகிறது,'' என்றான் சின்த்சோவ். ''என்னால் தனியாக இங்கே சமாளிக்க முடியாது என்ற அச்சத்தைத் தவிர...''

திரும்பவும் துவாரத்திற்கு அதிகத் தொலைவு இல்லாதபடி டாங்கி ஒரு குண்டைப் போட்டது, மீண்டும் சின்த்சோவ் காலாட்படையை நோக்கி ஒரு சுற்று வெடித்தான். ''பாரு, நான் இன்னமும் உயிரோடு இருக்கிறேன்!'' என்று சொல்வது போலக் காணப்பட்டான்.

''அது இன்னும் நெருக்கமாக வர விரும்பலாம்,'' என்றான் சின்த்சோவ், கிளர்ச்சியுடன் கரகரத்த குரலில். ''எறிகுண்டுகளைத் தயார் செய்!''

''அவை எல்லாம் தயார்,'' என்ற பயுகோவ், தரையினின்றும் எறிகுண்டுகளின் கொத்தை* எடுத்து அவற்றை சின்த்சோவிடம் காட்டினான்.

டாங்கி மேலும் சில முறை சுட்டது, சின்த்சோவ் எதிர்பார்த்திருந்தபடி, நெருக்கமாகப் போக முயன்றது. முதல் கியரில் மந்தமான ஒலியுடன்—இந்தக் கடகட ஒலி அண்மையில் அச்சுறுத்துவதாக ஒலித்தது—டாங்கி நகர்ந்தது, கோணவாக்கில் சரிவை நோக்கி மெதுவாக ஏறியது, பின்னர் திசையை மாற்றிக் கொண்டு, கோணல்மாணலாக மேலும் உயரே சென்று, பிறகு பார்வையினின்றும் மறைந்து விட்டது. அது கீழே அரைப்பதையும் இழுத்துச்செல்வதையுமே சின்த்சோவும் பயுகோவும் கேட்க முடிந்தது.

''அது நெருக்கமாக வந்தால், துவாரத்திற்குள்ளாகக் குண்டு வீசும்,'' என்றான் சிந்த்சோவ்.

''டாங்கி முகப்பை நோக்கிக் குறிவை,'' என்றான் பயு

---

* தாக்குதல் பலமாக இருக்க, ஆட்களுக்கு எதிரான எறிகுண்டுகள் பலவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிப் பயன்படுத்தினார்கள். (மொ-ர்.)

கோவ். "நான் சுற்றி ஊர்ந்து போய் எறிகுண்டுகளால் அதைத் தாக்குகிறேன்! சரியா?"

ஆனால் சின்த்சோவ் பதிலளிக்காமல் கணவாயின் குறுக்காக ஓடிக் கொண்டிருந்த ஜெர்மானியரின் புதிய குழுவினர் மீது சுடத் தொடங்கினான்.

கண்ணுக்குத் தெரியாத டாங்கி வெளியில் எங்கோ 'கட கட'த்துக் கொண்டிருந்தது, அது முன்னேறவோ பின்வாங்கவோ செய்யாது ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்ற மனப்பதிவு சின்த்சோவிடம் ஏற்பட்டிருந்தது. இறுதியாக, அது திரும்பவும் வெளிப்பட்டது, அவர்கள் அச்சமுற்றது போல புகைபோக்கித் துவாரத்தின் முன்பாக அல்ல, ஆனால் கீழே அதனது ஆரம்பத் தொடக்க நிலையில்.

"அதனால் குன்றின் மீது ஏற முடியாது, ஏனெனில் அங்கே பனிமூடி இருக்கிறது!" என்று சின்த்சோவ் மகிழ்ச்சியுடன் கூறினான், தனது சட்டைக் கையால் வியர்வையைத் துடைத்துக்கொண்டான்.

டாங்கியினுடைய கவசம் திரும்பவும் திறந்தது, டாங்கியாளுடைய தலை கணநேரத்திற்குத் தோன்றியது, பிறகு கவசம் மூடிக்கொள்ள, டாங்கி அதனது நிலையை மாற்றிக் கொண்டு, அப்பால் சற்று நகர்ந்தது. துவாரத்தை நோக்கிக் குறிபார்த்த போது பீரங்கி ஆட்காட்டி விரலைப் போன்று இருந்தது. சின்த்சோவின் இதயம் துயரில் ஆழ்ந்தது. துவாரத்திற்கு அருகே ஒரு குண்டு விழுந்து செங்கற்களை நொறுக்கியது. மற்றொரு அடி, மீண்டும் ஒரு செங்கற் புழுதி மேகம். பிறகு காதைச் செவிடாக்கக் கூடிய மற்றொரு வெடிப்பு, இந்த முறை வெளியில் மட்டும் அல்லாது உள்ளேயும் கேட்டது. இரும்புத் தகடுகள் அதிரிட்டன. தனது தலை சுவரில் மோதிய போது சின்த்சோவ் கண நேரத்திற்குச் செவிடாகிப் போனான். துவாரத்தின் வழியாகக் குண்டு பாய்ந்து உள்ளுக்குள் வெடித்து விட்டது என்று எண்ணினான், அவ்வாறு ஏற்பட்டிருந்தாலுங்கூட அவனும் பயுகோவும் எஞ்சியிருக்க மாட்டார்கள்.

உண்மையில், துவாரத்தின் விளிம்பை மட்டுமே குண்டு தாக்கியது, மேலும் வெளிப்புறத்திலேயே வெடித்தது. சில துணுக்குகள் மட்டுமே அதிர்வலையுடன் புகைபோக்கிக்குள்ளாகப் பாய்ந்தன, ஆனால் குண்டு உள்ளுக்குள்ளாக வெடித்தது என்ற மனப்பதிவை ஏற்படுத்தப் போதுமானதாக இருந்

தது. தனது பிடரியில் மந்தமான வலியை உணர்ந்தவாறு, சின்த்சோவ் எந்திரத் துப்பாக்கிக்கு விரைந்தான். டாங்கியின் மூடி திறக்க, ஜெர்மானிய டாங்கியாள் அமைதியாக நின்று கொண்டு, தனது கையால் சூரிய ஒளிக்கு எதிராக மறைப்புச் செய்து கொண்டு வெடிப்பின் விளைவை அளவிட்டுக் காண முயன்றான்.

சின்த்சோவ் தனது எந்திரத் துப்பாக்கியின் வாயைச் சிறிதளவு குறுக்கே திருப்பி மேடையின் மேற்பகுதியையும் டாங்கியாளுடைய தோள்களையும் குறி வைத்து குதிரையை அழுத்தினான், இந்தச் சிறு இயக்கமானது ஜெர்மானியர்கள் மீதான அவனது வெறுப்பை முழு சக்தியோடு செலுத்தியது. டாங்கியாள் இரண்டாக வளைந்து அநேகமாக மேடையை விட்டுக் கீழே விழவிருந்தான், ஆனால் உள்ளே இருந்த யாரோ செத்தவனுடைய கால்களைப் பற்றிப் பிடித்து — அவன் செத்துவிட்டான் என்பதில் சின்த்சோவ் உறுதியடைந்தான் — டாங்கிக்குள்ளாக இழுத்து, மூடியை பலமாகச் சாத்தினான். டாங்கி மேலும் மூன்று முறை தொடர்ச்சியாகச் சுட்டது, ஆனால் இந்தச் சமயம் துல்லியமற்றதாக இருந்தன—அவற்றில் ஒன்றே ஒன்றுதான் புகைபோக்கியைத் தாக்கியது—சுற்றித் திரும்பி கீழே சென்றது.

அதன் பிறகு தான் எந்திரத் துப்பாக்கியை விட்டுவிட்ட சின்த்சோவ் பயுகோவினுடைய அசைவற்ற உடலுக்கு மேலாக வளைந்தான். அவன் தரையில் படுத்து பலவீனமாக முனகிக் கொண்டிருந்தான்.

''என்ன விஷயம், கோல்யா? என்ன விஷயம், என் அருமை நண்பனே?'' என்ற சின்த்சோவ் தனிமையின் பயங்கரத்தை உணர்ந்தான்.

''என் முதுகில் தாக்கிவிட்டது,'' என்றான் பயுகோவ் அமைதியாக.

தனது கைகளைக் கொண்டு பாதி எழுந்தான், ஆனால் அவனது கால்கள் கீழ்ப்படிய மறுத்துவிட்டன.

சின்த்சோவ் அவனது அங்கியையும் பிறகு பஞ்சு வைத்து தைக்கப்பட்ட ஜாக்கெட்டையும் சுருட்டினான், பயுகோவினுடைய முதுகில் சிறிது ரத்தக்கறை இருப்பதைப் பார்த்தான். குண்டுத் துணுக்குச் சிறியதாக இருந்தாலும் முதுகெலும்பைத் தாக்கியிருந்தது. பயுகோவால் நகர முடியவில்லை.

''என் கைகள் சரியாக இருக்கின்றன,'' என்ற பயு

கோவ், சின்த்சோவ் அவனுக்குக் கட்டுப் போடுகையில் தனது விரல்களை வளைத்தான். ''என்னை நெருங்கி நகர்த்து, உனக்காகத் தோட்டாவாரைச் செலுத்த முடியும்.''

சின்த்சோவ் அவனைச் சுற்றித் திருப்பி எந்திரத் துப்பாக்கிக்கு அருகாக நகர்த்தினான். பயுகோவ் லேசாகப் புலம்பினான், எனினும் பலவீனமான முறையில் தோட்டாவாரைப் பற்றி எந்திரத் துப்பாக்கிக்குள் செலுத்தினான்.

''என்னால் இப்போதும் சமாளிக்க முடியும்,'' என்றான். ''ஆனால் என் கால்களுக்கு என்ன ஆகிவிட்டது?''

''வெறுமனே அதிர்ச்சி,'' என்றான் சின்த்சோவ், தனது தோழனுக்கு நம்பிக்கையூட்ட விரும்பியவாறு. ''அது சரியாகிப் போகும், இந்த மாதிரி நடக்கும்...''

துவாரத்தின் வழியாக எச்சரிக்கையோடு உற்றுப்பார்த்தான். குண்டு தாக்கும் பிராந்தியத்திற்குள்ளாகத் திரும்பவும் ஜெர்மானியர்கள் ஊடுருவினால் யாரையும் உயிரோடு விட்டுவைக்க அவன் விரும்பவில்லை. அதே நேரத்தில், ஜெர்மானியர்களுக்கு அவர்கள் அதிகமாகத் தீங்கு செய்துவிட்டதாகவும் அது விரைவாக அவனுக்கும் பயுகோவுக்கும் எந்திரத் துப்பாக்கிக்கும் முடிவு ஏற்படுத்தும் என்றும் அவன் உணர்ந்தான்.

இப்போது மற்றொரு சரிவுக்கு ஜெர்மானியர்கள் வந்தால், அந்நிலையில் அவனாலும் பயுகோவாலும் இரு துவாரங்களையும் ஒரே நேரத்தில் கையாள முடியாது என்று எண்ணினான். எந்திரத் துப்பாக்கியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு மற்ற துவாரத்திற்கு ஓடினான். செங்கற்காளவாசலுக்கு மேலாக இருந்த புகை எப்போதோ மறைந்து போய் இப்போது அங்கே எல்லாமே அமைதியாக இருந்தன: அங்கிருந்தவர்கள் எல்லாரும் இறந்திருக்க வேண்டும். இதற்கு வேறு என்ன விளக்கம் கூற முடியும்? அவன் திரும்பவும் ஓடிச் சென்று எந்திரத் துப்பாக்கி இருந்த துவாரத்தின் வழியாகப் பார்த்தான்.

''பார், பார்!'' என்று மகிழ்ச்சியுடன் கூவினான், அவனுக்கு வலப்புறத்தில் அருகே பயுகோவ் இருந்த போதிலும் சத்தம் போட வேண்டிய தேவையற்று இருந்தது.

அங்கே, கணவாயின் கிழக்கு விளிம்பு நெடுகிலும், அப்பால், ஜெர்மானியர்கள் ஏற்கெனவே ஊடுருவிய எந்திரம் மற்றும் டிராக்டர் நிலையத்தின் அருகிலும், வலப்புறத்தில்,

இரண்டு பிளட்டூன்கள் அழிந்துபோன பக்கத்துக் குன்றிலும், நெருப்பும் அடர்த்தியான கரும்புகையும் சுவாலைகளுடன் பயங்கரமான கர்ஜனையுடன் வானத்தை எட்டும் அளவுக்கு ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன. ஜெர்மானியர்களின் காலடிகளுக்குக் கீழாகப் பூமியே அழிந்து கொண்டிருப்பது போலக் காணப்பட்டது. வெடிப்புகளுக்கு இடையே, உருவங்கள் பாய்ந்து வந்து பனியில் விழுந்து எழுந்து திரும்பவும் ஓடுவதைக் காண முடிந்தது... வெடிப்புகள் தொடர்ந்து கொண்டிருந்தன, அவற்றின் பிரதேசம் நிலத்தின் புத்தம்புது துண்டை ஒன்றன்பின் ஒன்றாக மென்று தின்றது.

பயுகோவுக்கு அது என்ன என்பது தெரியும். சின்த்சோவுக்குத் தெரியாது, ஆனால் ஊகித்தான்.

"'கத்யூஷா'க்கள்,"* என்றான், முதலாவது பேசியவன். "அது 'கத்யூஷா'க்கள் தான்."

"ஆமாம். அவற்றை யெல்னியாவுக்கு அருகே பார்த்தேன்," என்றான் பயுகோவ்.

இருவருமே, ஒருவன் காயம்படாதவன், மற்றவன் காயம் பட்டவன், இதற்கு முன் சாதகமாகச் சென்ற ஜெர்மானியப் போர் நடவடிக்கையில் குழப்பம் ஏற்படுத்திய இந்த அச்சுறுத்துகின்ற காட்சியால் பரவசமுற்றது போலப் பார்த்துக் கொண்டார்கள். ஜெர்மன் காலாட்படை ஒரே இடத்தில் செயலற்று நின்று பிறகு பின்வாங்கத் தொடங்கியது. இதற்கிடையே, 'கத்யூஷா' ராக்கெட்டுகளுக்குப் பதிலாக, சாதாரண பீரங்கிக் குண்டுகள், ஜெர்மானியர்களால் பிடிக்கப்பட்ட நிலப்பகுதி முழுதிற்கும் மேலாக வெடிக்கவும் பலமாகச் சிதறவும் தொடங்கியிருந்தன.

ஜெர்மானிய டாங்கிகள் பின்னுக்குத் திரும்பி, மூன்று மறைந்து போன குடிசைகளுடன் குன்றின் உச்சி மீது ஏறி, அங்கிருந்து சுடத் தொடங்கின. ஆனால் எங்களது டாங்கிகளில் ஏழு, எந்திரம் மற்றும் டிராக்டர் நிலையத்தின் வலப்புறத்தில் இருந்த ஒரு சிறிய காட்டை விட்டு வெளிப்புறத்திற்கு ஊர்ந்து ஜெர்மானிய டாங்கிகளை எதிர்த்துத் தாக்

---

* **'கத்யுஷா'**—'காத்யா' என்ற ருஷ்யப் பெண்ணின் பெயரிலிருந்து ஏற்பட்டது. முதல் சோவியத் ராக்கெட் ஏவுதளம் இந்தப் பெயரில்தான் எல்லோராலும் வழங்கப் படுகிறது. **(ப-ர்.)**

கின. எதிரியின் டாங்கி ஒன்று வெடித்துக் கொழுந்துவிட்டு எரிந்தது. பிறகு மற்றொன்று... இப்போது எங்களது டாங்கி களில் ஒன்று தீப்பிடித்துக் கொண்டது, பிறகு மற்றொன்று. இந்தச் சண்டையைக் கவனிக்கையில் தனது முட்டிகள் புண் ணாகும் வரை சின்த்சோவ் நெறித்தான். இதற்கிடையில், எந்திரம் மற்றும் டிராக்டர் நிலையத்திற்கு முன்னால் வயல் முழுவதிலும், கணவாய் நெடுகிலும், மூன்று குடிசைகள் கொண்ட குன்றிலும், அதற்கு அப்பாலும், குன்றுக்குப் பின் பும் எங்களது பீரங்கிப்படை இன்னமும் படபடத்துக் கொண் டிருந்தது... குண்டுகள் இடைவிடாது வெடித்துக் கொண் டிருந்தன, ஜெர்மானியர்கள் வெளிப்படையாகவே பின்வாங் கினார்கள்.

பிறகு எந்திரம் மற்றும் டிராக்டர் நிலையத்திலிருந்து சுமார் அறுபது ஜெர்மானியர்கள் கனத்த எந்திரத் துப்பாக் கியைக் கட்டி இழுத்தபடி பின்வாங்கிக் கொண்டிருந்ததை சின்த்சோவ் திடீரென்று கவனித்தான். குண்டுவீச்சின் கீழி ருந்த கணவாய்க்குள்ளாகச் செல்லாமல், இப்போது இடப்பு றம் திரும்பி, பயுகோவும் அவனும் நிலை கொண்டிருந்த குன் றின் சரிவுகளில் விரிவடைந்த வரிசையாகச் செல்ல ஆரம்பித் தார்கள். அவர்களை நோக்கி ஒரு சுற்று வெடித்தான், பிறகு மற்றொன்று. ஜெர்மானியர்கள் கீழே படுத்து, பின்னர் இடப்புறத்திற்குத் திரும்பினார்கள், மேன்மேலும் இடமாகத் திரும்பி இறுதியாக அவனது கண்ணுக்குத் தெரியாமல் அப்பால் நகர்ந்தார்கள்.

பயுகோவ் அவனுக்கு உதவினான்: சில முறை உறுதியற்ற கைகளுடன் தளவாட தோட்டாவாரைக் கொடுத்தான். சின்த்சோவ் சுடுவதை நிறுத்தினான். மற்றொரு துவாரத் திற்கு எந்திரத் துப்பாக்கியை விரைவாக இழுப்பதற்கு இது தான் நேரம்.

''கோல்யா, நாம் எந்திரத் துப்பாக்கியை...'' என்று தொடங்கிய போது, பயுகோவுடைய தலை உயிரற்றவாறு செங்கற்களின் மீது விழுந்து கிடப்பதைக் கண்டான். அவனது கை இன்னமும் தோட்டாவாரின் மீது இருந்தது, ஆனால் அவனோ உணர்வற்று இருந்தான்.

சின்த்சோவ் அவனைப் பின்னுக்கு நகர்த்தி எந்திரத் துப் பாக்கியைப் பற்றினான். 'நம்பர் டூ' இல்லாமல் இடைவிடாது சுடுவதற்குத் தன்னால் எப்படி முடியப் போகிறது என்று

நடுக்கத்துடன் வியப்புற்றான். அக்கணத்தில், ஏமாற்றத்துடன் புலம்புவதற்கு அவன் தயாராக இருந்த போது, புகைக் குழாயை விட்டு மலீனின் வெளியே ஊர்ந்து வந்தான். அவனது கரிபடிந்த முகம் ஒரே ரத்தமாக இருந்தது, கைகள் துப்பாக்கியைப் பற்றிக் கொண்டிருந்தன.

''நீண்ட நேரமாகச் சுடுகிறாயா?'' எனக் கேட்டான் மலீனின்.

''ஒரு மணிக்கு மேலாக,'' என்றான் சின்த்சோவ்.

''என்ன சொல்கிறாய், ஒரு மணிக்கு மேலாகவா?'' எனக் கேட்டான் மலீனின்.

கணநேரத்திற்குத் தான் உணர்விழந்ததாக அவன் எண்ணினான், ஆனால் அரை மணி நேரமாக உணர்வற்றுப் படுத்திருந்தான். சிரத்தாவையும் மிக்னெத்சோவையும் தோண்டி வெளியில் எடுப்பதில் சில நிமிடங்களை மட்டுமே தான் செலவிட்டதாக எண்ணினான், ஆனால் அதைச் செய்வதில் சுமார் ஒரு மணி நேரத்தைச் செலவிட்டிருந்தான். சின்த்சோவினுடைய எந்திரத் துப்பாக்கியின் வெடிப்புகளைக் கேட்ட போது, அவை முதலாவது அல்ல, ஆனால் சின்த்சோவ் இப்போது குன்றுக்கு வந்த ஜெர்மானியர்களின் மீது சுடத் தொடங்கிய கடைசி சுற்றுகள்தாம்.

மலீனினுடைய முகத்தை சின்த்சோவ் உற்று நோக்கினான். எவ்வளவு நேரமாக, எந்த முறையில் அவன் கூட்டுக் கொண்டிருந்தான் என்பதை விளக்க இது தருணம் இல்லை.

''எந்திரத் துப்பாக்கியைப் பிடித்துக் கொள்ளுங்கள்,'' அக்கணத்தில் மலீனின் சீனியர் அன்று தானே என்பது போல மலீனினிடம் சொன்னான் அவன். ''அங்கே அந்தத் துவாரத்திற்கு! ஜெர்மானியர்கள் மிக நெருங்கி வருகிறார்கள்!''

அவர்கள் எந்திரத் துப்பாக்கியைக் குறுக்காக இழுத்தார்கள். மலீனின் ஒரு வார்த்தையும் பேசாது 'நம்பர் டூ'வினுடைய இடத்தில் படுத்தான். ஒரு நிமிடத்திற்குப் பிறகு, குன்றில் தள்ளாடியவாறு விரைந்து ஏறிய ஜெர்மானியர்கள் அவர்களது பார்வைக்குப் பட்டார்கள்.

''சுடு!'' என்றான் மலீனின் அமைதியாக.

ஆனால் அவன் என்ன செய்ய வேண்டும் என்பது சின்த்சோவுக்குத் தெரிந்தது, சைகையுடன் மலீனினை நிறுத்தினான். ஜெர்மானியர்கள் விரைந்தார்கள், காப்பு செய்வது பற்றிக்கூடக் கவலைப்படவில்லை. ஏனெனில் பின்பகுதியி

லிருந்து வருவதன் மூலம் தாங்கள் சுடப்பட்டால் ஆபத்தில் லை என்று அவர்கள் நம்பியதாக அவன் உணர்ந்தான். ஆனால், எப்படி இருந்தாலும், அவர்களுடைய எந்திரத் துப்பாக்கியாளர்கள் அவர்களுக்குப் பின்னே நிலைகொண்டு குன்றின் மேல் துளியளவு இயக்கம் தெரிந்தால் கூட முன்னேறும் ஆட்களைச் சுட்டுப் பாதுகாக்கத் தயாராக இருந்தார்கள்.

''காப்புக்காக எந்திரத் துப்பாக்கியை அமைத்து விட்டார்கள்,'' என்றான் மலீனின் அமைதியாக.

எதுவும் பேசாது சின்த்சோவ் தலையசைத்தான்; அவன் ஏற்கெனவே அதைக் கவனித்துவிட்டான்.

ஜெர்மானியர்கள் இன்னமும் குன்றின் உச்சிக்கு வந்து கொண்டிருந்தார்கள், தாக்குதலுக்கு இலக்காகும் மண்டலத்திற்குள்ளாக மேன்மேலும் நுழைந்தார்கள்; அந்நேரத்திலும் ஒவ்வொரு எட்டுக்கும் சின்த்சோவுக்கும் அவனது எந்திரத் துப்பாக்கிக்கும் எட்ட முடியாத நிலப்பகுதியை நெருங்கிக்கொண்டு இருந்தார்கள். இதற்கிடையே, பீரங்கிப்படை அவர்களுக்குப் பின்னே இன்னமும் முழங்கிக் கொண்டிருந்தது.

''நம்முடையதா?'' எனக் கேட்டான் மலீனின், அவனது உதடுகள் வெறுமையாக அசைந்தன.

சின்த்சோவ் தலையாட்டினான், எனினும் அந்தக் கணத்தில் குன்றின் மீது ஏறிக் கொண்டிருந்த ஜெர்மானியர்களையும் அவர்களுக்குப் பின்னே இருந்த பனிபடர்ந்த வயல் பகுதியையும் தவிர எதையும் காணவில்லை. ஜெர்மானியர்கள் குண்டு தாக்குதல் எட்ட முடியாத இடத்தை அடைய இன்னும் இருபது மீட்டர் தூரமே இருந்த போது, சின்த்சோவ் குதிரையை அழுத்தினான். எந்திரத் துப்பாக்கியை உறுதியுடன், தளராத இயக்கத்துடன் வலமிருந்து இடமாகவும் பின்னர் இடமிருந்து வலமாகவும் திருப்பினான். கடந்து போய்க் கொண்டிருந்த ஜெர்மானியர்களுக்குக் கீழே விழ நேரம் கிட்டவில்லை. நூறு மீட்டருக்கும் குறைவான பரப்பில் குறிவைக்கப்பட்ட இலக்கின் மீது அரிவாளால் வெட்டுவது போல மொத்த வரிசையைச் சாய்க்குமாறு எதிர்பாராத விதத்துடனும் கல்நெஞ்சுடனும் சுற்றில் சுடுவது போரில் நடைபெறும் அரிய நிகழ்ச்சிகளில் ஒன்று. வரிசையிலுள்ளவர்கள் கீழே விழ, சில ஆட்கள் திரும்பவும் எழுந்து குண்டு தாக்குதல் எட்ட முடியாத இடத்தை நோக்கிக் கடைசி ஓட்டம் பிடித்தார்கள்.

ஒரு சுற்று!.. பிறகு மற்றொன்று!.. முதலாவதாக ஓடிய ஜெர்மானியன் அநேகமாக எட்ட முடியாத மண்டலத்தை அடைந்தான். அவனையும் சாய்ப்பதற்காக சின்த்சோவ் எந்திரத் துப்பாக்கியைக் கீழ்நோக்கித் திருப்பவேண் டியிருந்தது. ஜெர்மானிய எந்திரத் துப்பாக்கி துவாரத்தின் மீது சுடத் தொடங்கியது; ஆனால் இந்தப் புறத்தில் அது குறுகியதாக இருந்ததாலும், குண்டுகள் வெறுமனே அதைச் சுற்றியிருந்த செங்கற்களையே தகர்த்தன.

''சீக்கிரமே இன்னும் வருவார்கள்,'' என்றான் சின்த் சோவ்.

உறுதிசெய்தவாறு, ஜெர்மானியர்களின் மற்றொரு வரிசை எந்திரத் துப்பாக்கிக்குப் பின்னே எழுந்து முன் னேறத் தொடங்கியது. சின்த்சோவ் அவர்களைச் சுடாமல், ஜெர்மானிய எந்திரத் துப்பாக்கி மீது கவனம் செலுத்தி னான். ஜெர்மானியர்களிடமிருந்து பதில் தரும் சுற்று இவ னது மூடிய இடது கண்ணிற்குள்ளாக நுண்ணிய செங்கற் துகள்களைக் கொண்டுவந்தது. வலியினால் கண்ணை இன் னும் இறுக்கமாக மூடிக்கொண்டு, ஜெர்மானிய எந்திரத் துப்பாக்கி மீதும் அதற்குப் பின்னால் படுத்திருந்த இரு ஜெர்மானியர்கள் மீதும் இறுதியான சுற்று வெடித்தான். அவர்களில் ஒருவன் பக்கவாட்டில் புரண்டான், மற்றொரு வன் குதித்தெழுந்து பின்னர் சரிவில் உருண்டு விழுந்தான். அவர்களுக்குப் பின்னே நிலவிய அமைதியைக் கேட்ட கா லாட்படையாட்கள் தைரியத்தை இழந்தவாறு பின்னுக்குத் திரும்பி கீழே ஓடினார்கள்.

சின்த்சோவ் கணநேரத்திற்குத் திகைப்புற்று இருந்தான். தானும் மலீனினும் தங்களது எந்திரத் துப்பாக்கி அருகே செத்து மடிகின்ற வரை ஜெர்மானியர்கள் வரிசையாக முன்னேறுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தான். இப்போ தோ ஜெர்மானியர்கள் திடீரென்று பின்னுக்குத் திரும்பி ஓட்ட மெடுத்து விட்டார்கள். ஒரு சுற்று வெடித்தான், ஆனால் தவறிவிட்டது: அவர்களது தலைகளுக்கு மேலாகச் சுட்டு விட்டான். எந்திரத் துப்பாக்கியின் குறிகாட்டியைச் சரி செய்தான், ஆனால் இப்போது அதிகம் சுணங்கி விட்டது. துப்பாக்கியிலிருந்து தனது பிடியைத் தளர்த்தி வியர்வை வடியும் முகத்தை மலீனின் பக்கம் திருப்பினான்.

''என் கண்ணைக் கொஞ்சம் பாருங்க, தோழர் மலீனின்... அதற்கு என்ன ஆகிவிட்டது?''

''எதற்காக அதைச் சுருக்கிக் கொண்டிருக்கிறாய்? திற!''

''என்னால் முடியாது, வலிக்கிறது...''

மலீனின் தனது முகத்தை சின்த்சோவுடைய முகத்துக்கு அருகே கொணர்ந்து, ''குறிப்பாக எதுவும் இல்லை, புருவத்திற்குக் கீழே சிறிது சிராய்ப்பு,'' என்று சொன்னான். ''அதைவிட மோசமாக இல்லைதான்.''

தனது விரல்களால் இமைகளை நீக்கி வலிந்து கண்ணைத் திறந்தான் சின்த்சோவ். அது வேதனைப்படுத்தியது, ஆனால் அவன் பார்க்க முடிந்தது.

''நாம் அவர்களைத் துரத்தியடித்து விட்டது போலத் தெரிகிறது,'' என்றான் மலீனின்.

சின்த்சோவ் பதில் பேசவில்லை, ஆனால் அதையே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அடுத்து என்ன நிகழப் போகிறது என்பது புதிராக இருந்தது, ஆனால் அப்போதைக்கு எதிரி துரத்தப்பட்டு விட்டான். தங்களது திரும்பு வழியில் இந்த மலையுச்சியைப் பிடிக்க ஜெர்மானியர்கள் விரும்பியிருந்தார்கள். ஆனால் தோல்வியின் பொதுவான சூழ்நிலை வெளிப்படையாகவே அவர்களை நம்பிக்கை இழக்குமாறு செய்துவிட்டது. எதிர்த்து நிற்பதற்காக அவர்கள் வந்து சேர்ந்த உடனேயே, வேலையை முடிக்காமல் சென்று விட்டார்கள்.

''உனது 'நம்பர் டூ' இறந்து விட்டானா?'' என வினவினான் மலீனின். ''பயுகோவா?''

''இல்லை,'' என்றான் சின்த்சோவ். ''அவன் சுயநினைவின்றி இருக்கிறான்.''

மலீனின் பயுகோவ் அருகே முழங்காலீட்டு அமர்ந்து அவனைத் தொடுவதற்கு முன்னால் சின்த்சோவிடம் கேட்டான்:

''அவன் எங்கே காயம்பட்டான்?''

''இடுப்பின் பின்பகுதியில்,'' என்றான் சின்த்சோவ்.

அவனுக்கு முன்பு சின்த்சோவ் செய்தது போல, பயுகோவுடைய அங்கி, ஜாக்கெட் இவற்றைத் திருப்பி அவனது உள்சட்டையை மேலே இழுத்தான். கட்டுகளைச் சிறிது நேரம் பார்த்தான். இடுப்பு மூட்டுக்கு மேலாகப் பெரிய கருப்புத் திட்டுத் தெரிந்தது...

''அவன் மோசமாக இருக்கிறான்,'' என்றான். ''உன்னிடம் காயங்கட்டும் பாக்கெட் உபரியாக இருக்கிறதா?''

எந்திரத் துப்பாக்கியை விட்டு நீங்காதபடி, தனது அங்கிப் பையினின்றும் காயங்கட்டும் துணியை எடுத்து மலீனிடம் எறிந்தான். மலீனினோ நூலை இழுத்துத் தனது பற்களால் பாக்கெட்டைத் திறந்தான். பயுகோவினுடைய உணர்ச்சியற்ற உடம்பைக் கவனமாக உயர்த்தி பழைய கட்டுக்கு மேலாகக் கட்டுப் போடத் தொடங்கினான்.

அவனுக்கு மலீனின் கட்டுப் போட்ட போது, இன்னமும் தான் சுயநினைவற்று இருந்தாலும் பயுகோவ் முனகத் தொடங்கினான்.

''அவன் புலம்புகிறான்,'' என்றான் மலீனின். ''ஒரு வேளை அவன் தேறி உயிர்வாழலாம்... அங்கே ஜெர்மானியர்கள் என்னவானார்கள்?''

''எந்த அடையாளமும் இல்லை,'' என்றான் சின்த்சோவ்.

''அவர்களை நாம் ஓட வைத்துவிட்டோம் என்று நினைக்கிறேன்.''

''வேறொரு துவாரத்தில் பாருங்க.''

மலீனின் அவ்வாறே செய்தான்; எந்திரத் துப்பாக்கிக்கு விரைந்தான்.

''வா, வா!'' என்று கரகரத்த குரலில் கத்தினான்.

பெரிய துவாரத்தை நோக்கி எந்திரத் துப்பாக்கியை இழுத்தார்கள்; ஆனால் அவர்கள் குறிகாட்டியைச் சரிபார்த்துக் கொண்டிருந்த போது, கணவாயின் வழியாகப் பின்வாங்கிக் கொண்டிருந்த ஜெர்மானியர்கள் ஏற்கெனவே குண்டு தாக்கும் பிராந்தியத்தைத் தாண்டிப் போய்விட்டார்கள். சண்டை ஓய்ந்து, மூன்று குடிசைகளுடன் இருந்த குன்றைத் தவிர எல்லா இடங்களினின்றும் ஜெர்மானியர்கள் விரட்டப்பட்டு விட்டார்கள். இப்போது எங்களது பீரங்கிப்படை இந்தக் குன்றைத் தாக்கிக் கொண்டிருந்தது. ஆனால் சில மார்டர் பீரங்கிகளை மேலே இழுத்துச்செல்ல முடிந்திருந்த ஜெர்மானியர்கள் திருப்பிப் பலமாகத் தாக்கினார்கள்.

கடைசி இரண்டு மணியில், அங்கே நிலைகொண்டிருந்த எங்கள் ஆட்கள் எல்லாருமே அழிக்கப்பட்டு இப்போது குன்று ஜெர்மானியர்களின் பிடியில் இருந்தது என்ற எண்ணம் சின்த்சோவுக்கு ஏற்படலாயிற்று. ஆனால் இதை முதல்

முறையாக மலீனின் உணர்ந்து வெறுப்பினால் தனது பற்களை நெறித்தான். அங்கே, ஜெர்மானியர்கள் நிலை கொண்ட குன்றிலோ, இங்கே, செங்கற் காளவாசலின் இடிபாடுகளிலோ இருந்த, இன்றைக்கு காலையில் இவனது கம்பெனியைச் சேர்ந்த நாற்பத்து இரண்டு போர்வீரர்களில் பலர் இப்போது இறந்துவிட்டார்கள்.

''கம்பெனி அழிக்கப்பட்டு விட்டது,'' என்ற அவன் தனது தலையை அசைத்து, தன்னைப் பற்றி நியாயமற்ற தன்னிகழ்ச்சியுடன் மேலும் தொடர்ந்தான்: ''நான் கம்பெனியை இழந்துவிட்டேன், ஆனால் இன்னமும் உயிர் வாழ்கிறேன்!..''

''எதைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்!'' என்றான் சின்த்சோவ்.

''பேசாமல் இரு! எல்லாமே எனக்குத் தெரியும்...'' பெரிதும் நிலைகுலைந்து மலீனின் மூர்க்கத்தனமாகத் தனது தலையை ஆட்டினான். ''அந்தத் துவாரத்தில் பார்,'' என்று சின்த்சோவிடம் கூறினான். ''ஜெர்மானியர் அங்கு இல்லையா?''

சோர்வுடன் தனது கால்கள் நடுங்கியதை சின்த்சோவ் திடீரென்று உணர்ந்தான்.

''அங்கு இல்லை,'' என்ற அவன் சுவரின் அருகில் அமர்ந்தான்.

அந்தக் கணத்தில் இருவருமே ஏதோ ஒரு சரசரப்பைக் கேட்டார்கள். எறிகுண்டுக்காகத் தனது இடைவாரில் கை வைத்தான் மலீனின், ஆனால் உடனேயே அவனது கை பக்கவாட்டில் விழுந்தது.

சார்ஜெண்ட் சிரத்தாவின் தலையும் தோள்களும் கீழே பள்ளத்தில் தோன்றின. பிளாட்டூன் கமாண்டர் சுய உணர்வு பெற்று குண்டு வெடித்த திசையை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தான்; தனது கைகளாலும் முழங்கால்களாலும் தவழ்ந்த அவன் தனது துப்பாக்கியையும் இழுத்துக்கொண்டுவந்தான். எங்கிருந்துதான் அத்தனை வலிமையை ஒன்று திரட்டினான் என்பது அதிசயந்தான், ஏனெனில் மலீனினுடைய உதவியுடன் பள்ளத்தை விட்டு மேலே ஏறிய உடனேயே, அவனால் நிற்க முடியாது மட்டுமன்றி உட்காரவும் இயலவில்லை. ஒரு கோணிப் பையைப் போல சுவரோடு ஒட்டிக் கிடக்க வேண்டியிருந்தது. கட்டுப் போடப்பட்ட கீழ்ப்பாதி முகம்

கருப்பாகவும் சிவப்பாகவும் காணப்பட்டது. நெற்றியும் கண்களுக்குக் கீழேயுள்ள தோலும் முற்றிலும் குருதியற்று வெள்ளைத் தாளைப் போல இருந்தன. தலையைத் திருப் பாமல் உட்கார்ந்திருந்தான். ஒருநேரம் மலீனினையும் மறு நேரம் சின்த்சோவையும் பார்க்கக் கண்களை மட்டும் உருட்டி ஏதோ சொல்லப் போராடினான். தான் பேசிக் கொண் டிருந்ததாக அவன் நம்பக்கூடச் செய்தான், ஆனால் தொடர் பற்ற குரைப்பு ஓசை மட்டுமே அவனது கட்டுகளுக்குக் கீழி ருந்து வந்தது.

''எனக்குப் புரிகிறது, பிளாட்டூன் கமாண்டர், எனக்குப் புரிகிறது,'' என்று கூறிய மலீனின் அவன் பக்கமாகச் சாய்ந்து சாந்தப்படுத்துவது போலக் கூறினான். ''உனது யோசனை தெளிவானது. எல்லாமே சரி இருக்கிறது. ஜெர்மானியர் களை அடித்துத் துரத்திவிட்டோம். நமது ஆட்கள் சீக்கிரம் இங்கே வருவார்கள், ரிசர்வ் படையை நமக்கு அனுப்பி வைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்...''

ஆனால் சிரத்தாவோ ஏதோ சொல்ல இன்னமும் முயற்சி செய்துக் கொண்டிருந்தான். ஒரு வார்த்தையைப் புரிந்து கொள்வதுகூட கஷ்டமாக இருந்தது. முடிவில் மலீனினால் இதற்கு மேல் பொறுக்க முடியாமல், இந்தப் பரஸ்பர சித் திரவதைக்கு முடிவுகட்டினான்:

''முயல வேண்டாம், சிரத்தா, நீ சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை: உன் வாய் சேதப்பட்டு விட் டது... வெறும் இரைச்சல்தான் வருகிறது, வார்த்தைகள் அல்ல. மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுவாய், உனது குரலை திரும்பவும் பெறுவாய்; ஆனால் இப்போது எதுவும் முயல வேண்டாம். உன்னையே சித்திரவதைப்படுத் திக் கொள்ளாதே...''

அதை நம்பாதது போல விழிகளை விரித்து சிரத்தா அவனையே நோக்கினான், ஆனால் மலீனின் திரும்பவும் தனது தலையை ஆட்டினான். சிரத்தா தனது துப்பாக்கியை எடுத்து பெரும் முயற்சியுடன் முழங்கால்களின் மீது வைத்து விட்டு, சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

''உன் பக்கத்தில் ஏதாவது தெரிகிறதா?'' சற்று நேர மௌனத்திற்குப் பிறகு துவாரத்தில் பார்த்துக் கொண்டி ருந்த சின்த்சோவிடம் மலீனின் கேட்டான்.

''எதுவுமே தெரியவில்லை,'' என்றான் சின்த்சோவ்.

''இருட்டும் முன்பு நமது துருப்பு வரவில்லை என்றால், அவர்களோடு நான் தங்கிக்கொள்வேன்,'' காயமுற்ற இரு ஆட்கள் பக்கம் தலையை ஆட்டியவாறு மலீனின் சொன்னான். ''நீ போய் அறிக்கை கொடுக்கிறாய். இது போன்ற நிலையை நாம் கட்டாயம் விட்டுவிடக் கூடாது. நாம் முட்டாள்களாக இல்லை என்றால் அந்தக் குன்றை எப்படியும் திரும்ப அடைய முடியும்,'' என்று துவாரத்தின் ஊடாக பக்கத்துக் குன்றைப் பார்த்தவாறு சொன்னான். ''இயோனவுக்கு என்ன நேர்ந்தது என்று வியப்படைகிறேன்,'' தனது கம்பெனி கமாண்டரை நினைவுகூர்ந்தவனாய் சற்று இடைவேளைக்குப் பிறகு சொன்னான். ''தனது கம்பெனியை விட்டுவிட்டுப் போகும் ஆள் .அல்ல அவன்... சின்த்சோவ், நீ ஏன் எதுவும் சொல்லாமல் இருக்கிறாய்?'' சில கணங்கள் மௌனமாக இருந்த பிறகு கேட்டான்.

''நானும் யோசிக்கிறேன்,'' என்றான் சின்த்சோவ்.

''எதைப் பற்றி? அது ரகசியம் இல்லை என்றால்...''

''இங்கு இல்லாததைப் பற்றி...''

''சற்று தெளிவாகச் சொல்.''

''என் மனைவியைப் பற்றி,'' என்றான் சின்த்சோவ்.

''நம்மில் யாரும் இங்கே மனைவியை அழைத்துவர முடியாது,'' கிண்டல் செய்யும் முயற்சியில் மலீனின் கூறினான். ''ஆகவே அவளைப் பற்றிச் சிந்திப்பதில் பயன் இல்லை. ஆனால் இது போன்ற ஒரு நாளுக்குப் பிறகு அவளுக்கு எழுத வேண்டும்! அவளது கம்சமோல் பிரார்த்தனைகள் காரணமாக நீ உயிருடன் இருப்பதாக அவளிடம் சொல்லு. அவள் ஒரு கம்சமோல், இல்லையா?''

கின்த்சோவ் பதிலளிக்கவில்லை.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, இருட்டுவதற்குச் சற்று முன்னால் உதவி வந்து சேர்ந்தது. முதலில் வந்தவர்கள் மூன்று சாரணர்கள்; சண்டையின் போக்கைத் தீர்மானித்து எங்களது ஆட்கள் குன்றில் தொடர்ந்து இருப்பதாக அவர்களுக்குக் கூறப்பட்டது, ஆனால் நிலவரம் தெளிவற்று இருந்தது, அவர்கள் என்ன கண்டுபிடிக்கக் கூடும் என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. பல்வேறு திசைகளினின்றும் புகைபோக்கியை நோக்கி அவர்கள் ஊர்ந்து சென்றார்கள், மிகவும் கவனமாக, அவர்களில் ஒரே ஒருவன் மட்டுமே மிகவும்

கடைசி நொடியில் வந்ததை சின்த்சோவ் கவனித்தான்.

''நாமெல்லாம் ஒன்றுதான்! மறைக்க அவசியம் இல்லை!'' என்று ஆறுதலுடன் கத்தினான்; அவனது குரலில் மகிழ்ச்சி அந்தளவு இருந்தது, சாரணனும் இந்தக் குரலில் நம்பிக்கை வைத்து நிமிர்ந்து நின்றான்.

சாரணர்களுக்குப் பின், செங்கற் காளவாசலுக்கு பிளாட்டூன் வந்து சேர்ந்தது, பிறகு இருட்டிவிட்ட போது பட்டாளியன் கமாண்டர் சீனியர் லெப்டினெண்ட் ரியாப்சென்கோ, தொலைபேசி கேபிள் ஒன்றைப் போட்டுக் கொண்டிருந்த சில சிக்னல் ஆட்களுடன் வந்து சேர்ந்தான். இருட்டு நேரத்தின் போது அடுத்த குன்றிலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்தியடிக்கும் கடமை அவனிடம் விடப்பட்டிருந்தது. இப்போது அது பில்லியார்டு பந்து போல அவ்வளவு வழவழப்பாக இருந்தது, ஆனால் இன்னமும் மூன்று குடிசைகள் கொண்ட குன்று எனக் குறிப்பிடப்பட்டு வந்தது. இரவுச் சண்டைக்கு முன்பாக ரியாப்சென்கோ தனது தலைமை இடத்தைச் செங்கற் காளவாசலுக்குக் கொண்டுவந்தான், ஏனெனில் இரவுத் தாக்குதலுக்காக இது மிகவும் பொருத்தமான ஆரம்ப நிலையாகும்.

செங்கற் காளவாசல் அருகில் சண்டை எப்படி நடந்தது என்பதை மலீனின் அறிவித்தான், எந்திரத் துப்பாக்கியாளர்களான சின்த்சோவும் பயுகோவும், சமமற்ற நிலையில் சண்டையிட்டாலும் மிக நன்றாகச் செய்தார்கள் என்று கூறினான். அதைக் காட்டிலும் கூடுதலாகச் சொல்ல மலீனினால் முடியவில்லை, ஆனால் பட்டாளியன் கமாண்டருக்கு எந்திரத் துப்பாக்கியாளர்கள் உண்மையில் முறையாகச் சண்டை போட்டார்கள் என்பது தெரிந்திருந்தது.

தனது தலைமை இடத்திலிருந்து கவனிக்கையில், கணவாய் வழியாக நகர்ந்து சென்ற ஜெர்மானியர்கள் விழுந்ததையும், சரிவின் மீது ஏற டாங்கி முயன்றதையும், பிறகு உச்சியை அடையப் பின்வாங்கிய ஜெர்மானியக் காலாட்படையாளர்கள் முயன்று தோல்வி கண்டதையும் அவன் பார்த்திருக்கிறான். எப்படிப் பார்த்தாலும், ஜெர்மானியர்களின் இழப்புகளே இதைச் சொல்லும். ரெஜிமெண்டிலும் டிவிஷனிலும் இன்றைய தாக்குதலானது பலவீனமான இடத்தைக் கண்டுபிடிக்க ஜெர்மானியர்கள் முயன்றதாக எடுத்துக் கொண்டார்கள். வெற்றியடைந்தால், ஊடுருவலை நடத்து

வது; ஆனால் அவர்கள் வெற்றியடையவும் இல்லை, ஊடு ருவவும் இல்லை.

மலீனின் கம்பெனி கமாண்டர் இயோனவைப் பற்றி விசாரணை செய்தான். தீவிர பீரங்கித் தாக்குதலின் முதல் ஓரிரு விநாடிகளின் போது அவன் காயமுற்று, தாங்கிச் செல் லப்பட்டு, போர்க்கள மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது தெரியவந்தது. ரியாப்சென்கோ மூன்று குடிசைகள் கொண்ட குன்றின் மீது ஜெர்மானியத் தாக்குதலின் விரைவான வெற் றிக்கான காரணங்களை விளக்கினான்: அவர்களது சுடும் சக்தி ஓரளவு காரணம், ஏனெனில், அது எல்லாவற்றையும் துணுக்குகளாக வெடித்துத் தகர்த்து விட்டது, மேலும் ஒரு காரணம் தாக்குதலின் தொடக்கத்தின் போது கம்பெனி கமாண்டரோ அரசியல் அறிவுரையாளரோ அங்கு இல்லை. தாக்குதலின் போது அவன் செங்கற் காளவாசலின் இடுபாடு களில் இருந்தான், ஆகவே இதற்காக மலீனினைக் கண்ட னம் செய்வது விநோதமானதாக இருந்தாலும் இவ்வாறு செய்வதற்கு பட்டாளியன் கமாண்டருக்கு எந்த நோக்கமும் இல்லாதிருந்தாலும், மலீனின் தனிப்பட்ட முறையில் தனக்கு எதிரான நிந்தனையாக எடுத்துக்கொண்டு, ''எங்களது முன் னாளைய குன்றின் மீது'' எதிர்த்தாக்குதலில் பங்கு கொள்ள ரியாப்சென்கோவினுடைய அநுமதியைக் கேட்டான். அதைப் பற்றி அவன் பேசிய அதே வார்த்தைகள், அதனது இழப்புக் கான அவனது தனிப்பட்ட பொறுப்பை வலியுறுத்திக் காட் டின.

மலீனினுடைய குருதி படிந்த முகத்தை பட்டாளியன் கமாண்டர் உற்றுநோக்கி, இவனது தந்தையாக இருக்கக் கூடிய அளவுக்கு வயதான இந்த அதிகாரி எங்கிருந்து அத்தனை வலிமையை ஒன்று திரட்டினான் என்பது இளை ஞனுக்குரிய வியப்புடன் அதிசயித்தான்.

''குறைந்தது உங்களது காயங்களுக்காவது முதலில் கட்டுப் போட்டிருக்க வேண்டும், தோழர் மலீனின்,'' என்று குறிப்பிட்டான்; ஆனால் அவனது வேண்டுகோளை மறுக்க வில்லை.

மலீனினுக்குக் காயம் கட்டப்பட்டது. பட்டாளியன் கமாண்டர் சின்த்சோவை வரச்சொல்லி அவனிடம் சில கேள் விகள் கேட்டான். ஆரம்பத்திலிருந்தே குன்றின் மீது செல்ல ஜெர்மானியர்கள் முயற்சிக்கவில்லையா என்று அவன் கேட்

டான். அவர்கள் முயற்சிக்கவில்லை என்று சின்த்சோவ் சொன்னான், அவனும் பயுகோவும் கணவாயில் வெறுமனே தொடர்ந்து வரிசை வேட்டாகச் சுட்டுக் கொண்டிருந்தார் கள். பிறகு பட்டாளியன் கமாண்டர், புகைபோக்கியை அடைவதற்கு முன்னால் டாங்கி எதற்காகப் பின்னுக்குத் திரும்பியது என்று கேட்டான். அது தொடர்ந்து வழுக்கிக் கொண்டே சென்றதை, டாங்கியின் மூடியில் எழுந்து நின்ற டாங்கியாளைத் தான் சுட்டுக் கொன்றதை சின்த்சோவ் குறிப்பிட்டான்.

''வெளிப்படையாகவே ஓர் அதிகாரி,'' என்றான் பட்டாளியன் கமாண்டர், தலையாட்டியவாறு. ''நீ அவனைக் காலிசெய்த பின்பும் அவர்கள் தங்களது மூக்குகளைத் திரும்பவும் நுழைக்கப் பயப்பட்டார்கள்!''

பிறகு ரெஜிமெண்டல் மற்றும் டிவிஷனல் கமாண்டர்களால் பட்டாளியன் கமாண்டர் தொலைபேசிக்கு அழைக்கப்பட்டான். அவனோ செறிவுடனும் மென்மையுடனும்—மலீனினையும் சின்த்சோவையும் விட மிகவும் செறிவுடன்—செங்கற் காளவாசலுடன் குன்றுக்காக நடந்த சண்டையைப் பற்றி முதலில் ரெஜிமெண்டல் கமாண்டரிடமும் பின்னர் டிவிஷனல் கமாண்டரிடமும் அறிக்கை கொடுக்கத் தொடங்கினான். இந்தச் சண்டையானது அரசியல் அறிவுரையாளர் மலீனினாலும் எந்திரத் துப்பாக்கியாளர்கள் சின்த்சோவாலும் பயுகோவாலும் நடத்தப்பட்டிருந்தது. எங்களுடைய ரிசர்வ் துருப்புகள் வந்து சேரும் வரை ஜெர்மானியக் காலாட்படை மற்றும் டாங்கிகளின் தாக்குதலை முறியடித்து குன்றைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவனது அறிவிப்பில், சின்த்சோவும் பயுகோவும் ஜெர்மானியர் மீது வெறுமனே சுடவில்லை, ஆனால் ஒரு சண்டையே நடத்தியிருந்தார்கள்; வெறுமனே சண்டையிடவில்லை, குன்றைப் பிடித்து வைத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தான்.

சிறிய பனித்திவலைகள் விழுந்து தனது முகத்தின் மீது உருகிக் கொண்டிருக்க, செங்கற்களில் களைப்புடன் அமர்ந்திருக்கையில், தான் எப்படிச் சண்டையை நடத்தினோம் என்பதையும் குன்றைப் பிடித்தோம் என்பதையும் கேட்க சின்த்சோவுக்கு வியப்பாக இருந்தது, தான் இல்லாது வேறு யாரோ என்பது போல அங்கே இருந்தான்.

காயம்பட்ட இருவரும், பயுகோவும் சிரத்தாவும், எப்

போதோ படையின் பின்னணிக்குத் தூக்கிச் செல்லப்பட்டு விட்டார்கள். இறந்தவர்கள் மட்டுமே விடப்பட்டிருந்தார்கள். அவர்களுக்காக இன்னமும் கெட்டியாக உறைந்து போகாத நிலத்தில் ஒரு கல்லறை தோண்டினார்கள், செங்கற் காளவாசலின் சுவருக்கு வெளியே; ஆனால் அவர்களைப் புலர்காலையில் புதைப்பதென்று முடிவு செய்தார்கள், ஏனெனில் இருளில் நேரடியான தாக்குதலுக்குப் பலியானவர்களின் எஞ்சியவற்றை ஒன்று சேர்க்க முடியாது.

இப்போது எந்திரத் துப்பாக்கிக்கு யார் தனது 'நம்பர், டூ'வாக இருக்கக்கூடும், தனது காயத்தினின்றும் குணமடைந்து தனது பிரிவுக்கு பயுகோவ் திரும்பி வருவானா மாட்டானா என்று வியந்தபடி சின்த்சோவ் உட்கார்ந்திருந்தான்.



'போர்' என்ற சொல் சோவியத் மக்களது வாழ்க்கையில் ...ன் 22, 1941ஆம் ஆண்டு பிரவேசித்தது. ஹிட்லர் ஜெர் ...மியின் தாக்குதல் பற்றி சோவியத் அரசின் அறிக்கையை ...னொலி வாயிலாக மாஸ்கோ வாசிகள் கேட்கிறார்கள்

நாஜிகளின்
விமானங்கள் பறத்தல்






ஆக்கிரமிக்கப்பட்ட வட்டா ரங்களில் நாஜிகளின் நட வடிக்கைகள்


OST
16





ஆக்கிரமிக்கப்பட்ட
வட்டாரங்களில் நாஜி
களின் நடவடிக்கைகள்




ஸோயா கஸ்மதெம்யான்ஸ்கயா


ஸோயாவைத் தூக்கிலிடுவதற்காக நாஜிகள் கூட்டிச் செல்கிறார்கள். பெத்ரீஷெவோ கிராமம், நவம்பர், 1941







மேற்குப் ஃபிரன்டின்
தலைவரான ஜெனரல்
கி. ஷூக்கவ்





மாஸ்கோ
பாதுகாக்கப்படுகிறது






ЗАЩИТНИКИ МОСКВЫ!
С ВАМИ – ВЕС
СОВЕТСКИЙ НАР





நூறு ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் ஆயுதங்களும் போர்த் தளவாடங்களும் தயாரிக்கத் தொடங்கின







தொழிலாளர் பட்டாளியன் ஆயுதங்
களைக் கையாள்கிறது

மாஸ்கோ வீதிகளில்
தடையரண்கள்



அரசு பாதுகாப்புக் குழுவின் சேர்மன் ஜோசப் ஸ்டாலின் 1941 நவம்பர் 7 தேதிய அணிவகுப்பில்



மாஸ்கோ, நவம்பர் 7, 1941. புரட்சிநாளன்று செஞ்சதுக்கத்தில் அணிவகுப்பு. அணிவகுப்பிலிருந்து துருப்புகள் நேரடியாகப் போர் முனைக்குச் சென்றன







ஜெனரல் மேஜர் இ.பன் ஃபீலவ் (இடமிருந்து முதலாவது), 8ஆம் கார்டு துப்பாக்கி டிவிஷனின் கமாண்டர், வோலகலாம்ஸ்க் நெடுஞ்சாலையில் தடை ஏற்படுத்தி ஜெர்மானியர்களைமாஸ்கோவுக்கு வரவிடாது தடுத்தது இந்த டிவிஷன் தான்

போர்முனைக்குப் புறப்படும் முன்னர் தனது மகளுடன் காணப்படும் அரசியல் அறிவுரையாளர் கிலச்கோவ்

பியோத்தர் லீதவ்

(1906—1944)

நாஜிகளால் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட மாஸ்கோவாசியும் இளம் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினளுமாகிய ஸோயா கஸ்மதெம்யான்ஸ்கயாவின் வீரச்செயல் பற்றிய தான்யா என்ற லீதவினுடைய கதை ஜனவரி இருபத்தேழு, 1942ஆம் தேதி பிராவ்தா என்ற பத்திரிகையில் வெளிவந்தது.

அக்கதை வாசகரிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு மிகவும் பிரபலமடைந்தது.

பிராவ்தாவின் போர்க்கள நிருபராக இந்தக் கட்டுரையின் ஆசிரியர் பணியாற்றி வந்தார். பைலோருஷ்ய கொரில்லாக்களிடம் பலமுறை விமானத்தில் போய்வரவும் போர்முனை வரிசையின் ஊடாக ஆக்கிரமிக்கப்பட்ட மின்ஸ்க் நகருக்குச் சாகசமான பயணம் மேற்கொள்ளவும் சண்டை நடந்த பிற இடங்களையும் பார்வையிடவும் செய்தார். மையத்திலிருந்து வந்த பத்திரிகைகள் லீதவுடைய கதைகளை, அறிக்கைகளை, கட்டுரைகளை வெளியிட்டன.

1944இல், அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானம் நிலைகொண்டிருந்த உக்ரைனில் இருந்த பொல்தாவா விமானதளத்தை நாஜிகளின் குண்டு வீச்சு விமானங்களை எதிர்த்து எந்திரத் துப்பாக்கியால் தாக்கிய போது லீதவ் கொல்லப்பட்டார்.

தான்யா

1941 டிசம்பரின் தொடக்கத்தில், பெத்ரீஷெவோ என்ற கிராமத்தில் தன்னை தான்யா என்று அழைத்துக்கொண்ட பதினெட்டு வயது மாஸ்கோ இளம் பெண்ணை ஜெர்மானியர்கள் தூக்கிலிட்டுக் கொன்றார்கள்.

மிகவும் மோசமான அச்சுறுத்தலைத் தலைநகரத்திற்கு ஏற்படுத்திய துயரார்ந்த நாள்கள் அவை. பல மாஸ்கோ வாசிகள் தங்களது கோடைவாழிடங்களைக் கொண்டிருந்த கலீத்ஸினோவுக்கு அருகே மாஸ்கோவினுடைய நாட்டுப் புறத்தில் சண்டை நடந்து கொண்டிருந்தது. இதற்கிடையே, மாஸ்கோவில் துணிச்சலான சாரணர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு எதிரியின் பின்னணியில் சண்டையிட்டுக் கொண்டிருந்த கொரில்லா பிரிவுகளுக்கு உதவ போர்முனை வரிசையைக் கடந்து அனுப்பப்பட்டார்கள்.

அதைத் தொடர்ந்து சீக்கிரமே யாரோ பெத்ரீஷெவோவில் ஜெர்மானியத் தொலைபேசிக் கம்பிகளைத் துண்டித்துவிட்டு, பதினேழு குதிரைகளுடன் இருந்த ஜெர்மானிய லாயத்திற்குத் தீவைத்து விட்டார்கள். மறுநாள் கொரில்லா பிடிபட்டான்.

உள்ளூர் கூட்டுப்பண்ணைத் தொழிலாளர்களிடமிருந்து ஒன்றுசேர்க்கப்பட்ட தகவல்களினின்றும் கைது பற்றிய விவரங்கள் தெரியவந்தன: மென்மயிர்த்தொப்பி, மென்மயிர் ஜாக்கெட், கனமான காற்சட்டை, கம்பளிக் காலணிகள் அணிந்து, தோள் பையைச் சுமந்தவாறு, மிக முக்கியமான இராணுவ நோக்கில் புறப்பட்டுச் சென்ற அவன், தனது கைத்துப்பாக்கியை மேலங்கிக்குள்ளாகத் திணிந்துகொண்டு, தனது பையிலிருந்து பெட்ரோல் போத்தலை வெளியே எடுத்து, சுவரின் மீது அதை ஊற்றிவிட்டு, நெருப்பைப் பற்ற வைப்பதற்காகக் குனிந்த சமயம், ஜெர்மானியக் காவலாள் பின்னே ஊர்ந்து வந்து அவனைப் பற்றிப் பிடித்துக்கொண்டான்.

ஜெர்மானியனை அப்பால் தள்ளிவிடுவதில் வெற்றிகண்ட கொரில்லா தனது கைத்துப்பாக்கியை எடுத்தான், ஆனால்

சுட நேரமில்லை. காவலாள் அவனது கையிலிருந்து ஆயுதத்தைத் தள்ளிவிட்டு அபாயக்குரல் எழுப்பினான்.

அதிகாரிகள் தங்கியிருந்த குடிசைக்கு கொரில்லா கொண்டு செல்லப்பட்டான். பிறகுதான் அந்தக் கொரில்லா பெரிய கருத்த கண்களும் குட்டையாக [illegible]ப்பட்ட கருத்த முடியும் கொண்ட உயரமான மெலிந்த ஓர் இளம் பெண் என்பதை ஜெர்மானியர்கள் கண்டார்கள்.

குடிசையின் சொந்தக்காரர்கள் சமையலறைக்குள்ளாகச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டார்கள், ஆனால் அங்கிருந்து அவர்களால் அதிகாரியினுடைய கேள்விகளையும் அந்த மங்கையினுடைய விரைவான, தயக்கமற்ற பதில்களையும் கேட்க முடிந்தது: ''இல்லை'', ''எனக்குத் தெரியாது'', ''நான் அதைச் சொல்ல மாட்டேன்'', ''முடியாது''. பிறகு அம்மங்கையினுடைய உடம்பை தோல்வார்கள் அடித்து நொறுக்கியதை அவர்களால் கேட்க முடிந்தது. சில நொடிகளுக்குப் பிறகு, அதிகாரிகளில் ஒருவன், மிகவும் இளைஞன், அறையை விட்டு விரைந்து சமையலறைக்கு வந்து அவனது கண்களை மூடிக் கொண்டு, கைகளைக் காதுகளின் மீது வைத்துக் கொண்டு விசாரணை முடியும் வரை இப்படியே உட்கார்ந்திருந்தான்.

குடிசையின் உரிமையாளர்கள் இருநூறு கசையடிகளை எண்ணினார்கள், ஆனால் அவளிடமிருந்து ஓர் ஒலியைக் கூடக் கேட்கவில்லை. அதன் பிறகு அவள் மீண்டும் பதிலளித்தாள்: ''இல்லை'', ''நான் பேச மாட்டேன்'', அதே உறுதியான தொனியில், ஆனால் அவளது குரல் மட்டும் இப்போது மந்தமாக ஒலித்தது.

விசாரணைக்குப் பிறகு வசீலி குலீக்கின் குடிசைக்கு அவள் அழைத்துச் செல்லப்பட்டாள். அவளிடம் கம்பளிக் காலணிகளோ தொப்பியோ வெதுவெதுப்பூட்டும் துணிகளோ ஏற்கெனவே இல்லை. உள்சட்டையும் அரைக் காற்சட்டையும் மட்டுமே அணிந்திருந்தாள். பனியில் வெறுங்காலில் நடந்து சென்றாள்.

அவள் குடிசைக்குள்ளாக நுழைந்த போது, அவளது நெற்றியில் மிகப்பெரிய ஊமைக் காயமும் கால்களிலும் கைகளிலும் தழும்புகளும் ஏற்பட்டிருந்ததை குலீக்கும் அவனது மனைவியும் கண்டார்கள். அவளது கைகள் முதுகுப்புறமாகக் கட்டப்பட்டிருந்தன. அவளது உதடுகள் வீங்கி

ரத்தம் கசிந்து கொண்டிருந்தது—அவளை அவர்கள் அடித்த போது அவள் கட்டாயம் உதடுகளைக் கடித்துக் கொண் டிருக்க வேண்டும்.

ஒரு பெஞ்சின் மீது அமர்ந்தாள். கதவருகே காவலாள் ஒருவன் நின்றான். கணப்படுப்புப் பரணில் படுத்தவாறு வசீலி குலீக்கும் அவனது மனைவி பிராஸ்கோவ்யாவும் கைதி யைக் கவனித்தனர். அவள் முற்றிலும் அசையாது அமர்ந் திருந்தாள், பிறகு குடிக்க நீர் கேட்டாள். வசீலி பரணி லிருந்து கீழே இறங்கி நீர்த் தொட்டிக்குச் சென்றான், ஆனால் காவலாள் அவனை அப்பால் தள்ளிவிட்டான்.

''அடி வேணுமா?'' என்று சீறினான்.

அந்தக் குடிசையில் தங்கியிருந்த போர்வீரர்கள் அம்மங் கையைச் சுற்றி நின்று கேலி செய்தார்கள். சிலர் தங்களது முட்டிகளால் அவளைக் குத்தினார்கள், மற்றவர்கள் கொளுத் திய தீக்குச்சிகளை அவளது தாடைக்கு நேராகப் பிடித்தார் கள். ஒருவன் கைரம்பத்தை அவளது முதுகின் மீது வைத்து இழுத்தான்.

அவர்கள் இதில் சோர்வுற்றதனால் தூங்கச் சென்றார் கள். காவலாள் தனது துப்பாக்கியை அலைத்து அவளை வெளியேறுமாறு கட்டளையிட்டான். தெருவில் அவளுக்குப் பின்னே நடந்தான். அவனது துப்பாக்கி ஈட்டி அநேகமாக அவளது முதுகைத் தொட்டுக் கொண்டிருந்தது. தெரு முனையில் அவளைத் திரும்பிப் போகுமாறு உத்தரவிட் டான். அவளைச் சித்திரவதை செய்த அவன் உறைந்து போய் குடிசைக்குள்ளாகச் செல்லத் தீர்மானிக்கும் வரை அவள் வெறுங்காலுடனும் உள்ளாடையுடனும் பனியில் நடந்து கொண்டே இருந்தாள்.

இரவு பத்திலிருந்து அதிகாலை இரண்டு மணி வரை அந்தக் காவலாள் அம்மங்கையைப் பார்த்துக் கொண் டான், அதற்குள் மணிக்கொருதரம் பதினைந்து அல்லது இருபது நிமிடங்களுக்கு அவளை வெளியே பனியில் கூட்டிச் சென்றான். கடைசியில் வேறொரு காவலாள் பணிக்கு வந்த போது, பெஞ்சின் மீது படுத்துக்கொள்ள அவளுக்கு அநுமதித்தான்.

பிராஸ்கோவ்யா குலீக் ரகசியமாக அவளிடம் சென்று பேசினாள்.

''உன் பெயரென்ன?'' எனக் கேட்டாள்.

''அதனால் உங்களுக்கென்ன?'' என்று மங்கை பதிலளித்தாள்.

''எங்கிருந்து வருகிறாய்?''

''மாஸ்கோவிலிருந்து.''

''உனக்கு அப்பா அம்மா இருக்கிறார்களா?''

அவள் பதில் பேசவில்லை. அசையவோ பேசவோ செய்யாது காலை வரை பெஞ்சின் மீது படுத்திருந்தாள்; பனியால் அவளது பாதங்கள் பிளவுபட்டு பயங்கரமாக வலித்த போதிலுங்கூட ஒரு முனகல் கூட அவளிடமிருந்து வரவில்லை.

எதிரிகளால் சூழப்பட்ட அவள் அந்த இரவு தூங்கினாளா என்பதும் அவள் எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள் என்பதும் யாருக்கும் தெரியாது.

காலையில், கிராமத்தின் மத்தியில் போர்வீரர்கள் தூக்கு மேடையை அமைக்கத் தொடங்கினார்கள்.

பிராஸ்கோவ்யா அவளிடம் திரும்பவும் பேசினாள்:

''நேற்று முன்தினம் செய்தது நீதானா?''

''ஆமாம். ஜெர்மானியர்கள் எரிந்து போனார்களா?''

''இல்லை.''

''பரிதாபம். பிறகு என்ன எரிந்தது?''

''அவர்களோட குதிரைகள். ஆயுதங்களும் கூட, ஆட்கள் சொல்றாங்க...''

அதிகாரிகள் காலைப் பத்து மணிக்கு வந்தார்கள்.

''உன் பெயரை எங்களுக்குச் சொல்லப் போகிறாயா?'' தலைமை அதிகாரி அவளிடம் ருஷ்யனில் கேட்டான்.

அவள் பதில் பேசவில்லை...

குலீக் தம்பதி வீட்டை விட்டு வெளியே போகுமாறு உத்தரவிடப்பட்டு, விசாரணை முடிந்த பிறகே உள்ளே மீண்டும் அனுமதிக்கப்பட்டார்கள்.

கமாண்டென்ட் செயலகத்திலிருந்து அவளுடைய சில பொருட்கள் கொண்டுவரப்பட்டன: அவளது ஜாக்கெட், காற்சட்டை, காலுறைகள் மற்றும் பெட்ரோல் அடங்கிய பல போத்தல்கள், தீப்பெட்டிகள், தோட்டாக்கள், ஜீனி, உப்பு ஆகியன இருந்த அவளது பை. அவளது மென்மயிர்த் தொப்பி, அங்கி, கம்பளிக் காலணிகள் ஆகியன ஏற்கெனவே சார்ஜெண்டுகளால் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டன.

தான்யா என அழைக்கப்பட்ட அவள் காற்சட்டைக்கும்

ஜாக்கெட்டுக்கும் உள்ளாகத் திணிக்கப்பட்டாள், அவளது கன்றிப்போன உறைபனி கடித்த பாதங்களுக்கு மேலாகக் காலுறைகளை இழுத்துவிட குலீக் தம்பதி உதவினார்கள். அவளது பையில் இருந்த பெட்ரோல் போத்தல்களை 'கொரில்லா' என்ற வார்த்தையின் அடையாளத்துடன் அவளது கழுத்தில் தொங்கவிட்டு, சதுக்கத்திற்குக் கூட்டிச் சென்றார்கள்.

உருவிய வாட்களுடன் குதிரைவீரர்கள் பத்துப் பேர் தூக்குமேடையைச் சுற்றியிருந்தார்கள். அவர்களைச் சுற்றி நூற்றுக்கு மேற்பட்ட ஜெர்மானியப் போர்வீரர்களும் சில அதிகாரிகளும் இருந்தனர். தூக்கிலிடுவதைக் காணவருமாறு உள்ளூர் மக்கள் கட்டளையிடப்பட்டிருந்தார்கள், ஆனால் ஒரு சிலரே வந்திருந்தனர். அந்தப் பயங்கரமான காட்சியைக் காண வேண்டாமென சிலர் அமைதியாக நழுவிப் போய்விட்டார்கள்.

சுருக்குக்கயிற்றுக்குக் கீழாக ஒன்றின் மீது ஒன்றாக இரண்டு சரக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டன. தான்யா மேல் பெட்டிக்கு உயர்த்தப்பட்டு, அவளது கழுத்தைச் சுற்றி சுருக்குப் போடப்பட்டது. அதிகாரிகளில் ஒருவன் தூக்குமேடையைப் புகைப்படம் எடுத்தான். மரணதண்டனைகளையும் கடுந்தண்டனைகளையும் புகைப்படம் எடுப்பதில் ஜெர்மானியர்கள் கெடுதலான விருப்பம் கொண்டிருந்தார்கள். கமாண்டெண்ட் தூக்கிலிடுபவர்களுக்குச் சற்று பொறுக்குமாறு அடையாளங்காட்டினான்.

தான்யா இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உரத்த, தெளிவான குரலில் அங்கு கூடியிருந்த கூட்டுப்பண்ணை விவசாயிகளை நோக்கி உரையாற்றினாள்:

''ஏய் தோழர்களே, ஏன் இவ்வளவு சோர்வாகக் காணப்படுகிறீர்கள்? மேலும் துணிவைக் காட்டுங்கள், சண்டையிடுங்கள், ஜெர்மானியர்களைக் கொல்லுங்கள், எரியுங்கள், எலிகளைப் போல அவர்களை வேட்டையாடுங்கள்!''

அவளுக்கு அருகே நின்று கொண்டிருந்த போர்வீரன் அவளை அடிக்கவோ அவளது வாய்க்கு மேலாக வைக்கவோ தனது கையை உயர்த்தினான், ஆனால் அதை அப்பால் தள்ளிவிட்டு அவள் தொடர்ந்து கத்தினாள்:

''சாவுக்காக நான் பயப்படவில்லை, தோழர்களே. நம் மக்களுக்காகச் சாவது மகிழ்ச்சியானது...''

பொதுவான தோற்றத்தையும், தூக்குமேடையின் நெருக்கமான காட்சியையும் ஏற்கெனவே படம் எடுத்துக் கொண்டு விட்ட அதிகாரி இப்போது பக்கவாட்டில் எடுக்க முயன்று கொண்டிருந்தான். தூக்கிலிடுபவன் பதட்டமாகக் காணப்பட்டான், கமாண்டென்டினுடைய கண்ணையே நோக்கினான்.

''சீக்கிரமாக ஆகட்டும்!'' காமிராவுடன் இருந்த அதி காரியை நோக்கி கமாண்டென்ட் கத்தினான்.

இந்நிலையில், தான்யா அவனை நோக்கித் திரும்பி அவ னுக்கும் ஜெர்மானியப் போர்வீரர்களுக்குமாகக் கத்தினாள்:

''நீங்கள் என்னைத் தூக்கிலிடப் போகிறீர்கள், ஆனால் நான் தனிமையானவள் அல்லள். நாங்கள் இருநூறு மில்லி யன் பேர் இருக்கிறோம்—எல்லாரையும் உங்களால் தூக்கி லிட முடியாது. என் சாவுக்குப் பழிவாங்காமல் விடமாட்டார் கள். போர்வீரர்களே, மிகவும் தாமதமாவதற்கு முன் சரண டையுங்கள், எப்படியும் வெற்றி எங்களுடையதுதான்! என் சாவுக்குப் பழிவாங்காமல் விடமாட்டார்கள்...''

உள்ளூர் ஆண்களும் பெண்களும் அழுதார்கள். என்ன நடைபெறப் போகிறது என்பதைப் பார்க்கக் கூடாது என் பதற்குச் சிலர் மறுபுறம் திரும்பிக் கொண்டனர்.

தூக்கிலிடுபவன் கயிற்றை இழுத்து தான்யாவினுடைய தொண்டையைச் சுற்றி சுருக்கை இடுக்கினான். தனது இரு கைகளாலும் முழுபலத்தோடு இழுத்து, நுனி விரல்களில் தன்னை உயர்த்திக்கொண்டு, தனது வலிமை அனைத்தை யும் ஒன்று திரட்டிக் கத்தினாள்:

''போய்வருகிறேன், தோழர்களே! சண்டையிடுங்கள், பயப்படாதீர்கள்...''

கீழிருந்த சரக்குப் பெட்டியை தனது உருக்கு நுனி கொண்ட காலணியால் தூக்கிலிடுபவன் தள்ளிவிட, அது நழுவி பனியில் விழுந்தது. மேல் பெட்டி கவிழ்ந்து பெரும் ஓசையுடன் தரைமீது விழுந்தது. கூட்டத்தினர் அச்சத்தால் பின்வாங்கினர். யாரோ அலறினான், இந்த அலறல் காடு முழுக்க எதிரொலித்தது...

அவள் எதிரியின் பிடியில், நாஜியின் தூக்குமேடையில் மாண்டாள், தனது துயரத்தையோ தனது தோழர்களையோ அவள் காட்டிக் கொடுக்கவில்லை. கொள்கைத்தியாகியினு டைய சாவு அவளுக்கு நேர்ந்தது. ஒரு வீரனைப்போல மரண

மடைந்தாள், எந்த வெற்றியாளனுக்கும் ஒருபோதும் கீழ்ப்பணியாத நாட்டுமக்களின் உண்மை மகளைப் போல மடிந்தாள். அவளது நினைவு என்றும் நிலைக்கட்டும்!

...புத்தாண்டு நாளன்று, குடிவெறியிலிருந்த ஜெர்மானியப் போர்வீரர்களின் கும்பலால் தூக்குமேடையில் தொங்கிய இந்த மங்கையினுடைய உடம்பினின்றும் ஆடைகள் கிழிக்கப்பட்டு, அநாகரிகமாகச் சிதைத்து, கத்திகளால் குத்தப்பட்டும் கிழிக்கப்பட்டும் போன அந்த உடல் கிராமத்தின் மத்தியில் மறுநாள் முழுக்கத் தொங்கியது. தூக்குமேடையைச் சரிக்கும்படி மாலையில்தான் கமாண்டென்ட் உத்தர விட்டான். கிராமத்திற்கு அப்பால் சற்றுத் தள்ளி பனி உறைந்த தரையில் தல மக்கள் குழி தோண்டி அந்த உடலைப் புதைத்தார்கள்.

வெகு சீக்கிரமே, தாக்குதல் தொடுத்த செஞ்சேனை பெட்ரீஷெவோவை விட்டு ஜெர்மானியர்களைத் துரத்தியது.

கடந்து சென்ற வீரர்கள் அவளது கல்லறையில் தலைவணங்கிச் செல்லவும் அத்தகைய ஒரு வீரமிக்க மகளைப் பெற்றதற்காக அவளது பெற்றோர்க்கும், அவளை வழிமுறைப் படுத்தியதற்காக அவளது ஆசிரியர்களுக்கும், அவளது ஆர்வத்தை ஊக்குவித்ததற்காக அவளது தோழர்களுக்கும் நன்றி பாராட்ட நின்று விட்டு போனார்கள்.

தான்யாவினுடைய உண்மையான தனித்துவம்

சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு இளம் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினளாகிய ஸோயா கஸ்மதெம்யான்ஸ்கயா என்ற கொரில்லாவுக்கு சோவியத் யூனியனின் வீராங்கனை என்ற பட்டத்தைச் சாவிற்குப் பிறகு வழங்கியது.

அவளது வீரச்செயலை விவரித்த 'தான்யா' என்று தலைப்பிட்ட கட்டுரை ஜனவரி இருபத்தேழு, 1942ஆம் 'தேதி பிராவ்தாவில் வெளியிடப்பட்டிருந்தது. அவளது உண்மையான பெயர் அப்போது தெரியவில்லை. தன்னை விசாரணை செய்தவர்களிடமோ பிராஸ்கோவ்யா குலீக்கிடமோ அவள் அதைத் தெரிவிக்கவில்லை. பெத்ரீஷெவோவுக்குச் செல்கிற வழியில் ஒரு கொரில்லாவை அவள் சந்தித்

திருக்கிறாள். அவனிடத்தில் தனது பெயரை தான்யா என்று கூறி அவனிடமிருந்தும் தனது உண்மையான பெயர்விவரத்தை முன்னெச்சரிக்கையாக மறைத்திருக்கிறாள்.

நாஜிகளால் பெத்ரீஷெவோவில் தூக்கிலிடப்பட்ட மங்கையின் பெயர்விவரமானது இளம் கம்யூனிஸ்ட் கழக மாஸ்கோ குழுவினால் உறுதிசெய்யப்பட்டது.

அவளது பெயர் ஸோயா கஸ்மதெம்யான்ஸ்கயா, வயது பதினெட்டு, மாஸ்கோவின் அக்டோபர் மாவட்டத்தில் உள்ள ஒரு பள்ளியில் பத்தாம் வகுப்பு மாணவி. ஸோயாவும் அவளது சகோதரன் அலெக்சாந்தரும் தங்களது விதவைத் தாய் லியுபோவ் கஸ்மதெம்யான்ஸ்கயாவுடன் திமிர்யாஸெவ் வேளாண்மைப் பேரவையின் தோட்டத்திற்கு அருகே குடியிருந்தார்கள்.

ஸோயாவினுடைய தோழிகள் அவளை உயரமான, மெலிந்த, அகன்ற தோள் கொண்ட, பிரகாசமான கருத்த கண்களும் குட்டையாக வெட்டப்பட்ட கருத்த முடியும் கொண்டவள் என வருணித்தனர். ஆழ்ந்த சிந்தனைமிக்கவளாக, மனக்கோட்டை கட்டுபவளாக, சுலபத்தில் உணர்ச்சியினால் முகஞ்சிவக்கக் கூடியவளாக இருந்தாள்.

ஸோயாவின் பள்ளி நண்பர்களிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் அவளைப் பற்றிக் கேட்ட போது, அவளது நாள் குறிப்புகள், குறிப்புகள், பள்ளிக் கட்டுரைகள் இவற்றைப் படித்த போது, ஒருவரை மிகவும் கவர்ந்தது அவளது அசாதாரணமான பெருமுயற்சியும் ஊக்கமுமாகும். அவள் தனக்குத்தானே வைத்துக்கொண்ட எந்த இலக்கையும் அடைவதில் அவளது உறுதிமிக்க பிடிவாதமும் கவரத்தக்கது. அவள் நிறையப் படித்தாள், சிறப்பாகத் தான் விரும்பிய பகுதிகளைக் குறிப்பெடுத்துக் கொண்டாள். தனது இலக்கிய வகுப்புகளுக்கு எப்போதுமே நன்கு தயார் செய்து கொண்டாள். கணிதம் அவளுக்கு கஷ்டமானதாக இருந்தது, ஆனால் ஒரு சூத்திரத்தை முற்றாக அறிந்துகொள்கின்ற வரை அவள் ஒருபோதும் கைவிட்டதில்லை, அவளது பொறுமையான படிப்பு நேரங்களை அது எடுத்துக்கொண்ட போதிலும்.

தனது வகுப்பின் இளம் கம்யூனிஸ்ட் கழக அமைப்பாளராக ஸோயா தேர்ந்தெடுக்கப்பட்ட போது, தக்க கல்வியறிவு இல்லாத குடும்பப் பெண்களுக்கு இலவச வகுப்பு

களை அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என முன்மொழிந்தாள். அந்தப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டாள். பையன்களும் சிறுமிகளும் ஆரம்பத்தில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள், ஆனால் அவர்களில் பலர் வெகு சீக்கிரமே அது நிறையப் பயணத்தை மேற்கொள்ள வைத்தது என்ற காரணத்தால் ஆர்வத்தை இழந்துவிட்டார்கள். ஸோயா பெரிதும் ஏமாற்றமடைந்தாள். தடைகளால் பயமுறுத்தப்பட்ட போது எப்படி ஒருவரால் தனது வார்த்தையினின்று பின்வாங்கவும் தனது கடமையிலிருந்து தவறவும் முடிகிறது என்பதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவளுக்கு விருப்பமான பாடங்கள் ருஷ்ய இலக்கியமும் ருஷ்ய வரலாறுமாகும். அவள் சாதாரண சோவியத் பள்ளி மாணவியாகவும் நல்ல சிநேகிதியாகவும் இளம் கம்யூனிஸ்ட் கழகத்தில் தீவிர உறுப்பினளாகவும் இருந்து, பள்ளி உலகத்துக்கு அப்பால் தனக்கு விருப்பமான இலக்கிய மற்றும் வரலாற்று கதாநாயகர்களுடன் கூடிய தனது சொந்த உலகத்தையும் பெற்றிருந்தாள்.

அவளது தனிமைக்காக அவளது தோழிகள் சிலநேரங்களில் அவளைத் திட்டினார்கள், ஆனால் இது வழக்கமாக ஒரு புத்தகத்தை படித்த நிலையில் அதனோடு அவள் ஒன்றிப் போயிருந்த நேரங்களில் தான் நிகழ்ந்தது. அவள் அடிக்கடி மறக்கக் கூடியவளாகவும் எல்லாருடனும் இணைந்து போகாதவளாகவும், அவளது வீரக் கதாபாத்திரங்களின் தனிப்பட்ட உலகத்திற்குள் செல்பவளாகவும் இருந்தாள்.

பூஷ்கின், கோகல், தல்ஸ்தோய், பெலீன்ஸ்கி, துர்கேனெவ், செர்னிஷேவ்ஸ்கி, ஹெர்சன் மற்றும் நெக்ராசவ் ஆகியோரால் விவரிக்கப்பட்ட ருஷ்ய மக்களின் பெருமைமிகு வரலாறு அவளது மனத்தில் எப்போதுமே இருந்தது. அது அவளது குணாம்சத்தை வடிவமைத்தது, அவளது கனவுகளையும் நினைவுகளையும் ஊக்குவித்தது. தனது மக்களின் மகிழ்ச்சிக்காக வீரமிக்க எதையேனும் செய்ய வேண்டும் என்ற அடக்க முடியாத வேட்கையை அவளிடத்தில் நிறைத்தது.

நமக்கு முன்னே ஸோயாவினுடைய குறிப்பேடுகளில் ஒன்று இருக்கிறது, அதில் தனது சொந்த இதய நரம்பில் பட்ட கவிஞர்களது எழுத்தாளர்களது சிந்தனைகளைக்

குறித்து வைத்திருக்கிறாள். இதோ இங்கே சில குறிப்புகள்:

''மனிதனிடம் உள்ள ஒவ்வொன்றுமே அழகாகத்தான் இருக்க வேண்டும்: அவனது முகம், அவனது ஆடைகள், அவனது ஆன்மா, அவனது சிந்தனைகள்'' (செகவ்).

''கம்யூனிஸ்டாக இருப்பது என்பதன் பொருள் துணிவது, சிந்திப்பது, ஆசைப்படுவது, வீரமாகவிருப்பது என்பதாகும்'' (மயக்கோவ்ஸ்கி).

''அன்பில்லாமல் முத்தமிடுவதை விடச் சாவது நல்லது'' (செர்னிஷேவ்ஸ்கி).

மேலும் எழுதியிருந்தது: '''ஒத்தெல்லோ'வில் உண்மையினும் அறத்தின் தூய்மையினும் உயர்ந்த லட்சியங்களுக்கான ஒரு மனிதனுடைய போராட்டத்தை நாம் காண்கிறோம். 'ஒத்தெல்லோ'வின் லட்சியம் உண்மையான, பெரும் காதலின் வெற்றியாகும்!''

லெனின் மீதான அவளது சிந்தனைகள் விசேடமான தன்மையுடனும் குழந்தைத் தனமான நம்பிக்கையுடனும் எழுதப்பட்டிருந்தன.

இந்தக் குறிப்புகள் அவளது மொத்த உயிருருவையும் பிரதிபலித்தன—சிந்தனையில் தூய்மை, மிகவும் உயர்ந்த லட்சியங்களை அடைவதற்காக எப்போதுமே முன்னோக்கிச் செல்லுதல்.

பிறகு வந்தது ஜூன் 1941. ஸோயா தனது தேர்வுகளை முடித்து கடைசி வகுப்புக்கு, பத்தாம் வகுப்புக்குத் தேறினாள். சில நாள்களுக்குப் பிறகு போர் ஆரம்பமானது. வீராங்கனையாக விரும்பி, சாரணளாக அதிர்ச்சித் தாக்குதல் படையில் சேர்ந்தாள்.

பிரிகின்ற போது தன் தாயிடம் அவள் பேசிய வார்த்தைகள்: ''அழ வேண்டாம், அம்மா. ஒன்று நான் வீராங்கனையாகத் திரும்புவேன் அல்லது வீராங்கனையாக மடிவேன்''.

பாளையத்தில் ஒரு பெரிய அறையில் மிகப்பெரிய டெஸ்கின் பின்னே அமர்ந்திருந்த பிரிவு கமாண்டருக்கு முன்னே ஸோயா தோன்றினாள். நீண்ட நேரம் ஸோயாவின் முகத்தை உற்றுநோக்கி ஆராய்ந்தார்.

''நீங்கள் பயப்படவில்லையா?'' ஸோயாவினுடைய முகத்திற்குள்ளாக உற்றுத் தேடியவாறு கேட்டார்.

''இல்லை, நான் பயப்படவில்லை,'' எனப் பதிலளித்தாள்.

''காட்டில் இரவிலே தனிமையிலிருப்பது அச்சுறுத்தும், இல்லையா?''

''பரவாயில்லை.''

''ஜெர்மானியர்களுடைய கைகளில் நீங்கள் சிக்கிவிட்டால், அவர்கள் உங்களைச் சித்திரவதைச் செய்வார்களே?''

''நான் பொறுத்துக்கொள்வேன்...''

அவளது நம்பிக்கை கமாண்டரை இணங்க வைக்கவே, தனது பிரிவிற்குள்ளாக அவளை எடுத்துக்கொண்டார்.

நவம்பர் பதினேழாம் தேதியன்று தன் தாய்க்கு அனுப்பிய கடைசிக் கடிதத்தில் எழுதியிருந்தாள்:

''அன்புள்ள அம்மா, இப்போது எப்படி வாழ்கிறீர்கள்? எப்படி உணர்கிறீர்கள்? நலத்துடன் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். அம்மா, வாய்ப்பு இருக்குமானால் ஓரிரு வார்த்தைகளாவது எனக்கு எழுதுங்கள். எனது பணியிலிருந்து நான் திரும்பும் போது, தங்குவதற்காக வீட்டிற்கு வருவேன். தங்களின் ஸோயா.''

தனது குறிப்பேட்டில் 'ஹேம்லெட்'டிலிருந்து இந்த வரியைக் குறித்திருந்தாள்: ''போய்வா, போய்வா! என்னை நினைத்திரு''.

மறுநாள் இளம் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களின் குழு ஒன்றுடன் ஒபுகவோ கிராமத்தின் அருகே போர்முனை வரிசையை ஸோயா கடந்து எதிரி ஆக்கிரமித்திருந்த நிலப்பகுதிக்குள்ளாக நுழைந்தாள்.

இருவார காலம் காட்டிலே வசித்தார்கள். இரவில் தங்களது பல்வேறு பணிகளின் பொருட்டு வெளியே சென்றார்கள், பகல் நேரத்தில் நெகிடியைச் சுற்றி அமர்ந்து வெதுவெதுப்பூட்டிக் கொள்ளவோ தூங்கவோ செய்தார்கள். குழுவின் சில உறுப்பினர்களுக்கு இந்த நிலைமையின் துன்பமும் துயரங்களும் பெரும் வேதனையை ஏற்படுத்தின, ஆனால் ஸோயா ஒருபோதும் புகார் செய்தது இல்லை, எல்லாவற்றையும் திண்மையுடன் சகித்துக்கொண்டாள்.

ஐந்து நாள்களுக்கு வரக்கூடிய அளவுக்கே உணவுகளை அவர்கள் எடுத்துச் சென்றிருந்தார்கள், ஆனால் அதைப் பதினைந்து நாள்களுக்குச் சரிக்கட்ட வேண்டியிருந்தது. இப்போது துணுக்குகளைக் கூடச் சுத்தமாகத் துடைத்து எடுத்து

விட்டார்கள். அது திரும்பப் போவதற்கான நேரம், ஆனால் தான் மிகச் சிறிதாகவே நிறைவேற்றியிருந்ததாக ஸோயா கருதினாள், ஆகவே பெத்ரீஷெவோவிற்குள்ளாக நுழைய முயல்வதற்குப் பின்தங்கி விடுவதெனத் தீர்மானித்தாள்.

''நான் அங்கே செத்தால் பரவாயில்லை, என்னுடன் டஜன் ஜெர்மானியர்களையும் கூட்டிச் செல்வேன்,'' எனத் தனது தோழர்களிடம் கூறினாள்.

வேறு இரண்டு கொரில்லாக்களுடன்தான் அவள் புறப் பட்டாள், ஆனால் சீக்கிரமே தனிமையில் விடப்பட்டாள். அஞ்சாதவாறு இரு இரவுகளைக் காட்டில் தனிமையில் கழித்தாள், பிறகு கிராமத்தை நோக்கிப் புறப்பட்டாள், உண்மையில் முக்கியமான எதிரி நிலையத்தை அடைந்தாள், ஆனால் ஜெர்மானியக் காவலாளால் பிடிபட்டாள். அநாக ரிகமான கொடுமைகளுடன் தன்னைச் சித்திரவதைச் செய்த நாஜிகளின் கும்பலைத் துணிவுடன் எதிர்த்து நின்றாள். அவள் அநேகமாகத் தனது வலிமையை ருஷ்ய வரலாற்று வீரர்களிடமிருந்தும் புனிதத் தியாகிகளிடமிருந்தும் தனது கடைசி நேரங்களில் பெற்றிருக்க வேண்டும்.

ஒருமுறை, புராண ருஷ்ய பக்தியார் இலியா மூரமெத் சைப் பற்றி தனது பள்ளி ஏட்டில் ஸோயா எழுதினாள்: ''தன்னை விட எதிரி வலிமை பெறத் தொடங்கும் போது, ருஷ்ய மண்ணே அவனுக்குள்ளாகப் புத்தம் புதிய வலிமை யை ஊட்டுகிறது''. தலைவிதியை நிர்ணயிக்கும் அந்த நிமி டங்களில், அவளது சொந்த சோவியத் மண் இளம் மங் கைக்கு மிகவும் அற்புதமான அந்த வலிமையை கொடுத் திருக்க வேண்டும்.

அவளது எதிரிகள்கூட இதை ஏற்றுக்கொள்ளும் கட்டா யத்திற்கு ஆளானார்கள். 197ஆம் டிவிஷனின் 332ஆம் காலாட்படை ரெஜிமெண்டின் கமாண்டர் லெப்டினெண்ட் கர்னல் ருதெரெர், ஸோயா கஸ்மதெம்யான்ஸ்கயா சித் திரவதைகளுக்கு ஆளானபோது உடனிருந்த கமிஷன் அந் தஸ்து இல்லா அதிகாரி காரல் பையர்லைன், பின்னர் கைதி யாகப் பிடிபட்டவன், தனது அறிக்கையில் அவ்வாறு எழுதி யிருந்தான்:

''உங்கள் மக்களுடைய இளம் வீராங்கனை உறுதியாக நின்றாள். துரோகம் என்ற சொல்லின் அருத்தமே அவளுக்குத் தெரியாது... குளிரினால் நீலம் பாரித்துப் போனாள்,

அவளது காயங்களினின்றும் குருதி வந்துகொண்டிருந்தது, ஆனால் அவள் எதுவும் சொல்லவில்லை.''

தூக்குமேடையில் ஸோயாவினுடைய கடைசிச் சிந்தனைகள் அவளது நாட்டைப் பற்றியே இருந்தன. சாவு வேளையின் போதும் வரவிருக்கும் வெற்றியை வாழ்த்தினாள்.

தூக்கிலிட்ட பிறகு சதுக்கம் ஆள் அரவமற்றுப் போனது. கிராமத்தவர் யாரும் வீட்டை விட்டு வெளியேறவில்லை. ஸோயாவினுடைய உடல் ஒரு மாதக் காலத்திற்கு அங்கே காற்றில் அலைந்தபடி தொங்கியது. சாவின் போதுகூட அவளது அழகிய முகம் தனது புத்துணர்ச்சியையும் வெகுளித்தனத்தையும் காட்டி, ஆழ்ந்த அமைதியின் வெளிப்பாட்டைப் பெற்றிருந்தது. தூக்குமேடையைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்த மக்கள் தங்களது தலைகளைத் தாழ்த்தியவாறு நடையை துரிதப்படுத்தினார்கள். ஜெர்மானியப் பிரிவுகள் சென்ற போது அந்தக் கிராமத்திற்கு வந்தன. இழிந்த ஜெர்மானியர் அந்த உடலைச் சுற்றி நின்று ஈட்டிகளால் அதைக் குத்தி, உரக்கச் சிரித்தார்கள். பிறகு நகர்ந்து சென்றார்கள். சில கிலோமீட்டர்களுக்கு அப்பால் மேலும் வேடிக்கை எதிர்நோக்கி இருப்பதைக் கண்டார்கள்: மாவட்ட மருத்துவமனைக்கு முன்பாக இரு பையன்களின் உடல்கள் தூக்கில் தொங்கின.

நாஜிகளால் கைப்பற்றப்பட்ட வட்டாரம், தூக்குமேடைகளுடனும் குருதி ஆறுகளுடனும் நிறைந்து காணப்பட்டது, பழிவாங்கத் துடித்தது.

பெத்ரீஷெவோவிலிருந்து அவசரமாக ஜெர்மானியர்கள் பின்வாங்க வேண்டியிருந்தது, அதற்கு நெருப்பிட நேரம் இல்லை. அண்டையிலிருந்த எல்லாக் கிராமங்களிலும் அது ஒன்று மட்டுமே தப்பிப் பிழைத்தது. ஹிட்லர் ஆட்களுடைய குற்றங்களை நேரிடையாகக் கண்ட அங்கிருந்த மக்கள் தப்பிப் பிழைத்து விட்டார்கள். ஸோயாவினுடைய கல்லறையும் காக்கப்பட்டது.

நாஜிகளிடமிருந்து மீட்கப்பட்ட கிராமங்களில் ஸோயாவினுடைய கதையானது வாய்மொழியாகப் பரவியது. போர்முனையில் வீரர்கள் அவளுக்குக் கவிதைகளை சமர்ப்பணம் செய்யவும் அவளது பெயரில் எதிரியைச் சுடவும் செய்தார்கள். அவளைப் பற்றிய சிந்தனை மக்களுக்குப் புதிய வலிமையைத் தந்தது. அந்நேரத்தில் வரலாற்று மாணவன்

ஒருவன் பிராவ்தாவில் எழுதினான்:

''நமக்காக நிறைய சோதனைகள் இருப்பில் உள்ளன. விஷயங்கள் கடினமானதாக மாறுமானால் இந்தத் துயரக் கதையை நான் திரும்பவும் படித்து, பெண் கொரில்லாவின் அழகிய, துணிவுமிக்க முகத்திற்குள்ளாக மீண்டும் ஒருமுறை நோக்குவேன்.''

ஸோயா கஸ்மதெம்யான்ஸ்கயாவின் ஒளிசிந்தும் உருவம் ஒரு நட்சத்திரம் போல மின்னுகிறது — திண்மைக்கும் பொருமைக்கும் ஒரு குறியீடாக.

அலெக்லசாந்தர் பெக்

(1902—1972)

அலெக்சாந்தர் பெக் வோல்கா நதிக்கரை நகரமாகிய சராத்தவில் மருத்துவர் குடும்பத்தில் பிறந்தவர். இளைஞராக இருந்த போது 1918-20ஆம் ஆண்டைய உள்நாட்டுப் போரில் பங்கு கொண்டார். அப்போதுதான், 1919இல் அவரது முதலாவது கதை வெளிவந்தது. அவரது பல குறுநாவல்களிலும் நாவல்களிலும் புகழ்பெற்ற குறுநாவல் வோலகலாம்ஸ்க் நெடுஞ்சாலை (1943—1944) 1941இல் மாஸ்கோவின் பாதுகாப்புப் பற்றியது. இதனது கதாநாயகனாகிய பாட்டாளியன் கமாண்டர் பௌர்ஜான் மொமீஷ்-உலி, இட்டுக்கட்டப்பட்ட பாத்திரம் அன்று, ஓர் உண்மையான மனிதர். வரைபடத்திலும் அவர்தான் கதாநாயகன்.

வோலகலாம்ஸ்க் நெடுஞ்சாலை*

குடும்பப் பெயர் அற்ற மனிதன்

1

இந்த நூலில் நான் வெறுமனே விசுவாசமுள்ளவனும் மனசாட்சிக்கு உட்பட்டவனுமான எழுத்தாளன் மட்டுமே. இதோ புத்தகத்தின் கதை.

2

''இல்லை, நான் எதுவும் உங்களுக்குச் சொல்ல மாட்டேன்,'' என்றார் பௌர்ஜான் மொமீஷ்-உலி தீவிரமாக. ''காதில் கேட்டு போரைப் பற்றி எழுதுகிற ஆட்களை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.''

''ஏன் முடியாது?''

மற்றொரு கேள்வியால் எனது வினாவுக்கு விடையளித்தார்:

''காதல் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?''

''ஆமாம், தெரியும்.''

''நானுங்கூட தெரியும் என்று போருக்கு முன்னால் நினைத்திருந்தேன். ஒருத்தியை நான் காதலித்தேன், நெஞ்சார அவளைக் காதலித்தேன், ஆனால் போரிலே பிறக்கின்ற காதலோடு ஒப்பிட இது ஒன்றும் இல்லை. போரில், சண்டையில், மிக ஆழ்ந்த காதல் பிறக்கிறது, மிக ஆழ்ந்த வெறுப்பும் கூடத் தோன்றுகிறது. அவற்றை உணராதவர்களுக்கு அவை இரண்டுமே நினைத்ததற்கரியன. உள போராட்டம் என்ன, மனசாட்சி என்பதன் அருத்தம் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''எனக்குத் தெரியும்,'' என்று குறைந்த நம்பிக்கையுடன் ஒப்புக்கொண்டேன்.

''இல்லை, உங்களுக்குத் தெரியாது. இவ்விரண்டு உணர்வு

---

* *நாவலின் ஒரு பகுதி.*

களும், அச்சமும் மனசாட்சியும், ஒன்றையொன்று எப்படி எதிர்க்கின்றன என்பது உங்களுக்குத் தெரியாது. இந்த இரண்டு உணர்வுகளை விட மிகவும் கொடூரமான மிருகங்களும் மூர்க்கத்தனமாகச் சண்டையிடாது. ஒரு தொழிலாளியினுடைய மனசாட்சி அல்லது ஒரு கணவனுடைய மனசாட்சி என்ன என்பதை ஒருகால் நீங்கள் அறிந்திருக்கலாம், ஆனால் போர்வீரனுடைய மனசாட்சியைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. எப்போதாவது எதிரி மறைகுழிக்குள்ளாக எறிகுண்டை எறிந்திருக்கிறீர்களா?''

''இல்லை...''

''பிறகு எப்படி மனசாட்சியைப் பற்றி எழுதப் போகிறீர்கள்? போர்வீரன் தாக்குதலுக்குத் தனது கம்பெனியுடன், எந்திரத் துப்பாக்கியின் குண்டுவீச்சுக்கு உட்பட்டவாறு வருகிறான், அவனுக்கு அருகே அவனது தோழர்கள் வீழ்கிறார்கள், ஆனாலும் அவன் தவழ்ந்து செல்கிறான். இவ்வாறாக ஒரு மணி நேரம்—அறுபது நிமிடங்கள்—செல்கிறது. ஒவ்வொரு நிமிடத்திலும் அறுபது விநாடிகள் இருக்கின்றன, எந்த விநாடியிலும் அவன் கொல்லப்படக் கூடும். ஆனாலும் அவன் தவழ்கிறான். இதுதான் போர்வீரனுடைய மனசாட்சி! மகிழ்ச்சியா? மகிழ்ச்சி என்பது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?''

''எதுவுமே அநேகமாக எனக்குத் தெரியாது,'' என்று பதிலளித்தேன்.

''நீங்கள் சொல்வது சரி. ஒருகால் காதலின் மகிழ்ச்சி, படைக்கின்ற மகிழ்ச்சி உங்களுக்குத் தெரியும். அநேகமாக, தாய்மையின் மகிழ்ச்சியைப் புரிந்துகொண்ட உங்கள் மனைவி உங்களோடு பகிர்ந்துகொள்ளக் கூடும். ஆனால் எதிரியின் மீது பெற்ற வெற்றியின் மகிழ்ச்சியை, போர்க்களத்து வீரச்செயலின் மகிழ்ச்சியை உணராத ஒருவனுக்கு உண்மையான மகிழ்ச்சி, ஆழ்ந்த, எல்லாவற்றையும் உட்கொள்ளும் மகிழ்ச்சி என்ன என்பது தெரியாது. அதைப் பற்றி எப்படி எழுதுவீர்கள்? கதை கட்டப் போவீர்களா?''

பன்ஃபீலவினது டிவிஷனின் ஆட்களைப் பற்றிய கதை வெளிவந்த இதழ் ஒன்று மேசையின் மீது கிடந்தது. அதே டிவிஷனின் ரெஜிமெண்டைத்தான் பௌர்ஜான் மொமீஷ்-உலி தலைமையேற்று நடத்தினார்.

இந்த இதழை நாசூக்கில்லாதவாறு விளக்கை நோக்கித்

தள்ளினார்—அவரது எல்லா அசைவுகளும் நாசூக்கின்றி இருந்தன, ஒரு சிகரெட்டைப் பற்றவைத்த பிறகு தீக்குச்சியை அவர் எறிந்தது கூட,—திறந்திருந்த பக்கத்திற்கு மேலாகக் குனிந்து, பிறகு அதை அப்பால் தள்ளிவிட்டார்.

''என்னால் படிக்க முடியாது!'' என்று முணுமுணுத்தார். ''போரின் போது மையாலோ பென்சிலாலோ எழுதப்பட்டது அல்லாது ரத்தத்தால் எழுதப்பட்ட புத்தகத்தை நான் படித்திருக்கிறேன்! அந்தப் புத்தகத்திற்குப் பிறகு எந்தக் கட்டுக்கதைகளையும் என்னால் படிக்க முடியாது! நீங்களே என்ன எழுத முடியும்?''

நான் விவாதிக்க முயன்றேன், ஆனால் பௌர்ஜான் மொமீஷ்-உலி பிடிவாதமாக இருந்தார்.

''முடியாது!'' என்றார் கண்டிப்பாக. ''நீங்கள் உண்மையை எழுதப் போவதில்லை, நான் பொய்யை வெறுக்கிறேன்.''

3

முதலில் நாங்கள் சந்தித்தது இப்படித்தான்.

மாஸ்கோச் சண்டையைப் பற்றி எனக்குச் சொல்லக்கூடிய எவரையேனும் தேடியவாறு நீண்ட நேரம் இருந்தேன். போர் நடவடிக்கையின் அருத்தத்தையும் நோக்கத்தையும் கூறுவதாக அவரது கதை இருக்க வேண்டும், அதே நேரத்தில் எல்லாவற்றையும் கடுஞ்சோதனைக்கும் தேர்வுக்கும் உட்படுத்திய அந்த இடத்திற்கே — போர்க்களத்திற்கே — அழைத்துச்செல்ல வேண்டும்.

எனது தேடுதலை நான் முழுமையாக விவரிக்கப் போவதில்லை, ஆனால் முக்கியமான சான்றுகளை மட்டுமே உங்களிடம் சொல்வேன்.

நான் படித்த தகவல்களிலிருந்து, 1941 அக்டோபர் மற்றும் நவம்பரில் ஜெர்மானியர்கள் மாஸ்கோத் தாக்குதலின் போது, இடுக்கிப்பொறி நடவடிக்கை மூலம் தலைநகரைக் கைப்பற்ற முயற்சி செய்து கொண்டிருந்தார்கள், அதே நேரத்தில் குறிக்கோளை நிறைவேற்ற நேரடியான நடவடிக்கையும் மேற்கொண்டார்கள், அதாவது தங்களது முக்கியப் படையை வோலகலாம்ஸ்க் நெடுஞ்சாலை வழியாகவும் பின்னர் லெனின்கிராடு நெடுஞ்சாலை வழியாகவும் செலுத்தினார்கள் என்பதை அறிந்துகொண்டேன்.

அந்தத் துயரார்ந்த அக்டோபர் நாள்களில் ஜெர்மானி யர்கள் வியாஸ்மா ஊடாக நுழைந்து மாஸ்கோவை நோக்கி டாங்கிகளுடனும் மோட்டார் சைக்கிள்களுடனும் லாரிக ளுடனும் சென்ற போது, வோலகலாம்ஸ்க் நெடுஞ்சாலைக்கு அணுகும் வழிகளை, இப்போது ஜெனரல் பன்ஃபீலவ் எட் டாவது கார்டு டிவிஷன் என்று அழைக்கப்பட்ட முந்நூற் றுப் பதினாறாவது துப்பாக்கி டிவிஷன் தடுத்துநிறுத்தியது. நவம்பரில் மாஸ்கோவுக்கு எதிரான இரண்டாவது தாக்கு தலின் சமயம், அதே திசையில் ஜெர்மானியர்கள் நெருக்கிக் கொண்டு நுழைய முயன்றதைத் திரும்பவும் பன்ஃபீலவ் டிவிஷன் தடுத்து நிறுத்தியது. மாஸ்கோவுக்கு அப்பால் சுமார் முப்பது கிலோமீட்டர் தூரத்தில் கிரியூகவோவுக்கு அருகே நடந்த ஏழுநாள் சண்டையில், செஞ்சேனையின் வேறு பிரிவுகளுடன் சேர்ந்து இந்த டிவிஷன், ஜெர்மானியர் களைத் தடுத்து நிறுத்தியதுடன் திரும்பவும் விரட்டியது.

இந்த பன்ஃபீலவ் ஆட்களைச் சந்திக்க நான் புறப்பட் டேன், இரண்டு மாதகாலச் சண்டையின் கதையை எனக்குச் சொல்ல விதிக்கப்பட்ட ஆளின் பெயரையோ அந்தஸ்தை யோ அறியாதபடி சென்றேன். ஆனால் நான் அவரை நிச்சய மாகச் சந்திப்பேன் என்று உறுதியாக நம்பினேன்.

அவரைச் சந்திக்கவும் செய்தேன்.

அவர்தான் பௌர்ஜான் மொமீஷ்-உலி, மாஸ்கோச் சண் டையின் போது சீனியர் லெப்டினெண்ட் ஆக இருந்தவர், இப்போது, இரண்டாண்டுகளுக்குப் பிறகு கார்டு கர்னலாக இருந்தார்.

4

அவர் தன்னை அறிமுகம் செய்துகொண்ட போது அவ ரது பெயரை முற்றிலும் புரிந்துகொள்ளாமல் திரும்பக் கூறும்படி கேட்டேன்.

''பௌர்ஜான் மொமீஷ்-உலி,'' என்று ஒவ்வொரு அசை யையும் தெளிவாக உச்சரித்தார்.

அவரது குரலில் இருந்த வித்தியாசமான தொனி அந் நேரத்தில் எரிச்சலின் வெளிப்பாடாக எனக்குக் காணப்பட் டது. உடனடியாகத் தன்னைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என நினைத்தேன்.

பத்திரிகையாளனின் பழக்கதோஷத்தால் எனது குறிப் பேட்டையும் பென்சிலையும் எடுத்தேன்.

''மன்னிக்கணும், உங்களுடைய குடும்பப் பெயரை எப் படி உச்சரிப்பீர்கள்?''

''எனக்குக் குடும்பப் பெயர் கிடையாது,'' என்று பதி லளித்தார்.

எனது வியப்பைக் கவனித்தவராக, அதை விளக்கி மொழிபெயர்த்துச் சொன்னார்: மொமீஷ்-உலி என்றால் 'மொமீஷின் மகன்' எனப்படும்.

''அதுதான் எனது தந்தை வழிப்பெயர்,'' என்று தொ டர்ந்தார். ''பௌர்ஜான் எனக்கு இடப்பட்ட பெயர், ஆனால் குடும்பப் பெயர் எனக்குக் கிடையாது.''

கிழக்கின் குணாமிசமாக சில நேரங்களில் கருதப்படும் மென்மையான கனவுநிலையின் தோற்றம் அவரிடத்தில் இல்லை. செதுக்கப்பட்டன போலவே காணப்படக் கூடிய முகங்கள் ஏராளம் இருக்கின்றன, சில நேரங்களில் அரு மையானதாகவும் கவனமானதாகவும், மற்ற நேரங்களில் கரடுமுரடாக, சிரத்தை இல்லாத முறையில் உருவாக்கப் பட்டன போல. ஆனால் பௌர்ஜான் மொமீஷ்-உலியினு டைய முகம் வெங்கலத்தாலோ நறுமண ஓக்கிலோ ஏதோ கூர்மையான உபகரணத்தால் வெட்டப்பட்டிருக்க வேண் டும். அது ஒரு மென்மையான, வட்டமான கோட்டைக்கூட விட்டு வைக்கவில்லை.

அது எனது குழந்தைப்பருவத்தின் ஒரு மனப்பதிவைத் திரும்பக் கொணர்ந்தது. மைன் ரீட் அல்லது ஃபெனிமோர் கூப்பெர் எழுதிய நாவல்களின் நீல அட்டைகளில் ஒல்லி யான செவ்விந்திய முகச்சாயலின் முகக் குறிப்பு இருந்தது. பௌர்ஜானுடைய முகச் சாயலானது குறிப்பிடத்தக்க ஒற் றுமையை அதனோடு கொண்டிருப்பதாக எனக்குக் காணப் பட்டது.

நிறத்தில் மங்கோலியன், அகன்ற கன்ன எலும்புகள், அடிக்கடி புரிந்துகொள்ள முடியாத அடக்கம், குறிப்பாக கோபமான கணங்களில், அவரது முகமானது வழமையற்ற பெரிய கருப்பு கண்களால் ஒளிபெற்றது. அவரது மின்னு கிற கருப்புத் தலைமுடி பிடிவாதமாக சீப்பை எதிர்த்து நின்றது, கிண்டலாக குதிரை முடி என பௌர்ஜான் அதை அழைத்தார்.

பேசியதைக் கேட்டையில் அவரை உற்று நோக்கினேன். இந்த கஸாக் சுத்தமான ருஷ்ய மொழியைப் பேசினார். மிகவும் உணர்ச்சிவயப்பட்ட போது கூட வார்த்தைகளைத் தவறாக உச்சரிக்கவோ சொற்றொடர்களைக் குழப்பிக் கொள்ளவோ செய்யவில்லை. சிலநேரங்களில் ஒருவிதமான வேகமற்ற தன்மை பேச்சில் காணப்பட்டது. பின்னர் அவர் கஸாக் மொழியில் பேசிய போது, வார்த்தைகள் மிகவும் விரைவாக வந்ததைக் கவனித்தேன்.

ஒரு சிகரெட்டை எடுத்துக்கொண்டு, சிகரெட் டப்பாவை படாரென மூடியவாறு பிடிவாதமான முறையில் முடித்தார்:

''எப்படியும், என்னைப் பற்றி எப்போதாவது எழுதினால், எனது கஸாக் பெயரால் என்னை விளியுங்கள்: பௌர் ஜான் மொமீஷ்-உலி. உங்கள் வாசகர்களிடம் கூறுங்கள்: அவன் ஒரு கஸாக், ஸ்டெப்பியில் மந்தைகளை மேய்த்துத் திரியும் மேய்ப்பன், குடும்பப் பெயர் அற்ற ஒரு மனிதன்.''

5

எங்களது அறிமுகம் ஏற்பட்ட அதே முதலாவது மாலையில் ரெஜிமெண்டில் புதிதாகச் சேர்ந்தவர்களும் போர் முனைக்கு முதல் முறையாக வந்தவர்களுமான சில புதிய அதிகாரிகளிடம் பௌர்ஜான் மொமீஷ்-உலி பேசியதைக் கேட்கிற நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

போர்வீரனின் ஆன்மாவைப் பற்றி அவர் பேசினார். தனது கருத்துகளை மெதுவாக வளர்த்தவாறு, வோலகலாம்ஸ்க் நெடுஞ்சாலையில் நடைபெற்ற சண்டைகளில் ஒன்றை விவரித்தார்.

எனது இதயம் பலமாக அடித்துக் கொண்டது. எனது குறிப்பேட்டைத் திறந்து ஆர்வத்துடன் எழுதத் தொடங்கினேன். இன்னமும் எனது நல்லதிருஷ்டத்தை என்னால் நம்ப முடியவில்லை. நான் ஏற்கெனவே மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தேன்: கடைசியில் அவை பார்வையில் பட்டன—நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த கதையின் பக்கங்கள்.

அவரது பேச்சுக்குப் பிறகு, வோலகலாம்ஸ்க் நெடுஞ்சாலையின் கதையை ஆரம்ப முதல் கடைசி வரை எனக்குக்

கூறுமாறு பௌர்ஜான் மொமீஷ்-உலியிடம் கேட்கும் ஓர் அரிய வாய்ப்பைப் பெற்றேன்.

''இல்லை,'' என்றார், ''துல்லியமாக எதையும் உங்களுக்குச் சொல்ல மாட்டேன்.''

எங்களது உரையாடலின் எஞ்சியதை வாசகர் ஏற்கெனவே அறிவார்.

6

பௌர்ஜான் மொமீஷ்-உலி என்னிடத்தில் நியாயமாக இல்லை என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. அவரைப் போலவே நானும் ஒரே விஷயத்தைத் தேடினேன்—உண்மையை. ஆனால் மக்களைப் பற்றிய அவரது மதிப்பீடுகள், குறிப்பாகப் போர்வீரனுடைய சிரமங்களைப் பகிர்ந்து கொள்ளாதவர்களைப் பற்றி, மிகவும் தீவிரமாக இருந்தன. இது பௌர்ஜானுடைய இளமை காரணமாகத் தான் என்று நினைத்தேன்—நாங்கள் சந்தித்துக்கொண்ட போது அவருக்கு முப்பது வயதுதான் ஆகியிருந்தது.

இந்தச் சுருக்கமான மறுப்புக்குப் பிறகு நானும் அந்தக் கருத்தை வலியுறுத்தவில்லை. ஆனால் சில நாள்களை பௌர்ஜானுடைய கம்பெனியில் செலவிட்டேன்.

அவர் பேச விரும்பினார், கதை சொல்வதில் பிறப்பிலேயே திறமைபெற்றவர். சரியான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி எல்லாவற்றையும் பொறுமையுடன் குறித்துக் கொண்டேன். பின்னர் என்னிடம் நெருக்கமாக இருந்தார்.

பௌர்ஜானுடைய நண்பர்களிடமிருந்து அவருடைய வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொண்டேன். பள்ளியில் அவருக்கு இரண்டு பட்டப்பெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன: 'உருண்டை விழி' மற்றது 'ஷான்-டிமேஸ்'. பின்னதன் அருத்தம்: 'தூசியாலும் தொட முடியாத'. மிகவும் விரைவாகப் பாய்ந்த புராணக்கதைக் குதிரையின் பெயர் அது. அதனது குளம்புகளால் எழுந்த தூசியால் கூட அதனைத் தொட முடியாது.

பிறகு பௌர்ஜானிடம் பேசுகிற வாய்ப்புக் கிட்டிய போது சொன்னேன்:

''எப்படியும் உங்களைப் பற்றி நான் எழுதப் போகிறேன். எங்காவது ஓரிடத்தில் பள்ளியில் உங்களை ஷான்-டிமேஸ் என்று அழைத்ததை நிச்சயமாகக் குறிப்பிடுவேன்.''

அவர் முறுவலித்தார், அந்த முறுவலிப்பு அவரை உரு மாற்றியது. கண்டிப்புமிக்க அவரது முகம் திடீரென்று குழந்தையினுடைய மென்மையைப் பெற்றது.

''நீங்கள் பீரங்கிப்படை குதிரை,'' என்றார் பாசத்துடன். ''மனத்தாங்கல் கொள்ளாதீர்கள், இது வாழ்த்துப் போன்றதுதான். பீரங்கிப்படை குதிரை மிக மெதுவாகத் தூக்கிச் செல்லும், அதைச் சுற்றித் திருப்புவது சிரமமானது, ஆனால் அது திரும்பும் போது பீரங்கியையும் தன்னுடன் இழுத்துச் செல்லும். நீங்கள் என்னைச் சுற்றித் திருப்பியது போல காணப்படுகிறீர்கள்... நீங்கள் அறிய விரும்பும் எல்லாவற்றையும் உங்களுக்குச் சொல்வேன். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை...''

அவர் லேசாகப் பின்னுக்குச் சாய்ந்து உறையினின்றும் தனது வாளை வெளியே எடுத்தார். கிளாஸ் இல்லாத எண்ணெய் விளக்கிலிருந்து வந்த மங்கலான ஒளியில் செதுக்கு வேலைப்பாடு செய்யப்பட்ட வாள் பிரகாசமாக மின்னியது.

''எனது நிபந்தனை—உண்மையை மட்டுமே நீங்கள் எழுத வேண்டும்,'' எனத் தொடர்ந்தார். ''புத்தகம் தயாரானதும் அதை என்னிடம் கொண்டுவாருங்கள். முதலாவது அத்தியாயத்தைப் படித்துவிட்டுச் சொல்வேன்: 'சரியில்லை, பொய்! உங்கள் இடக் கையை மேசை மீது வையுங்கள்!' சதக்! உங்கள் இடக் கை போய்விட்டது! நான் இரண்டாவது அத்தியாயத்தைப் படிப்பேன்: 'சரியில்லை, பொய்! உங்கள் வலக் கையை மேசை மீது வைய்யுங்கள்!' சதக்! உங்கள் வலக் கை போய்விட்டது! இதை எப்படி விரும்புகிறீர்கள்?''

''சரி,'' என்றேன். ''நான் சம்மதிக்கிறேன்.''

நாங்கள் இருவருமே கேலி செய்து கொண்டோம், ஆனால் முறுவலிக்கவில்லை.

அவரது அகன்ற கருத்த கண்கள், என்னையே துளைத்தெடுத்துக் கொண்டிருந்தன.

''நல்லது,'' என்றார். ''உங்களது தாளையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு எழுதுங்கள்: 'அத்தியாயம் ஒன்று. அச்சம்.' ''

1

''எழுதுங்கள்: 'அத்தியாயம் ஒன்று. அச்சம்,''' என்று திரும்பச் சொன்னார் பௌர்ஜான் மொமீஷ்-உலி.

கண நேரச் சிந்தனைக்குப் பின்னர் தொடங்கினார்:

'''ஜெனரல் பன்ஃபீலவினுடைய ஆட்கள் குறைந்தளவு அச்ச உணர்வுகூட இல்லாமல் தங்களது முதலாவது சண்டைக்கு விரைந்து சென்றார்கள்...' சரி, தொடக்கத்திற்கு அது எப்படி என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

''எனக்குத் தெரியாது,'' என்று தயக்கத்துடன் கூறினேன்.

''அந்த முறையில் தான் இலக்கியம் சம்பந்தப்படாதவர்கள் எழுதுகிறார்கள்,'' என்று கனத்த குரலில் சொன்னார். ''நீங்கள் இங்கே தங்கியிருக்கின்ற வேளையில், எப்போதாவது குண்டு வந்து விழுகிற இடங்களுக்கோ அவ்வப்பொழுது எந்திரத் துப்பாக்கி தோட்டாக்கள் சர்-சர் என்று சீறிவரும் இடங்களுக்கோ உங்களை அழைத்துப் போகுமாறு வேண்டுமென்றே நான் உத்தரவு பிறப்பித்திருக்கிறேன். அச்ச உணர்வை நீங்கள் உணர வேண்டும் என விரும்புகிறேன். நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டியது இல்லை, உங்களது பயத்தை நீங்கள் அடக்கிக்கொள்ள வேண்டியிருந்தது என்பதை உங்களது ஒப்புதல் இல்லாமலே எனக்குத் தெரியும்.

''ஆக, நீங்களும் உங்களது சகோதர புனைகதை எழுத்தாளர்களும், போர்முனையில் உள்ள ஆட்கள் உங்களைப் போல அல்லாது அதீத சக்தி படைத்தவர்கள் என்று ஏன் கற்பனை செய்கிறீர்கள்? உங்களைப் போல போர்வீரன் மனித உணர்வுகளைப் பெற்றிருக்கவில்லை என ஏன் கருதுகிறீர்கள்? எந்தவகையிலேனும் அவன் தாழ்ந்தவனா? அல்லது ஒருவேளை உயர்ந்தவகைப் படைப்பா?

''உங்களது சிந்தனைப்படி வீரம் இயற்கையின் கொடையாக இருக்கலாம்? அல்லது சார்ஜெண்ட் அச்சமின்மையை, இராணுவ அங்கிகளைப் போல, பங்கிட்டுக் கொடுப்பதாகவும், தனது பங்கை யார் பெற்றுக்கொண்டது யார் பெற

வில்லை என்பதைக் குறித்துக் கொள்வதாகவும் ஒருகால் நீங்கள் நினைக்கலாம்?

''போர் தொடங்கியதிலிருந்து ஏராளமான சண்டைகளைப் பார்த்திருக்கிறேன். இப்போது நான் ஒரு ரெஜிமெண்டல் கமாண்டர். அது அப்படி அல்ல என்று சொல்வதற்கு வேண்டிய அநுபவம் பெற்றிருப்பதாக நினைக்கிறேன்.

''நம்முடையதைப் போன்ற மிகப் பரந்த ஒரு நாட்டின் மீது முற்றுகையிடுகின்ற போது ஜெர்மானியர்கள் என்ன கணக்கிட்டிருப்பார்கள்? கிழக்குப் போர் நடவடிக்கையில் அவர்களுடன் ஜெனரல் அச்சம் தங்களது டாங்கிப் பிரிவுகளுக்கு முன்னர் செல்வார் என்றும் அவருக்கு முன்னால் ஒவ்வொரு ஜீவனும் கெஞ்சலாம் அல்லது அஞ்சி ஓடலாம் என்றும் உறுதியாக இருந்திருப்பார்கள்.

''1941 அக்டோபர் பதினைந்தின் இரவில் நமது முதலாவது சண்டையைப் பார்த்தோம். அது அச்சத்திற்கு எதிரான சண்டையும் கூட. ஏழு வாரங்களுக்குப் பிறகு, மாஸ்கோவுக்கு அப்பால் ஜெர்மானியர்களை நாம் துரத்திய போது, ஜெனரல் அச்சமும் அவர்களுக்குப் பின்னே ஓடிப் போனார். ஒருவேளை இந்தப் போரில்தான் முதல் முறையாக, தங்களைப் பின்னுக்கிருந்து துத்தும் அச்சம் என்ன என்பதை கடைசியாக அவர்கள் அறிந்துகொண்டார்கள்.''

2

மாஸ்கோப் போர்முனை நெடுகிலும் சண்டை முழு வீச்சில் நடந்த போது, அக்டோபர் மத்தி வரை நாங்கள் சண்டைகளில் பங்குபெறவில்லை. கஸாக்ஸ்தானை விட்டு நாங்கள் புறப்பட்ட பிறகு ஒன்னரை மாதக் காலத்தை லெனின் கிராடு பிரதேசத்தின் சதுப்பு நிலங்களில் செலவிட்டோம், போர்முனையிலிருந்து சுமார் முப்பது அல்லது நாற்பது கிலோமீட்டர் தூரம். அது பாதுகாப்பின் இரண்டாவது வரிசை என அழைக்கப்பட்டது. தலைமை கமாண்டரின் சேமப்படையாக நாங்கள் கருதப்பட்டோம்.

அக்டோபர் ஆறாம் தேதி காலையில், எனது பட்டாளியனை ஒன்று சேர்த்து பக்கத்திலுள்ள ரயில் நிலையத்திற்கு அணிவகுக்குமாறு உத்தரவு பெற்றேன். அங்கே எங்களுக்காக காலி வாகன்களும் திறவை வண்டிகளும் கோர்க்

கப்பட்ட ரயில் காத்துக் கொண்டிருந்தது. இரவிலே எங்களது பயணத்தைத் தொடங்கினோம்.

நாங்கள் எங்கே போய்க் கொண்டிருந்தோம்? கமாண்டராகிய நானே இதை உரிய நேரம் வரை அறிந்துகொள்ள முடியாதநிலை. நாங்கள் போர்முனையை நோக்கி அன்றி அதற்கு அப்பால் போய்க் கொண்டிருப்பதாகக் காணப்பட்டது. இடைப்பட்ட எந்த நிலையங்களிலும் நிற்காமல் பலகோயெ ரயில் சந்திப்பை நோக்கி ரயில் போய்க் கொண்டிருந்தது.

போகிற வழியில் எங்களுக்காக பலகோயெவில் உணவு காத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் யாரோ எங்களை அவசரப்படுத்திக் கொண்டும், எங்களது ரயிலை ஓட்டிக் கொண்டும் இருந்தார்கள். உணவை விநியோகிக்கக்கூட நேரமில்லை. என்ஜினை மாற்ற இரண்டு அல்லது மூன்று நிமிடங்களே பிடித்தன. அது விசிலை ஊதியது—நாங்கள் திரும்பவும் புறப்பட்டோம்.

பலகொயெவிலிருந்து நாங்கள் எங்கே போவோம் என்பதை அறிய ஒவ்வொருவரும் ஆவலோடு இருந்தார்கள். சீக்கிரமே நாங்கள் கண்டு பிடித்தோம் — மாஸ்கோவை நோக்கி.

சிறிய நாட்டுப்புற நிலையங்களில் கூட வேகத்தைக் குறைக்காமல், முந்நூற்றுப் பதினாறாவது துப்பாக்கி டிவிஷனைச் சுமந்தவாறு ரயில்கள் ஒன்னரை அல்லது இரண்டு மணி நேர இடைவேளைகளில் முழு வேகத்தில் முன்னே பாய்ந்து சென்றன.

எதற்காக நாங்கள் இடமாற்றப்படுகிறோம்? என்ன நோக்கத்திற்காக?

யாருக்கும் தெரியாது.

அந்த வேகத்தில் எதற்காக நாங்கள் விரைந்து கொண்டிருக்கிறோம்? மாஸ்கோவைத் தாண்டி நாங்கள் எங்கே போகப் போகிறோம்? எங்கே நிற்போம்?

யாருக்கும் தெரியாது, எவருக்கும் தெரியாது...

நாங்கள் சென்ற வழமையற்ற வேகமானது எங்கள் எல்லாரிடத்திலும் ஓய்வில்லாத கிளர்ச்சியுணர்வைத் தோற்றுவித்தது. கடைசியாக இதுதான் உண்மையான விஷயம் என்றும் இறுதியாக நாங்கள் செயல்பட, போரிடச் சென்று கொண்டிருந்தோம் என்றும் எல்லாரும் நினைத்தார்கள்.

அக்டோபர் ஏழாம் தேதி வோலகலாம்ஸ்க் அருகே உள்ள காட்டில் நாங்கள் நிறுத்தி வைக்கப்பட்டோம், அது மாஸ்கோவுக்கு மேற்கே நூற்று இருபது கிலோமீட்டர் தொலைவில் இருந்தது.

நிலையத்திற்கு வருமாறு ரெஜிமெண்டல் கமாண்டரால் அழைக்கப்பட்டேன்.

ரயில் பாதைக்கு அருகே ஏதோ பச்சையும் சாம்பலு மான நிறத்தில் மூடிமறைக்கப்பட்டு நிறுத்திவைக்கப்பட்ட இரும்புக் கோபுரங்களை எனக்கு நினைவிருக்கிறது. அவை பெட்ரோல் டாங்கிகள்.

விரைவில் அக்டோபர் மாத சாம்பல் நிற வானின் பின் னணியில், இடி முழக்கமின்றி, அது பிறகே கேட்கிறது, பிரகாசமோ புகையோ இல்லாமல், அந்தப் புகை அடுத்து தொடுவானத்தை நிறைக்கிறது, அந்த உலோகக் கோபு ரங்கள் மெதுவாக வானிலே உயர்ந்து கணநேரத்திற்கு காற் றிலே நிறுத்திவைக்கப்பட்டது போல இருந்து கீழே விழு வதைப் பார்ப்பதாக நான் அப்போது அறிய முடிந்தால்?

நிலையக் கட்டடத்தை நான் நெருங்குகையில்—வெறு மையான சன்னல்களுக்கு மேலாக புகைக் கீற்றுகளுடன் கூடிய தீயால் கருகிய காலிமனையைத் தவிர பின்னர் அதி லிருந்து எதுவுமே எஞ்சியிருக்கவில்லை — பீரங்கிகளால் நிறைந்திருந்த ரயில் வாகன்களின் நீண்ட வரிசையைத் தொலைவிலிருந்து கண்டேன்.

யாரோ எனக்கு வாழ்த்துச் சொன்னார்கள். ரயிலுக்கு அருகே எங்களது டிவிஷனின் பீரங்கி ரெஜிமெண்டின் கமாண்டர் கர்னல் மலீனினைப் பார்த்தேன்.

''பார்வையை அதன் மீது திருப்புங்கள், சந்தர்ப்பவாதி யே,'' என்றார். ''அது பிடித்திருக்கிறதா?''

அவர் என்னைச் சந்தர்ப்பவாதி என்று அழைத்ததற் குக் காரணம், பீரங்கிப்படை கமாண்டரான நான் எனது சொந்த விருப்பத்தின் பேரில் காலாட்படைக்கு மாற்றப் பட்டேன் என்பதை அவர் அறிந்தது தான்.

எங்களது டிவிஷன் பீரங்கிப்படைக்குக் கூடுதலாக அந் தப் பீரங்கிகள் அப்போதுதான் அங்கே வந்து சேர்ந்திருந் தன.

''ஓகோ,'' என்றேன். ''அவற்றில் கனத்த பீரங்கிகளும் கூட.''

''இந்தப் பெரிய ஆயுதங்களைக் கோட்டைப் பீரங்கி களைப் போல நிறுவப் போகிறோம்.''

''ஏன், இங்கே நீண்ட காலத்திற்கு நாம் தங்கப் போகி றோமா?''

''குளிர்காலத்தை நாம் இங்கே செலவிடப் போவதாகத் தெரிகிறது.''

நான் ஏமாற்றமடைந்தேன். அதன் அருத்தம் நாங்கள் திரும்பவும் பின்னணியில் சேமப்படையாக இருந்தோம்.

தொலைவில் முன்னே, வியாஸ்மாவுக்கு அப்பால் உள்ள மாஸ்கோவைப் பாதுகாக்கின்ற போர்முனையை ஜெர்மானியர்கள் ஊடுருவி விட்டார்கள் என்றும், நான்கு நாள்களுக்கு முன்னால் ஹிட்லர் வானொலியில் உலகிற்கு அறிவித்திருந்தார்: ''செஞ்சேனை அழிக்கப்பட்டுவிட்டது, மாஸ்கோவுக்கான வழி திறந்திருக்கிறது'' என்பதும் எனக்குத் தெரியவில்லை.

அந்நேரத்தில் மாஸ்கோ நிம்மதியற்றவாறு நகர எல்லையிலிருந்து நூற்று இருபது—நூற்று ஐம்பது கிலோமீட்டர் தூரத்தில் புதிய பாதுகாப்பு வளையத்தை உருவாக்கியது. சிவில் உடையில் இருந்த கம்யூனிஸ்டுகளின் பட்டாளியினர் எந்தவிதமான பேச்சுகளோ பாண்டு ஒலிகளோ இல்லாமல் ஒன்றன் பின் ஒன்றாக மாஸ்கோ ரயில் நிலையங்களை விட்டு அனுப்பப்பட்டார்கள். வரும் வழியில் ஆயுதங்களையும் சீருடைகளையும் பெற்றுக் கொண்டார்கள். [illegible]ங்களது வருகைக்கு இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு முன்னால் சுப்ரீம் சோவியத் பெயர் கொண்ட காலாட்படைப் பள்ளியினர் லாரிகளில் வோலகலாம்ஸ்க் வழியாக மாஸ்கோ கடலுக்கு* விரைந்தனர். அவர்களைத் தொடர்ந்து மாஸ்கோ செங்கொடி விருதைப் பெற்ற பீரங்கிப்படைப் பள்ளியினர் தங்களது பயிற்சி பீரங்கிகளுடன் சென்றனர். எதிரியைச் சந்திக்க புதிய ஆட்களையும் ஆயுதங்களையும் மாஸ்கோ அனுப்பிக் கொண்டிருந்தது. அந்தப் பீரங்கிகளையும் கூட.

---

* மாஸ்கோ-வோல்கா கால்வாயில் உள்ள மிகப்பெரிய நீர்த்தேக்கம். (ப-ர்.)

வோலகலாம்ஸ்க் பிராந்திய அரணை வலுப்படுத்த டிவிஷன் உத்தரவிடப்பட்டிருப்பதை மண்டலத் தலைமையிடத்தில் உறுதி செய்தார்கள். எனது பட்டாளியனுடைய இருப்பிடம் எனக்குக் காட்டப்பட்டது.

4

அன்று மாலை வோலகலாம்ஸ்கிலிருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ள ரூஸா ஆற்றை நோக்கி இரவு அணிநடையை நாங்கள் மேற்கொண்டோம்.

தென் கஸாக்ஸ்தானைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் பிந்திய குளிர்காலத்திற்குப் பழகிப் போயிருந்தேன்; ஆனால் இங்கோ, மாஸ்கோவுக்குப் புறத்தே, அக்டோபரின் தொடக்கத்தில் காலையில் உறைபனி விழுந்தது. புலர்காலையில், எண்ணிக்கையற்ற சக்கரங்களால் நொடிவிழுந்து பனியால் இறுகிப்போன அழுக்கடைந்த பாதையில் வந்த பிறகு, எங்களது பட்டாளியன் இருப்பிடத்தில் மிகப் பெரியதான நொவ்லியான்ஸ்கயெ என்ற கிராமத்தை வந்தடைந்தோம்.

மேகமூட்டமான வானத்தின் பின்னணியில் கறுப்பாய்த் தோன்றிய உயரமற்ற மணிக்கூண்டின் நிழற்பட வரையை நான் உடனடியாகக் கவனித்தேன்.

கிராமத்திற்கு அருகிலுள்ள காட்டில் எனது பட்டாளியனை விட்டுவிட்டு, அந்த இடத்தை வேவு பார்க்க கம்பெனி கமாண்டர்களுடன் புறப்பட்டேன்.

குறுகிய, வளைந்து போகிற ரூஸா ஆற்றங்கரையின் ஏழு கிலோமீட்டர்கள் எனது பட்டாளியனுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. சண்டையில், விதிகளின் படி, அத்தகைய இடம் ஒரு ரெஜிமெண்டுக்குக் கூட மிகப் பெரியதாகக் கருதப்படும். எனினும், அது என்னைக் கவலைப்படுத்தவில்லை. இந்த இடத்தை எதிரி எப்போதாவது அடைய முடியுமானால், ஏழு கிலோமீட்டர் நீளத்தில் ஒன்று மட்டுமல்லாது ஐந்து அல்லது பத்து பட்டாளியன்கள் அதைச் சந்திக்கலாம் என்று உறுதியாக நம்பினேன். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எங்களது அரண்களைத் தயாரிக்க வேண்டும் என்று உணர்ந்தேன்.

இயற்கைக் காட்சியின் அழகான வருணனைகளை உங்

களுக்குச் சொல்வேன் என என்னிடம் எதிர்பார்க்க வேண்டாம். நிலக்காட்சி அழகாக இருந்ததா இல்லையா என்று என்னால் சொல்ல முடியாது.

குறுகிய, மெதுவாக ஓடும் ரூஸாவின் இருண்ட பரப்பானது பெரிய இலைகளால் மூடப்பட்டிருந்தது. கோடைக் காலத்தில் வெள்ளி லில்லிப் பூக்களால் அழகுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒருகால் அது எல்லாமே மிகவும் அழகாக இருந்தன, ஆனால் அதைப் பார்த்து, இந்தக் கேடுக்கெட்ட சிறிய ஓடை ஆழமில்லாததாகவும் எதிரிக்குத் தாண்ட சுலபமானதாகவும் இருப்பதை மனத்தால் உணர்ந்தேன்.

எனினும், எங்கள் பகுதியின் கரையானது டாங்கிகள் அடைய முடியாததாக செய்யப்பட்டது; புதிதாக வெட்டப்பட்ட களிமண்ணுடன் கரை மின்னியது, மண்வாரிகளின் அடையாளங்கள் இன்னமும் அதில் இருந்தன. அது ராணுவ மொழியில் 'செங்குத்தான சரிவு' எனப்பட்டது.

ஆற்றுக்கு அப்பால் தொலைவிலே திறந்த வெளிகளும் அடர்ந்த மரங்களும் அல்லது காட்டின் பெரிய திட்டுகளும் உள்ளதைப் பார்க்க முடியும். ஓரிடத்தில், நொவ்லியான்ஸ்கயெ கிராமத்திற்குச் சற்றுக் கோணத்தில், எதிர்கரையிலிருந்த காடு அநேகமாக நீரின் விளிம்பு வரைக்கும் வந்தது. ஒருகால், எடுத்துக்காட்டான ருஷ்ய இலையுதிர்காலக் காட்டை வரைய விரும்பக்கூடிய ஓர் ஓவியனுக்கு வேண்டிய எல்லாமே அதுதான். ஆனால் எனக்கோ காட்டின் துண்டு நிலம் வெறுப்புப் பொருளாக இருந்தது: எங்களது குண்டு வீச்சிலிருந்து எதிரி தன்னை மறைத்துக்கொள்ளவும் தாக்குதலுக்குத் தனது படைகளை ஒன்றுதிரட்டவும் இங்கே முடியும்.

சாத்தான் அந்த பைன் பிர் மரங்களை எடுத்துக்கொள்ளட்டும்! அவை வெட்டப்பட வேண்டும்! நதியிலிருந்தே காடு அகற்றப்பட்டாக வேண்டும்!

நான் ஏற்கெனவே உங்களிடம் சொன்னபடி, மிக அண்மையில் உண்மையான சண்டை எதையும் இங்கே எங்களில் யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அரண் நிலைகளைத் தயாரிக்கும் குறிக்கோள் எங்கள் முன்பு வைக்கப்பட்டது, செஞ்சேனையின் பொறுப்புள்ள அதிகாரிகளும் போர்வீரர்களும் என்ற முறையில் இந்தப் பணியை மனசாட்சியுடன் செய்ய வேண்டியிருந்தது.

5

எங்களது துருப்புகளின் பின்வாங்கல் பற்றிய முதலாவது அறிவிப்பு மறுநாள் எங்களுக்குக் கிடைத்தது. உடைமைகள் எல்லாவற்றையும் எங்கோ விட்டுவிட்ட அகதிகள் தளர்ந்த நடை போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் செஞ் சேனை ஆட்களும் சிலர் இருந்தார்கள், சிறு குழுக்களாக ஜெர்மானிய சுற்றுவளைப்பை உடைத்துக்கொண்டு வந்தவர்கள்.

முதலில் பட்டாளியன் சமையல் பிரிவில் போர்வீரர்களுடைய சீருடையில் இந்தத் திரிகின்றவர்களை நான் சந்தித்தேன்.

நெருப்புக்கு அருகே அவர்கள் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள். போருக்கு முன்னால் சிறிய கட்டுமானத்தின் மேலாளனாகிய, விநியோகப் பிரிவின் கமாண்டர் வயதான லெப்டினெண்ட் பனமர்யோவ் அவர்களை ஆர்வத்தோடு உற்று நோக்கிக் கொண்டிருந்தான். சமையற்காரர்களும் சமையல் வேலைக்கு அன்று அனுப்பப்பட்ட போர்வீரர்களும் அங்கே இருந்தார்கள்.

அவர்களை நேராக நிற்க உத்தரவிட்டு பனமர்யோவ் எனக்கு அறிக்கை கொடுக்க விரைந்தான்.

நெருப்பைச் சுற்றி வட்டமாக உட்கார்ந்திருந்த ஆட்களைப் பக்கப் பார்வை பார்த்தேன்: அவர்களின் சிலர் எழுந்தார்கள், மற்றவர்கள் அரை மனத்தோடு அசைய மட்டுமே செய்தார்கள்.

''இந்த ஆட்கள் யார்?'' எனக் கேட்டேன்.

அம்மைத் தழும்பு விழுந்த முகத்துடன் இருந்த குட்டையான போர்வீரன் நெருப்பை விட்டு அப்பால் வந்தான்.

''சுற்றுவளைப்பை நாங்கள் உடைத்து விட்டோம், தோழர் சீனியர் லெப்டினெண்ட்!''

சுற்றிவளைப்பு... அன்று காலையில் முதல் தடவையாக அந்த வார்த்தையைக் கேட்டேன்.

''என்ன சுற்றிவளைப்பு? எங்கே?''

''வியாஸ்மா அருகே, தோழர் சீனியர் லெப்டினெண்ட்... அவர்கள் இப்போது இங்கே வருகிறார்கள்...''

''யார்?''

''வேறு யார், ஜெர்மானியர்கள் தான்...''

''ஜெர்மானியர்களைப் பார்த்தாயா?''

''அவர்களை யாரும் பார்த்திருக்கிறார்களா? பயறுகளைப் போல நம்மீது குண்டுகளைப் பொழிகிறார்கள்... அல்லது நெடுஞ்சாலை வழியாக டாங்கிகளில் சென்று எல்லாத் திசைகளிலும் சுடுகிறார்கள்.''

''நீ டாங்கிகளைப் பார்த்தாயா?''

''படங்களில் உட்கார்ந்தவாறு உங்களால் டாங்கிகளைப் பார்க்க முடியும், தோழர் சீனியர் லெப்டினெண்ட். அங்கே பார்ப்பது போல உணர மாட்டீர்கள்! ஜெர்மானியர்கள் சுடவும் குண்டுகளைச் சுற்றிலும் வீசத் தொடங்குகிற போதும் எல்லாமே மங்கிப் போகிறது. நம்மால் வெளிச்சத்தைக் கூடப் பார்க்க முடியாது.''

''உன் துப்பாக்கி எங்கே?''

''என்னிடம் இருக்கிறது. அது பழுதாகிப் போகவில்லை... வருந்துகிறேன், தோழர் சீனியர் லெப்டினெண்ட், அது சுத்தம் செய்யப்படவில்லை...''

''எங்கே புறப்பட்டுப் போகிறாய்?''

''திரும்ப உருவாக்குவதற்காக, மாஸ்கோவுக்கு... நாங்கள் விரைவாகப் போய்க் கொண்டிருந்தோம், வழியில் ஏராளமான பிறரைக் கடந்து வந்தோம். அவர்களுக்கு நான் பொறுப்பு ஏற்றுக் கொண்டேன், தோழர் சீனியர் லெப்டினெண்ட், அவர்களை அப்பால் கூட்டிச்செல்ல... மாஸ்கோவில் நின்று சண்டையிடுவோம் என்று ஆட்கள் சொல்கிறார்கள். நாங்கள் இப்போது புறப்படுவோம்... இங்கே சுற்றிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. ஜெர்மானியர்கள் சீக்கிரமே இங்கே வந்து விடுவார்கள்... உங்கள் சமையல் பாத்திரத்தில் ஏதாவது சாப்பிட எங்களுக்குக் கிடைக்குமா, தோழர் சீனியர் லெப்டினெண்ட்?''

இலேசாக அம்மைத் தழும்பு விழுந்த போர்வீரன் கபடமற்ற முறையில் ஓடிவந்ததை ஒப்புக் கொண்டது குறிப்பாக அச்சுறுத்துவதாக இருந்தது. எல்லாரது கவனத்தையும் அவன்தான் கவர்ந்தான்.

அவனது 'பிரிவை' மீண்டும் ஒருமுறை நோக்கினேன். அவர்களில் யாருமே நீண்ட நாள்களாக முகங்கழுவவோ சவரம் செய்து கொள்ளவோ இல்லை. ஆகவே அவர்களது முகங்கள் ஒரே சாம்பல் நிறமாக இருந்தன. தங்களது காலணிகளில் ஒட்டியிருந்த சகதியை நீக்குவது பற்றி அவர்கள்

கவலைப்படவில்லை. அவர்களது மேற்கோட்டுகளில் அந்தஸ்தைக் குறிக்கும் பட்டைகளை யாரும் அணிந்திருக்கவில்லை.

''நீங்கள் எல்லாருமே போர்வீரர்களா?'' எனக் கேட்டேன்.

சங்கடமான இடைவேளை நிலவியது. பிறகு அவர்களில் ஒருவன் எழுந்து நின்றான். சோகமும் ஒளியற்ற கண்களும் கொண்ட இருபத்திரண்டு வயது மதிக்கத்தக்க இளைஞன் அவன்.

''நான் ஒரு லெப்டினெண்ட், பிளாட்டூன் கமாண்டர்,'' என்றான்.

எனது முகம் மாறியதா இல்லையா என்று எனக்குத் தெரியாது, ஆனால் உள்ளுக்குள்ளாக அடிபட்டது போல வலியால் பின்வாங்கினேன்: ஒரு பிளாட்டூன் கமாண்டர், ஒரு லெப்டினெண்ட், செஞ்சேனையின் ஓர் அதிகாரி, போர் முனையிலிருந்து அநுபவம் வாய்ந்த போர்வீரனுடைய தலைமையில் எங்ஙனம் ஓடி வர முடியும்?

அந்நேரத்தில் தப்பி வந்தவர்களின் முன்பாக சமையல்காரன் சூடான சூப்பு நிறைந்த பாத்திரத்தை வைத்தான்.

''அதைச் சாப்பிடுங்கள்,'' என்றான், ''இப்போது நீங்கள் எல்லாரும் சரியாகி விடுவீர்கள், உங்களது ஆட்களுடன் இருக்கிறீர்கள்... சாப்பிடலாமா!''

நான் கத்தினேன்:

''எழுந்திருங்கள்! லெப்டினெண்ட் பனமர்யோவ்! ஓடிப் போனவர்களைக் கைது செய்து அவர்களது ஆயுதங்களை வாங்குங்கள்!''

''நான் என்னுடைய துப்பாக்கியைத் தர மாட்டேன்,'' என்றான் அம்மைத் தழும்பு விழுந்த போர்வீரன்.

''பேசாதிரு! லெப்டினெண்ட் பனமர்யோவ், கட்டளையை நிறைவேற்றுங்கள்.''

நான் பேசி முடிப்பதற்கு முன்பாகவே எனக்குச் சற்று அப்பால் எதையோ பனமர்யோவ் நோக்கியவாறு தனது புருவங்களை வியப்பில் உயர்த்தியிருந்ததைக் கவனித்தேன்.

நான் சுற்றிலும் பார்த்தேன். இராணுவ மேற்கோட்டுகளில் ஒரு டஜன் ஆட்கள், சிலர் துப்பாக்கியுடனும் சிலர் இல்லாமலும், பட்டாளியன் சமையல் பிரிவை நோக்கித் தள்ளாடியவாறு களைப்புடன் சென்று கொண்டிருந்தார்

கள். அவர்களில் சிலர் தங்களது காலர்களைத் தூக்கிவிட்டுக் கொண்டும் கோட்டுப் பைகளில் கைகளை நுழைத்துக் கொண்டும் இருந்தார்கள். அந்த ஆட்கள் எனது பட்டாளியனைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பது தொலைவிலேயே தெளிவாகத் தெரிந்தது.

அவர்கள் எங்களிடம் வந்தார்கள்.

''இந்த ஆட்கள் யார்?'' என்று கேட்டேன்.

''சுற்றிவளைப்பை நாங்கள் உடைத்து விட்டோம், தோழர் சீனியர் லெப்டினெண்ட்.''

6

வழமை போல, அன்று நமது பட்டாளியன் இருப்பிடத்தைப் பார்வையிட்டேன்.

அன்று குளிரான, புயலடித்த நாள். பனி விழுந்து கொண்டிருந்தது, மெல்லியதாகவும் துளைப்பதாகவும், புல்லின் மீது பனி மணிகளாக விழுந்து உறைந்தது, உழப்பட்ட நிலத்தின் கடினமான பாகத்தில் சிறிய வெண்ணிற விளிம்புகளாகச் சேர்ந்து கொண்டிருந்தது. அது உணவு நேரம். மறைவான இடங்களில் — பாதி தோண்டப்பட்ட மறை குழிகளில் அல்லது தோண்டிப் போடப்பட்ட களிமண் குவியல்களுக்குப் பின்னே—ஆட்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

நிலத்திற்குள்ளாகச் சொருகப்பட்ட மண்வாரிகளின் வரிசையில் நடந்து போகையில் இதைச் செவிமடுத்தேன்:

''இல்லை, இளைஞர்களே, அவர்களை நீங்கள் எதிர்பார்க்கும் இடத்திலிருந்து அவர்கள் தாக்க மாட்டார்கள்... அது அவர்களது வழி அன்று, தங்களை எதிர்பார்த்த இடத்திற்குப் போவது...''

கரண்டிகள் கடகடத்தன. ஆட்களில் சிலர் குழியில், சிறிய மணற்குவியலுக்குப் பின்னே, சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

''சரி, பிறகு என்ன விரும்புகிறார்கள்?''

அம்மனிதனுடைய உச்சரிப்பிலிருந்து அவன் பேசியதை நான் அடையாளம் கண்டு கொண்டேன்—கேள்வி கேட்டவன் ஒரு கஸாக்.

''உங்களைச் சுற்றிப் போவார்கள், அவ்வளவுதான்...

பிறகு அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதைக் கண்டு பிடிப்பாய்...''

''அதன் பிறகு என்ன?'' அந்த கஸாக்கிடமிருந்து திரும்பவும் வந்தது.

அது யாருடைய மறைகுழி? அங்கே இருக்கும் கஸாக் யார்? ஒரு பெயர் பளிச்சென்று நினைவுக்கு வந்தது—பரம்பாயெவ். அது சரிதான், அவனது எந்திரத் துப்பாக்கிப் பிரிவு அங்கே இருந்தது. அல்லது அது கல்லியூலினா?.. அவர்கள் இருவரும் ஒரே பிரிவில் இருந்தனர். இங்கேயும் இந்த வேசிமகன்களுக்கு உணவு கொடுத்தார்கள்.

''பிறகு—சரணடைய வேண்டாம்,'' ஒரு புதிய குரல் ஒலித்தது. ''இல்லாவிடில்... அழிவுதான்.''

''காட்டில் ஒளிந்துகொள்ள முடியும். அவர்கள் காட்டிற்குப் பயப்படுகிறார்கள்.''

திரும்பவும் கரண்டிகள் மெதுவாகக் கடகடத்தன. சுற்றி வளைப்பை உடைத்துக்கொண்டு வந்த சிலர் எனது ஆட்களுடன் இங்கே சாப்பிட்டார்கள். மற்றொரு அறிமுகமில்லாத குரல் அமைதியைக் கலைத்தது:

''என்னுடைய உணவுப்பை அங்கே இருக்கிறது... எனது உணவுக் கிண்ணமும்...இப்போது போல நாங்கள் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம், திடீரென்று...''

''...திடீரென்று ஓட்டம் பிடித்தீர்கள், போக்கிரிகளே!'' என்று அவர்களது உரையாடலுக்குள்ளாகக் குறுக்கிட வேண்டும் என உணர்ந்தேன். ஆனால் ஓர் எண்ணம் என்னைத் தடுத்து நிறுத்தியது: புல்பத்தைக் குவியலால் கவனமாக மறைக்கப்பட்டிருந்த எந்திரத் துப்பாக்கியின் எஃகுக் குழாய் மின்னியதை நான் பார்த்தது அதிக தூரத்தில் இல்லை. எந்திரத் துப்பாக்கியாளன் ஒருவன் இங்கே கண்காணிப்பில் இருந்தான். தோட்டாவார் எந்திரத் துப்பாக்கியில் இருந்தது.

''எல்லாம் ஒழுங்காக இருக்கிறதா?'' எனக் கேட்டேன்.

''செய்ய வேண்டியதெல்லாம் குதிரையை அழுத்துவது தான், தோழர் பட்டாளியன் கமாண்டர்.''

நான் உட்கார்ந்து நீரின் மேற்பரப்பைக் குறி பார்த்துக் குதிரையை அழுத்தினேன். எந்திரத் துப்பாக்கி ஓசையிட்டு வேலை செய்யத் தொடங்கியது. மறைகுழிகள் தோண்டிய போது எந்தவிதமான சுடுதலையும் நாங்கள் இங்கே இன்ன

மும் மேற்கொள்ளவில்லை. எங்களது நிலையில் கேட்கப் பட்ட முதலாவது சுடுதல் இதுதான்.

யாரோ ஒருவன் குழியை விட்டுத் தாவினான்.

''அபாயம்! ஆயுதம் தூக்குக!'' என்று நான் கத்தினேன்.

நான் சொன்னதை உருச்சிதைந்த எதிரொலி போல உடனே கேட்டேன்:

''ஜெர்மானியர்கள்!''

குரல் விநோதமாகக் குழம்பியிருந்தது; அந்த ஆள் கத்த வில்லை, ஜெர்மானியர்கள் ஏற்கெனவே எங்களுக்கு மேலாக வந்து விட்டது போல வார்த்தையை மூச்சிழுத்தவாறு சொன்னான்.

அடுத்த கணம் யாரோ ஓடத் தொடங்கினான். மற்ற வர்கள் அவனைப் பின்தொடர்ந்தனர். அது எப்படி நேர்ந் தது என்பதைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. நொடிப் பொழுதில் எல்லாமே நடந்து விட்டன.

காடு அதிகத் தொலைவில் இல்லை, நூற்றைம்பதிலி ருந்து இருநூறு எட்டுகளுக்கு அப்பால். அவர்கள் அந்தத் திசையில் ஓடினார்கள்.

களிமண் மேட்டில் ஏறி நின்று அமைதியாக அவர் களையே நோக்கினேன்.

அருகே பயங்கர அவலம் கேட்டது:

''நில்லுங்கள்!''

ஏச்சுப் பிரவாகம் தொடர்ந்தது.

சத்தம் போட்ட அந்த எந்திரத் துப்பாக்கியாளன் பிலொகா எங்கிருந்தோ திடீரென்று தோன்றினான். என் னைக் கண்ட அவன் என்னை நோக்கி, எந்திரத் துப்பாக் கியை நோக்கி விரைந்தான். கடுமையான நேச உணர்வு எனக்குள்ளாக எழுந்தது. என்னை நோக்கி பிலொகா ஓடி வந்த அக்கணத்தில் அவனை நேசித்தது போல ஒரு பெண் ணை ஒருபோதும் நேசித்தது இல்லை.

முதலாவது நின்றது கல்லியூலின், பிரமாண்டமான ஆள், சிப்பங்கட்டும் தொழில் செய்தவன். தனது எந்திரத் துப்பாக்கியை அகன்ற தோள்களில் வைத்துக்கொண்டு அவ னால் சுலபமாக நடக்க முடியும். அவன் தலை குனிந்து கை களை மார்பில் வைத்து அழுத்தினான், ஊமையாக மன்னிப்

யைக் கோரியபோது அவனது கால்கள் ஏற்கெனவே அவனை என்னை நோக்கி, பிலொகாவுடன் வரவைத்தன.

அடுத்துத் திரும்பியவன் மூரின், கண்ணாடி அணிந்தவன், போருக்கு முன்னால் மாஸ்கோ இசைக் கல்லூரியில் முதுநிலைப் பட்டம் பயின்றான், இசை வரலாறு பற்றிய கட்டுரைகளை எழுதினான். ஆனால் யாரோ அவனை முழங்கையால் இடித்து பக்கத்திலிருந்து காட்டைச் சுட்டிக்காட்ட, முயல் போலத் திரும்பவும் ஓடினான் அவன். பிறகு சுற்றித் திரும்பி மறுபடியும் நின்றான். மெலிவான கழுத்தில் இருந்த அவனது வியர்வை வடிந்த முகம் திரும்பத்திரும்ப முதலில் என்னையும் பிறகு காட்டையும் நோக்கியது. இறுதியாகத் தனது விரல்களால் கண்ணாடியை அவசரமாகத் துடைத்துக்கொண்டு பின்னுக்கு, என்னை நோக்கி ஓடிவந்தான்.

அவர்கள் எல்லாருமே ஒரே பிரிவிலிருந்து, ஒரே எந்திரத் துப்பாக்கிச் செக்ஷனிலிருந்து வந்தவர்கள்... இப்போது காணாமற் போன ஒரே ஆள் — அவர்களுடைய கமாண்டர், சார்ஜெண்ட் பரம்பாயெவ்.

என்னைப் போலவே கஸாக் ஆன பரம்பாயெவ் எவ்வளவு திறமையாக எந்திரத் துப்பாக்கியைப் பிரிக்கவும் சேர்க்கவும் செய்தான், மெக்கானிக் போல எவ்வளவு விரைவாக நிறுத்தத்தின் காரணங்களை ஊகித்துவிட்டான் என்பதைக் கவனித்தது அடிக்கடி எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. ''கஸாக்கியர்களாகிய நாங்களும் ருஷ்யர்களைப் போல தொழில்நுட்ப அறிவு படைத்தவர்களாகிக் கொண்டு வருகிறோம்,'' என்று பரம்பாயெவைப் பார்த்த போது சில சமயங்களில் எண்ணினேன்.

ஆனால் இப்போது என் முகத்தில் விழிப்பதற்குப் பயந்து அவன் அமைதியாக நழுவிப் போயிருக்க வேண்டும்...

திரும்பி வந்த அந்த ஆட்களை மௌனமாகச் சந்தித்தேன். எனது போராளிகள் நேர்மையானவர்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் இப்போது வெட்கத்தால் குமைந்து போனார்கள்... சித்திரவதைச் செய்கின்ற இந்த உணர்வுக்கு மறுமுறையும் பலியாகிக் கொண்டிருந்த அவர்களை நான் எங்ஙனம் தடுப்பது, அவமானத்திலிருந்து அவர்களை எங்ஙனம் காப்பாற்றுவது? திரும்பவும் அவர்கள் ஓடிப்போக மாட்டார்கள், பிறகு அது எப்படி நிகழ்ந்துவிட்டது என்பதைப் புரிந்துகொள்வது சிரமமாக இருக்காதா

என்று எப்படி என்னால் நிச்சயப்படுத்த முடியும்? அவர்களை நான் என்ன செய்வது?

அவர்களை ஊக்குவிப்பதா? பேசுவதா? கத்துவதா? கைது செய்வதா?

சொல்லுங்கள் எனக்கு, நான் என்ன செய்திருக்க வேண்டும்?

என்னை மதிப்பிடுங்கள்!

1

தரையை நோக்கியவாறு எனது மறைகுழியில் உட்கார்ந்திருந்தேன், எனது கைகளின் மீது தலை கவிழ்ந்து கிடந்தது, இது போல (பௌர்ஜான் மொமீஷ்-உலி எப்படி அவர் உட்கார்ந்திருந்தார் என்பதைக் காட்டினார்), எனது சிந்தனைகளில் முற்றிலும் மூழ்கிக் கிடந்தேன்.

''உள்ளே வரலாமா, தோழர் பட்டாளியன் கமாண்டர்?''

எனது தலையை நிமிர்த்தாமல் தலையசைத்தேன்.

எந்திரத் துப்பாக்கி கம்பெனியின் அரசியல் அதிகாரி ஜால் முகம்மது பச்ஜானவ் உள்ளே வந்தான்.

''அக்சகால்,'' என்று கஸாக்கிய மொழியில் மெதுவாகச் சொன்னான்.

சொல்லை மொழிபெயர்த்தால் 'அக்சகால்' என்பது 'சாம்பல் தாடி' எனப் பொருள்படும். இனத்தில் மூத்தவரை, தந்தையைக் குறிக்கும் எங்களது பெயர். பச்ஜானவ் சில நேரங்களில் என்னை அப்படி அழைத்தான்.

அவனை உற்று நோக்கினேன். அவனது வட்டமான, நல்லியல்பு கொண்ட முகம் பெரிதும் கவலையுற்றிருந்தது.

''அக்சகால்... கம்பெனியில் அசாதாரணமான ஒன்று நிகழ்ந்து விட்டது. சார்ஜெண்ட் பரம்பாயெவ் தன்னைத் தானே கையில் சுட்டுக்கொண்டான்.''

''பரம்பாயெவா?''

''ஆமாம்...''

என் இதயத்தை ஏதோ அழுத்துவது போலக் காணப்பட்டது. உடனடியாக எல்லாமே புண்பட்டன: நெஞ்சு, கழுத்து, வயிறு. பரம்பாயெவ் என்னைப் போலவே ஒரு கஸாக். திறமைவாய்ந்த கஸாக், எந்திரத் துப்பாக்கிப் பிரிவின் கமாண்டர், என்னிடம் திரும்பி வராத அதே ஆள்.

''அவனை என்ன செய்தாய்? கொன்று விட்டாயா?''

''இல்லை... கட்டுகள் போட்டேன்...''

''பிறகு என்ன?''

''கைது செய்து உங்களிடம் கொண்டு வந்திருக்கிறேன்.''

''எங்கே அவன்? அவனை உள்ளே கூட்டி வா!''

ஆக... முதலாவது துரோகி, தனக்குத்தானே காயம் ஏற்படுத்திக் கொண்ட முதல் ஆள் என் பட்டாளியனில் தோன்றிவிட்டான். எல்லா மக்களிலும்... பரம்பாயெவ்!

அவன் மெதுவாக உள்ளே வந்தான். முதலில் அவனை நான் அடையாளம் காண முடியவில்லை. அவனது முகம் சாம்பல் நிறமாகவும் வீங்கிப் போயும் உயிரற்று முகமூடி போல இருந்தது. பைத்தியக்காரர்களிடையேதான் அத்த கைய முகங்களைப் பார்க்கலாம். தொட்டில் போட்டது போல தனது கட்டுப்போடப்பட்ட இடக்கையை வளைத்து வைத்திருந்தான். காயங்கட்டும் துணி வழியாக ரத்தம் கசிந் திருந்தது. அவனது வலக்கை வளைந்து போய், ஆனால் எனது பார்வையைச் சந்தித்த போது சல்யூட் செய்யப் போதுமான துணிச்சலை அவன் வரவழைத்துக் கொள்ள வில்லை. அவனது கை தொங்கியது; பயந்துபோனான்.

''சொல்லு!'' என்றேன் கடுப்பாக.

''அது எப்படி ஏற்பட்டதென்று உண்மையில் எனக்கே தெரியாது, தோழர் பட்டாளியன் கமாண்டர். அது விபத்து... எப்படி ஏற்பட்டதென்று உண்மையில் எனக்கே தெரி யாது.''

இந்த வாக்கியத்தைப் பிடிவாதமாக முனகிக் கொண் டிருந்தான்.

''சொல்லு.''

அவனை அசிங்கமாகத் திட்டுவேன் என்று அவன் என்னை எதிர்பார்த்திருக்க வேண்டும், ஆனால் நான் திட்ட வில்லை. திட்டுவதில் எந்த அருத்தமும் இல்லாத நேரங் களும் உண்டு. காட்டிற்குள்ளாக தான் ஓடிக் கொண்டிருந்த போது தடுக்கிக் கீழே விழ, துப்பாக்கி அதுவாகவே வெ டித்து விட்டதாக பரம்பாயெவ் விளக்கம் சொன்னான்.

''அது உண்மையில்லை!'' என்று சொன்னேன். ''நீ ஒரு கோழை! காட்டிக்கொடுத்தவன்! உன்னைப் போன்ற ஆட்களை நமது நாடு களையெடுக்கும்.''

எனது கடிகாரத்தை நோக்கினேன். ஏறத்தாழ மணி மூன்று.

''லெப்டினெண்ட் ரகீமவ்!''

ரகீமவ், பட்டாளியனின் தலைமையிட அதிகாரி, எழுந்து நின்றான்.

''லெப்டினெண்ட் ரகீமவ்! உடனடியாக இங்கு வந்து ஆஜராகுமாறு பிரைவேட் பிலொகாவிடம் சொல்லுங்கள்.''

''ஆகட்டும், தோழர் பட்டாளியன் கமாண்டர்.''

''இன்னும் ஒன்னே கால் மணி நேரத்தில், பதினாறு மணிக்கு, இங்கே காட்டின் விளிம்பில் பட்டாளியன் அணி வகுக்க வேண்டும்... அவ்வளவுதான். நீங்கள் போகலாம்,'' என்று உத்தரவிட்டேன்.

''என்னை என்ன செய்யப் போகிறீர்கள்? என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என பரம்பாயெவ் அவசரமாகத் தொடங்கினான், அதைச் சொல்ல அவனுக்கு நேரமில்லாதது போல.

''பட்டாளியனுக்கு முன்பாக சூடப்படுவாய்!''

திடீரென்று பரம்பாயெவ் தனது முழங்காலில் நின்றான். அவனது கைகள், காயம் படாததும் கட்டுப் போடப் பட்டதும் என்னை நோக்கி நீண்டன.

''தோழர் பட்டாளியன் கமாண்டர்... நான் உங்களுக்கு உண்மையைச் சொல்வேன்! தோழர் பட்டாளியன் கமாண்டர், அதை நானாகவே செய்து கொண்டேன்... வேண்டுமென்றுதான் அதைச் செய்தேன்.''

''எழுந்திரு!'' என்றேன். ''புழுவைப் போலக் கேவலமாக நடந்துகொள்ளாமல் முயன்று சா.''

''மன்னியுங்கள்...''

''எழுந்திரு!''

அவன் எழுந்திருந்தான்.

''ஆ, பரம்பாயெவ், பரம்பாயெவ்!'' என்றான் பச்ஜானவ் மெதுவாக. ''என்ன நினைத்துக் கொண்டிருந்தாய் என்பதை எனக்குச் சொல்.''

அதை நானே சொன்னது போலக் கண நேரத்திற்குக் காணப்பட்டது. நான் அமுக்க முயன்று கொண்டிருந்த வார்த்தைகள் என்னையும் அறியாமல் உதடுகளை விட்டு வெடித்தன போல இருந்தது.

''நான் நினைக்கவில்லை,'' பரம்பாயெவ் முணுமுணுத்தான். ''நான் நினைக்கவில்லை... அது எப்படி நடைபெற்றது என்பது எனக்கே தெரியவில்லை.''

மூழ்குகிற மனிதன் வைக்கோலைப் பிடித்தது போல அந்தத் தொடரையே பிடித்தான்.

''பொய் பேசாதே, பரம்பாயெவ்!'' என்றான் பச்ஜா னவ். ''பட்டாளியன் கமாண்டரிடம் உண்மையைச் சொல்.''

''அதுதான் உண்மை, அதுதான் உண்மை... ஆனால் நான் ரத்தத்தைப் பார்த்த பொழுது, எனக்கு உணர்வு திரும்பியது—ஏன் அதைச் செய்தேன்? சாத்தான் என்னைத் தூண்டி விட்டான்... என்னைச் சுட்டு விடாதீர்கள், மன்னி யுங்கள் என்னை, தோழர் பட்டாளியன் கமாண்டர்!''

அக்கணத்தில் உண்மையாக அவன் மெய்யைச் சொல் லிக் கொண்டிருக்கலாம். அவன் சொன்னபடி அது எதார்த் தமாக நடந்திருக்கலாம், கணநேரச் சித்தபிரமை, அச்சத் தினால் அழுத்தப்பட்ட ஆன்மாவின் கணநேரக் கோர விபத்து.

ஆனால் போராட்டக் களத்திலிருந்து ஆட்கள் இப் படித்தான் ஓடுகிறார்கள், தங்களது நாட்டுக்கு இப்படித் தான் துரோகிகளாக மாறுகிறார்கள், பிறகோ எப்படி எல் லாம் நடைபெற்றன என்பதை அடிக்கடி புரிந்துகொள்ள முடியாமல் போகிறார்கள்.

நான் பச்ஜானவிடம் சொன்னேன்:

''பிரிவின் கமாண்டராக பிலொகா பதவி ஏற்பான். அவனது சொந்தப் பிரிவு, யாருடன் வசித்தானோ அந்த மக்கள், யாரிடமிருந்து ஓடினானோ அந்தப் பிரிவு தண் டனையை நிறைவேற்றும்...''

பச்ஜானவ் என்னிடம் குனிந்து கிசுகிசுத்தவாறு சொன் னான்:

''அச்சகால், நமக்கு உரிமை இருக்கிறதா?''

''ஆமாம்!'' என்று பதிலளித்தேன். ''பின்னர், யாருக் கெல்லாம் நான் சொல்லவேண்டி இருக்குமோ, அவர்களுக் குப் பதில் சொல்வேன். ஆனால் இப்போதிலிருந்து ஒரு மணி நேரத்தில் சொன்னது போல நான் செய்வேன். நீங் கள் அறிக்கையைத் தயாரியுங்கள்.''

விரைந்து பெருமூச்சு விட்ட பிரைவேட் பிலொகா மறை குழிக்கு வந்தான். புருவங்கள் வியப்பில் சுழித்து, எப்படியோ அருவருப்பாக ஆஜர் கொடுத்தான்.

''எதற்காக உன்னை நான் கூப்பிட்டனுப்பினேன் என்று உனக்குத் தெரியுமா?'' எனக் கேட்டேன்.

''தெரியாது, தோழர் பட்டாளியன் கமாண்டர்.''

''அந்த ஆளைப் பார்... அவனை உனக்கு அடையாளம் தெரிகிறதா?''

பரம்பாயெவைச் சுட்டிக் காட்டினேன்.

''என்ன!..'' பிலொகா தொடங்கினான். அவனது குரலில் வெறுப்பும் துயரமும் கலந்திருந்தன. ''ஆமாம், உன் மூச்சியே உன்னை ஒரு வேசிமகன் என்பதைக் காட்டுகிறது!''

''அவனைச் சுட்டுக் கொல்லுங்கள்,'' என்று பிலொகாவிடம் சொன்னேன். ''உங்களுடைய பிரிவு...''

பிலொகா வெளிறிப் போனான். பிறகு நீண்ட பெருமூச்சுடன் பதிலளித்தான்:

''ஆகட்டும், தோழர் பட்டாளியன் கமாண்டர்.''

''உங்களைப் பிரிவு கமாண்டராக நியமிக்கிறேன். அரசியல் அதிகாரி பச்ஜானவுடன் உங்களது ஆட்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.''

பரம்பாயெவிடம் சென்று அவனது பதவி அந்தஸ்துப் பட்டையையும் செஞ்சேனை நட்சத்திரத்தையும் கிழித்து எடுத்தேன்.

அவன் அங்கேயே நின்றான், அவனது கைகள் துவண்டு கிடந்தன, முகம் அசைவற்றும் சாம்பல் நிறமாகவும் இருந்தது.

2

குறிப்பிட்ட நேரத்தில், பதினாறு மணிக்கு, மைதானத்தின் மூன்று பக்கங்களில் அணிவகுந்து நின்ற பட்டாளியனிடம் வெளியே சென்றேன். திறந்த பக்கத்தின் மையத்தில், எல்லாருடைய பார்வையிலும் இருந்த பொருளாகிய பரம்பாயெவ் நின்றான். இடைவாரை இல்லாமல் நீண்ட அங்கியை அணிந்தவாறு நின்றான். அவன் ஆட்களைப் பார்த்தவாறு நின்றான்.

''பட்டாளியன், அட்டென்-சன்!'' ரகீமவ் உத்தரவிட்டான்.

அமைதியின் ஊடாக விநோதமான ஓசை திரும்ப ஒலித்து கூர்மையாக அடங்கியது, கமாண்டருடைய காதுகள் அதைக் கேட்கத் தவறவில்லை:ஒன்றே ஒன்று மட்டுமே இருந்தது போல துப்பாக்கிகள் அசைந்து நின்றன.

நொடிப் பொழுதுக்கு எனது அழுத்தப்பட்ட ஆன்மாவில் மகிழ்ச்சிக் கீற்று பளிச்சிட்டது. இல்லை, இது வெறுமனே இராணுவ அங்கிகள் அணிந்த கும்பல் அன்று —அவர்கள் போர்வீரர்கள், படையினர், பட்டாளியன்.

''உங்கள் உத்தரவுப்படி பட்டாளியன் அணிவகுத்து நிற்கிறது!'' ரகீமவ் தெளிவான குரலில் அறிவித்தான்.

அந்தக் கணத்தில், அந்த ருஷ்யப் புல்வெளியில் இடைவாரும் செஞ்சேனை நட்சத்திரமும் இல்லாமல், தனது பிரிவினருக்கு முன்னால் கைக்கட்டுடன் கேவலமாக ஒரு மனிதன் நின்றபோது, ஒவ்வொரு வார்த்தையும், அறிக்கையின் முறையான வார்த்தைகள் கூட, பதட்டமாகவும் கவனத்தை ஈர்ப்பதாகவும் இருந்தன.

''பிரிவு கமாண்டர் பிலொகா, உங்களது பிரிவுடன் முன்னேறுங்கள்!'' என உத்தரவிட்டேன்.

அமைதியாக அவர்கள் களத்தைக் கடந்தார்கள். முதலாவது வந்தவன் பிலொகா, சராசரி உயரமுள்ளவன்; அவனுக்கு அருகே ஆறடி உயரமுள்ள கல்லியூலின் வந்தான்; அவர்களுக்குப் பின்னே மூரினும் முதல்நாள் எந்திரத் துப்பாக்கியில் பணிபுரிந்த தொப்ரியக்கோவும் வந்தார்கள். அவர்கள் மிகவும் கண்டிப்பாக நடந்தார்கள், நடையில், வரிசையில், பக்கவாட்டில் வீசிய காற்றிலிருந்து முகங்களைக் கூடத் திருப்பாமல். பட்டாளியன் பார்த்ததன் காரணமாக அவர்கள் முடிந்த வரையில் நிமிர்ந்து இருக்க முயன்றார்கள்.

ஆனால் அவர்கள் கிளர்ச்சியுற்றவாறு இருந்தார்கள்.

பிலொகா உத்தரவு கொடுத்தான்:

''செக்ஷன், ஹால்ட்!''

ஒரே இயக்கத்தில் அவர்களது துப்பாக்கிகள் தோள்களிலிருந்து பாதங்களுக்கு வந்தன; அறிவிக்க மறந்தபடி அவன் என்னையே நோக்கினான்.

சல்யூட் செய்வதற்காக நானே எனது கையை உயர்த்தியபடி அவனை நோக்கி ஓர் எட்டு எடுத்துவைத்தேன். அவன் அதே போன்று பதிலளித்தான். தனது பிரிவைக் கொண்டுவந்தான் என்று ஒருவகையில் அருவருப்பாக விதிகளின்படி அறிவித்தான்.

அத்தகைய நேரத்தில் குறிப்பாக இதெல்லாம் என்னவென்று நீங்கள் வியப்படையக்கூடும். நாங்கள் ராணுவத்

தினர், ராணுவப் பிரிவினர் என்ற உண்மையை கடைசி விவரம் வரை அத்தகைய நேரத்தில் தெளிவாக நான் வலியுறுத்த விரும்பினேன்.

பிரிவு ஒரே வரிசையாக நின்று, உத்தரவுப்படி பின்னுக்குத் திரும்பி அணிவகுப்பு மைதானத்தை நோக்கியது.

நான் தொடங்கினேன்:

''தோழர் படையாட்களே, அதிகாரிகளே! உங்களுக்கு முன்னால் நின்று கொண்டிருக்கக்கூடிய இந்த ஆட்கள், எச்சரிக்கை ஒலியெழுப்பி 'அபாயம்!' உத்தரவிட்ட போது ஓட்டம் பிடித்தார்கள். ஒரு நிமிடத்திற்குப் பிறகு, உணர்வு பெற்றவர்களாகத் திரும்பி வந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவன் மட்டும் திரும்பவில்லை—அவர்களுடைய கமாண்டர்... தானாகவே கையில் சுட்டுக் கொண்டான், போர் முனையிலிருந்து போய்விட வேண்டும் என்ற நம்பிக்கையில். இந்தக் கோழை, தனது நாட்டிற்குத் துரோகம் இழைத்தவன், எனது உத்தரவுப்படி சுடப்படவிருக்கிறான். அதோ நிற்கிறான்!''

பரம்பாயெவ் பக்கம் திரும்பி, எனது விரலால் அவனை சுட்டிக்காட்டினேன். அவனது கண்கள் என்மீது நிலைத்திருந்தன. நம்பிக்கையோடு என்னை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தான்.

நான் தொடர்ந்து பேசினேன்:

''அவன் வாழ்க்கையை விரும்புகிறான், காற்றை, பூமியை, வானத்தை அநுபவிக்க விரும்புகிறான். ஆகவேதான் தீர்மானித்தான்: நீங்கள் முன்னேறிச் சென்று செத்து ஒழியுங்கள், நான் வாழ விரும்புகிறேன். ஆனால் இந்த முறையில் தான் ஒட்டுண்ணிகள் வாழ்கின்றன, யாருடைய முதுகிலோ அமர்ந்து.''

நான் கூறுவதைக் கேட்கையில் அவர்களிடம் எந்தவிதக் குழப்பமும் இல்லை.

என்னை எதிர்நோக்கி நின்ற நூற்றுக்கணக்கான ஆட்களும் தாங்கள் எல்லாரும் உயிர்வாழ வரவில்லை, சாவு தனது பங்கை எடுத்துக்கொள்ளும் என்பதை அறிந்திருந்தார்கள், ஆனால் அந்தக் கணத்தில் அவர்கள் எல்லாருமே ஒரு குறிப்பிட்ட எல்லைக்கோட்டைத் தாண்டியது போல நின்றார்கள். அப்போது அவர்களது இதயங்களை நிறைத்து நின்ற எண்ணத்தை நான் வெளியிட்டேன்.

''ஆமாம், போர் தனது பங்கைப் பெற்றுக்கொள்ளும். ஆனால் யார் போராளிகளைப் போல மடிகிறார்களோ அவர்களை அவர்களுடைய நாடு மறக்காது. அவர்களது மகன்களும் மகள்களும் பெருமையோடு சொல்வார்கள்: 'எங்களுடைய அப்பா மாபெரும் தேசபக்தப் போரின் வீரர்'. அவர்களது பேரக்குழந்தைகளும் கொள்ளுப்பேரக் குழந்தைகளும் இந்த வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்வார்கள். ஆனால் நாம் எல்லாருமா சாகப் போகிறோம்? இல்லை. சாவதற்காகப் போர்வீரன் சண்டைக்குப் போவதில்லை, எதிரியைக் கொல்லத்தான். யார் போர்வீரனான தனது கடமையை நிறைவேற்றிவிட்டு வீடு திரும்புகிறானோ அவனுங்கூட தேசபக்தப் போரின் வீரன் என்று அழைக்கப்படுவான். வீரன்! எவ்வளவு பெருமை, எவ்வளவு இனிமையாக ஒலிக்கிறது! நேர்மையான போர்வீரர்களாகிய நாங்கள் வெற்றிக் கனிகளைச் சுவைப்போம், அதே வேளை நீ... (பரம்பாயெவ் பக்கம் மீண்டும் திரும்பினேன்) நீ இங்கே அழிந்து, அழுகிப்போகிற மாமிசமாக, மதிப்பின்றி மறக்கப்படுவாய். உனது குழந்தைகள் உன்னை வெறுப்பார்கள்.''

''என்னை மன்னியுங்கள்,'' பரம்பாயெவ் கஸாக்கிய மொழியில் மெதுவாகச் சொன்னான்.

''என்ன? உனது குழந்தைகள் உனக்கு நினைவிருக்கிறது, இல்லையா? நீ அவர்களை துரோகியின் குழந்தைகளாக ஆக்கிவிட்டாய். உன்னைப் பற்றி அவர்கள் வெட்கப்படுவார்கள். தங்களது தந்தை நீதான் என்ற உண்மையைக் கூட மறைப்பார்கள். உன் மனைவி ஒரு கோழையின், துரோகியின், படையினர்க்கு முன்னே சுடப்பட்டவனுடைய விதவையாக இருப்பாள். உனது மனைவியாக எப்போது அவள் தீர்மானித்தாளோ அந்த மகிழ்ச்சியற்ற நாளை கசப்புடன் நினைவு வைத்திருப்பாள். ஊரில் உள்ள உனது ஆட்களுக்கு உன்னைப் பற்றி நாங்கள் எழுதுவோம். நாங்கள் உன்னைக் கொல்ல வேண்டியிருந்தது என்பதை அவர்கள் எல்லாரும் அறிந்து கொள்ளட்டும்...''

''என்னை மன்னியுங்கள்... சண்டைக்கு அனுப்புங்கள் என்னை...''

பரம்பாயெவுடைய குரல் கிசுகிசுப்புக்குச் சற்று மேலாக

வே இருந்தது, எனினும் அங்கிருந்த எல்லாரும் அதைக் கேட்டு கொண்டிருந்தார்கள் என்று எனக்குத் தெரியும்.

''முடியாது!'' என்று கூறினேன். ''நாங்கள் எல்லாரும் போய் சண்டையிடுவோம். பட்டாளியன் முழுக்கச் சண் டைக்குப் போகும்! அணியினின்றும் நான் அழைத்த இந்தப் போர்வீரர்களை நீ பார்க்கிறாயா? அவர்களை அடையா ளம் தெரிகிறதா? உனது கட்டளையின் கீழ் இருந்த பிரிவு தான்... அவர்கள் உன்னோடு ஓடிப் போனார்கள், ஆனால் திரும்பி வந்து விட்டார்கள். சண்டைக்குப் போகிற மதிப்பு அவர்களுக்கு மறுக்கப்படவில்லை! அவர்களோடு ஒரே கூரையின் கீழ் நீ வாழ்ந்தாய், ஒரே பாத்திரத்தில் சாப் பிட்டாய், ஒரே அங்கியின் கீழ் அவர்களுடன் தூங்கினாய், ஒரு நேர்மையான போர்வீரனைப் போல. அவர்கள் சண் டைக்குப் போவார்கள். பிலொகா, கல்லியூலின், தொப்ரி யக்கோவ், மூரின்—எல்லாருமே சண்டைக்குப் போவார் கள், குண்டுகளையும் தோட்டாக்களையும் சந்திப்பார்கள். ஆனால் அவர்கள் முதலில் உன்னைச் சுடுவார்கள், ஏனெனில் நீ ஒரு கோழை, எதிரிக்குப் பயந்து தனிமைப்பட்டாய்!''

பிறகு நான் கட்டளையிட்டேன்:

''செக்ஷன், பின்னுக்குத் திரும்புக!''

போர்வீரர்கள் திடீரென்று முகம் வெளிறிப் பின்னுக் குத் திரும்பினார்கள். எனது முகத்திலும் ரத்த நாளங்கள் புடைத்ததை நான் உணர்ந்தேன்.

''செக்ஷன் கமாண்டர் பிலொகா! துரோகியினுடைய அங்கியைக் கழற்று!''

பிலொகாவும் பரம்பாயெவிடம் சென்றான். கட்டுப் போடப்படாத தனது வலக்கரத்தை உயர்த்தி பரம்பாயெவ் உருக்குகளைப் பிரிக்கத் தொடங்கியதைக் கண்டேன். அது என்னை வியப்பில் ஆழ்த்தியது. மற்ற எல்லாரைக் காட்டி லும் அதிகம் வாழ ஆசைப்பட்ட மனிதன் இப்போது உயி ருக்கு விருப்பமின்றி இருந்தான். சாவைப் பணிவுடன் ஏற் றுக் கொண்டான். பிலொகா அங்கியைப் பக்கவாட்டில் எறிந்து விட்டு தனது அணிக்குத் திரும்பினான்.

''துரோகியே, பின்னுக்குத் திரும்பு!''

கடைசி முறையாகக் கெஞ்சுவது போல என்னைப் பார்த்துவிட்டு, பரம்பாயெவ் பின்னுக்குத் திரும்பினான்.

நான் கட்டளையிட்டேன்:

''கோழையை, தனது நாட்டுக்குத் துரோகம் செய்த வனை, உறுதிமொழியை மீறியவனை, செக்ஷன்...''

துப்பாக்கிகள் நிலைக்கு உயர்ந்தன, ஆட்களுடைய தோள்களுக்கு மேலாக இருந்தன. ஆனால் ஒரே ஒரு துப் பாக்கி மட்டும் நடுங்கியது... மூரின் பலமாக நடுங்கிக் கொண் டிருந்தான், அவனது உதடுகள் வெளிறிப்போய் விட்டன.

திடீரென்று பரம்பாயெவுக்காகச் சொல்ல முடியாத வாறு வருத்தப்பட்டேன்.

3

மூரினுடைய கைகளில் நடுங்கிக் கொண்டிருந்த துப் பாக்கி உரக்கக் கத்துவதுபோலக் காணப்பட்டது: ''அவனை மன்னியுங்கள், அவன் மீது கருணை காட்டுங்கள்!''

சண்டையில் இன்னமும் ஈடுபட்டிராத ஆட்கள், கோ ழைக்கு எதிராக இன்னமும் மனத்தைக் கெட்டியாக்கிக் கொள்ளாதவர்கள், 'சுடுங்கள்!' என்ற வார்த்தையை நான் உச்சரிப்பதற்காகப் பதட்டத்தோடு காத்திருந்தவர்கள், என்னிடத்தில் இப்படிக் கெஞ்சுவது போலும் காணப்பட் டார்கள்: ''அதைச் செய்ய வேண்டாம், அவனை மன்னி யுங்கள்!''

காற்றுக்கூட உயிரற்றுப் போனதாகக் காணப்பட்டது, அந்த அமைதி வேண்டுகோளை நான் கேட்க விரும்பியது போலக் காற்றும் சந்தடி செய்யாதிருந்தது.

மற்றவர்களைவிட அதிக உயரமாக இருந்த கல்லியூ லினின் அகன்ற முதுகைப் பார்த்தேன். உத்தரவை நிறை வேற்ற அவன் தயாராக இருந்தான். கஸாக்காகிய அவன், சில மணிகளுக்கு முன்னால் அவனது நெருக்கமான நண் பனாக இருந்த மற்றொரு கஸாக்கை குறிபார்த்தபடி நின் றான். அவனது முதுகுகூட என்னிடம் கெஞ்சுவது போலக் காணப்பட்டது: ''என்னை இதைச் செய்யவைக்க வேண் டாம், அவனை மன்னியுங்கள்!''

பரம்பாயெவ் பற்றி நான் அறிந்திருந்த நல்லன எல்லா வற்றையும் நினைவுகூர்ந்தேன்: ஒரு துப்பாக்கிக் கம்மியனின் திறமையுடன் தனது எந்திரத் துப்பாக்கியை எப்படிப் பிரிக்க வும் சேர்க்கவும் செய்தான், ரகசியமாக அவனைப் பற்றி எப்படிப் பெருமைப்பட்டேன், கஸாக்கியர்களும் எந்திர

வியலாளர்களாக மாறிக்கொண்டு வருகிறார்கள் என எண்ணியதையும் நினைத்துப் பார்த்தேன்.

...நான் மனிதப் பிறவி, விலங்கு இல்லை. ஆகவே சத்தம் போட்டேன்:

''ஸ்டாண்டு அட் ஈஸ்!''

துப்பாக்கிகள் கீழே வைக்கப்பட்டன போன்று காணப்படவில்லை, வார்ப்பிரும்பால் செய்யப்பட்டது போல அவை தரையில் விழுந்தன. ஒவ்வொருவர் இதயத்திலிருந்தும் சுமை இறக்கப்பட்டது.

''பரம்பாயெவ்!'' நான் கத்தினேன்.

அவன் திரும்பினான், இன்னமும் நம்ப முடியாத, ஆனால் ஏற்கெனவே உயிர் பெற்று ஒளிவிட்ட கண்களுடன்.

''உன் அங்கியை அணிந்துகொள்!''

''நானா?''

''போட்டுக் கொள். அணியில் உனது இடத்துக்குத் திரும்பு!''

குழப்பத்துடன் முறுவலித்தான், அங்கியை இரு கைகளாலும் பற்றி எடுத்து, அணிய முயன்றபோது சட்டைக் கைக்காகத் தடுமாறி தனது அணிக்கு ஓடினான்.

நல்லியல்பு கொண்ட மூரின், மூக்குக் கண்ணாடி அணிந்திருந்த மூரின், யாருடைய துப்பாக்கி நடுங்கியதோ அந்த மூரின், தனக்கு அருகே வந்து சேர்ந்து கொள்ளுமாறு ரகசியமாகச் சைகை செய்தான், பிறகு தோழமை உணர்வுடன் அவனது விலாவில் ஓர் இடி இடித்தான். பரம்பாயெவ் திரும்பவும் ஒரு போர்வீரன், ஒரு தோழன்.

அவனிடம் சென்று தோளில் தட்டினேன்:

''இப்போது சண்டையிடுவாயா?''

அவன் தலையாட்டிச் சிரித்தான். எல்லாரும் புன்னகை செய்தார்கள். எல்லாருமே இலகுவாக உணர்ந்தார்கள்...

நீங்களே மிகவும் இலகுவாக உணர்கிறீர்கள், இல்லையா? இந்தக் கதையைப் படிக்கிற வாசகர்கூட 'ஸ்டாண்டு அட் ஈஸ்!' என்ற உத்தரவைப் படிக்கும் போது நிம்மதிப் பெருமூச்சு விடுவார்.

ஆனால் உண்மையில் நடந்தது அதுவன்று. நான் உங்களிடம் சொன்ன ஒவ்வொன்றும் எனது கற்பனையில் மட்டுமே இடம் பெற்றது. காட்சி முழுவதும் என் மனத்தில் கனவு போலப் பளிச்சிட்டது.

உண்மை வேறுவிதமானது.

...மூரினுடைய துப்பாக்கி நடுங்கிக் கொண்டிருப்பதை நான் கவனித்த போது சத்தம் போட்டேன்:

''மூரின், நடுங்குகிறாயா?''

அவன் நடுக்குற்று தன்னை நிமிர்த்திக் கொண்டான். பின்னர் தனது துப்பாக்கியின் அடிப்பகுதியை உறுதியாகப் பற்றிப் பிடித்தான்.

எனது உத்தரவை திரும்பச் சொன்னேன்:

''கோழையை, தனது நாட்டுக்குத் துரோகம் செய்தவனை, உறுதிமொழியை மீறியவனை, செக்ஷன்... சுடு!''

கோழை சுடப்பட்டான்.

என்னை மதிப்பிடுங்கள்!

ஒருமுறை பாலைவனத்தில் நச்சுச் சிலந்தி ஒன்று நாடோடியாக இருந்த என் அப்பாவைக் கடித்து விட்டது. என் அப்பா பாலைவனத்தில் தனியாக இருந்தார், அவருடைய ஒட்டகத்தைத் தவிர கூட்டாளியாருமில்லை. சிலந்தியினுடைய நஞ்சு கொடியது. என் அப்பா கத்தியை உருவி, தனது உடம்பின் சதைத் துண்டை வெட்டினார், அங்குதான் சிலந்தி கடித்திருந்தது.

இப்போது அதே விஷயத்தை நானும் செய்தேன், கத்தியால் எனது சொந்த உடம்பிலிருந்து ஒரு துண்டை வெட்டியெடுத்தேன்.

நான் ஒரு மனிதப் பிறவி. என்னுள் உள்ள ஒவ்வொரு உணர்வும் உரக்கக் கத்திக் கொண்டிருந்தது: ''அதைச் செய்ய வேண்டாம், கருணை காட்டும், அவனை மன்னியும்!'' எனினும் நான் அவனை மன்னிக்கவில்லை.

ஒரு பட்டாளியனுக்குத் தலைமை தாங்குகிறேன். நான் அவர்களின் தந்தை. ஒரு மகனைக் கொன்றேன், ஆனால் எனக்கு முன்பாக நூற்றுக்கணக்கானோர் நின்றனர். துரோகிக்கு எந்தக் கருணையும் காட்ட முடியாது, காட்டக் கூடாது என்பதை அவர்களது ஆன்மாக்களில் நான் பதிப்பிக்க வேண்டியிருந்தேன்!

ஒவ்வொருவனும் அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்பினேன்: தயங்கினால், காட்டிக் கொடுத்தால் —உன்னை மன்னிக்க மாட்டார்கள், உன்னை மன்னிக்க அதிகம் விரும்பினால் கூட.

இதை எழுதிக் கொள்ளுங்கள், போர்வீரனுடைய சீரு

டையை அணிந்திருக்கின்ற அல்லது அணியப்போகிற ஒவ்வொருவரும் இதைப் படிக்கட்டும். அவர்கள் எல்லாரும் அறிந்துகொள்ளட்டும்: நீ சரியாக இருக்கலாம், இதற்கு முன்னால் நீ நேசிக்கப்பட்டும் பாராட்டப்பட்டும் இருக்கலாம்; ஆனால் நீ எந்த மனிதனாக இருந்தாலும், ராணுவக் குற்றத்திற்காக, கோழைத்தனத்திற்காக, காட்டிக் கொடுத்ததற்காக நீ மரண தண்டனை விதிக்கப்படுவாய்.

வாழ, சாக அன்று

1

திரும்பவும் சிந்தனையில் ஆழ்ந்தேன்.

ஏழு கிலோமீட்டர் நீளமுள்ள வரிசையில் மேலுங் கீழும் போய்வந்தது, எனது மறைகுழிக்குத் திரும்பியது, சாப்பிட்டது, தலைமையிடத்தில் வேலை செய்தது அல்லது இரவிலே படுத்திருந்தது ஆகிய எல்லா நேரமும் சிந்தித்தபடியே இருந்தேன்.

பட்டாளியனுக்கு என்ன நேர்ந்து விட்டது? நேற்று, தனது சொந்த உயிரைக் காப்பாற்ற ஓடிய மனிதனை, அந்தத் துரோகியை நான் சுடச்சொன்ன போது, உயிருக்கான அன்பின் பெரும் வலிமையைக் கொன்றேனா, சுய தற்காப்பு பெரும் உள்ளுக்கத்தை அழித்தேனா?

கட்டுரை ஒன்றில் நான் படித்திருந்த ஏதோ ஒன்றை நினைவுகூர்ந்தேன்: ''சண்டையில் ஒரு மனிதனுக்குள்ளாக இரண்டு சக்திகள் போரிடுகின்றன: அவனது கடமை உணர்வும் சுய தற்காப்பின் உள்ளுணர்வும். மூன்றாவது சக்தியும் குறுக்கிடுகிறது — கட்டுப்பாடு, கடமை உணர்வே வெல்கிறது.''

அது உண்மையில் அப்படித்தானா? எங்களது ஜெனரல், இவான் பன்ஃபீலவ் இதை வேறுவிதமாக வெளியிட்டார். ஒருமுறை, அல்மா-அத்தாவில் இன்னமும் இருக்கையில், இரவு நேர உரையாடலின் போது, பன்ஃபீலவ் சொன்னார்: ''வாழத்தான் போர்வீரன் சண்டையில் இறங்குகிறான், சாவதற்கு அன்று!''

இந்த வார்த்தைகள் எனது கவனத்தைக் கவர்ந்தன, சில நேரங்களில் அவற்றைத் திரும்பச் சொன்னேன். இப்

போது, எனது முதலாவது உண்மையான சண்டைக்குத் தயாராகும் போது, மாஸ்கோ அருகே சண்டை போட இருந்த எனது பட்டாளியன் பற்றிச் சிந்திக்கும் போது, பன்ஃபீலவினுடைய அந்த வார்த்தைகளை நினைத்துப் பார்த்தேன்.

நேற்று கூட, சுட நான் உத்தரவிடுவதற்குச் சற்று முன்னால் அந்த வார்த்தைகளே என் மனத்தில் பளிச்சிட்டன.

நாட்டின் எதிர்காலத்திற்கானதும் எங்கள் ஒவ்வொருவரின் எதிர்காலத்திற்கானதுமான முன்மாதிரியற்ற இந்தப் போரில், வாழும் விருப்பம், சுய தற்காப்பின் இந்த அழிக்க முடியாத உள்ளுணர்வு நண்பனாகத்தான் இருக்கும், எதிரியாக இருக்காது.

ஆனால் இந்த உணர்வை நான் எப்படி எழுப்பி தொடர்ந்து இருக்குமாறு செய்வது?

2

ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட மணியில் பத்திரிகைகளைப் படிக்கவும் செய்திகளை விவாதிக்கவும் கம்பெனிகள் கூட்டங்களை ஒழுங்கு செய்தன.

ஒருமுறை இந்தச் சமயத்தில் கம்பெனிகளைச் சுற்றி வந்து அரசியல் அதிகாரிகள் ஆட்களுக்கு என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்கத் தீர்மானித்தேன்.

முதல் கம்பெனியில் அரசியல் அதிகாரி தோர்தியா பொறுப்பில் இருப்பதைக் கண்டேன். தங்களது பதுங்கு குழிகளுக்கு அருகே திறந்த வெளியில் கையில் துப்பாக்கிகளுடன் ஆட்கள் குழுவாக உட்கார்ந்திருந்தார்கள்.

இலேசாகப் பனி விழுந்து கொண்டிருந்தது. முதலாவது மின்னுகின்ற பூம்பனிகள் கரும்பச்சை பைன் மரக் கிளைகளில் ஒட்டிக்கொண்டன.

அமைதியாக இருந்தது. ஆனால் வலுக்கட்டாயமான முறையில் தொலைவிற்குள்ளாக ஒவ்வொருவரும் உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள், எதையோ எதிர்பார்த்துக் கொண்டு: எந்தக் கணத்திலும் எல்லாமே கர்ஜிக்கவும் அலறவும் ஊளையிடவும் தொடங்கலாம், அவர்கள் முன்னர் கேள்விப்பட்ட முறையில் குண்டுகள் தலைக்கு மேலாகப் பாய்ந்து செல்லும்; வயல்வெளிகளின் ஊடாக டாங்கிகள்

‘கடகட’வென ஒலியெழுப்பி, முன்பனியின் மீது கருப்புத் தடங்களை விட்டுச் செல்லும்; பச்சை நிற சீருடையில் உள்ள ஆட்கள் காட்டை விட்டு வெளியே ஓடி வரலாம், தரையில் விழுந்து திரும்பவும் குதித்து எழலாம். எங்களைக் கொல்ல அந்த ஆட்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

அவ்வப்பொழுது தனது குறிப்புகளை நோக்கியவாறு தோர்தியா உரை நிகழ்த்திக் கொண்டிருந்தான். அவன் சொன்னது உண்மை, அவனது ஒவ்வொரு வார்த்தையும் வேதவாக்கு. ஜெர்மானிய பாசிசம் நமது நாட்டை நம் பிக்கைத் துரோகமான முறையில் தாக்கியது, எதிரி மாஸ் கோவை அச்சுறுத்திக் கொண்டிருந்தார்கள் என்று செவி மடுத்தேன். தேவைப்பட்டால் நாம் சாவதை நாடு எதிர் பார்த்தது, ஆனால் எதிரி கடந்துபோக நாம் விட்டுவிடக் கூடாது. நாம், செஞ்சேனையின் ஆட்கள், நமது மிகவும் அரிய உடைமையான உயிரைப் பொருட்படுத்தாமல் சண் டையிட வேண்டியிருந்தது.

நான் ஆட்களை உற்று நோக்கினேன். களைப்புற்றும் சிடுசிடுத்தும் நெருங்கிக் கொண்டும் அங்கே அவர்கள் உட் கார்ந்திருந்தார்கள். ஆனால் அவர்களது கண்கள் கீழ்நோக்கி அல்லது தொலைவிற்குள்ளாகக் கூர்ந்து நோக்கியபடி இருந் தன.

ஆகா, அரசியல் அதிகாரி தோர்தியா, உனது பேச்சில் அவர்கள் அதிக அக்கறை செலுத்தாது போலத் தோன்று கிறது. போருக்கு முன்னால் ஆசிரியராக இருந்த, கற்பனை யாளனாகிய தோர்தியாவும்கூட அதற்குக் கவலையுற்றான். அவன் பாட்டாளியனைப் பார்க்க வந்த பார்வையாளன் அன்று. அவன் எங்களில் ஒருவன், தனது வாழ்வில் முதல் முறையாகச் சண்டைக்குச் செல்லவிருந்த ஆட்களில் ஒரு வன்.

ஒருவேளை நாளை, அல்லது நாளை மறுநாள், பதுங்கு குழியிலிருந்து பதுங்கு குழிக்கு நெருப்புக்குக் கீழாக அவன் போக்குக் காட்டலாம், அவனது இதயம் அடித்துக் கொள் ளும், பூமி பிளந்து சுற்றியுள்ள எல்லாம் நொறுங்கும். இங்கே, அமைதியான வானத்திற்குக் கீழ் பேசுவதற்குப் பதிலாக, ஆட்களுடன் அங்கே பேச வேண்டியிருக்கும்.

அத்தகைய நிலைமைகளில் அவனைப் பிறகு பார்த் தேன்—அவன் சொந்த புன்னகையையும் காகிதத்தில் எழு

திக்கொள்ளாமல் சொந்த வார்த்தைகளையும் கொண்டிருந்தான்...

எனினும், அன்றைய தினம் மற்றவர்களைப் போல தனக்கு முக்கியமான எதையோ அநுபவித்துக் கொண்டிருந்த போது, தனது ஆட்களுக்கு அந்த உணர்ச்சியை வெளிப்படுத்த முடியாது இருந்தான். திரும்பத் திரும்பச் சொன்னான்: ''நாட்டுக்குத் தேவை'', ''நாடு உத்தரவிடுகிறது''... ''தேவைப்பட்டால் நாம் சாவோம் ஆனால் பின்வாங்கக் கூடாது'' என்ற வார்த்தைகளை அவன் உச்சரித்த போது, அவனது தொனியிலிருந்து, அவன் தனது எண்ணங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான், தனக்குள்ளாக அவன் பெற்றிருந்த முதிர்ச்சியின் உறுதிப்பாட்டைக் காட்டியது, ஆனால்...

அரசியல் அதிகாரி தோர்தியா, ஏன் இத்தகைய தயாரான தொடர்களைப் பயன்படுத்துகிறாய்? மிகவும் புனிதமான வார்த்தைகளும் கூட, பற்களைத் திரும்பவும் சரி செய்யவில்லை என்றால் படிப்படியாகக் கெட்டு நழுவிப் போன சக்கரம் போல, உருக்குப் போன்றவை என்று தெரியாதா?

எதற்காக எல்லா நேரமும் ''சாவு, சாவு'' என்று சொல்லிக் கொண்டே இருக்கிறாய்? அதைப் பற்றி இப்போது பேசிக்கொண்டிருக்க வேண்டுமா? போரின் கொடூரமான உண்மை அதில் அடங்கியிருக்கிறது, சஞ்சலமில்லாதவாறு எதிர்நோக்க வேண்டிய உண்மை, ஏற்றுக் கொள்ளப்பட்டு மற்றவர்களிடத்தில் அதை உறுதிப்படுத்த வேண்டும் என்று அநேகமாக நினைக்கிறாயா?

3

தோர்தியா முடிப்பதற்காகக் காத்திருந்தேன். பிறகு ஒருவனிடம் கேட்டேன்:

''நமது தாய்நாடு என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா?''

''தெரியும், தோழர் பட்டாளியன் கமாண்டர்.''

''சரி, அப்படியால் சொல்...''

''அது நமது சோவியத் யூனியன், நமது நிலப்பரப்பு.''

''உட்கார்.''

மற்றொருவனைக் கேட்டேன்:

''நீ என்ன நினைக்கிறாய்?''

''நான் எங்கே பிறந்தேனோ அதுவே எனது சொந்த நாடு. அதை எப்படி நான் சொல்வது... இருப்பிடம்...''

''உட்கார். நீயா?''

''தாய்நாடா? அது நமது சோவியத் அரசாங்கம். அது... அதுதான்... சொல்கிறோமே, மாஸ்கோ... இப்போது அதை பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம். நான் அங்கு இருந்ததே இல்லை... அதை நான் பார்த்ததும் இல்லை, ஆனால் அது நமது தாய்நாடு...''

''அதாவது உன்னுடைய தாய்நாட்டை நீ பார்த்தது கிடையாது?''

அவன் அமைதியாக இருந்தான்.

''சரி, தாய்நாடு என்பது என்ன?''

பலர் கத்தத் தொடங்கினார்கள்:

''நீங்கள் சொல்லுங்கள் எங்களுக்கு!''

''சரி, நான் சொல்கிறேன்... நீ வாழ விரும்புகிறாயா?''

''ஆமாம்.''

''நீயா?''

''ஆமாம்.''

''நீ? நீயுங்கூடத்தான். வாழ விரும்பாதவன் யார்? கையைத் தூக்குங்கள்!''

ஒரு கைகூட உயரே எழவில்லை. ஆனால் அவர்களது தலைகள் இப்போது கவிழ்ந்து இருக்கவில்லை—அவர்கள் மிகவும் ஆர்வம் கொண்டுவிட்டார்கள். கடந்த சில நாள் களில் 'சாவு' என்ற வார்த்தையைப் பலமுறை அவர்கள் கேட்டுவிட்டார்கள். ஆனால் நான் வாழ்க்கையைப் பற்றிப் பேசினேன்.

''ஆக நீங்கள் எல்லாரும் வாழ விரும்புகிறீர்கள்? நல்லது. உனக்குக் கலியாணம் ஆகிவிட்டதா?'' அவர்களில் ஒருவனிடத்தில் கேட்டேன்.

''ஆமாம்.''

''உன் மனைவியை நேசிக்கிறாயா?''

சங்கடப்பட்டவன் போலக் காணப்பட்டான்.

''சொல்லு, நீ அவளை நேசிக்கிறாயா?''

''நான் அவளை நேசிக்கவில்லை என்றால், அவளைத் திருமணமே செய்து கொண்டிருக்க மாட்டேன்...''

''அது உண்மைதான். உனக்குக் குழந்தைகள் உண்டா?''

''உண்டு. ஒரு மகனும் ஒரு மகளும்...''

''உனக்கு வீடு இருக்கிறதா?''

''இருக்கிறது.''

''நல்லதா?''

''எனக்கு நல்லதாகத்தான் தோன்றுகிறது...''

''வீட்டுக்குத் திரும்பி, உன் மனைவியையும் குழந்தைகளையும் திரும்பப் பார்க்க விரும்புகிறாயா?''

''இப்போது வீட்டைப் பற்றிச் சிந்திக்க நேரமே இல்லை... நாம் சண்டையிட வேண்டி இருக்கிறது.''

''சரி, போருக்குப் பிறகு விரும்புகிறாயா?''

''யார்தான் விரும்ப மாட்டார்கள்?..''

''நீ விரும்பவில்லை.''

''எப்படி இருக்கு?''

''நீ வீட்டிற்குத் திரும்பப் போகிறாயா இல்லையா என்பது உன்னைப் பொறுத்திருக்கிறது. அது உனது கைகளில் தான். நீ வாழ விரும்புகிறாய்? அப்படியானால் உன்னைக் கொல்லக் குறிபார்ப்பவனை நீ கொன்றாக வேண்டும். சண்டையில் உன்னுடைய உயிரைப் பாதுகாத்து, போருக்குப் பிறகு பத்திரமாக வீடு திரும்ப நீ என்ன செய்திருக்கிறாய்? குறி தவறாமல் சுடுவாயா?''

''இல்லை.''

''அப்படிச் சொல்... அதாவது உன்னால் ஜெர்மானியனைக் கொல்ல முடியாது. அநேகமாக அவன் உன்னைக் கொல்லலாம். பிறகு உயிருடன் வீட்டுக்கு நீ திரும்பிப் போக முடியாது. உன்னால் நன்றாக ஓட முடியுமா?''

''அநேகமாக.''

''நன்கு தவழ முடியுமா உன்னால்?''

''முடியாது.''

''அப்படிச் சொல்... ஜெர்மானியன் உன்னைச் சுட்டுக் கொல்வான். பிறகு எப்படி உயிர் வாழ விரும்புவதாக உன்னால் சொல்ல முடியும்? எறிகுண்டை உன்னால் நன்கு வீச முடியுமா? அல்லது உரு மறைப்புச் செய்ய? அல்லது பதுங்கி இருக்க?''

''நானாகவே சரியாக மறைகுழியைத் தோண்டிக்கொள்ள முடியும்.''

''அது உண்மை இல்லை! சோம்பேறித்தனமாகச் செய்

கிறாய். அந்தக் கூரையைத் திரித்து எத்தனை முறை நான் செய்திருப்பேன்?''

''ஒருதரம்...''

''அதற்குப் பிறகும் உயிர் வாழ விரும்புவதாக நீ சொல் கிறாய்? கிடையாது. உயிர் வாழ நீ விரும்பவில்லை. அது அப்படித்தானா, தோழர்களே? அவன் வாழ விரும்பவில்லை, இல்லையா?''

இப்போது அவர்களில் சிலர் முறுவலித்தார்கள், சிலர் மனச்சுமை சற்றுக் குறைந்தது போல உணர்ந்தார்கள். ஆனால் எனது போர்வீரன் சொன்னான்:

''நான் உயிர்வாழ விரும்புகிறேன், தோழர் பட்டாளி யன் கமாண்டர்.''

''விரும்புவது போதுமானது இல்லை... அதற்காக ஏதா வது செய்தாக வேண்டும். நீ வாழ விரும்புவதாக உனது வார்த்தைகள் சொல்கின்றன, ஆனால் உனது செயல்கள் உன்னைக் கல்லறைக்குக் கூட்டிச் செல்லும். சுருக்குக் கயிற் றால் அங்கிருந்து உன்னை நான் வலிந்து இழுக்க முயல் கிறேன்.''

பெரும் சிரிப்பு எழுந்தது, இரண்டு நாள்களில் நான் கேட்ட முதலாவது நியாயமான சிரிப்பு. நான் தொடர்ந்து பேசினேன்:

''உனது மறைகுழியின் அற்பமான கூரையை நான் திரித்த போது, உனக்காகத்தான் அதைச் செய்கிறேன். அங்கே நான் உட்காரப் போவதில்லை. உனது சுத்தம் செய் யப்படாத துப்பாக்கிக்காக உன்னைத் திட்டிய போது, உனக் காகத்தான் செய்கிறேன். சுடப்போவது நான் இல்லை. செய்யுமாறு நாங்கள் உனக்குக் கட்டளை இடுவது எல் லாம் — அது உனது சொந்த நலனுக்காகத்தான். தாய் நாடு என்றால் என்னவென்று இப்போது உனக்குத் தெரி கிறதா?''

''இல்லை, தோழர் பட்டாளியன் கமாண்டர்.''

''தாய்நாடு—அது நீதான்! உன்னைக் கொல்ல விரும்பு பவனைக் கொல்! யாருக்காக? உனக்காக! உனது மனைவி, உன் அப்பா, உன் அம்மா, உனது குழந்தைகள் இவர்களுக் காக!''

அவர்கள் மிகுந்த கவனத்தோடு கேட்டுக் கொண்டிருந் தார்கள். அரசியல் அதிகாரி தோர்தியா அவர்களுக்கு

அருகே உட்கார்ந்து என்னையே நோக்கினான், அவனது தலை பின்னுக்குச் சாய்ந்திருந்தது. அவ்வப்பொழுது பனிப் பூக்கள் அவனது இமைகளில் படிந்த போது கண்ணைச் சிமிட்டினான். சில வேளைகளில் தானாகவே முறுவலித்தான்.

பேசும் போது, அவனையும் சேர்த்தே பேசினேன். மற்ற எல்லாரையும் போலவே தனது முதலாவது சண்டைக்குத் தயாராகிக் கொண்டிருந்த அரசியல் அதிகாரி தோர்தியா வும், போரின் கொடூரமான உண்மை 'சாவு' என்ற வார்த் தையில் இல்லை, அது 'கொல்' என்பதில்தான் இருக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும் என விரும்பினேன்.

'உள்ளுணர்ச்சி' என்ற சொல்லை நான் பயன்படுத்த வில்லை, ஆனால் சுய பாதுகாப்பின் சக்திமிக்க உள்ளுணர்ச் சிக்கு வேண்டுகோள் விடுக்க விரும்பினேன். ஒவ்வொரு நரம்பும், ஒவ்வொரு நாரும் முறுக்கேறி வெற்றிபெற அவர் களைத் தூண்ட வேண்டும் என விரும்பினேன்.

''உன்னையும் என்னையும் கொல்ல எதிரி தயாராக இருக்கிறான்,'' என்று தொடர்ந்தேன். ''ஆகவே தான் அவ னைக் கொல்லுமாறு உனக்குக் கட்டளையிட நிர்பந்திக் கப்பட்டுள்ளேன். நமது அரிய நாட்டின் பொருட்டு கொல் லுமாறு உங்களுடைய தோழர்களிடமும் நீங்கள் அவசியம் சொல்ல வேண்டும். நீதான் தாய்நாடு! நாம், நமது குடும் பங்கள், நமது தாயார்கள், நமது மனைவிகள், குழந்தைகள் இவர்களே தாய்நாடு. நமது மக்கள்—அவர்களே நமது தாய்நாடு. ஒருகால் குண்டு உன்னைத் தாக்கலாம், ஆனால் முதலில் கொல்! உன்னால் எத்தனை தீய உயிரிகளைக் கொல்ல முடியுமோ, கொல்! இதைச் செய்வதன் மூலம் நீ அவனை, அவனை, அவனை உயிர் வாழ்பவர்களுக்கு மத் தியில் வைக்கிறாய் (ஆட்களை விரலால் சுட்டிக் காட்டி னேன்), உங்களுடைய துப்பாக்கி மற்றும் மறைகுழித் தோ ழர்கள்! உங்களது கமாண்டராகிய நான், நமது மனைவி களின் தாயார்களின் கட்டளையே, நமது மக்களுடைய கட்டளையே நிறைவேற்ற விரும்புகிறேன், சண்டையில் உங் களை நான் ஈடுபடுத்த விரும்புவது சாவதற்கு அல்ல, உயிர் வாழ! புரிந்து கொண்டீர்களா? நான் சொல்ல வேண்டிய தெல்லாம் அவ்வளவுதான். கம்பெனி கமாண்டர்! சுடும் நிலைகளுக்கு ஆட்களை அழைத்துச் செல்லுங்கள்.''

கமாண்டர்கள் கட்டளையிட்டார்கள்: ''முதல் பிளாட்டூன் வரிசையில் நிற்க!'', ''இரண்டாம் பிளாட்டூன் வரிசையில் நிற்க!..''

ஆட்கள் குதித்தெழுந்து தங்களது இடங்களுக்கு ஓடினார்கள், வரிசையாக நின்றார்கள், விதிகளின்படி நேராக நின்றார்கள். அவர்களது துப்பாக்கிக் கத்திகளின் வரிசை ஒரே வரிசையில் அசையாது நின்றது. இராணுவ அமைப்பு, கட்டுப்பாடுள்ளது, சமாளிக்கக்கூடிய படை என்பதை உணரலாம். கண்ணுக்குத் தெரியாத வலைகளால் பின்னப்பட்டது போல பட்டாளியன்கள் காணப்பட்டன.

ஒருவேளை எனது உரை ஓரளவு கபடமற்றதாக இருக்கலாம். ஆனால் அக்கணத்தில் எனது நோக்கத்தை நான் எய்திவிட்டதாகவே எனக்குத் தோன்றியது. கடமை அல்லது மதிப்பு இதனது நோக்கத்தையும் விட்டு விடாமல், அலைக்கழிக்கின்ற, கட்டுப்பாட்டு உணர்ச்சியைச் சிதைக்கின்ற 'இற' என்ற சொல்லினின்றும் ஆட்கள் அவர்களாகவே விடுவித்துக் கொண்டார்கள்.

வரைபடம்

சில சிறிய துண்டுகளால் ஒன்றுசேர்த்து ஒட்டி வைக்கப் பட்ட பழைய வரைபடம் ஒன்று ரெஜிமெண்டின் பெட்ட கத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. அது விரிக்கப்பட்ட போது வழக்கமான சதுர வடிவில் இல்லாது நீண்ட துண் டாக மேசையின் முழு நீளத்திற்கும் இருந்தது. உட்கூரை விளக்கின் ஒளி, நீலம் மற்றும் சிவப்பு பென்சில் கோடு களால் வரையப்பட்ட தல அமைப்பு அடையாளங்களின் மங்கலான மாதிரி மீது நேரடியாகப் பிரகாசித்தது. வரை படத்தின் அளவு கிலோமீட்டருக்கு ஒரு சென்டிமீட்டர் விகிதத்தில் இருந்தது.

மாஸ்கோச் சண்டையின் போது வரைபடத்தில் காட் டப்பட்ட பகுதி வோலகலாம்ஸ்க் திசை என அழைக்கப் பட்டது. ஜெனரல் பன்ஃபீலவினுடைய ஆட்கள் இங்கே சண்டையிட்டார்கள், அப்போது வரவிருந்த ஆண்டுவிழா விற்காக டிவிஷனின் புகழ்மிக வரலாறு மாற்றியமைக்கப் பட்டுக் கொண்டிருந்தது.

அன்று மாலை அதிகாரிகளில் பலர் ரெஜிமெண்டின் கமாண்டர் பௌர்ஜான் மொமீஷ்-உலியின் அலுவல் அறை யில் கூடினர். அவருக்கோ வரைபடம் மனப்பாடம்: அதன் ஒருமுனையில் வோலகலாம்ஸ்கும் மறுமுனையில் மாஸ்கோ வும் இருந்தன.

மேசையின் விளிம்புக்கு மேலாகத் தொங்கிய ஒரு முனையைப் பற்றியவாறு அவர்களில் ஒருவன் கேட்டான்:

''இந்தக் கடைசித் துண்டு ஏன் கிழிக்கப்பட்டிருக்கிறது? ஏன் மாஸ்கோ இங்கே இல்லை?''

எல்லாரும் வரைபடத்தை நோக்கினார்கள். கடைசித் துண்டில் ஓர் ஒடுக்கமான பகுதி மட்டுமே எஞ்சியிருந்தது. ஓரம் ஒழுங்காகக் கத்தரிக்கப்பட்டிருந்தது, ஆனால் 'கிரி யூகவோ' என்ற வார்த்தை எழுதப்பட்டிருந்த மத்தியப் பகுதியில் தாள் கிழிக்கப்பட்டிருந்தது. நிலையமும் கிராம முமாகும் இரு மாறுபட்ட அளவுகளில் எழுதப்பட்டிருந்தது.

''இந்த வரைபடத்திற்கு ஒரு கதை உண்டு,'' என்றார் மொமீஷ்-உலி. ''உங்களுக்குத் தெரியாதா?''

அறிகின்ற தோரணையில் ஒவ்வொருவரையும் அகல விரிந்த தனது கருத்த கண்களால் நோக்கினார், ஆனால் யாருக்குமே அந்தக் கதை தெரியாதது போலவும், எல்லாருமே கேட்க ஆவல் கொண்டிருந்தது போலவும் தோன்றியது.

''எனது களத்துணைவன் சுலீமாவை நினைவிருக்கிறதா?'' மொமீஷ்-உலி கேட்டார். ''அவன் அதை நன்றாகச் சொல்லக்கூடும்... கிரியூகவோவுக்குப் பின்வாங்கிச் செல்லும் உத்தரவை நாம் எப்போது பெற்றோம்?''

''இருபத்தொன்பதாம் தேதி.''

''அது சரிதான், 1941 நவம்பர் இருபத்தொன்பது. அன்றுதான் பின்வாங்கிச் சென்று கிரியூகவோவில் தற்காப்பு நிலையை மேற்கொள்வதற்கான உத்தரவை சுலீமா என்னிடம் கொண்டுவந்தான். நான் வரைபடத்தை எடுத்துப் பார்த்தபோது கிரியூகவோவை அதில் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு மறு துண்டை விரித்தேன். அங்கே இருந்தது... அதற்கு வலப்புறத்தில் இருந்த ஏராளமான தல அமைப்பு அடையாளங்கள் மாஸ்கோ என்பதைச் சுட்டிக் காட்டின... போவதற்கான வழித்தடத்தைத் தீர்மானித்து உத்தரவு கொடுக்க வேண்டியிருந்தது. மாறாக நானோ வெறுமனே உட்கார்ந்து எல்லாச் சதுக்கங்களையும் சந்திப்புகளையும் வரிசைகளையும் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தேன். மாஸ்கோவினுடைய கோணங்களுள்ளதும் வட்டங்களுள்ளதுமான சாலைகளின் வரையறைகளைத் தெளிவாகக் காண முடிந்தது.

''தோழர் கமாண்டர், உத்தரவுகளுக்காக பட்டாளியன்கள் காத்துக் கொண்டிருக்கின்றன,'' அமைதியான குரலில் சுலீமா என்னிடம் சொன்னான்.

நீலநிற கண்கள் கொண்ட அந்த இளைஞன் கூருணர்வு கொண்டவன். அவனை நோக்கினேன். அப்போது நான் என்ன உணர்ந்தேன் என்பதை அவன் புரிந்துகொண்டான் என்பதைக் கண்டேன். உங்கள் எல்லாருக்கும் தெரியும் நான் கஸாக் என்பதும் சுலீமா உக்ரைனியன் என்பதும். எங்களில் யாரும் மாஸ்கோவில் வசித்தது இல்லை, ஆனால் போர் நடவடிக்கை வட்டாரத்தைக் காட்டும் மாஸ்கோ

துண்டு எங்களுக்கு முன்னே மேசையில் கிடந்ததை நாங்கள் பார்த்த போது எங்கள் இருவரது இதயங்களையும் தீய சக்தி போல ஏதோ ஒன்று பற்றிப் பிடித்தது. எனது சட்டைக் கையால் மாஸ்கோவை மறைத்து, வழித்தடத்தைக் குறித்துக் காட்டி ஆட்களை ஒன்று சேர்க்குமாறு சுலீமா விடம் சொன்னேன். சுலீமா வெளியே போனதும், வரைபடத்தைத் திரும்பவும் உற்றுநோக்கினேன். பிறகு எனது கர்வோமீட்டரை வெளியே எடுத்து தொலைவை அளந்தேன். கிரியூகவோவிலிருந்து மாஸ்கோவின் நகர்ப்புறத்திற்கு இருபது கிலோமீட்டருக்கும் சற்றுக் கூடுதலாக இருந்தது. தோழர்களே, மோசமான மேல்நிகழ்வுக்காக செயல்திட்டம் வரைவது கமாண்டருடைய விதி என்பது உங்கள் எல்லாருக்கும் தெரியும். இருபது அல்லது முப்பது கிலோமீட்டர்கள் இதில் என்ன இருக்கிறது? ஒரே ஒரு பாய்ச்சல், தெருக்களில் சண்டை நடக்கும். நான் இது போல அங்கே உட்கார்ந்திருந்தேன்...''

மொமீஷ்-உலி கைகளால் தனது தலையைப் பற்றி வரைபடத்தில் ஓர் இடத்தை ஆழ்ந்த சிந்தனையுடனோ துயரத்துடனோ பார்த்தவாறு இருந்தார். அவரது சிக்கலான கருத்த முடியின் மீது வெளிச்சம் ஒருமுகப்படுத்தப்பட்டிருந்தது. யாரும் அசையவில்லை, ஒருவர்கூட இருமவில்லை, எதுவும் அமைதியைக் கலைக்கவில்லை.

''நான் இதுபோல அங்கே உட்கார்ந்திருந்தேன்,'' திரும்பவும் தொடர்ந்த மொமீஷ்-உலி நிமிர்ந்து உட்கார்ந்தார். ''வரைபடத்தின் மறு பகுதியிலிருந்து விரிந்து சென்ற பெரிய கருத்த அரைவட்டத்தை உற்று நோக்கினேன். நான் எப்படி உணர்ந்தேன் என்பதை நீங்கள் எல்லாரும் புரிந்திருப்பீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்—மாஸ்கோவில் எதிரியை எதிர்பார்ப்பது... வரைபடத்தை உற்று நோக்கினேன், கவிழ்ந்துபோன டிராம்களையும் டிராலிபஸ்களையும், அறுந்து தொங்கிய தந்திக் கம்பிகளையும், தெருக்களில் கிடந்த செத்துப்போன போர்வீரர்களையும் சிவிலியன்களையும், வெற்றியாளர்களின் துடுக்கான நகைப்பும், வெள்ளைக் கையுறைகளுடன் தாங்கிய குச்சிகளுடனும் கொண்ட அணிவகுப்பு உடையில் இருந்த ஜெர்மானிய லெப்டினெண்டுகளையும் கண்டேன். ஜெர்மானியக் கைதிகள் கோழைத்தனமாக ஆனால் அருவருப்பான புன்னகை

யுடன் ''வோலகலாம்ஸ்க்—மாஸ்கோ'' என்று சொல்வதை நினைவு கூர்ந்தேன்.

''அந்தக் கும்பலால் நம்மை நிச்சயமாக வெற்றிகொள்ள முடியாது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். வரைபடத்திற்கு மேலாக ஆழ்ந்து நோக்கினேன், நேரப்போகும் மோசமான நிலையை நிதானமாக யோசித்தேன், உறுதியாக நிற்க முடிந்த ஓர் இடத்தை கிரியூகவோவுக்கும் மாஸ்கோவுக்கும் இடையே தேடினேன். ஆனால் நான் கண்டுபிடிக்கவில்லை. கிரியூகவோ எங்களது கடைசி வாய்ப்பு.

''அதுபோல எவ்வளவு நேரத்திற்கு உட்கார்ந்திருந்தேன் என்பது நினைவில்லை. சுலீமா திரும்பவும் வந்து, பிரிவுகள் திரண்டு விட்டன என்று அறிவித்தான். நான் வழக்கமாக வரைபடத்தை இது போலத்தான் மடித்தேன்—கிழக்கிலிருந்து மேற்காக—ஏனெனில் அதை நான் விரித்த போது வோலகலாம்ஸ்க் மற்றும் லெனின்கிராடு நெடுஞ்சாலைகள் எனக்கு முன்னே இருந்தன. இந்த முறை நான் மாறுபட்ட முறையில் மடித்தேன். கிரியூகவோ முடிந்த இடத்தில் எனது விரலை விளிம்புக்கு மேலாக ஓடவிட்டேன், அதை இனிமேல் பார்ப்பதற்கு இல்லை. ஆனால் ஓரிடத்தில் எனது விரல் நகம் மாட்டிக்கொள்ள, தாளைக் கிழித்து விட்டேன்.

''எனது மேசையின் மீது பல்வேறு தஸ்தாவேஸுகள் கிடந்தன. நான் எழுந்து அவற்றை முற்றாக நோக்கினேன். சிலவற்றை எனது களப்பையில் போட்டுக் கொண்டு மற்றவற்றை சுலீமாவிடம் கொடுத்தேன். கடைசியாக நான் அருவருப்பான முறையில் வரைபடத்தை எடுத்திருக்க வேண்டும், ஏனெனில் அது திடீரென்று விரிந்து கொண்டது. மீண்டும் ஒருமுறை நான் பார்க்க விரும்பாத அந்தப் பெரிய கருப்பு அரைவட்டத்தைப் பார்த்தேன். பேனாக்கத்தி ஒன்று தருமாறு சுலீமாவிடம் சொன்னேன். பிறகு திரும்பவும் உட்கார்ந்து மிகவும் சுத்தமாக விளிம்பு ஓரமாக வெட்டினேன், ஒரு புதிய புத்தகத்தை ஒருவர் வெட்டுவது போல, கிரியூகவோவுக்குக் கிழக்கிலிருந்த பகுதி முழுவதை மேம் வெட்டி எடுத்தேன்.

'' 'இதை எரித்துவிடு,' என்று காகிதத் துண்டை சுலீமாவிடம் கொடுத்தவாறு சொன்னேன்.

'' 'எரித்து விடவா?' என்று சந்தேகத்தோடு கேட்டான்.

'''ஆமாம். எரித்துவிடு,' திரும்பவும் சொன்னேன்.

''கண நேரத்திற்கு அவன் திகைப்பூட்டும் அச்சத்துடன் என்னை உற்று நோக்கினான், பிறகு அவனது அழகிய நீலக் கண்களில் உறுதிமிக்க தோற்றம் தென்பட்டது. அவன் என்னைப் புரிந்துகொண்டு விட்டான். வரைபடத்தின் நோக்கம் என்ன? இடங்களைக் கண்டுபிடிப்பதற்காக. கிழக்கு நோக்குதல் கிரியூகவோவுக்குப் பின்னே இருந்த சாலைகளுக்கும் ஓடைகளுக்கும் கிராமங்களுக்கும் அல்லது வேறு எதற்கும் மத்தியில் எங்களது வழியைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமிருக்காது என்பதை சுலீமா புரிந்துகொண்டான். ஒன்று நாங்கள் ஜெர்மானியர்களைத் திரும்ப விரட்டியடிப்போம் அல்லது கிரியூகவோவில் செத்து மடிவோம் என்பதை அவன் புரிந்துகொண்டான்.

''சுலீமா அந்தத் துண்டுக் காகிதத்தைக் கொளுத்த, நாங்கள் இருவரும் அமைதியாக அது கருத்த சாம்பலாக மாறும்வரை பார்த்துக் கொண்டிருந்தோம். மாஸ்கோவுக்குச் செல்கின்ற பாதைகளின் பெயர்களோ வண்டித்தடங்களின் பெயர்களோ எதுவும் எஞ்சியிருக்கவில்லை... பிறகு... என்ன நடந்தது பிறகு என்பது உங்கள் எல்லாருக்கும் தெரியும்.''

மொமீஷ்-உலி அமைதியாக இருந்தார்.

விரித்துப் போடப்பட்ட வரைபடத்தை நோக்கிக் கீழாக சிறிய விளக்குப் பிரகாசித்தது. மேசையின் விளிம்புக்குச் சாய்வாகத் தொங்கிய மூலையை யாரோ ஒருவன் பிடித்துக் கொண்டிருந்தான்.

ஆமாம், கிரியூகவோவுக்கு அடுத்து ஜெர்மானியர்கள் செல்ல முடியாது என்பது அவர்கள் எல்லாருக்கும் தெரியும். கிரியூகவோவிலும் அப்போது மேற்குப் போர்முனை என அழைக்கப்பட்ட மற்ற இடங்களிலும் நடந்தவற்றை அந்நிய நாட்டுப் பத்திரிகைகள் 'மாஸ்கோவில் அற்புதம்' எனக் குறிப்பிட்டன.

வதீம் கஷேவ்னிக்கவ்

(1909—1984)

வதீம் கஷேவ்னிக்கவின் தாயகம், சைபீரியாவில் உள்ள நாரீம் பிரதேசமாகும். தீவிர புரட்சியாளர்களான அவரது பெற்றோர்கள் அங்குத் தான் நாடுகடத்தப்பட்டார்கள். அவர்கள் முதல் ருஷ்யப் புரட்சியில் (1905—1907) பங் கேற்றவர்கள்.

1925ஆம் ஆண்டிலிருந்து கஷேவ்னிக்கவ் மாஸ்கோவில் வாழ்ந்து வருகிறார். மாஸ்கோ அரசுப் பல்கலைக்கழகத் தில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது தனது முதல் கதைகளையும் கட்டுரைகளையும் எழுதி வருகிறார். 1941 ஜூன் 22இல், அனைத்து சோவியத் மக்களுக்கும் போலவே, இவருக்கும் பயங்கரமான கடுமையான வாழ்க்கைத் தொடங் கியது. போர்முனைப் பத்திரிகை ஒன்றில் இராணுவ நிருப ராக இருந்தார். பிறகு பிராவ்தா *பத்திரிகையின் சொந்த நிருபராக இருந்த இவர், பாசிசத்துடன் நடந்த நான்கு வருட சண்டையில் பங்கேற்றவராகவும் சாட்சிகாரனாகவும் இருந்தார். மாஸ்கோச் சண்டை சமயத்தில், தெளிவான அடிச்சுவடுகளைப் பின்பற்றி இவரால் எழுதப்பட்ட கதை இப்புத்தகத்தில் வெளியிடப்படுகிறது.*

போரை அடுத்த ஆண்டுகளில், வைகறையை நோக்கி, கேடயமும் வாளும், விஷேடப் பிரிவு *போன்ற பிரபலமான நாவல்கள் இவரால் எழுதப்பட்டன. வதீம் கஷேவ்னிக்கவ் சோவியத் யூனியனின் அரசு பரிசு பெற்றவர், சோவியத் எழுத்தாளர் சங்க செயலாளர்களில் ஒருவராகவும், சுப்ரீம் சோவியத்தின் உறுப்பினராகவும் இருந்தார்.*

வழிகாட்டிய மங்கை

வேவுப்படைப் பிரிவின் கமாண்டர், போர்வீரர்கள் சிலர் தூங்கிக் கொண்டிருந்த குடிசைக்குள்ளாக அவளை அழைத்துச் சென்று மரியாதையோடு சொன்னான்:

''உட்கார்ந்து காத்திருங்க. நாங்கள் பகலில் தூங்குகிறோம் மாலையில் உலாவப் போகிறோம் என்பது எங்களுடைய விஷேடத்தன்மை தான்.''

அவன் சல்யூட் செய்து குதிகளை மிதித்து ஓசையெழுப்பி வெளியே சென்றான்.

ஒரு மங்கைக்கு சல்யூட் செய்வதும் குதிகளை மிதித்து ஓசையெழுப்புவதும் ஒரு லெப்டினெண்டுக்கு சரியான செயலாக இருக்காது: அவளது மேலங்கி காலரில் குறிப்பிடும்படியான எந்த அடையாளங்களும் இல்லை. ஆனால் இந்தச் சமயத்தில் தன்னை ஓர் அதிகாரி என்பதை விட ஓர் ஆணாகவே லெப்டினெண்ட் உணர்ந்தான்.

அந்த மங்கை ஒரு பெஞ்சின் மீது அமர்ந்து சன்னலுக்கு வெளியே உற்று நோக்கினாள்.

மிகவும் அதிசயமான வெண்ணிற இலைத்தொகுதி கண்ணாடியை மறைத்து நின்றது. உறைபனியால் அது வடிவம் பெற்றிருந்தது.

தங்களது இராணுவ கோட்டுகளைச் சுற்றிக் கொண்டு போர்வீரர்கள் தரையில் தூங்கினார்கள்.

ஒரு மணி நேரம், இரண்டு, மூன்று கடந்தது. அந்த மங்கை இன்னமும் பெஞ்சு மீது அமர்ந்திருந்தாள். மூர்க்கமான இருமலின் சித்திரவதை செய்கிற எழுச்சி அவளது உடலைக் குலுக்கும்; அவள் குனிந்து கொண்டு இந்தத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தனது வாய்க்கு நேராகப் பின்னல் கையுறையை வைத்துக் கொள்வாள். பிறகு தலையைப் பின்னுக்குச் சாய்த்து சுவரில் சாய்ந்து கொள்வாள், கனமாக மூச்சிழுப்பாள், அவளது வீங்கிய உதடுகள் நடுங்கும்; அவளது அகன்ற விழிகளினின்றும் வேதனைக் கண்ணீர் வடியும், தனது கையுறையால் அதைத் துடைத்துக் கொள்வாள்.

இப்போது முற்றிலும் இருட்டாக இருந்தது.

லெப்டினெண்ட் உள்ளே வந்தான். இருளில் பார்க்க முடியாததால் கேட்டான்:

''மிஸ், அங்கே இருக்கிறீர்களா?''

''இங்கேதான் இருக்கிறேன், தோழர் லெப்டினெண்ட்,'' என்று மந்தமான குரலில் பதிலளித்தாள்.

லெப்டினெண்ட் குனிந்து தூங்கிக் கொண்டிருந்த போர் வீரர்களை உசுப்பத் தொடங்கினான்.

பிறகு ஸ்குவர்டு கமாண்டர் செவகோவை அருகழைத்து சற்று நேரத்திற்கு ஒருவிதமான செயல் குறிப்புகளைக் கிசு கிசுத்துவிட்டு, இறுதியாக உரக்க அறிவித்தான்:

''இவை பட்டாளியன் கமாண்டருடைய உத்தரவுகள். மொத்தமாக நடவடிக்கைக்கு நீ பொறுப்பாக இருக்கிறாய், ஆனால் குறிப்பிட்ட பணிக்கு அவள் பொறுப்பாக இருக்கி றாள்.'' தனது தலையை அந்த மங்கையை நோக்கி அசைத் தான்.

''அப்படியா,'' என்ற ஸ்குவர்டு தலைவன் உடையணி யத் தொடங்கினான்.

விளக்கை ஏற்றிக் கொள்ளாமலேயே அவசரமாகத் தங் களது இரவுச் சாப்பாட்டை உண்டார்கள். ஒருமுறைக்கு அரைக் கரண்டி துழவை மட்டும் எடுத்துக் கொண்ட அம் மங்கை மிகவும் மெதுவாகவும் கவனமாகவும் சாப்பிட்டாள். அவள் விழுங்கிய ஒவ்வொரு முறையும் அது புண்படுத்தியது போலக் காணப்பட்டது.

தனது துழவையை அவள் சாப்பிட்டு முடிக்காததைக் கண்ட ஸ்குவர்டு தலைவன் சொன்னான்:

''உங்களுக்குக் கவலையில்லையா? நாம் உலாவப் போவ தற்கு முன்னால் செய்ய வேண்டிய முதலாவது விஷயம் ஏதாவது சாப்பிடுவது.''

''நான் கவலைப்படலே,'' என்றாள் அமைதியாக அம் மங்கை.

தயாரிப்புக்கள் சுருக்கமாக இருந்தன, மௌனமாக மேற் கொள்ளப்பட்டன. தனது கழுத்தைச் சுற்றி கனத்த கழுத் துக் குட்டையை கவனமாக அவள் அணிவதைக் கவனித்த செவகோவ் கேட்டான்:

''தடிமல் பிடித்துவிடும் என்ற பயமா?''

மங்கையோ பதிலளிக்கவில்லை. அவர்கள் எல்லாரும் வெளியேறினார்கள்.

வானிலே பிரகாசமான வட்ட நிலா மிதந்தது. பனி மின்னியது.

நிலவைத் திட்டிய செவகோவ் முன்னே சென்றான், ஆனால் சுற்றித் திரும்பி மங்கையிடம் சொன்னான்:

''நிச்சயமாக, போர்முனை வரிசையின் குறுக்கே நான் வழி காட்டிச் செல்வேன். அதன் பிறகு நீங்க வழி காட்டுங்க, தயவுசெய்து.''

இக்னாதவ் மற்றும் ராமிஷ்விலி ஆகிய இரு போர்வீரர்களுக்கும் இடையில் அம்மங்கை நடந்தாள். நிலவின் மங்கிய நீலநிற ஒளியால் வெளிச்சம் பெற்ற திறந்த வெளியை அவர்கள் கடந்து கொண்டிருந்த போது, போர்வீரர்கள் தங்களது கூட்டாளியை உற்று நோக்கி, அவளை அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

குட்டையானவள், மிகப் பெரிய கம்பளிக் காலணிகளுடன், இராணுவ அங்கியை அணியாமல் அதைச் சுற்றிக் கொண்டது போலக் காணப்பட்டது, தன் தந்தையினுடைய மென்மயிர் அங்கியை அணிந்த பையனைப் போன்று இருந்தாள். மேலும் மிகவும் அருமையான கண்களை அவள் பெற்றிருந்ததால், மனத்தைக் குழப்புவதாக உணர்ந்த இரு போர்வீரர்களும் அப்பால் திரும்பிக் கொண்டனர்.

அம்மங்கை வழுக்கி விழுந்த போது, இக்னாதவ் அவளிடம் ஓடிச் சென்று சொன்னான்:

''உங்களது கையைத் தாங்கிக் கொள்கிறேன்.''

அவளோ நின்று படபடப்புடன் கேட்டாள்:

''எதற்கு?''

உறைபனி இருந்தும்கூட இக்னாதவ் முகஞ்சிவந்து போனான். ஆனால் ராமிஷ்விலி அவனுக்கு உதவ வந்தான்:

''இளம் பெண்ணே, எங்களது காகஸசில் எல்லா நேரங்களிலும் பெண்ணினுடைய நற்காரியங்களைச் செய்யும் மாவீரனாக இருக்கும் உரிமை ஆணுக்கு மட்டுமே உண்டு.''

''ஆனால் போர்முனையில், மூளைக்குத் தான் அதிக வேலை கொடுக்க வேண்டும்,'' என்று கரகரத்த குரலில் சொன்னாள் அம்மங்கை.

அதற்குப் பதில் எதாவது சொல்ல ராமிஷ்விலி விரும்பினான், ஆனால் செவகோவ் கோபமாகக் கத்தினான்:

''வம்பளப்பை நிறுத்துங்க! எங்கே இருப்பதாக உங்களுக்கு நினைப்பு?''

பன்னிரண்டு மணியளவில் அவர்கள் போர்முனை வரிசையைக் கடந்தார்கள். இருண்ட, உற்சாகமற்ற காட்டிற்குள்ளாக அவர்கள் நுழைந்தார்கள். அங்கே கிளைகள் பனியின் மீது நிழல்பரப்பி நின்றன. மங்கை இப்போது வழிகாட்டி முன்னே நடந்தாள். தனது கோட்டின் கைப்பகுதிக்குள்ளாகத் தனது கைகளை நுழைத்துக் கொண்டிருந்த அவள் வேகமாக நடந்தாள். பாதை முடிவுக்கு வந்தது. நீர்க்கால் ஒன்றைக் கடந்தார்கள். அவர்களது இடுப்புகள் வரை பனி இருந்தது. ஒரு பள்ளத்தின் வழியாக அவர்கள் தவழ்ந்து செல்ல வேண்டி இருந்தது. சுமார் ஒன்னரை மணி நேரத்திற்கு அவர்கள் தவழ்ந்தார்கள். பிறகு காட்டுப் பாதை ஒன்றை அடைந்தார்கள். சிறிய கிராமம் ஒன்றைக் கடந்தார்கள். அது மின்னுகின்ற தூய்மையான வெண்பனிக்கு மாறாகக் கருப்பாகவும் அருவருப்பாகவும் இருந்தது. பிறகு அவர்கள் திரும்பவும் கன்னி நிலத்தின் வாயிலாகத் தங்களது பாதையை அமைத்துக்கொண்டு சென்றார்கள். மணல் போல நொறுங்கிய வறண்ட பனியை விட்டு தங்களது பாதங்களை மிகுந்த சிரமத்துடன் இழுத்துச் சென்றார்கள்.

ஒன்றுதான் மட்டமாக இருந்தது: அம்மங்கையின் இருமல். இந்த பிரயாசைப்பட்ட, எளிதில் உடையக் கூடிய அமைதியில், அவளது வறண்ட இருமலானது எல்லாவற்றையும் கெடுத்துவிடக் கூடும். குறிப்பிட்ட இடத்தை அவர்கள் அடைந்த போது செவகோவ் சொன்னான்:

''அந்த உலர்புற் குவியலுக்குள்ளாக நீங்க மறைந்துக் கொண்டு எங்களுக்காகக் காத்திருங்க. இப்போது நாங்களே சமாளித்துக்கொள்ள முடியும்.''

''அப்ப சரி,'' தனது வாய்க்கு நேராகக் கையுறையைப் பிடித்தவாறு, களைப்புற்ற அம்மங்கை கிசுகிசுத்தாள்.

எப்போது தாங்கள் சந்திப்பது என்பதைத் தீர்மானம் செய்தவர்களாய்ப் போர்வீரர்கள் கலைந்து சென்றார்கள்.

நீண்ட நேரம் கடந்தது. பனிபடர்ந்த, பால் ஒளியுடன் தரையிலே காலைக் கருக்கல் தென்பட்டது.

இக்னாதவ் முதலிலும், பின்னர் ராமிஷ்விலியும் திரும்

பினார்கள். கிளர்ச்சியுற்று குதூகலமாகக் காணப்பட்ட ராமிஷ்விலி சொன்னான்:

''அவளை நமது கரங்களில் நாம் தூக்கிச் செல்ல வேண்டும். அத்தகைய அரிய தகவல்!''

''நம்மால் எப்படி முடியும்! அதற்கு அவள் அநுமதிப்பாளா...'' ஏமாற்றத்துடன் இக்னாதவ் முணுமுணுத்தான் உலர்புற் குவியலைப் பக்கவாட்டில் பார்த்தவாறு, கவலையுற்ற முறையில் கேட்டான்: ''அவளுக்கு மணமாகியிருக்கும் என்று நீ கருதுகிறாயா?''

அமைதியாகவும் எதிர்பாராதும் செவகோவ் தோன்றினான்.

''நாம் புறப்படலாம், இளைஞர்களே!'' என்று உத்தரவிட்டான். பிறகு தனது கைகளால் தலையைப் பற்றி மகிழ்ச்சியுடன் கூவினான்: ''என்ன தகவல்! இது போல ஒன்றை பிரிகேடு வேவுப்பிரிவு ஒருபோதும் கனவு கண்டதில்லை...''

அவர்கள் வேறொரு வழியில் திரும்பச் சென்றார்கள். தனது கைகள் கோட்டின் கைப்பகுதிக்குள்ளாகத் திணிக்கப்பட்டவாறு அம்மங்கை மீண்டும் முன்னே நடந்தாள். அவள் மறுபடியும் தொடர்ந்து இருமிக் கொண்டிருந்தாள். ஓசையை அடக்க முயன்றவாறு தனது கம்பளிக் கையுறையை வாயில் வைத்துத் திரும்பவும் அழுத்தினாள்.

போர்வீரர்கள் தங்களது வழிகாட்டியைப் பெருமையுடன் நோக்கினார்கள். தங்களது அன்புக்குரியவர்களிடம் வாழ்வில் ஒரே ஒரு முறை மட்டுமே சொல்லப்படும் அன்பின் கனிவான வார்த்தைகள் அவர்கள் ஒவ்வொருவருடைய இதயங்களிலும் எழுந்தன.

முக்கியச் சாலையில், ஜிமோலோஸ்தி கிராமத்திற்கு அருகே, சாலையிலுள்ள பனியை அகற்றுமாறு கிராமத்தவர்கள் நாஜிகளால் துரத்தப்பட்டிருந்தார்கள். போர்வைகளையும் சால்வைகளையும் சுற்றிக்கொண்டு ஜெர்மானியர்கள் அவர்களை மேற்பார்வையிட்டார்கள். தனது வயிற்று வரை கால்கள் வளைந்தவாறு சாலையோரத்தில் ஒரு பெண் கிடந்தாள்; அவளது முகத்திலே குருதி உறைந்திருந்தது.

ராமிஷ்விலி தனது பற்களை நறநறவெனக் கடித்து எறிகுண்டை அவிழ்க்கத் தொடங்கினான். தனது கழுத்தில் தொங்கிய சிறு எந்திரத் துப்பாக்கியை இக்னாதவ் எடுத்தான். செவகோவ் கிசுகிசுத்தவாறு கட்டளையிட்டான்:

''சமிஞ்ஞை கிடைக்கும் வரை சுட வேண்டாம்.''

திடீரென்று அந்த மங்கை அதிகாரத் தோரணையில் கிசுகிசுத்தாள்:

''எந்த சமிஞ்ஞையும் வரப் போவதில்லை!''

''ஏன் வரப் போவதில்லை?''

''சரியாக நான் சொன்னதுதான். நாம எல்லாரும் துடைத்தெறியப்படணும் ஒன்று விரும்புறீர்களா?''

''என்ன, அவர்களாலா?'' என்றான் செவகோவ். ''ஒரு டஜன் இழிவான நாஜிகளா? நாம் அவர்களை மடக்கு வோம்...''

''நான் சொல்கிறேன்: வரப் போவதில்லை.''

''அது போதுமானது!'' மங்கையை விட்டுத் திரும்பி செவகோவ் கட்டளையிட்டான். ''என் உத்தரவைக் கவனி யுங்கள்!''

ஆனால் மங்கையோ பிடிவாதமாக இருந்தாள். இரு மல்களுக்கு மத்தியில் வலியுறுத்திச் சொன்னாள்:

''நமது தகவலுக்கு இடர்ப்பாடு கொள்ள நான் உங் களை அநுமதிக்க மாட்டேன், கேட்கிறீர்களா?''

''ஒரு கோபெக் மதிப்புள்ள இடர்ப்பாட்டை விட அதிக மில்லை,'' என்றான் செவகோவ் பெருமையாக. ''வாருங் கள், இளைஞர்களே!''

அவளோ அவர்களது வழியை மறித்தாள்.

''நிறுத்து அதை,'' என்றான் செவகோவ் முரட்டுத் தனமாக. அவளை நோக்கி நகர்ந்தான். ''உனக்கு என்ன வேண்டும்? அந்த மக்கள் வருத்தப்படுவதை உன்னால் பார்க்க முடியவில்லையா?''

''அப்படிச் செய்யவேண்டாம்!'' என்றாள் கிசுகிசுப்பில், ''நான் அலறுவேன்...'' பக்கவாட்டில் தாவினாள்.

செவகோவ் தனது கைத்துப்பாக்கியைக் காற்றில் சுழற்றி, கையில் நிறுத்துப் பார்த்தான். போர்வீரர்களைப் பார்க்காமலேயே சோர்வுடன் கூறினான்:

''சரி, என்ன பயன். நாம் அதை விட்டுவிட வேண்டி யிருக்கிறது.''

திரும்பிவரும் பயணம் கடினமானதாகவும் இரக்கமற்ற தாகவும் இருந்தது. தங்களது கூட்டாளியைப் பார்க்கா திருக்கப் போர்வீரர்கள் முயன்றார்கள். முன்னர் அவர்களுக்கு மிகவும் பிரியமானதாக இருந்த அவளது கோட்டின் ஒவ்

வொரு மடிப்பும் இப்போது கடுமையான மனமாற்றத்தை ஏற்படுத்தியது. அவள் கீழே விழுந்த பொழுதெல்லாம் உதவிக் கரம் நீட்ட, யாரும் முன்வரவில்லை.

போர்வீரர்கள் தலைமையிடத்தை அடைந்த போது சூரியன் ஏற்கெனவே உச்சி வானத்தில் இருந்தது. செவகோவ் வெறுப்புடன் அவளிடம் சொன்னான்:

''உன்னால் உன் பாதத்தை நகர்த்தவே முடியாது. போய்க் கொஞ்சம் தூங்கு. நீ இல்லாமலேயே நாங்கள் ஆஜர்கொடுக்க முடியும். உனக்கு நன்றி கூறுவதைப் பொருத்தவரை, அதை மேலதிகாரிகள் செய்வார்கள்.''

அம்மங்கை தனது தலையை அலைத்து, கூனிக் குறுகி குடிசையை நோக்கி நகர்ந்தாள்.

ரோந்தின் முடிவுகளை பட்டாளியன் கமாண்டரிடம் செவகோவ் அறிவித்தான். போர்வீரர்களால் சேகரிக்கப் பட்ட தகவல் பிரதான முக்கியத்துவமுடையது; சங்கேத மொழி எழுத்தன் உடனடியாக பிரிகேடு கமாண்டருக்குத் தந்தியடித்தான். பிறகு பட்டாளியன் கமாண்டர் கேட்டான்:

''நீனா பொகராதவா எங்கே? எப்படி இருக்கிறாள்?''

''எங்களை வழிகாட்டிச் சென்றவளா?'' எனக் கேட்டான் செவகோவ். ''ஒரு கட்டையைப்போல அவள் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும். எங்களுக்கு நிறையத் தொல்லைகள் தந்தாள்...'' அலட்சியமான முறையில் பாதையில் ஜெர்மானியர்களுடனான அவர்களது சந்திப்பின் முழுக் கதையையும் அவன் சொன்னான்.

ஆனால், சொல்ல விநோதமாக, மங்கையைப் பற்றி எவ்வளவு ஆத்திரமாக செவகோவ் கூறினானோ, அந்தளவுக்கு மிகவும் பிரகாசமான சிவப்பும், புடைப்பும் மிக்கதாக பட்டாளியன் கமாண்டருடைய முகம் மாறியது. தனக்கு ஏதோ வலிப்பு வந்து, வேதனையை அமைதியுடன் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது போல மிகவும் பலமாக இழுப்புடன் மூச்சிழுத்தது.

செவகோவ் சொல்லி முடித்துவிட்டிருந்த போது, பட்டாளியன் கமாண்டர் நீண்ட நேரத்திற்கு எதுவும் சொல்லாமலும் வியப்புடன் தன்னை நோக்கிய போர்வீரர்களைப் பற்றி கவனம் செலுத்தாமலும் குடிசையில் மேலுங்கீழும் நடந்தான். திடீரென்று, கூர்மையாக வட்டமடித்துத் திரும்பி, அரைத் தொனியில் கூறினான்:

''இந்த நீனா பொகராதவா இரண்டு நாள்களுக்கு முன்னால் நாஜிகளால் ஜிமோலோஸ்தி என்ற கிராமத்தில் தூக்கிலிடப்பட்டாள். கொரில்லாக்கள் தக்கத் தருணத்தில் அவளை அடைந்து காப்பாற்றினார்கள். அவளது கழுத்தில் கயிறு எப்படி அடையாளமிட்டது என்பதை நீங்கள் பார்த்தீர்களா? அவள் எப்படி இருமி குருதி சிந்தினாள் தெரியுமா? இந்த நோயுற்ற, காயமுற்ற மங்கை சரியாகச் செய்தாள். பாதையில் அவளது சொந்தப் பெற்றோர்களைக்கூட அவள் பார்த்திருக்கக் கூடும்; ஆனால் சண்டையின் முடிவுக்காக வேவுத் தகவல் மிகப் பெரிய முக்கியத்துவம் கொண்டது என்பது அவளுக்குத் தெரியும். இப்போது அவளைப் பற்றி நீங்கள் என்ன கதையளந்துக் கொண்டிருக்கிறீர்கள்! தீரர்கள்!'' அவன் தனது கையை அசைத்து கோபமாகச் சொன்னான்: ''நீங்கள் போகலாம்.''

போர்வீரர்கள் வெளியே சென்று அசையாது நின்றார்கள். செவகோவினுடைய முகம் வெளிறிப் போயிருந்தது. இக்னாதவுடைய உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. ராமிஷ்விலி தனது நெஞ்சுக்கு மேலாகச் சட்டையைத் தேய்த்தபடி கோபத்தோடு சொன்னான்:

''நாங்கள் உடனே அவளிடம் சென்று மன்னிப்புக் கோருகிறோம்! என்ன அவமதிப்பு! என்ன அவமதிப்பு!..''

இக்னாதவ் கடுகடுப்புடன் கிசுகிசுத்தான்:

''இந்த விஷயத்தில் மன்னிப்புகள் மட்டும் போதுமானதில்லை, சகோதரனே.''

''இருந்தாலும், இளைஞர்களே, நாம் மன்னிப்புக் கேட்டாக வேண்டும்,'' என்றான் செவகோவ் மெதுவாக. ''ஆனால் நாம் அதைச் செய்ய வேண்டியது இப்படித்தான் என்று நினைக்கிறேன். பிரிவு இப்போது ஜிமோலோஸ்திக்குப் புறப்படுகிறது. தூக்கத்தைப் பற்றி நாம் மறக்க வேண்டியுள்ளோம். அவளைச் சித்திரவதை செய்து கயிறு மாட்டிய அந்த நாஜிகளை ஒரு பார்வை பார்ப்பது மிகவும் ஆர்வமுடையதாக இருக்கும்...''

''நம்மால் இப்போது எதுவும் செய்ய முடியும்,'' என்று கிளர்ச்சியில் கிசுகிசுத்தான் ராமிஷ்விலி. ''நான் விரும்பியதை என்னால் செய்யமுடியும். தகவலை நான் ஒப்படைத்துவிட்டதால் இப்போது சுதந்திரமாகப் போகலாம்.''

''அது போதுமானது!'' என்று காரியரீதியில் இடை

மறித்தான் செவகோவ். ''எப்படியும் நாம் சமாளிப்போம்· சண்டைக்குப் பிறகு நாம் முகம் மழித்துக்கொண்டும், சுத்த மான சட்டைகள் அணிந்து கொண்டும் முறையாக மன் னிப்புக் கோர முடியும். அப்படிச் செய்வோமா?''

''சரி, செய்வோம்,'' போர்வீரர்கள் ஒருசேர ஒப்புக் கொண்டார்கள்.

தங்களது முதுகுகளின் குறுக்காக சிறு எந்திரத் துப் பாக்கிகளைத் தொங்கவிட்டவாறு, காட்டின் விளிம்புக்கு அவர்கள் சென்றார்கள். அங்கிருந்து படைப் பிரிவானது ஜிமோலோஸ்திக்கு முன்னேறிச் செல்ல வேண்டும்.

சூரியன் பிரகாசித்தது, பனி மிகவும் அதிகமாக மினு மினுத்ததால் அவர்களது கண்களைக் கூசச் செய்தது.

அலெக்சாந்தர் கிரிவிட்ஸ்கி

(1910—1986)

பத்திரிகையாளர் அலெக்சாந்தர் கிரிவிட்ஸ்கி, ராணு வப் பத்திரிகை **கிராஸ்நயா ஸ்வெஸ்தா** *(சிவப்பு நட்சத் திரம்) நிருபரான இவர், மாஸ்கோவுக்கு நெருக்கமான வோ லகலாம்ஸ்க் நெடுஞ்சாலையைப் பாதுகாத்த ஜெனரல் பன்ஃபீலவினுடைய டிவிஷனின் இருபத்தெட்டு ஆட்களின் வெற்றிக் கதையை முதலில் தெரிவித்தார். இந்தக் கதை* **கிராஸ்நயா ஸ்வெஸ்தாவில்** *1941இல் வெளிவந்து மிகவும் பிரபலமானது, பின்னர் இது பலமுறை வெளியிடப்பட்டது. இந்தப் பதிப்பில் உள்ளது சுருக்கப்பட்ட வடிவம்.*

1941—1945 மாபெரும் தேசபக்தப் போரின் நிகழ்ச்சி கள் பற்றிய பல நூல்களின் ஆசிரியர் கிரிவிட்ஸ்கி. **இரவும் விடியலும், ஒருபோதும் மறக்க மாட்டேன், வளர்ந்தவர்களுக் கான புத்தாண்டு மரம்** *ஆகியன அதில் அடங்கும். இலக் கியத்தில் அரசு பரிசு பெற்றவர்.*

துபசேக்கவோ ரயில் நிலையம்

இந்தப் பெயர் கேட்டு தனது இதயத்தில் தந்தியை மீட்டாத நபர் ஒருவர்கூட இந்த நாட்டில் இல்லை. குழந்தைகள் தங்களது பள்ளிப் புத்தகங்களினின்றும் அதை அறிகிறார்கள், ஒவ்வொருவருடைய உதடுகளிலும் அது உச்சரிக்கப்பட்ட அந்தக் காலத்தை அவர்களுடைய தந்தைகள் நினைவுவைத்திருக்கிறார்கள். துபசேக்கவோ ரயில் நிலையம். அங்குதான் பன்ஃபீலவ் கார்டு டிவிஷனின் இருபத்தெட்டு இளைஞர்கள் ஐம்பது எதிரி டாங்கிகளை எதிர்த்து துணிச்சலுடன் சமமற்ற சண்டையில் ஈடுபட்டார்கள். இந்த வீரச்செயலை விவரிக்கும் முதலாவது நிருபர் என்ற சிறப்பு எனக்குக் கிட்டியது. வெகு சீக்கிரத்தில் இது உலக முழுமைக்கும் தெரியலாயிற்று.

மாபெரும் தேசபக்தப் போரின் வரலாற்றில் என்றைக்கும் நிலைத்துவிட்ட பெயர்களில் துபசேக்கவோ ரயில் நிலையமும் ஒன்று. சோவியத் ராணுவ வீரத்தின் சின்னமாக மாறிவிட்ட அந்த நிலம் புனிதமான ஒன்று...

* * *

போரின் நூற்று நாற்பத்து ஏழாவது நாளில் மாஸ்கோ மீது தங்களது இரண்டாவது பொதுத் தாக்குதலை எதிரி தொடங்கினார்கள். ஜெர்மானிய படைத்தலைவர் ஜெனரல் ஹால்டரால் அது 'டைஃபூன்' போர் நடவடிக்கை என அழைக்கப்பட்டது. 1940இன் இளவேனிற் காலத்தில் பிரான்ஸ் முற்றுகையில் பயன்படுத்தப்பட்டதைக் காட்டிலும் அதிகமான டாங்கி டிவிஷன்கள் மாஸ்கோவுக்கு எதிராக இறக்கப்பட்டன. அப்போது கடலிலிருந்து சேடான் வரை போர்முனை நெடுகிலும் பத்து அல்லது பதினொன்று டிவிஷன்கள் மட்டுமே செயல்பட்டன. அப்போதுங்கூட கேள்விப்பட்டிராத அத்தகைய ராணுவத் தளவாடக் குவிப்பைக் கேட்டு உலகம் தடுமாறியது.

தனது ராணுவத்திற்கு விடுத்த அதிகாரபூர்வ அறிக்கையில் கடைசி 'தீர்மானிக்கிற' தாக்குதலின் ஆரம்பம்

என ஹிட்லர் அறிவித்தார். ''குளிர்காலம் வருவதற்கு முன் பாகவே எதிரியை நொறுக்கும் இறுதியான, தகர்க்கின்ற தாக்குதலுக்கான பாதை தயாராகி இருக்கிறது,'' என அந்த அறிக்கை கூறியது.

அது நவம்பர் பதினாறு 1941. எங்களுடைய மேற்கு ஃபிரன்ட் வலப்புறத்தில் ஜெர்மானிய டாங்கிகள் முழு அள விலான தாக்குதலைத் தொடுத்தன. எதிரியின் இரண்டா வது டாங்கிப்படை தூலாவின் தென்கிழக்கில் தனது மூர்க் கமான தாக்குதல்களைத் திரும்பத் தொடங்கியது. அதே வேளை எதிரியினுடைய பலம் வாய்ந்த அதிரடிப் படை யான நான்காவது ராணுவம் மையத்தில் முன்னேறத் தொடங்கியது.

தலைநகரின் வடமேற்கே மாஸ்கோ-வோல்கா கால் வாயை அடைந்த ஜெர்மானியர்கள் அதை யாஹ்ரொமா பகுதியில் கடந்தார்கள். தூலாவைச் சுற்றிவந்து கஷிரா வுக்கு நெருக்கமாக வந்து சேர்ந்தார்கள்.

அந்த நவம்பர் நாள்களில் ஒருநாள், மாஸ்கோவைப் பாதுகாக்கின்ற டிவிஷன்களில் ஒன்றின் அரசியல் பிரிவிலி ருந்து வந்த பல அறிக்கைகளுடன் அச்சிடப்பட்ட நான்கு வரி தகவல் ஒன்றையும் பதிப்பாசிரியர் என்னிடம் தந்தார். அரசியல் அறிவுரையாளர் தீயெவ் தலைமையிலான போர் வீரர்களின் குழு ஒன்று எதிரியின் ஐம்பது டாங்கிகளின் தாக் குதலை முறியடித்துவிட்டதாக அந்த அறிக்கை தெரிவித் தது. அது போர்வீரர்களின் பெயர்களையோ சண்டை நடைபெற்ற சரியான இடத்தையோ தரவில்லை. அரசியல் அறிவுரையாளரின் பெயர், துபசேக்கவோ பற்றிய குறிப்பு, அந்த குறிப்பிட்ட விஷயம் அவ்வளவே.

ராணுவத் தலைமையிடத்திலும் டிவிஷனிலும் அத் தகவலை சரிபார்த்துக் கொண்ட பிறகே பதிப்பாசிரியர் அது பற்றிய பணியை என்னிடம் ஒப்படைத்தார்.

நவம்பர் 16, துபசேக்கவோ ரயில் நிலையத்துக்கு அருகே, அரசியல் அறிவுரையாளர் தீயெவ் தலைமையிலான இருபத்தெட்டு ஆட்கள் இருபதும் முப்பதுமான இரு வரி சைகளில் முன்னோக்கி வந்த எதிரியின் டாங்கி தாக்குதலை முறியடித்தார்கள். ஆட்களில் ஒருவன் நடுக்குற்று சரண டைய முயன்றான். ஆனால் எந்த உத்தரவுமின்றி அவனது

தோழர்களால் அவன் சுட்டுக் கொல்லப்பட்டான். இருபத்தேழு போர்வீரர்களும் தீயெவும் வீரனுக்குரிய சாவு எய்தினார்கள். நான்கு மணி நேரத்திற்கு எதிரியின் டாங்கிகளை நிறுத்திவைக்கவும் அவற்றில் பதினெட்டை முடமாக்கவும் செய்தார்கள்.

நான் உடனே அமர்ந்து தலையங்கம் எழுதினேன், 'இருபத்தெட்டு வீரர்களின் உயில்' என்று தலைப்பிட்டேன்.

நவம்பர் இருபத்தெட்டில் கிராஸ்நயா ஸ்வெஸ்தாவில் நிகழ்ச்சி நடந்த பன்னிரண்டு நாள்களுக்குப் பிறகு வெளியிடப்பட்ட இந்தப் பழைய தலையங்கம் கீழே தரப்பட்டுள்ளது. எதை அடிப்படையாகக் கொண்டு அந்த அறிக்கை தரப்பட்டதோ அதற்கு மேற்கொண்டு எந்த விவரமும் இதில் இல்லை. அது மிக நன்றாக எழுதப்பட்டதாக என்னால் சொல்ல முடியாது. ஆனால் மக்களுக்கு அந்தக் கதையை, முழுமையாக இல்லாவிட்டாலும், பன்ஃபீலவ் டிவிஷனின் இருபத்தெட்டு வீரர்களால் மேற்கொள்ளப்பட்ட வீரச்செயலை, முதலில் சொன்னது அந்தத் தலையங்கம் தான்.

இதோ இது.

அந்தப் பயங்கரமான நாள்களில், மாஸ்கோவின் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது, மாஸ்கோவைப் பாதுகாத்துக் கொண்டிருந்த செஞ்சேனை ஆட்களது வாழ்வு மற்றும் போராட்டத்தின் முழுமையான நோக்கம், இவையெல்லாம் எதிரியினுடைய முன்னேற்றத்தை எந்தவகையிலேனும் தடுப்பதும் ஜெர்மானியர்களுக்கு வழியை மறித்து நிறுத்துவதுமாகும். 'ஓர் அடிகூட பின்வாங்கக் கூடாது' என்பது எங்களுக்குத் தலையாய சட்டமாக இருந்தது. 'வெற்றியா மரணமா' — அத்தகையது எங்களது ராணுவக் குறிக்கோள்.

இந்தக் குறிக்கோள் எங்கே நமது ஆட்களின் மனோதிட்பமாக மாறியிருந்ததோ, எங்கே நமது போர்வீரர்கள் தங்களது கடைசிச் சொட்டு ரத்தம் இருக்கும் வரை மாஸ்கோவைப் பாதுகாக்கத் தீர்மானித்தார்களோ—தங்களது நிலைகளைப் பாதுகாப்பது அல்லது மடிவது—அங்கே ஜெர்மானியர்கள் முன்னேற முடியாது.

ஓரிரு நாள்களுக்கு முன்னால், மாஸ்கோவுக்கு அண்மை

யில், ஜெனரல் பன்ஃபீலவ் கார்டு டிவிஷனின் இருபத்தொன் பது ஆட்கள் நிலைகொண்டிருந்த இடத்தைத் தாண்டி ஐம் பதுக்கு மேற்பட்ட எதிரி டாங்கிகள் முன்னேறின. நமது ஆட்கள் மறைந்திருந்த பதுங்கு குழிகளுக்கு ஜெர்மானியர் கள் நெருங்கினார்கள்.

தடுத்துநிறுத்துவது முட்டாள்தனமாகக் காணப்பட்டி ருக்கலாம். ஐம்பது கவச வண்டி அரக்கர்களை எதிர்த்து இருபத்தொன்பது ஆட்கள்! எங்கே, எந்தப் போரில், எந்தக் காலத்தில் அத்தகைய சமமற்ற சண்டை நடந்திருக்கிறது? ஆனால் சோவியத் வீரர்கள் எந்தத் தயக்கமும் இல்லாமல் எதிரியோடு மோதினார்கள். அவர்கள் அச்சத்தால் ஒதுங்க வில்லை, பின்வாங்கிச் செல்லவில்லை. ''நாம் பின்வாங்க இடமே இல்லை,'' என அவர்கள் தங்களுக்குள்ளாகவே சொல்லிக்கொண்டார்கள்.

இருபத்தி ஒன்பது பேரில் ஒருவன் மட்டுமே கோழையாக மாறினான். சுலபமான வெற்றியில் நம்பிக்கை கொண்ட ஜெர்மானியர்கள் ''சரணடையுங்கள்!'' என்று கத்திக் கொண்டிருந்த போது, ஆட்களில் ஒருவன் மட்டுமே தனது கைகளை உயர்த்தினான். பதிலுக்கு குண்டுகளின் கர்ஜனை முழங்கியது. எந்தவிதமான முன்னொப்பந்தமும் இன்றி, உத்தரவு இன்றி, நமது போர்வீரர்களில் சிலர் அந்தக் கோழையை, காட்டிக் கொடுத்தவனைச் சுட்டார்கள். அது கொள்கையைக் கைவிட்டவனை தாய்நாடு தண்டிப்பது. தனது துரோகத்தால் இருபத்தெட்டு துணிவுமிக்க ஆட் களுக்கு அவப்பெயர் ஏற்படுத்த விரும்பிய தங்களில் ஒரு வனை எந்தத் தயக்கமும் இன்றி செஞ்சேனை கார்டுகள் அழித்து ஒழித்தார்கள்.

அதன் பிறகு, அரசியல் அறிவுரையாளர் தீயெவ் அமைதி யாக உத்தரவிட்டார்: ''ஓர் அடிகூட பின்வாங்கக் கூடாது!'' மூர்க்கமான சண்டை தொடங்கியது. எதிரி டாங்கிகளை நோக்கி அச்சமற்ற ஆட்கள் டாங்கி எதிர்ப்புத் துப்பாக்கி களையும் பெட்ரோல் போத்தல்களையும் பயன்படுத்தினார் கள்.

அத்தகைய நெருக்கடியான நேரத்தில், வீரர்கள் மிகக் குறைவான பேரே இருந்தாலும் தனிமையில் சண்டை போட வில்லை. அந்நிய ஆக்கிரமிப்பாளனுக்கு ஒருபோதும் கீழ்ப் பணியாத பெருமைமிக்க கடந்த காலத்தின் நமது ஆட்

களும் நமது பழைய வீரர்களும் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். அவர்களோடு ருஷ்ய கார்டுகளின் புகழ் சார்ந்த வெற்றியாளர்கள் இருந்தார்கள். அவர்களைப் பற்றி, புருஸ்ஸியாவுடனான ஏழாண்டுப் போரின் போது பீட்டர்ஸ்பர்க்கிற்கு அனுப்பிய தனது அறிக்கையில் பீல்ட் மார்ஷல் சல்திக்கோவ்* இவ்வாறு தெரிவித்திருந்தார்: ''ருஷ்ய கார்டுகளைப் பொருத்தவரை, அவர்களை எதிர்த்து யாராலும் நிற்க முடியாது, தங்களது காயங்களையே அவர்கள் சிங்கத்தின் அகந்தையுடன் நோக்குவார்கள் என்பதை என்னால் சொல்ல முடியும்''. அவர்களுடன் செஞ்சேனையின் புகழும் மதிப்பும் இருந்தன, அதனது பதாகைகளும் அந்தக் கணங்களில் அவர்களை வாழ்த்துவதாகக் காணப் பட்டது. மக்களுடைய நல்லாசிகளும் அவர்களுடன் இருந் தன, பகைவனை எதிர்த்து நடக்கும் இரக்கமற்ற போராட் டத்திற்காக.

நம்முடைய அணிகள் குறைந்து கொண்டே வந்தன, ஆனால் வீரர்களுடைய கண்களை நிரந்தரமாக மூட சாவு முயன்ற அந்தக் கொடுமையான கணத்திலுங்கூட, எதிரி யைத் துரத்தத் தொடர்ந்து முயன்றார்கள். பதினெட்டு எதிரி டாங்கிகள் முடமாக்கப்பட்டும் செயலற்றும் போர்க் களத்தில் நின்றன. நான்கு மணி நேரமாகத் தொடர்ந்து சண்டை நடைபெற்றது. அந்த நான்கு மணி நேரத்திலும் கார்டு ஆட்களால் பாதுகாக்கப்பட்ட நிலைகளின் ஊடாக நாஜிகளுடைய கவச முட்டிகள் செல்ல முடியவில்லை. ஆனால் இறுதியாக அவர்கள் தளவாடங்களின்றி போனார் கள்: டாங்கி எதிர்ப்புக் குண்டுகளோ எறிகுண்டுகளோ எஞ்சியிருக்கவில்லை.

நாஜி டாங்கிகள் பதுங்குகுழி வரை ஊர்ந்து வந்துவிட் டன. உயிருடன் உள்ள வீரர்களைப் பிடித்துத் தீர்த்துக்கட்ட ஜெர்மானியர்கள் டாங்கிகளிலிருந்து கீழே குதித்தார்கள். அரசியல் அறிவுரையாளர் தீயெவ் எஞ்சிய தனது தோழர் களை ஒன்றுசேர்த்து தாக்குதலுக்குத் தயார் செய்தார்.

---

* பியோத்தர் சல்திக்கோவ் *(1696-1773)* — ருஷ்யத்தள பதி. (ப-ர்.)

நமது ஆட்கள் சண்டையிட்டார்கள், அந்தப் பழைய குறிக் கோளை நினைவு வைத்திருந்தார்கள்: ''கார்டுகள் சாக லாம், ஆனால் ஒருபோதும் சரணடையக் கூடாது''. இரு பத்தெட்டுப் பேரில் யாருமே எஞ்சாத வரை சண்டையிட் டார்கள். அவர்கள் மடிந்தார்கள், ஆனால் எதிரிகளை உள்ளே விடவில்லை. நமது ரெஜிமெண்ட் சரியான தறு வாயில் வந்து சேர்ந்தது. எதிரி டாங்கிப்படை தடுத்து நிறுத் தப்பட்டது.

வீரர்களுடைய கடைசி எண்ணங்கள் என்ன என்பது பற்றி நமக்குத் தெரியாது, ஆனால் அவர்களது அஞ்சாமை யிலும் துணிவிலும் நமக்கு ஓர் உயிலைப் படிக்கிறோம். திரும்பவும் அழைக்கின்ற, அழியாத எதிரொலிக்கும் அவர் களுடைய குரல் சோவியத் மக்களது இதயங்களில் இப்படி ஒலிக்கிறது: ''நமது தாய்நாட்டின் பலிபீடத்தின் மீது எங் களது உயிர்களைத் துறந்தோம். எங்களது உடல்களின் மீது விழுந்து கதற வேண்டாம். பற்களை இறுக்கி வலிமை பெறுங்கள்! எந்தக் குறிக்கோளுக்காக நாங்கள் சாவை எதிர்த்து நிற்கிறோம் என்பதை நாங்கள் தெரிந்துக்கொண் டோம். போர்வீரர்களுடைய எங்களது கடமையை நாங் கள் நிறைவு செய்துவிட்டோம், எதிரியின் வழியைத் தடுத்து விட்டோம். சண்டைக்குப் போகும் போது நினைவு வைத் திருங்கள்: வெற்றியா மரணமா! எங்களுக்கு இல்லாதது போலவே உங்களுக்கும் வேறு வழி இல்லை. நாங்கள் மடிந்து விட்டோம், ஆனால் வெற்றி நம்முடையதே!''

ஜெனரல் பன்ஃபீலவ் டிவிஷனைச் சேர்ந்த இருபத் தெட்டு வீரமிக்க கார்டுகள் விடாமுயற்சியையும் மனவுறுதி யையும் பற்றுறுதியையும் நமது ஜென்மப் பகைவனை எதிர்த்து வெற்றி பெறுவதில் சாவை அலட்சியமாகக் கருது வதையும் நமக்கு மரபுரிமையாக விட்டுச் சென்றிருக்கி றார்கள். இந்தப் புனிதமான மரபுரிமையை கடைசி வரை யில் நாம் எடுத்துச் செல்வோம். நாம் மாஸ்கோவைப் பாது காப்போம், ஹிட்லருடைய ஜெர்மனியைத் தோற்கடிப் போம். நமது வெற்றியின் பிரகாசமான ஒளி போர்க்களத் தில் வீழ்ந்துபட்ட சோவியத் மறவர்களின் வீரத்தை என் றைக்கும் பரப்பிக் கொண்டிருக்கும்.

மறுநாள் காலை, மிகயீல் இவானவிச் கலீனின் பதிப் பாசிரியர் அலுவலகத்துக்கு ஃபோன் செய்தார்.*

''நமது ஆட்கள் சாவதைக் கேட்க எனது நெஞ்சம் கொதிக்கிறது. போரின் உண்மையைத் தாங்கிக்கொள்வது கடினமாக இருக்கிறது, ஆனால் உண்மையில்லாமலே அது இன்னும் கடினமாக இருக்கிறது. எனினும் லெனின் கூறு வது போல, அது போர் என்பதால் நாம் போரை முறை யாகச் செய்ய வேண்டும். வீரர்களுக்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவம் அருமையான விஷயம். அவர்களது பெயர் களை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். முயற்சி செய்து கண்டுபிடியுங்கள். வீரர்கள் நிச்சயமாக பெயர்களின்றி இருக்கக் கூடாது.''

அதே இரவில் நான் போர்முனைக்குப் புறப்பட்டேன். பதிப்பாசிரியர் அலுவலகத்திலிருந்து அது நாற்பத்தைந்து நிமிட கார்ப் பயணத் தூரந்தான். நஹாபினோவில் இருந்த இருபத்தெட்டுப் பேர் சேவையாற்றிய டிவிஷன் மாற்றிய மைக்கப்பட்டது. அந்த டிவிஷனின் கமாண்டர் ஜெனரல் பன்ஃபீலவை எனக்கு நேரடியாகத் தெரியும். எனது வரு கைக்குச் சற்று முன்னதாக அவர் கொல்லப்பட்டு விட்டதை அறிந்தேன். படைத்தலைவர் கர்னல் செரெப்ரியக்கோவ் என்னிடத்தில் முற்றிலும் திட்டவட்டமாக தீயெவ் என்ற பெயரில் அரசியல் அறிவுரையாளர் எவரையும் தான் கேள் விப்பட்டதில்லை என்று கூறினார். அத்தகைய மனிதர் எவரையும் டிவிஷன் கமிசார் எகோரவால் கூட நினைவு கூர முடியவில்லை. எனினும் அரசியல் பிரிவினுடைய அறிக் கையில் குறிப்பிடப்பட்ட தேதிகளில் துபசேக்கவோ ரயில் நிலையத்திற்கு அருகில் டிவிஷன் சண்டையிட்டிருக்கிறது. இருந்தும், தீயெவ் பற்றி ஒருவருக்குமே தெரியவில்லை.

இதன் அருத்தம் என்னவாக இருக்கக் கூடும்?

உண்மை, பல வார கால பயங்கரமான சண்டைகளுக் குப் பிறகு இந்த டிவிஷன் ஏற்பட்டிருந்தது. அதனது சேதம் மிகவும் அதிகம். கொடூரமான பகல்களின் மற்றும் தூங் காத இரவுகளின் பயங்கரமான கிளர்ச்சியில், பயங்கரமான இறுக்கத்தில், அநேக ஆட்களின் இழப்பினாலும் புதிதாகச்

---

* **மிகயீல் கலீனின்** *(1875-1946)—அந்நேரத்தில் சோவி யத் யூனியனின் சுப்ரீம் சோவியத்தினுடைய பிரிசீடியத்தின் தலைவராக இருந்தார்.* **(ப-ர்.)**

சேர்க்கப்பட்ட சேனையின் வருகையினாலும் ஏற்பட்ட தவிர்க்க முடியாத குழப்பத்தில் கம்பெனி அரசியல் அறிவுரையாளருடைய பெயர் மறக்கப்பட்டிருக்கலாம். ஆனால், எப்படியும் யாராவது ஒருவர் அவரது பெயரை நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும்.

அன்றைய பொழுதின் கடைசியில், எதிர்பாரா விதமாக, காப்டன் குன்திலோவிச்சுடன் பேசிக் கொண்டிருக்க நேர்ந்தது. தீயெவ் பற்றி நான் கேட்டதை அவன் கேள்விப்பட்டிருக்கிறான், ஆனால் எதற்காக நான் அங்கே வந்தேன் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

''ஏன், தீயெவ், எனது கம்பெனியின் அரசியல் அறிவுரையாளன்,'' என்றான். ''அவனது உண்மையான பெயர் கிலச்கோவ், தீயெவ் என்ற புனைபெயர் உக்ரைனியப் போர் வீரனால் கொடுக்கப்பட்டது, ஏனெனில் அவனும் எப்போதும் ஏதாவது செய்து கொண்டிருந்தான். தீய்—செய் என்ற உக்ரைனியச் சொல்லினின்றும் அது பிறந்தது. ஓ, கிலச்கோவ், கிலச்கோவ், எப்படி வீரமிக்க இளைஞன் அவன்! உங்களுக்குத் தெரியுமா, அவனும் அவனுடைய ஆட்களும் துபசேக்கவோ அருகே ஐம்பது ஜெர்மானிய டாங்கிகளைத் தடுத்து நிறுத்தினார்கள்...''

கிலச்கோவை டிவிஷனில் இருந்த ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள். நான் மாஸ்கோவுக்குத் திரும்பி இருபத்தெட்டு ஆட்களின் பெயர்களையும் குறிப்பிட்டும் அவர்களது வீரச்செயல்களைப் பற்றி விரிவாகவும் கட்டுரை எழுதினேன்.

...இது 1942இன் கோடைக் காலம். துபசேக்கவோ ரயில் நிலையம், அங்கே திரும்பவும். வலப்புறத்தில் சுமார் நூறு கஜ தூரம் அளவுக்கு நடந்தால், ஜெர்மானிய டாங்கிகளை எதிர்த்து தங்களது வீரத்தைக் காட்டிய பன்ஃபீலவ் ஆட்கள் இருந்த இடத்துக்குச் செல்லலாம். முன்னர் ஒரு முறை அங்கே சென்றிருந்தோம், அப்போது தரையானது அடர்ந்த மின்னுகின்ற பனியால் மூடப்பட்டிருந்தது. நமது ஆட்கள் எங்கே உயிர்துறந்தார்களோ, கண்ணுக்குத் தெரியாத தடையில் ஜெர்மானிய கவச முட்டிகள் எங்கே மோதி நொறுங்கினவோ அந்த இடத்தைச் சரியாக காப்டன் குன்திலோவிச் ஒருவரால்தான் காட்ட முடிந்தது.

இப்போது தரை பனியின்றி கிடக்கிறது. எங்களுக்கு முன்பாக சண்டையின் முழுக் காட்சியினையும் கண்கிறோம். பதுங்கு குழியின் களிமண் சுவர்களை இளவேனிற் கால நீர் அழித்து விட்டிருந்தது. கனத்த மழையினால் கருப்பாகிப் போன கூரைக் கட்டைகள் சிதைந்து விழுந்திருந்தன. மறை குழியின் ஓரங்களும் தரையும் ஏற்கெனவே புற்கள், கீரை வகைகள், செடிவகைகள் இவற்றால் நிறைந்து காணப்படு கின்றன.

நமது வீரர்கள் இங்கே நின்றிருந்தார்கள். இங்கிருந்து பனிமூடிய கரைக்கு மேலாக ஏறி எதிர்வந்த டாங்கிகளைச் சந்திக்கத் தயாராகி இருந்திருக்கிறார்கள். எங்கே திண் ணிய புதர்களைக் காற்று அலைத்துக் கொண்டிருக்கிறதோ அங்கே பயங்கரமான காயம்பட்டு கிலச்கோவ் தரையில் வீழ்ந்திருக்கலாம். இங்கேதான் அவர்கள் வீழ்த்திய புகைக் கும் டாங்கிகள் நின்றன. 1942இல் நான் எழுதிய கட்டு ரையில் குறிப்பிட்டேன்: ''இங்கிருந்து, நெலீதவோ என்ற சிறிய ருஷ்ய கிராமத்திற்கு அருகிலுள்ள இந்த மேய்ச்சல் நிலத்திலிருந்து, நமது நாட்டிற்கு மேலாக அச்சமின்மையை நோக்கி பெருமைமிகு சதுரத்தூபி போல இருபத்தெட்டு வீரர்களின் மாட்சி எழுவதை எங்களது மனக்கண்களிலே கண்டோம். அவர்களுடைய வீரச்செயல் ஏற்கெனவே மரபு வழிக் கதையின் சிறகுகளில் உயரே தூக்கிச் செல்லப்பட்டு விட்டது. அவர்களது பெயர்களைச் சுற்றி எழுகின்ற வீரப் பெருங்காவியத்தின் சமகாலத்தவர்களாக நாம் இருக்கி றோம்.''

பிறகு, இருபத்தெட்டுப் பேரில் நால்வர் தப்பிப் பிழைத் தது தெரியவந்தது. பயங்கரமாகக் காயமுற்ற அவர்கள் முதலுதவி மையத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டு, பிறகு நீண்டகால சிகிச்சைக்காக பல்வேறு மருத்துவமனைகளுக் குச் சென்றிருக்கிறார்கள். சாவிலிருந்து பிழைத்து எழுந்த அந்நால்வரும்—கிரிகோரி ஷெமியாகின், இல்லரியோன் வசீ லியெவ், இவான் ஷாத்ரின், திமித்ரி திமஃபேயெவ் — சோவியத் யூனியனின் வீரர்களின் தங்க நட்சத்திரங்களைப் பெற்றார்கள்.

நமது நிலத்தின் ஒவ்வொரு அங்குலமும் நமக்கு மிகவும் மதிப்புமிக்கது: இளவேனிற் காலத்தில் நீராவியை விடும் கூர்ஸ்க் கரு மணலாக இருக்கட்டும் அல்லது அல்தாய் மலை

களின் கரடுமுரடான பாறைகளாக இருக்கட்டும். ருஷ்யாவின் ஒவ்வொரு மூலையையும் நாம் நேசிக்கிறோம். ஆனால் ருஷ்யத் தாய்நாட்டின் பிள்ளைகளின் சாதனைகளுடன் சம்பந்தப்பட்ட இடங்கள் மக்களது நினைவுகளில் என்றென்றும் பதிந்திருக்கும்—சமாதான உழைப்பின் வியர்வையால் ஈரமான இடங்களாகட்டும் அல்லது போரில் குருதி சிந்திய இடங்களாகட்டும்.

ஆகவே தான் துபசேக்கவோ ரயில் நிலையம் என்ற வார்த்தைகளைக் கேட்டதுமே உடனடியாக நமது சொந்த மண்ணின் இந்தச் சிறிய ஆனால் அளவிட முடியாதபடி நமக்கு அரியதான மூலையோடு என்றென்றைக்கும் சம்பந்தப்பட்ட ஆட்களை நினைவுக்குக் கொண்டுவருகிறது.

வாசக நண்பர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் ராதுகா பதிப்பகம் *மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. கடிதங்களைத் தயை செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்:* Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow 119859, USSR.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098

கிளைகள்

136, அண்ணா சாலை, சென்னை—600002

80, மேலக்கோபுர வீதி, மதுரை—625001

3,4 நேரு ஸ்டேடியம், கோவை—641018

42/7, சிங்காரத் தோப்பு, திருச்சி—620008

செர்ரி ரோடு, சேலம்—636001

1-ஏ, திருவனந்தபுரம் ரோடு, திருநெல்வேலி—627003

16-சி, வெள்ளாளர் தெரு, பாண்டிச்சேரி—605001

வி.வி.கே. உறாஸ்டல், போர்ட் ரவுண்ட், வேலூர்—632001

விற்பனை நிலையங்கள்

பஸ் நிலையம், திருநெல்வேலி—627001

சேரிங் கிராஸ், ஊட்டி—643001

மெயின்ரோடு, திண்டுக்கல்—624001

87/89, ஒப்பணக்காரத் தெரு, கோவை—641001

பஸ் நிலையம், சேலம்—636001

நியூ செஞ்சுரி நடமாடும் புத்தக நிலையங்கள்

...1941இன் குளிர்காலம். 'டைஃபூன்' போர் நடவடிக்கைக்காக மாஸ்கோவுக்கருகில் 78 நாஜி டிவிஷன்கள் குழுமியிருந்தன. ஜெர்மானியர்கள் மாஸ்கோவுக்கு மிகவும் அண்மையில் இருந்தார்கள். இதே நாள்களில் சோவியத் யூனியனின் இரண்டாவது பெரிய நகரமாகிய லெனின்கிராடிலும் முற்றுகையை ஜெர்மானியத் துருப்புகள் ஏற்படுத்தியிருந்தன. இதே சமயத்தில், சோவியத் மக்கள் புரிந்த மாபெரும் தேசபக்தப் போரின்

மாபெரும் தேசபக்தப் போரின் கதைகள்

(1941–1945)

ராதுகா பதிப்பகம் • மாஸ்கோ

முதலாவது காலக்கட்டத்தில், ஜெர்மானிய ராணுவம் முதலாவது பலத்த தோல்வியைக் கண்டது. 1941 டிசம்பரில் செஞ்சேனையின் தாக்குதலால் ஐந்து மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட பிரதேசம் விடுவிக்கப்பட்டது.

மாபெரும் தேசபக்தப் போரின் நிகழ்ச்சிகளைப் பற்றி, சோவியத் யூனியனின் வீரர் விருதை நான்கு முறை பெற்ற மார்ஷல் ஷுக்கவ், மாஸ்கோச் சண்டையில் பங்குபெற்ற எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகிய சீமனவ், பெக், லீதவ், கஷேவ்னிக்கவ், கிரிவிட்ஸ்கி அதுபற்றி எழுதுகிறார்கள்.